Koviloor Digital Library

மணிமேகலைப் பிரசுரம்

நகரத்தார் பெருமை

A.NO. 16790
Y 30/2

வெற்றியூர் அரு. சுந்தரம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

30-2

நகரத்தார் பெருமை

KOVILOOR ANDAVAR
A. No. 16790
LIBRARY, KOVILOOR

வெற்றியூர் அரு. சுந்தரம் M.A.,M.Ed.,

மணிமேகலை பிரசுரம்
தபால் பெட்டி எண் : 1447
7, (ப.எண்.4) தணிகாசலம் சாலை,
தியாகராய நகர். சென்னை - 600 017.
தொலைபேசி : 2434 2926
தொலை நகல் : 0091 - 44 - 2434 6082
மின் அஞ்சல் : manimekalai1@data one.in
இணைய தளம் : www.tamilvanan.com

Koviloor Digital Library

நூல் விவரம்

நூல் தலைப்பு	➢ நகரத்தார் பெருமை
ஆசிரியர்	➢ வெற்றியூர் அரு. சுந்தரம்
மொழி	➢ தமிழ்
நூல் வகை	➢ நகரத்தார் வரலாறு
பதிப்பு ஆண்டு	➢ 2012
பதிப்பு விவரம்	➢ முதற் பதிப்பு
தாளின் தன்மை	➢ 11.6 கி.கி.
நூலின் அளவு	➢ டெம்மி (14 x 21 செ.மீ.)
அச்சு எழுத்து அளவு	➢ 11 புள்ளி
மொத்த பக்கங்கள்	➢ X + 214 = 224
நூலின் விலை	➢ ரூ. 120
அட்டைப்பட ஓவியம்	➢ ஐஸ் கிராஃபிக்ஸ்
லேசர் வடிவமைப்பு	➢ எக்ஸ்பிரஸ் கம்ப்யூட்டர்
அச்சிட்டோர்	➢ பி.வி.ஆர். ஆப்செட் சென்னை - 94.
நூல் கட்டுமானம்	➢ தையல்
வெளியிட்டோர்	➢ மணிமேகலைப் பிரசுரம் சென்னை - 17.

Koviloor Digital Library

30-2

என்னுரை

உலகில் பல்வேறு இனங்கள் உள்ளன. அதில் ஒரு சில இனங்கள் பெருமைக்குரியன. பெருமைக்குரிய இனங்களில் மிகவும் பெருமை வாய்ந்த இனம் நாட்டுக்கோட்டை நகரத்தார் இனம்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து அவ் இனத்தின் வரலாறு தொடங்குகிறது. அவ் வரலாற்றைப் பேரறிஞர்கள் பலர் முன்பே எழுதி வெளியிட்டுள்ளார்கள். ஆனாலும் இன்றைய தலைமுறையினருக்குத் தம் இனத்தின் வரலாறு தெரிய வில்லை.

'இப்படித்தான் வாழ வேண்டும்' என்ற சமூகக் கட்டுப்பாடு உள்ள இனத்தில் பிறந்த இவர்கள், எப்படியும் வாழலாம் என எண்ணி வாழத் தொடங்கியுள்ளனர்.

"வாழ்க்கை முக்கியம்; வழி முக்கியமல்ல" எனக் கருதி வாழும் தலைமுறையினர் இவர்கள். வாழ்க்கையும் வழியும் முக்கியம் என்பதை எடுத்துக் கூறவும், "தமிழன் என்றோர் இனமுண்டு; தனியே அவருக்கொரு குணமுண்டு" என நாமக்கல் கவிஞர் பாடியதைப் போல, "நகரத்தார் என்றோர் இனம் உண்டு; நல்ல கட்டுப்பாட்டுடன் வாழும் இயல்புண்டு" என நினைவூட்டவே இந்நூல் எழுதப்பெற்றது.

இந்நூல் எழுத பல நூல்கள் உதவின. அதன் விபரம் நூலின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. அந்நூல் ஆசிரியர் களுக்கும், வெளியீட்டாளர்களுக்கும் என் நன்றி.

குற்றமில்லாத இராமனின் கதையைக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் ஆசையினால் பாடியதைப்போல, நகரத்தார் இனத்தில் பிறந்தவர் அவ் இனத்திற்கு ஏதாவது செய்ய வேண்டும் என ஆசைப்பட்டார் அண்ணன் இரவிதமிழ்வாணன் அவர்கள்.

அவருடைய ஆசையை மூத்த பத்திரிகையாளர் ஒக்கூர் திரு.எல்.சுந்தரத்திடம் கூறினார். அவர்கள் என்னை

Koviloor Digital Library

அண்ணனுக்கு அறிமுகப்படுத்தினார்கள். அண்ணன் என்னை எழுதப் பணித்தார்கள். ஆகவே நகரத்தார் இனத்தைப் பற்றி நூல் எழுத எனக்கு வாய்ப்புக் கிடைத்தது.

இந்நூல் உருவாவதற்குப் பெரிதும் உதவியவர் திரு.எல்.சுந்தரம் அவர்கள். தம்மிடமிருந்த 'நகரத்தார் குரல்' வெளியிட்ட நகரத்தார் நினைவு இதழ்களைத் தந்ததுடன், அரிய ஆலோசனைகளையும் வழங்கினார்கள். அவர்கள் 'தமிழ் நாடு' வார இதழில் பணியாற்றிய காலத்திலிருந்தே எழுத எனக்கு வாய்ப்பளித்தவர்கள்.

இந்நூல் எழுத வாய்ப்பை உருவாக்கித் தந்த திரு.எல்.சுந்தரம் அவர்களுக்கும், நூல் எழுத வாய்ப்புக் கொடுத்த திரு.இரவி தமிழ்வாணன் அவர்களுக்கும் என் நன்றி.

சங்கப் புலவர் வரிசையில் இடம் கிடைத்ததைப் போல, மணிமேகலை பிரசுரத்தில் எழுத இடம் கிடைத்ததைப் பெருமை யாகக் கருதுகிறேன். மணிமேகலை பிரசுரத்தார்க்கு என் நன்றி.

நகரத்தார் இனத்தில் பிறந்த எனக்கு, அவ் இனத்தின் வரலாற்றை எழுத வாய்ப்புக் கிடைத்ததைப் பெரும் பேறாகக் கருதுகிறேன்.

இந்நூலில் உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டின் நன்றியுடையவனாவேன்.

இது நான் எழுதிய 11 - வது நூலாகும். இந்நூலை அழகுற அச்சிட்டு வெளியிடும் மணிமேகலை பிரசுரத்தார்க்கு என் நன்றி.

இதன் அச்சுப்படிகளைத் திருத்தி உதவிய வாழைக் குறிச்சி பொன்.மணிமொழி அவர்களுக்கும், வை.ராமநாதன் அவர்களுக்கும் நன்றி.

ஆசை பெரிது; ஆக்கம் சிறிது. உங்கள் அன்பு விரியட்டும்; ஆதரவு பெருகட்டும்.

விரைவில் மீண்டும் சந்திப்போம்.

அன்பன்,
அரு. சுந்தரம்.

Koviloor Digital Library

30-2

பதிப்புரை

"நகரத்தார்" எனும் சிறப்புச் சொல், 'நாட்டுக் கோட்டை செட்டியார், சமூகத்தினருக்கு வழங்கிவரும் பெருமை மிக்கதோர் சொல் ஆகும். 'தோழமை என்றவர் சொல்லிய சொல்லொரு சொல் அன்றோ!' எனக் கம்பராமாயணம் குகப்படலத்தில் வேட்டுவக் குலத் தலைவன் குகன் தனது வேட்டுவப் படையைத் திரட்டி அவர்களுக்கு வீர உணர்வைத் தூண்டும் பொருட்டுக் கூறிய சொற்றொடராகும். பரதன் இராமனை 'காட்டிலும் வாழவிடாது துரத்தப் படையுடன் வருகிறான்' என்று தவறாக எண்ணிய குகன், 'அரசிளங் குமரனின் படையைத் தடுத்துப் போர்புரியத் தயாராகுங்கள்' என தன் குலத் தோழர்களுக்கு எச்சரிக்கிறான்! 'தோழமை என்று இராமன் என்னிடம் எடுத்தியம்பித் தன் தோழமையை எனக்கு உறுதிப்படுத்திச் சென்றமையை மறந்துவிடாதீர்கள்' என்பதாகக் குகனின் தோழமை உணர்வைக் கம்ப நாட்டாழ்வார் இப்படி அழகுறச் சித்திரித்துள்ளார்! அந்தத் தோழமையின் ஆழத்தை நாட்டுக்கோட்டை நகரத்தார் பரம்பரையிடமும் வாசகர்களாகிய நாம் கண்டுகளிக்கும் விதமாக, 'நகரத்தார் பெருமை' எனும் இச்சிறப்பு வாய்ந்த நூலினை இதன் ஆசிரியர் வெற்றியூர் அரு. சுந்தரம் அவர்கள் ஆக்கி அளித்துள்ளார்கள்!

'செய்வன திருந்தச் செய்' என்பது ஆன்றோர் வாக்கு. இதற்கு முன்னோடிகளாகத் திகழ்பவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார் எனத் துணிந்து கூறலாம்.

Koviloor Digital Library

நகரத்தார்களின் பூர்வீகச் சிறப்பில் தொடங்கி, அவர்கள் ஆற்றிவந்த அரும்பெரும் தொண்டுகள் பலப்பல. நகரத்தார் கோவில்களின் சிறப்பு, அவர்தம் ஆலயப் பணிகள், சமய ஒழுக்க நெறிமுறைகள், சமயக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள், நகரத்தார் செய்து வந்துள்ள கல்விப் பணிகள், வீடுகள் - கட்டிடங்களை அமைக்கும் முறைகள், திருமண விசயத்தில் அச் சமூகத்தினர் கொண்டிருந்த கட்டுக்கோப்பான பழக்க வழக்கங்கள், அவர்கள் செய்துவந்த 'நீத்தார் கடன்' இவை அனைத்தும் படிக்கப் படிக்கத் தெவிட்டாத தேனூறும் செய்திகள்!

"கோவில் கட்டவேண்டுமா?.... கூப்பிடு செட்டியாரை", கல்விக் கூடம் அமைக்க வேண்டுமா... கூப்பிடு செட்டியாரை" என அழைக்கும் முன்பே எதற்கெடுத்தாலும் வரிந்துகட்டிக் கொண்டு காரியத்தில் இறங்கி, கடும் சோதனைகளையும் எதிர்கொண்டு 'எதிர் நீச்சல்' போடக்கூடிய வெற்றியாளர்கள் இச் சமூகத்தார். பொருள் ஈட்டுவதிலும் வல்லவர்கள்! ஈட்டிய பொருளை, 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்' என்ற சொல்லுக்கு மெய்வடிவம் கொடுத்துச் சிறந்தவர்கள் நாட்டுக் கோட்டை நகரத்தார்! அவர்களின் வள்ளண்மையை சொல்லில் வடித்துக்காட்ட, 'தாய்மொழித் தமிழில் உள்ள 247 எழுத்துக்கள் போதுமா?!' என்ற ஐயம்தான் நமக்குத் தோன்றும்!

நகரத்தார்கள் பூர்வீகக் குடியினர். மானமே பெரிதெனப் போற்றி வாழ்ந்தனர். குறிப்பாகத் தம் இனப் பெண்கள் வீட்டுப் படி தாண்டி வேறிடம் புகுவதை அவர்கள், படிதாண்டிய குற்றத்தால் அப் பெண்டிர் கற்புக்கு ஊறு விளைந்ததாகக் கருதி,

Koviloor Digital Library

அவர்களைக் கொன்றுவிடுவர் என்னும் செய்தியில் நகரத்தார் பெண்டிரின் கற்புநெறி ஒழுக்கம் உயிரினும் பெரிதாய் ஓம்பப் பட்ட விவரம் இந்நூல் வாயிலாக அறிகிறோம்.

இவர்கள் செய்யாமல் விட்டுவிட்ட சமூகப்பணி என்று ஏதேனும் ஒன்றைச் சுட்டிக்காட்ட முடியுமா?! முடியவே முடியாது!

வாருங்கள் வாசகமணிகளே! தமிழ்நாட்டில் வாழும் பலதரப்பட்ட ஒட்டுமொத்த சமூக மக்களிடையே சகோதரத்துவம் என்ற சொல்லுக்கு இலக்கணமாய்த் திகழும் 'நாட்டுக்கோட்டை நகரத்தாரின்' பெருமைகளை நாம் அறிந்து விழிப்புணர்வு பெற அரியதோர் சந்தர்ப்பம் உங்களுக்கு **மணிமேகலை பிரசுர வெளியீடான 'நகரத்தார் பெருமை'** எனும் நூல் வாயிலாகக் கிட்டுகிறது! 'நகரத்தார்களின் பெருமை'யைப் போல, நீங்களும் 'செயற்கரிய' செயல்கள் செய்து பெருமையும் புகழும் ஈட்டுங்கள்! உலகில் சமதர்மம் நிலைக்கச்செய்யப் பாடுபடவேண்டிய கள வீரர்கள் நீங்கள்தானே!

பதிப்பாளர்

Koviloor Digital Library

பொருளடக்கம்

1.	நகரத்தார்களின் பூர்வீகம்	1
2.	நகரக் கோவில்கள் - கோவில் தழுவிய குடிகள்	48
3.	நகரத்தார்களின் ஆலயப் பணிகள்	64
4.	நகரத்தார்களின் கல்விப் பணிகள் - அறச் செயல்கள்	92
5.	நகரத்தார்களின் வீடுகள் - கட்டிடப் பாணி	123
6.	நகரத்தார்களின் திருமண நிகழ்வுகள்	134
7.	பெருமைக்குரிய நகரத்தார்கள்	151
8.	நகரத்தார் இதழ்கள்	207

Koviloor Digital Library

உ
சிவமயம்
அண்ணாமலையார் துணை

நகரத்தார் பெருமை

மரகத விநாயகர் வணக்கம்

மாவாழும் ஏழுவழி நகரத் தார்க்கு என்றும்
கோவாழும் செல்வக் குலதெய்வம் – மாவாழ்
மரகதவி நாயகனை மாமலர்தூய் வாழ்த்த
வர நலவாழ் வெல்லாம் வரும்.

-சதாவதானம் சுப்பிரமணியய்யர்

கற்பக விநாயகர் வணக்கம்

தனையன் வேண்டினும் சம்பத்து வேண்டினும்
மனையை வேண்டினும் வரம்பல வேண்டினும்
கனைவ ளங்கொள் கணேசபு ரேசனை
இனிய கற்பக மூர்த்தியை யேத்துமே

-சொக்கலிங்க அய்யா

அற்புதக் கீர்த்தி வேண்டின்
ஆனந்த வாழ்க்கை வேண்டின்
நற்பொருள் குவிதல் வேண்டின்
நலமெலாம் பெருக வேண்டின்
கற்பக மூர்த்தி தெய்வக்
களஞ்சியத் திருக்கை சென்று
பொற்பதம் பணிந்து பாரீர்
பொய்யில்லை கண்ட உண்மை!

-கவியரசர் கண்ணதாசன்

Koviloor Digital Library

தனவணிகர் வாழ்த்து

பொருள்ஈட்டி அறம்பேணிப் புகழ்வளர்த்து
நெறி நின்று பொருவில் ஈசன்
அருள்ஈட்டி வாழ்ந்துவரும் தனவணிகர்
வரலாறாம் ஆழிக் கண்ணே
இருள்ஓட்டும் பொருண்மணிகள் பலவுளமற்
றிவைகாண எழுமின் சான்றீர்!
தெருள்ஈட்டும் கருவியெனத் திகழ்தரும் இந்
நூல்நீடு சிறக்க நன்றே!

-பெரும் புலவர் பண்டிதமணி அவர்கள்

இலக்குமி வணக்கம்

நின்மேலும் ஆணைநின் மகன்மேலும் ஆணை
நின்மாக் கொழுநன்
தன்மேலும் ஆணை தண்கடன்மேலும் ஆணை
தனமா வணிகச்
சின்னஞ்சிறுவர் தெரியாத காளையர் என்செய்
யினும்நீ
பின்னும் பொறுத்தே இருப்பாய் சிறப்பாய்
பெரிய இலக்குமியே!

-பாடுவார் முத்தப்பசெட்டியார் அவர்கள்

வாழி நகரத்தார்

வாழி நகரத்தார் வள்ளன்மை மிக்கோர்கள்
ஊழி பலவும் உயர்ந்திருக்க – ஆழிசூழ்
இத்தலத்தில் கோயில் இயற்றினோர் வாழியவே
எத்தலமும் போற்ற இனிது.

-திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

Koviloor Digital Library

1.

நகரத்தாரின் பூர்வீகம்

உலகில் பல்வேறு இனங்கள் உள்ளன. அவற்றுள் மிகமிகப் பெருமையுடைய இனம் 'நகரத்தார்' என்றழைக்கப் பெறும் 'நாட்டுக் கோட்டைச் செட்டியார்' இனமே!

இந்த இனத்தின் வரலாறு கடல்போல் ஆழம் உடையது. வளமுடையது. எழுத எழுத விரிந்து கொண்டே செல்லும் தன்மை உடையது. தலைமுறை தலைமுறையாகப் பெருமை உடையது. வரலாறு படைத்த சிறப்புடையது.

எழுதப்பட்ட வரலாறு உடைய சமூகம் நகரத்தார் சமூகம். வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட வரலாறுடைய சமூகம் இச் சமூகம்.

பெருமை மிக்க இச் சமூகத்தின் வரலாற்றைப் பதிவு செய்ய, இளம் தலைமுறையினர் தம் முன்னோர்களின் பெருமையை உணர, அப் பெருமை அழிந்து விடாமல் வாழையடி வாழையாகத் தொடரத் தம் இனத்தின் பெருமையை அவசியம் அறிந்து கொள்ள வேண்டும்.

நகரத்தார்கள் எங்கு சென்றாலும் தங்கள் பண்பாட்டை, சமூகப் பழக்க வழக்கங்களை, விட்டு விலகாதவர்கள்.

திண்ணைப் பள்ளியில் கல்வி கற்று, எண் சுவடியை மனனம் செய்து, கணக்கிடும் கருவி (கால்குலேட்டர்)யை விட அதி விரைவில் மனக்கணக்காகவே வட்டிச் சிட்டை போட்டுச் சொல்லிவிடும் ஆற்றல் உடையவர்கள். திரைகடலோடிச் செல்வம் தேட - திரட்டச் சென்ற

Koviloor Digital Library

போது, அங்குள்ள மக்களோடு மக்களாக வாழ்ந்து, பேச்சு மொழி கற்று, சிலர் எழுதப் படிக்கவும் கற்று, சூழ்நிலைக்கேற்ப வாழ்ந்து சிறந்த பெருமையுடையவர்கள். ஆனாலும் தங்கள் சமூகப் பழக்க வழக்கங்களை மறக்காதவர்கள். அதிலிருந்து மாறாதவர்கள்.

பல நாடுகள் சென்று செல்வம் தேடியும் இதுவரை ஒருவர் கூட இந்து மதத்தை விட்டு வேற்றுமதம் செல்லாத பெருமையுடையவர்கள்.

பண்பில் எவ்வளவு உயர்ந்தவர்களோ, அவ்வளவிற்கு அறிவில் சிறந்தவர்கள் எனப் பிறரால் பாராட்டப்பெறும் பெருமை உடையவர்கள்.

"பல்வேறு துறைகளில் அயராது உழைத்தலும், பொது நலப் பணிகளுக்குத் தளராது வழங்குதலும், நகரத்தார் பெருமக்களின் பொதுப்பண்பு எனச் சுருக்கமாகக் கூறலாம்" என்பர் பேராசிரியர் லெ.ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள்.

"நகரத்தார்கள் ஒரு சிறுபான்மைச் சமூகத்தினர்தான். ஆயினும் தமிழக வரலாற்றில் அவர்களுக்குப் பெரும் பங்குண்டு" எனக் குறிப்பிடுகிறார் கவியரசர் கண்ணதாசன் அவர்கள்.

"150 ஆண்டுக்குள் கடல் வணிகத்திலும், உள்நாட்டு வணிகத்திலும் சிறந்து, உழைத்து, உண்மைபேசி, நாணயமாக இருந்து முன்னேறி, கோடிகோடியாக அறம் செய்து, கட்டுப்பாடாக வாழ்ந்து சிறந்த ஒரு குடி நகரத்தார் குடியேயாகும்" என நகரத்தாரை மதிப்பிடுகிறார் பேராசிரியர் வெ.சு. அழகப்பன் அவர்கள்.

"5000 ஆண்டுகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சமூகம் நமது நாட்டில் ஒன்று இருக்குமானால், அது நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகம் ஒன்றே என்றுதான் கூறவேண்டும்" என்கிறார் நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு நூலின் ஆசிரியர் அ.செ.சர்மா அவர்கள்.

"ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய்த் தமிழ் மரபுகளின் காப்பகங்களாக விளங்குகிற சமூகம் நகரத்தார் சமூகம். மரபுச் செல்வங்களை காலந்தோறும் காப்பாற்றி, வழிவழியாக வரும் தலைமுறைகளுக்கு வழங்கி வரும் சமூகம். மக்கட் தொகையில் சிறியது எனினும் சாதனைகளால் சிறந்தது. பாரதி, பாரதிதாசன், கவிமணி, கவியரசு

Koviloor Digital Library

கண்ணதாசன் ஆகியோரால் பாடல் சால் சிறப்புப் பெற்ற சமூகம்" எனப் பாராட்டுகிறார் பதிப்புச் செம்மல் தமிழவேள் பேராசிரியர் ச. மெய்யப்பன் அவர்கள்.

"உண்மை, உழைப்பு, உயர்வு, கொடை, இறை நம்பிக்கை ஆகிய எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து உருவம் கொடுத்தால், 'நகரத்தார்' என்று அர்த்தம் வரும்" என்கிறார் டாக்டர் எஸ்.ஏ.பி. சவகர் பழநியப்பன் அவர்கள்.

"நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் இல்லையென்றால் வேதங்களும் இல்லை. கோயிலும் இல்லை" எனப் பாராட்டுகிறார் காஞ்சி பரமாச்சாரியார் ஸ்ரீசந்திரசேகரேந்திர சரசுவதி சுவாமிகள்.

உண்மையைக் கண்டறியச் செய்யப்படும் முயற்சியே ஆய்வாகும். இவ் ஆய்வும் விருப்பு, வெறுப்பின்றி அமைதல் வேண்டும். இதனைக் காய்தல், உவத்தல் இன்றி ஆய்தல் என்பர் அறிஞர்கள்.

எப்படி ஒரு குற்றமும் புரியாதவன் (நிரபராதி) தண்டிக்கப் படக் கூடாதோ, அதே நேரத்தில் உண்மைக் குற்றவாளி தண்டனையிலிருந்து தப்பிவிடக் கூடாதோ அது போல, ஓர் இனத்தின் வரலாற்றை ஆராய்கின்றபோது உண்மையை வெளிக்கொணர்ந்து, பொய்மையை விலக்கிவிட வேண்டும்.

இந்நோக்கில் நகரத்தார்களின் பூர்வீகம் பற்றி ஆராய்வோம்.

நகரத்தார் வரலாறு - மூல நூல்கள்

நகரத்தார்களின் வரலாறு குறித்து இதுவரை 4 தமிழ்நூல்களும், 2 ஆங்கில நூல்களும் வெளிவந்துள்ளன. அதன் விபரம் வருமாறு:

தேவகோட்டை வன்றொண்டர் மாணவரும், மேல வீட்டைச் சேர்ந்தவருமாகிய வித்துவசிகாமணி வீர.லெ. சின்னையா செட்டியார் பரிசோதித்து வைத்திருந்த பிரதிப்படி, பூங்குன்ற நாட்டு வேலங்குடி கல்வெட்டினையும், துலாவூர் மடத்துச் செப்பேட்டினையும் ஆதாரமாகக் கொண்டு, 'தன வைசியராகிய நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரம்' என்ற பெயரில் தேவகோட்டை மெ.அரு.அரு. இராமநாதன் செட்டியார் தேவகோட்டை சமீன்தார் அள.அரு. ராம. அருணாசலம் செட்டியார் ஆகிய இருவரும் 1894 இல் வெளியிட்டார்கள்.

Koviloor Digital Library

இந் நூலின் இரண்டாம் பதிப்பு 1904இல் வெளிவந்தது.

இந் நூலின் பிரதிகள் கிடைக்கப் பெறாமையால், பாகநேரி தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்க வெளியீடாக 1941இல் பாகநேரி வித்துவான் வெ.பெரி.பழ.மு. காசிவிசுவநாதன் செட்டியார் வெளியிட்டார்கள்.

எனவே, இந் நூலே நகரத்தார் வரலாற்றைப் பற்றி எழுதப்பெற்ற ஆவண பூர்வமான முதல் நூலாகும்.

காரைக்குடி சொக்கலிங்க அய்யா எழுதிய நாட்டுக்கோட்டை நகரத்தார் என்னும் மகுட தன வைசியரின் மரபு விளக்கம் என்ற நூல் 1919இல் வெளிவந்தது.

சின்னையா செட்டியாரின் நூலை அடிப்படையாகக் கொண்டு, மேலும் பல ஆய்வுக் குறிப்புக்களைச் சேர்த்து அமராவதிபுதூரைச் சேர்ந்த சைவ சித்தாந்த வித்தகர் பாலகவி வித்துவான் வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியார் ஒரு நூலை வெளியிட்டார்கள்.

அந் நூலின் ஆய்வுக் குறிப்புக்களைத் திருத்தியும், விளக்கியும் முதுபெரும் புலவர் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், 'நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு' என்ற நூலை எழுத, சென்னை நகரின் முன்னாள் மேயர் கானாடுகாத்தான் சா.ராம.மு.ராம. இராமநாதன் செட்டியார் 1953இல் வெளியிட்டார்.

அதன் பின்னர் 'செட்டி நாடு' இதழின் முன்னாள் ஆசிரியர் வரகூர் அ.சே. சர்மா 'நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு' என்ற நூலை எழுத, வானதி திருநாவுக்கரசு 1970இல் வெளியிட்டார்.

1937இல் நீல்கண் பெருமாள் என்ற ஆய்வாளர் 'IN GLIMPSES OF CHETTIAR NADU' (செட்டியார் நாட்டைப் பற்றி) என்ற நூலை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார். இந்நூலில் நகரத்தார் வரலாறு, பண்பாடு பற்றி விளக்கப் பட்டுள்ளது.

நகரத்தார் வரலாறும் பண்பாடும் பற்றிய ஆய்வு மதிப்புடைய ஆதாரங்களுடன் அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் எஸ்.சந்திரசேகர் 'தென் இந்தியாவில் நகரத்தார்கள்' என்ற நூலை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார்.

Koviloor Digital Library

இருவழி ஆராய்ச்சி:

ஒரு சமூகத்தின் வரலாற்றை ஆராய இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று அகச்சான்று. இரண்டு புறச்சான்று.

அகச்சான்று என்பது கல்வெட்டுக்கள், செப்பேடுகள், எழுதப்பெற்ற ஆவணங்கள், இலக்கியங்கள் முதலியன ஆகும்.

புறச்சான்று என்பது கதைகள், செவிவழிச் செய்திகள், ஊகத்தின் அடிப்படையில் எழுந்த கருத்துக்கள் முதலியன ஆகும்.

நகரத்தார் வரலாற்றை ஆராய முற்படும்போது புறச்சான்றுகள் அத்துணை பயன் தரா. எனவே, அகச் சான்றை மட்டும் துணைகொண்டு ஆராய முற்பட்டுள்ளேன்.

"அறிதொறும் அறியாமை கண்டற்றால்" என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப, இவ் ஆராய்ச்சி, முடிந்த முடிவல்ல. மேலும் ஆராயக் கூடியது. அறிஞர்கள் ஆராய்க.

நகரத்தார் சமூகம்:

ஒரு மொழி வளமுடையது என்றால், முன்னைப் பழமைக்கும் பழமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் கால மாறுதல்களுக் கேற்ப, தன்னை மாற்றிக் கொண்டு, காலத்தைக் கடந்து, காலத்தை வென்று வளர வேண்டும். அப்போதுதான் அது வாழும் மொழியாகும். இல்லையேல் ஆரியம் போல் வழக்கொழிந்த மொழியாகிவிடும்.

அதுபோல் ஒரு சமூகம் என்பது வாழும் சமூகம் என்றால் பழமையும், புதுமையும் கலந்து, கால மாறுதல்களுக்கேற்ப மாறிக் காலத்தைக் கடந்து, காலத்தை வென்று நின்று நிலைக்க வேண்டும்.

அப்படி நின்று நிலைத்திருக்கின்ற சமூகம்தான் நகரத்தார் சமூகம். கி.பி.700க்கு முன்பாகவே வளமோடும், புகழோடும் வாழ்ந்த சமூகம் நகரத்தார் சமூகம்.

கால மாறுதலால் இன்று வளம் குறைந்திருந்தாலும், புகழோ பெருமையோ குறையாத சமூகம் நகரத்தார் சமூகம்.

அன்றிலிருந்து இன்றுவரை அனைவராலும் பாராட்டப் பெறுகின்ற சமூகமாக இச் சமூகம் விளங்குவதற்குக் காரணம், இச் சமூகத்தின் கட்டுப்பாடான வாழ்க்கை முறையாகும்.

Koviloor Digital Library

எந் நிலையிலும் ஆடம்பரம் இல்லாத, அடக்கமாக, மானம் ஒன்றே பிரதானமாக, யாரும் குறை சொல்லாதவாறு ஒற்றுமையாக, பிற இனத்தவர்களுடன் நேசமாக உறவு முறை கூறி இன்றும் வாழ்ந்து வருவதே இதற்குச் சான்றாகும்.

செட்டி நாடு:

செட்டிநாடு என்று வழங்கப்பெறுகின்ற இப் பகுதியில் பெரும் பான்மையோராய் வாழ்பவர்கள் செட்டியார்கள் அல்ல, பிற சமூகத்தவர்களே.

உதாரணமாக பாகநேரி நாடு, பட்டமங்கலம் நாடு, எழுவங் கோட்டை நாடு, குன்னங்கோட்டை நாடு முதலியவற்றைச் சொல்லலாம். இந்நாட்டின் தலைவர்கள் செட்டியார்கள் அல்ல, பிற இனத்தவர்களே. அவர்களை அம்பலகாரர்கள் என அழைப்பர்.

அம்பலகாரத் தலைவர்களுடன் மாமனாக, மச்சானாக உறவு முறையில் நகரத்தார்கள் வாழ்ந்தனர். இன்றும் அவ்வாறே வாழ்கின்றனர். மற்ற மதத்தினரையும் மதித்து வாழ்கின்றனர். எடுத்துக் காட்டாக, எத்தனையோ முகமதியர்கள் நகரத்தார்களுடனும், அவர்தம் குடும்பத்தார்களுடனும் நெருங்கிய உறவு வைத்திருப்பதை இன்றும் காணலாம்.

சமயச் சண்டையோ, சாதிச் சண்டையோ செட்டி நாட்டில் வராததற்குக் காரணம் செட்டியார்களின் அமைதியும், தேவைப்படு வோருக்குக் காலமறிந்து செய்த உதவியும்தான் என்றால் அது உண்மைக் கூற்றாகும்.

நகரத்தார் வரலாறு - மூல ஆதாரம்:

நகரத்தார் வரலாற்றை ஆராய நமக்குக் கிடைத்துள்ள மூல ஆதாரம் சுண்டைக்காடு வேலங்குடி என்று வழங்கப்படுகின்ற பூங்கொன்றை வேலங்குடி கல்வெட்டு. பெண்களின் இன்றைய குருபீடமாக உள்ள துலாவூர் சைவ மடத்தில் இருந்த செப்புப் பட்டயத்தில் வேலங்குடி கல்வெட்டில் காணப்படும் செய்திகளை அனுசரித்து 'தனவைசியராகிய நாட்டுக் கோட்டை நகரத்தார் சரித்திரம்' எழுதப்பெற்றது.

Koviloor Digital Library

இதனை, தேவகோட்டை பெரும் புலவர் வீர.லெ. சிந்நயச் செட்டியார் பரிசோதித்து 1894இல் தனவைசியராகிய நாட்டுக் கோட்டை நகரத்தார் சரித்திரம் என்ற சிறு நூலை எழுதினார்கள்.

இன்றும் கூட, ஒரு பொது நலத்திற்குக் கட்டிடம் கட்டும்போது அடிக்கல் நாட்டிய விபரம், கட்டி முடிக்கப் பெற்றுத் திறப்பு விழா நடந்த விபரம் முதலியன கல்வெட்டில் பதிக்கப்பட்டு, அக்கட்டிடத்தில் பதித்து வைக்கப்பட்டிருத்தலைக் காணலாம். இது வளர்ச்சிப் பணியைக் குறிக்கும் முக்கிய ஆவணமாகும்.

பூங்கொன்றை வேலங்குடி கல்வெட்டை மூல ஆதாரமாகக் கொண்டே நகரத்தார் வரலாற்றுப் பெருமையை எழுதியுள்ளேன்.

மூலநூல் தெரிவிக்கும் செய்திகள்:

மூல நூல் கீழ்க்கண்ட செய்திகளைத் தெரிவிக்கிறது.

நீர்மலி கடல்சூழ் நில உலகத்தில் சீர்மலி சம்புத் தீவத்தின்கண் ஆதியில் நாக நாட்டிலே சாந்தியாபுரி என்னும் நகரத்திலே சந்திரகுல கோத்திர வைசியர்கள் கோபதீசுவர சுவாமி தரிசனமும், சதாசிவ குரு பீடத்தில் தீட்சாகிரியையும், மரகதவிநாயகர் பூசையும், இரத்தின வியாபாரமும் செய்துகொண்டு மகாயோக பாக்கிய சம்பன்னர்களாய் இராசப் பிரசாதமும், மன்னிணை மரியாதையும் பெற்று சிவ ஆகம புராண சித்தாந்த சைவ தீட்சா சம்பன்னர்களாய், விபூதி உருத்திராட்சம் மாலிகாபரணமாய்ச் சிவ தரும, குலதரும, பரிபாலகராய் வாழ்ந்து வந்தனர். அந் நாட்டு அரசன் செய்த கொடுமையால் அவர்கள் கலியுகம் 204இல் தொண்டை மண்டலம் காஞ்சிபுரம் வந்து குடியேறினார்கள்.

இக் கல்வெட்டுச் சரித்திரத்தால் நாம் அறியும் செய்திகள் வருமாறு :-

1. சம்புத் தீவில் நாக நாட்டில் சாந்தியாபுரி நகரில் ஆதியில் வைசியர்கள் வாழ்ந்து வந்தனர்.
2. இவர்கள் கோத்திரம் சந்திரகுல கோத்திரம்.
3. கோபதீசுவரர் சுவாமி தரிசனமும், மரகத விநாயகர் பூசையும் செய்து வந்தனர்.

Koviloor Digital Library

4. இரத்தின வியாபாரம் செய்து வந்தனர்.
5. இராசப் பிரசாதம், மன்னிணை மரியாதையும் பெற்று வாழ்ந்தனர்.
6. வளமாக வாழ்ந்தனர்.
7. நெற்றியில் விபூதி தரித்து, கழுத்தில் உருத்திராட்சம் அணிந்து சிவதரும, குலதரும, பரிபாலகராய் வாழ்ந்தனர்.

சம்புத்தீவு - நாகநாடு

சம்புத் தீவு எங்குள்ளது?

தமிழ்நாட்டில் திருநெல்வேலிச் சீமையில் பாயும் தாமிரபரணி ஆற்றை ஒட்டி உள்ளது எனக் கம்பராமாயணம் கூறுகிறது. நாகநாடு அத்தீவில் உள்ள பகுதி. அதனைக் கடந்தால் மயேந்திர மலை என்ற நீண்ட மலையையும், கடலையும் காணலாம் என மேலும் கூறுகிறது.

சீதையைத் தேடித் தென்திசை செல்லும் வானர வீரர்களுக்குச் சுக்கிரீவன் வழி கூறுகிறான். அப்போது பல வழிகளையும் விவரிக்கிறான். அதில் நாகநாட்டைப் பற்றியும் சொல்கிறான்.

தென்தமிழ் நாட்டு அகன் பொதியில்
திருமுனிவன் தமிழ்ச் சங்கம் சேர்கிற்பீரேல்
என்றும் அவண் உறைவிடம் ஆம்;
ஆதலினால் அம்மலையை இறைஞ்சிஏகி
பொன்திணிந்த புனல்பெருகும் பொருநை
எனும் திருநதி பின்பு ஒழிய, நாகக்
கன்றுவளர் தடஞ்சாரல் மயேந்திரமா
நெடுவரையும் கடலும் காண்பீர்

(கிட்கிந்தா காண்டம் - நாடவிட்ட
படலம் - 31வது பாடல்)

என்று சொல்கிறான்.

பொதிய மலை என்பது மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதி. குற்றாலத்திற்கருகில் அல்லது குற்றால மலையையே பொதிய மலை என்பர். பொதிய மலை தென்றலின் பிறப்பிடம். தமிழ் வளர்த்த அகத்திய முனிவர் வாழிடம்.

Koviloor Digital Library

பண்டைக் காலத்தில் இந்தியாவையும் ஆஸ்திரேலியாவையும் இணைத்த பெரும் நிலப்பரப்பு இருந்தது என்றும், அதற்கு லெமூரியாக் கண்டம் என்று பெயர் என்றும், அந் நிலப்பரப்பு கடலில் மூழ்கியதால் இந்தியாவும், ஆஸ்திரேலியாவும் துண்டிக்கப் பட்டுத் தனித் தனி கண்டங்களாக, நிலப்பரப்புக்களாக ஆகின என்பதும் ஆராய்ச்சி அறிஞர்களின் முடிவு.

இந் நோக்கில் நாகநாடு அடங்கிய சம்புத் தீவு எங்கிருந்தது என்பதை ஆராய்வோம்.

கம்பராமாயணக் கருத்துப்படி, பொருநை ஆற்றைக் கடந்து சென்று நாகநாட்டை அடையலாம். அதன் பின் மயேந்திரமலை, கடலைக் காணலாம்.

குற்றாலம், திருநெல்வேலி, திருச்செந்தூர், நாகர்கோவில் ஆகிய ஊர்கள் அருகருகே உள்ள ஊர்கள்.

கன்னியாகுமரி கடல் பகுதி. தமிழ் நாட்டின் தென் பகுதி. குமரி முனையை அடுத்தே லெமூரியாக் கண்டம் இருந்தது என்பது அறிஞர்கள் கருத்து.

மேலும் மயேந்திரமலையின் உச்சியில் நின்று கடலைக் கண்ட அனுமான், அங்கிருந்து "இராம், இராம்" என இராமன் பெயரை உச்சரித்தவாறே கடலைத் தாண்டி இலங்கையை அடைந்தான் எனக் கம்பராமாயணம் சொல்கிறது.

எனவே, மயேந்திர மலையை ஒட்டியுள்ள பகுதியே சம்புத்தீவு. அதில் ஒரு பகுதியே நாகநாடு என்ற முடிவுக்கு நாம் வர வேண்டியுள்ளது.

இன்னொரு கோணத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.

கப்பல்கள் கண்டு பிடிக்கும் முன்பே பாய்மரக் கப்பலில் பர்மா, இலங்கை, மலேயா, சைகோன், சாவா ஆகிய அயல் நாடுகளுக்கு வாணிபம் செய்யச் சென்று பெரும் பொருள் ஈட்டினர். அதனால், 'செட்டி மகன் கப்பலுக்குச் செந்தூரான் துணை' என்ற சொல் வழக்குப் பிறந்தது.

முருகனை வழிபடுவது செட்டியார்கள் இயல்பு, வழக்கம். சென்ற இடமெல்லாம் முருகனுக்குக் கோயில் கட்டி குடமுழுக்குச் செய்து மகிழ்ந்தவர்கள் செட்டியார்கள்.

Koviloor Digital Library

கவியரசர் கண்ணதாசன் கூறியதைப் போலக் கடல் கடந்து சென்ற செட்டியார்கள் வளமான வாழ்விற்கு ஆதாரமான பொருளை, செல்வத்தை ஈட்டச் சென்றவர்கள்; அவர்களின் குறிக்கோள், நோக்கம் பொருள் ஈட்டுவது ஒன்றே.

மனைவி அருகில் இல்லையே என்று நினைத்தாலோ, குடும்பத்துடன் நாம் வாழக் கொடுத்து வைக்கவில்லையே என்று எண்ணினாலோ குறிக்கோள் சிதைந்து, பொருள் ஈட்டும் நிலையில் தொய்வு ஏற்படும்.

எனவே, செட்டியார்கள் அயல் நாட்டில் வள்ளி முருகனையோ, தெய்வயானை முருகனையோ வைத்து வணங்காமல், கோவணாண்டியாய் உள்ள தண்டாயுதபாணியை வைத்து வணங்கினர்.

முருகனுக்குச் செட்டி மகன் என்ற ஒரு பெயருண்டு. இதனை அருணகிரிநாதர் திருப்புகழில் குறிப்பிடுகிறார்.

செந்தூர் என்பது திருச்செந்தூரைக் குறிக்கும். அவ்வூர் கடற்கரை ஊர். குமரி முனைக்கருகில் உள்ள ஊர்.

நாகநாடு பொருநை ஆற்றின் அருகில் உள்ள பகுதி. குற்றாலம், திருச்செந்தூர் அருகருகே உள்ள ஊர்கள். "செட்டி மகன் கப்பலுக்குச் செந்தூர் முருகன் துணை" என்பதால் திருச்செந்தூரை அடுத்திருந்த பகுதியே நாகநாடு என்ற முடிவுக்கு நாம் வரவேண்டியுள்ளது.

பிரிதொரு கோணத்திலும் பார்ப்போம்.

செட்டியார்கள் முருகனிடம் இயல்பாகவே ஈடுபாடுடையவர்கள். அதிலும் பழநி முருகனிடம் தனி ஈடுபாடு. தைப்பூசத்திற்குப் பழநிக்குப் பாத யாத்திரையாகச் செல்வதும், காவடி சுமந்து செல்வதும் இன்றும் நாம் காணும் நிகழ்ச்சியாகும்.

செட்டியார்கள் பல முருகன் கோவில்களுக்குப் பாத யாத்திரை யாகச் சென்றாலும், பழநிக்குச் செல்வதையே பிரதானமாகக் குறிப்பிடுகின்றோம்.

'செட்டி மகன் கப்பலுக்குப் பழநிமுருகன் துணை' என்று சொல்லாமல், 'செந்தூரான் துணை' என்று சொன்னதற்குக் காரணம் என்ன?

Koviloor Digital Library

நமக்கருகில் உள்ள ஊர், அதன் சிறப்பு நம் மனதை விட்டு நீங்காது.

உதாரணமாக, அபிராமிப் பட்டர் அபிராமி அன்னையின் அழகிலே மூழ்கி, தியானம் செய்தார். மன்னன் வந்தான். மன்னனின் வருகையை பட்டர் உணரவில்லை. தியானத்திலே இருந்தார்.

கோபமுற்ற மன்னன், "இன்று என்ன திதி?" எனப் பட்டரிடம் கேட்டான்.

அன்னையின் முழு அழகிலே மூழ்கியிருந்த பட்டர், "பௌர்ணமித் திதி" என்றார்!

அமாவாசைத் திதியைப் 'பௌர்ணமித் திதி' என்று பட்டர் சொன்ன பதிலைக் கேட்டு மன்னன் மிக்க கோபம் கொண்டான்.

"பௌர்ணமித் திதியைக் காட்டு. இல்லையேல் தலை வெட்டப்படும்" என மன்னன் ஆணையிட்டான்.

பட்டர், அன்னையிடம் வேண்டினார்.

மகனின் வாக்கை மெய்ப்பிக்க அன்னை தன் காதுத் தோட்டை விண்ணில் எறிந்து முழு நிலவைக் காட்டினாள்.

பார்த்த மன்னன் மருண்டான். பட்டரின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டான்.

'அபிராமியின் கடைக்கண் நல்லன எல்லாந் தரும்' என 100 பாடல்களில் அன்னையின் புகழைப் பாடினார். அதுவே 'அபிராமி அந்தாதி' என்ற அழியாத இலக்கியமாயிற்று.

ஒரு வாதத்துக்காகச் சொன்னால், அபிராமியின் கடைக்கண் மட்டுமா நல்லன எல்லாந்தரும்? இல்லையே.

எல்லா ஊரிலும் உள்ள அன்னையர் அனைவரும் நல்லன வற்றைத் தருவார்கள். கவியரசர் கண்ணதாசன் பாடியதைப் போல, "ஆறு என்றாலும், ஓடை என்றாலும் அது நீரோடும் பாதையைத் தானே குறிக்கும்."

அதுபோல அனைத்து அன்னையர்களும் அருள் பொழிபவர்கள்.

Koviloor Digital Library

பின் ஏன் அபிராமிப் பட்டர் 'அபிராமியின் கடைக்கண் நல்லன எல்லாந்தரும்' எனப்பாடினார்?

அவர் மனத்தில் நிறைந்திருந்தவள் அபிராமி அன்னை. அவர் அருளருகிலேயே இருந்தவர். எனவே அவள் புகழைப் பாடினார்.

அதுபோல நமக்கருகில் உள்ள ஊரே உவமை சொல்ல உடனே நினைவுக்கு வரும். நாக நாட்டருகில் திருச்செந்தூர் இருந்ததால் "செட்டி மகன் கப்பலுக்குச் செந்தூரான் துணை" என்ற சொல் வழக்கு வந்தது.

இந்நோக்கில் பார்த்தாலும் திருச்செந்தூரை அடுத்திருந்த பகுதியே நாகநாடு என்பது நன்கு விளங்கும்.

நாக நன்னாட்டு நானூறு யோசனை
வியன் மாதலத்து வீழ்ந்து கேடெய்தும்

என 'மணிமேகலைக் காப்பியம்' கூறுவதிலிருந்து நாகநாடு கடலில் மூழ்கிய உண்மையை உணரலாம்.

கடலை நாம் பார்க்கின்றோம். அந்த அலைகளின் சீற்றம் நமக்கு அச்சத்தைத் தருகிறது. ஆனால் மீனவர் ஒருவர் அதே கடலைப் பார்க்கிறார். அவருக்கு அந்த அலைகளின் சீற்றம் அச்சத்தைத் தரவில்லை. மாறாகத் தாலாட்டுப் போன்ற மகிழ்ச்சியைத் தருகிறது.

சிலருக்குத் தினம் படுத்த இடத்தில் படுத்தால்தான் தூக்கம் வரும். இடம் மாறிப் படுத்தால் அன்று சிவராத்திரிதான்! அவரே வெளியூர் சென்று இரவில் தங்க வேண்டிய நிலை வந்தால், அந்த இரவில் தூங்காமல், புரண்டு புரண்டு படுப்பார். அவர் படும் பாட்டை எழுத்தில் வடிக்க முடியாது.

அதுபோல, கடலின் சீற்றம், இரவில் எழும் பேரிரைச்சல் மீனவருக்குக் காதில் விழாவிட்டால், அவர் எதையோ இழந்ததைப் போல உணர்வார்.

நாகநாட்டிலே வாழ்ந்த நம் முன்னோர்கள் கடலைக் கண்டு அஞ்சவில்லை. சம்புத்தீவு கடல் சூழ்ந்த பகுதி ஆனதினாலே, கடல் அவர்கள் வாழ்வின் ஒரு பகுதியாக, பிரிக்க முடியாத உறவாக இருந்தது. எனவேதான் துணிந்து பாய்மரக் கப்பலில் அயல் நாடுகள் சென்று பெரும் பொருள் ஈட்டினர்.

Koviloor Digital Library

நாகநாடு என்பது குமரிமுனையை ஒட்டி இருந்த பகுதி. அப் பகுதியை அடுத்து இலங்கை இருந்தது. நம் முன்னோர்கள் தென்முனைப் பகுதியில் முதலில் வாழ்ந்தனர் என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

அடுத்து இவர்கள் 'சந்திரகுல கோத்திர வைசியர்கள்' எனக் குறிக்கப் பெற்றுள்ளது.

வைசியர்கள் என்பது பொதுவாக வாணிபம் செய்பவர்களைக் குறிக்கும் பொதுச் சொல். இவர்கள் இரத்தின வியாபாரம் செய்ததால் வைசியர்கள் எனக் குறிக்கப் பெற்றனர்.

ஆதியில் இவர்கள் புலால் உண்பவர்களாய் (தீவில் வாழ்ந்ததால் மீன் போன்ற கடல் உணவுகளை உண்டிருக்கலாம்) இருந்து, பின் சைவ உணவு உண்பவர்களாய் மாறியதால், சந்திரகுல கோத்திரம் பின் 'சிவகோத்திர'மாய் மாறி விட்டது.

நாம் திதி கொடுக்கும்போதும், அமாவாசை தர்ப்பணம் செய்யும் போதும், சிவகோத்திரத்தில் அடியேனுடைய தகப்பனார், பாட்டனார், முப்பாட்டனார், மூவேழு தலைமுறைக்கும் அறிந்த பெயர், அறியாத பெயர், அதே போல தாயாருக்கும் சொல்லிச் சடங்கு செய்வது நாம் அறிந்ததே.

அடுத்து கோபதீசுவரர் சுவாமி தரிசனமும், மரகதவிநாயகர் பூசையும் குறிக்கப் பெற்றிருக்கிறது.

விநாயகர் ஆதிமூலம்.

இன்றைக்கும் நாம் எந்தச் செயலைச் செய்தாலும், வீட்டில் தேன்குழல் பிழிந்தாலும், முறுக்குச் சுற்றினாலும், வேறு தின்பண்டங்கள் சீடை, அதிரசம் செய்தாலும், கூம்பு வடிவில் சிறிய உருவை மாவினால் பிடித்து அடுப்பின் மீது வைத்த பிறகே பலகாரம் பண்ணத் தொடங்குகிறோம்.

அதேபோல, பொங்கல் விழா, திருமணவிழா, மணிவிழா போன்ற மங்கல நிகழ்ச்சிகளில் மஞ்சளால் உருப்பிடித்து வைத்த பிறகே சடங்கு செய்யத் தொடங்குகிறோம்.

Koviloor Digital Library

அந்தக் காலத்தில் நம்மில் பலருக்கு விவசாயம் இருந்தது. கதிரடித்து நெல்லை அளக்கத் தொடங்கும்போது, சாணி உருண்டையால் பிள்ளையாரைப் பிடித்து வைத்து அதன் பின்பே அளக்கத் தொடங்குவர்.

பிடித்து வைத்தால் பிள்ளையார் தானே?

எதை எழுதத் தொடங்கும் முன்பும் 'உ சிவமயம்' போட்ட பிறகே எழுதுவது நம் மரபு.

கோபதீசுவரர் என்பது சிவபெருமானைக் குறிக்கிறது. விநாயகர் பூசை, சிவ வழிபாடு நம் இரத்தத்துடன் இரண்டறக் கலந்தது.

அடுத்து சதாசிவ குருபீடத்தில் தீட்சை பெறுதல் குறிக்கப் பட்டிருக்கிறது.

'மாதா, பிதா, குரு, தெய்வம்' என நம் முன்னோர்கள் வாழ்ந்தனர். தாய் அடையாளம் காட்டுவதாலே, நாம் தந்தையை அறிகிறோம். அதுபோல, குருவின் துணையாலே இறைவனை அடையாளம் கண்டு வணங்குகின்றோம். இதற்காக, முன்பு நகரத்தார் பையன்களுக்குப் புதுமையும், கார்த்திகைச் சூப்பிடியும், நகரத்தார் சிறுமிகளுக்கு மார்கழி திருவாதிரையும் பெரும் விழாவாக நடத்தப் பெற்றது.

பள்ளியில் ஆசிரியர் எழுத்தை அறிமுகப் படுத்துகிறார். அப்போது, "அரிஓம்! நன்றாகக் குருவாழ்க! குருவே துணை!" என்றே சொல்லித் தொடங்குகின்றார். இதன்மூலம் நாம் இறைவனை அறிகிறோம். "எழுத்து தெய்வம்" என்றான் பாரதி.

தீட்சை பெறுதல் நம்மிடம் மட்டுமே உள்ள சிறந்த பண்பு. முற்காலத்தில் 12 வயதில் நம் இனத்தார் தீட்சை பெற்றனர். இப்போது மணிவிழாவிற்கு முன்பு தீட்சை பெறுகின்றனர். அந்தணர்கள் இதனை உபநயனம் என்பர். விசுவாமித்திர முனிவர் சனக மன்னனிடம் இராம - இலக்குவர்களை அறிமுகப்படுத்தும்போது, இவர்களுக்கு உபநயன விதி முடித்தவர் வசிட்டர் என்பார்.

அடுத்து, நெற்றியில் விபூதி தரித்து, கழுத்தில் உருத்திராட்சம் அணிந்து சிவதரும, குலதரும பரிபாலகராய் வாழ்ந்தனர் எனக் குறிக்கப் பட்டுள்ளது.

Koviloor Digital Library

"நீறில்லா நெற்றி பாழ்" என்றார் ஔவையார். இந்த உடல் முடிவில் சாம்பலாகப் போகிறது என்பதை நினைவூட்டவே திருநீறு தரிக்கும் (பூசும்) பழக்கம் ஏற்பட்டது.

"மந்திரமாவது நீறு" என்பதை நன்கு உணர்ந்த நம் முன்னோர்கள், காலையில் எழுந்தவுடன் இயற்கை உபாதைகளை நீக்கி, பல் துலக்கி, நெற்றி நிறைய திருநீறு பூசி, திருவாசகம், தேவாரம் ஓதுவார்கள். சிலர் திருவாசகத்தைச் சொல்லிக்கொண்டே, தேவாரத்தைப் பாடிக் கொண்டே தம் வீட்டு வேலைகளைச் செய்வர்.

ஒரு செட்டியார் காலையில் மோர் கடையும்போது சிவபுராணத்தைச் சொல்லிக்கொண்டே கடைவாராம். இதிலிருந்து நம் முன்னோர்களின் சிவப்பற்று நன்கு விளங்கும்.

அயல் நாட்டிற்குக் 'கொண்டு' விற்கப் போனபோதும் இந்தப் பழக்கத்தைக் கை விடாத பெருமை உடையது நகரத்தார் சமூகம்.

கை பழக வரும் பையன்களுக்கும் இதைக் கற்றுக் கொடுத்த பெருமை உடைய சமூகம் நகரத்தார் சமூகம்.

அது மட்டுமல்ல. குழந்தை பிறந்து, மொழி தெரிந்து பேசத் தொடங்கிய உடனேயே,

பூ எப்ப மலரும்
பொழுது எப்ப விடியும்
சிவன் எப்ப வருவார்
வரம் எனக்குத் தருவார்

என்ற பாடலைப் பாடச் சொல்லிக் கொடுத்து விபூதியைப் பூசும் முறையைச் சொல்லிக் கொடுக்கும் பெருமையுடைய சமூகம் நகரத்தார் சமூகம்.

உருத்திராட்சம் சிவனின் அடையாளம். ஆலகால விடத்தை அண்ணல் அருந்தியபோது அம்பிகை அண்ணலின் கண்டத்தைப் பிடித்து, விடம் கீழே இறங்கிவிடாமல் தடுத்தாள். எனவே, அண்ணலின் கண்டம் நீலமாயிற்று. அவருக்குத் திருநீல கண்டர் என்ற பெயருமாயிற்று.

கோழியைக் கழுத்தைத் திருகிக் கொல்வர். கொலை செய்ய விரும்பும் கயவர்கள், "எங்கிட்டே மோதாதே. சங்கைத்

Koviloor Digital Library

திருகிப்புடுவேன்" என்று பயமுறுத்தி அச்சமூட்டுவதை நாட்டு வழக்கில் நாம் காணலாம்.

நம் உயிர்ப் பகுதி சங்குக் கழுத்தாகும். அதனை அம்பாள் காத்தாள். அதுபோல, சிவன் அழித்தல் தொழிலைச் செய்தாலும், நம் முன்னோர்கள் 'பிறவா யாக்கைப் பெரியோனாகிய, முழுமுதற் கடவுளாகிய சிவன் நம்மைக் காப்பான்' என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து, அதன் அடையாளமாகக் கழுத்தில் உருத்திராட்சம் அணிந்தனர்.

மழுங்கச் சிரைத்த தலையும், நெற்றி நிறைய விபூதியும், கழுத்தில் உருத்திராட்சமும், இடுப்பில் முக்கால் கால் தெரியும்படி துண்டும் அணிந்து, அன்றையச் செட்டியார்கள் இருந்தனர். ரவிக்கை அணியாமல் தட்டு மடிப்பாய்ச் சுற்றிய சேலைகட்டி ஆச்சிமார்கள் இருந்தனர். இதனை நம் வீடுகளில் மாட்டியுள்ள பழைய புகைப் படங்களில் காணலாம்.

ஆனால், நகரத்தார் ஆண்களும், பெண்களும் எவ்வாறு தோற்றமளித்தனர் என்பதைப் பெரும்புலவர் பண்டிதமணி அவர்கள் தமது 'நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு' என்ற நூலில் பின்வருமாறு கூறியுள்ளார்கள்.

"ஆண்கள் எப்போதும் நிறைய முடி வைத்திருப்பார்கள். மாறாமல் எப்போதும் பல வண்ணத் தலைப்பாகை கட்டி இருப்பார்கள். இத் தலைப்பாகை ஒரு சாண் அகலமும், 18 முதல் 24 முழம் வரை நீளமும் உடைய துணியாய் இருக்கும். காதுகளை வளர்த்து வண்டிக் கடுக்கன் அணிந்திருப்பர். நெற்றியில் மூன்று விரல் பட அழியாது விபூதி பூசி இருப்பர். வேட்டியைக் கொய்து கட்டி மடி வைத்து அதில் விபூதிப் பை வைத்திருப்பர். தீண்டல் நேர்ந்த காலத்தில், தலைப் பாகையை அவிழ்த்து வைத்திடுவர். தீண்டல் கழிந்த பின் அதனை மீண்டும் கட்டிக் கொள்வர்.

பெண்கள், காதுக்குக் கொப்பு, முடிச்சுக் கடுக்கன், பிறை சீதேவி என்னும் தலையணி, தங்கமணியும், பவளமும் சேர்ந்த மணிக்கோவை, வெள்ளியால் செய்த இடைச்சூரி, தங்க மணிகளும் பவளமும் சேர்ந்த கைக்கட்டை, காலிலும் கையிலும் வெள்ளி மோதிரங்கள், வெள்ளிக் கங்கணக் காப்புக்கள் அணிந்தனர்."

Koviloor Digital Library

இவைகளை திரஸ்ட்டன் தாம் எழுதிய 'அகில சாதி சரித்திரம்' என்ற புத்தகத்தில் புகைப்படம் எடுத்துச் சேர்த்து இருக்கின்றார்.

இதில் எது சரியென அறிஞர்கள் ஆய்க.

எனவே, சிவதருமத்தில் வழுவாமல் நகரத்தார் வாழ்ந்தனர்.

இதுகாறும் கூறியவற்றால், ஆதியில் சம்புத் தீவில் வசித்ததால் கடல் பயமின்றி இருந்தனர் என்பதும், குமரி முனைக்கும் இலங்கைக்கும் இடையில் இருந்து கடலில் மூழ்கிய லெமூரியா கண்டத்தின் ஒரு பகுதியாகிய நாக நாட்டில் சாந்தியாபுரி என்னும் நகரத்திலே வாழ்ந்தனர் என்பதும், ஆதியில் நகரத்தில் வாழ்ந்தாலும் அப்போது அவர்கள் 'நகரத்தார்கள்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பெறாமல், வைசியர்கள் (வாணிபம் செய்பவர்கள்) என்ற பொதுப் பெயராலேயே அழைக்கப்பட்டனர் என்பதும், குரு பீடத்தில் தீட்சை பெற்றனர் என்பதும், தீவில் வாழ்ந்ததால் அசைவ உணவு உண்டனர் என்பதும், மன்னன் மதிக்கும் பெருமை உடையவர்களாய் வாழ்ந்தனர் என்பதும், தமிழ் நாட்டை ஒட்டியிருந்த பகுதியையே தங்கள் தாயகமாகக் கொண்டிருந்தனர் என்பதும் பெறப்படும்.

காலம் மாறியது.

நாகநாட்டை ஆண்ட மன்னன் வைசியர்களைக் கொடுமைப் படுத்தினான்.

இதற்கு என்ன காரணம் எனச் சிந்திக்கின்றபொழுது, மன்னனை விட உயர்ந்த செல்வந்தர்களாக வைசியர்கள் இருந்தனர். அதனால் மன்னன் பொறாமைப்பட்டான் என்பது தெரிய வருகிறது.

இன்றும் கூட செட்டியார்களின் திருமணச் செலவு, வளமான வாழ்வு முதலியவற்றைப் பார்த்து, ஊரில் உள்ள பிற இனத்தவர்கள் பொறாமைப்படுவதைப் பார்க்கின்றோம்.

நாக நாட்டரசன் கொடுமை செய்தான்.

அமைதியாகவே வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள், அரச மரியாதையைப் பெருமையாகக் கருதியவர்கள், அரசனைத் தழுவியே வாழ்ந்தவர்கள், அரசனை எதிர்க்க விரும்பவில்லை.

Koviloor Digital Library

'துட்டனைக் கண்டால் தூர விலகு' என்பதைப் போலக் கொடுமைக்கார அரசனின் நாட்டைவிட்டு வேற்று நாட்டுக்குப் போக விரும்பினார்கள்.

குடிபெயர்தல்:

அதன்படி கலியுகம் 204இல் நாகநாட்டை விட்டு வடக்கு நோக்கிச் சென்று தொண்டை மண்டலத்தில் காஞ்சிபுரத்தை அடைந்து அங்கு வசிக்கத் தொடங்கினார்கள்.

ஓர் ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு நிரந்தரமாகச் சென்று, நிலையாக வீடு கட்டி அவ்வூரில் தங்குவதை 'வலசை போதல்' எனச் சொல்லுவார்கள்.

அதுபோல, சாந்தியாபுரியிலிருந்து நாக நாட்டு மன்னன் செய்த கொடுமைக்கு அஞ்சி, தொண்டை மண்டலம் காஞ்சிபுரத்திற்கு வலசை வந்து குடியேறினர்.

இக் குடிபெயர்வு கலியுகம் 204இல் நடந்ததாகக் கல்வெட்டில் குறிக்கப்பட்டிருப்பதால், கி.மு.விலேயே நடந்திருக்க வேண்டும் என எண்ண வேண்டியுள்ளது.

பொதுவாக, இந்திய வரலாறு முறையாக எழுதப்படவில்லை. ஆங்கிலேயர்கள் எழுதிய வரலாறும் பல திரிபுகளை உடையதாக உள்ளது.

உதாரணமாக, கி.பி.1857இல் நடைபெற்ற முதல் இந்திய சுதந்திரப் போரைச் 'சிப்பாய்க் கலகம்' எனக் கொச்சைப்படுத்தி ஆங்கில வரலாற்று ஆசிரியர்கள் எழுதியுள்ளனர்.

தமிழக வரலாற்றைப் பார்த்தால், அதுவும் முழுமையாக இல்லை.

மூவேந்தர்களைப் பற்றியோ, குறுநில மன்னர்களைப் பற்றியோ, இந்நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட வீரத்தியாகிகளைப் பற்றியோ அறிய முறையான வரலாறு இல்லை.

பல தமிழ் இலக்கியங்கள் அழிந்துவிட்டன. டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் ஊர்தோறும் சென்று இலக்கிய ஏடுகளைத் தேடிக் காப்பாற்றியிருக்காவிட்டால் எஞ்சியவையும் அழிந்திருக்கும்.

Koviloor Digital Library

நம்பியாண்டார் நம்பியும், இராசராச சோழனும் இல்லையேல், மூவர் தேவாரமும் அழிந்திருக்கும்.

தாலாட்டு, ஒப்பாரி, குரவைக் கூத்து, நொண்டி நாடகம் போன்ற மக்கள் கலையினால் ஒருசில வரலாற்று உண்மைகளை நாம் அறிகிறோம்.

எனவே, நாகநாட்டை ஆண்ட அரச வமிசத்தைப் பற்றியோ, கொடுமை செய்த நாக அரசனின் பெயரையோ நம்மால் அறிய இயலவில்லை.

அதுபோலவே, காஞ்சிபுரத்தில் இவர்கள் குடியேறியபோது ஆண்ட மன்னனைப் பற்றிய விவரங்களையோ, அவனுடைய பெயரையோ நம்மால் அறிய இயலவில்லை.

புதிதாகத் தன் நாட்டிற்குக் குடி வந்துள்ளவர்களைப் பற்றி அரசன் அறிந்தான்.

அவர்களை அழைத்து விசாரித்தான்.

அவர்கள் தங்கள் பூர்வீக வாழ்க்கையை விரிவாக எடுத்துரைத்தனர்.

வளமான வைசியர்கள் தன் நாட்டில் இருந்தால், தன் நாட்டு வளம் பெருகும் என நினைத்த தொண்டை மண்டல மன்னன், அவர்கள் தன் நாட்டில் வாழ அனுமதி அளித்தான்.

இன்றும் கூட பல மாநில அரசுகள், மற்றும் மத்திய அரசு வெளிநாட்டு முதலீட்டை வரவேற்று நாட்டை வளமாக்க முயல்வதை நாம் காண்கிறோம்.

சகல மன்னிணை மரியாதையும், புனிதத்தலம் (க்ஷேத்திரம்) சுவாத்தியம், உரிமையும், கோவிலும் மடமும் விட்டுக் கொடுத்து, புனித நீராடலும் (புஷ்கர நதியாடலும்) அருணகிரி சிவசங்கராசாரியாரிடத்தில் தீட்சா கிரியையும் பெற்றுக் கொள்ளும்படி தொண்டை மன்னன் அனுமதி கொடுத்தான்.

அவ்வாறே பெற்றுக் காஞ்சிபுரத்தில் மரகத விநாயகர் பூசையும், இரத்தின வியாபாரமும் செய்துகொண்டு சுகமாக (மகாயோக பாக்கிய சம்பன்னர்களாய்) வாழ்ந்து வந்தனர்.

Koviloor Digital Library

இரவுக்குப் பின் பகல் வருவது போல நாக நாட்டு வாழ்க்கைத் துன்பத்திற்குப் பிறகு காஞ்சிபுரத்தில் இன்பமாக வாழத் தலைப்பட்டனர்.

நகரங்களில் சிறந்தது காஞ்சி எனப் புகழப்படுகிறது. 'நகரேஷு காஞ்சி' எனச் சிறப்பிக்கப்பெறுகிறது.

கல்வியிலும் காஞ்சி சிறந்து விளங்கியது. காஞ்சியில் பிறந்த தர்மபாலர் பாடலிபுரத்தில் (பாட்னா) புகழ் பெற்றிருந்த நாளந்தா பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராய் இருந்ததாக வரலாறு தெரிவிக்கிறது.

பகலுக்குப் பின் இரவு வருதல் இயல்புதானே?

காஞ்சிபுரத்தில் இன்பமாய் வாழ்ந்தவர்களுக்கு அந் நகரத்து அரசனாகிய பிரதாபராசன் மூலம் துன்பம் வந்தது.

அவ் அரசன் அநீதியாய் நடக்கத் தொடங்கினான். நல்லாட்சி மாறி பேயாட்சி வந்தது! அபராதம் முதலிய தண்டனைகளை விதிக்கத் தொடங்கினான்.

வைசியர்கள் நீதி நெறி தவறாமல் வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள். தெய்வத்திற்குப் பயந்து குற்றம் புரியப் பயப்படுபவர்கள். பொய், களவு, வாது, சூது அறியாது வாழ்பவர்கள். அரச நிந்தனை எதுவும் அவர்கள் செய்தறியார். ஆகவே அவர்கள் தண்டனைகள் எதுவும் பெற அவசியம் நேரவில்லை. இவர்களுக்குப் பிரதாபராசனின் ஆட்சி பிடிக்கவில்லை.

இயல்பாகவே அமைதியான வாழ்வை விரும்பும் இவர்கள், அரசை எதிர்க்க விரும்பாத இவர்கள், கொடுங்கோல் நாக நாட்டு அரசன் ஆட்சி பிடிக்காமல், அந்நாட்டை விட்டுக் குடிபெயர்ந்த இவர்கள், தொண்டை மண்டல அரசன் பிரதாபராசன் கொடுங்கோல் ஆட்சியிலும் வாழப் பிடிக்காமல் மீண்டும் அங்கிருந்து குடிபெயர்ந்து வேற்று நாட்டுக்குச் செல்ல விரும்பினர்.

வளமாக வாழ்ந்தால் அரச பகை வரும் என்பது இதிலிருந்து தெரிகிறது.

நாக நாட்டு வாழ்க்கையையும், காஞ்சிபுரத்து வாழ்க்கையையும் நாம் ஆராய்ந்து பார்க்கின்றபோது கீழ்க்கண்ட உண்மைகள் தெரிய வருகின்றன.

Koviloor Digital Library

நாகநாட்டில் சாந்தியாபுரி என்ற நகரத்திலே அவர்கள் வாழ்ந்தாலும், வைசியர்கள் என்ற பெயராலே அழைக்கப் பட்டதைப் போல, காஞ்சிபுர நகரத்திலே அவர்கள் வாழ்ந்த போதும் வைசியர்கள் என்ற பெயராலேயே அழைக்கப்பட்டனர்.

நாகநாட்டில் கோபதீசுவரசுவாமி தரிசனம் செய்த அவர்கள், காஞ்சிபுரத்தில் சத்திபுரி ஈசுவரர் தரிசனம் செய்தனர்.

நாகநாட்டில் சதாசிவ குரு பீடத்தில் தீட்சை பெற்ற அவர்கள், காஞ்சிபுரத்தில் அருணகிரி சிவ சங்கராசாரியாரிடத்தில் தீட்சை பெற்றனர்.

இரண்டு இடத்திலும் மரகத விநாயகர் பூசை, புனித நீராடல், மன்னிணை மரியாதை, இரத்தின வியாபாரம், சிவ வழிபாடு, சுக வாழ்வு வாழ்ந்து வந்தனர் எனத் தெரிகிறது.

2108 ஆண்டுகள் காஞ்சிபுரத்திலே வாழ்ந்த இவர்கள், பிரதாபராசன் ஆட்சியில் (கொடுங்கோல் ஆட்சியாய் இருந்ததால்) வாழப் பிடிக்காமல், இவர்கள் மீண்டும் தெற்கு நோக்கி நகர்ந்தனர்.

சோழ நாட்டில் குடியேறுதல்:

காஞ்சிபுரத்திலிருந்து கிளம்பி தட்சிண தேசம் செல்ல விரும்பிப் புறப்பட்டார்கள். செல்லும் வழியில் சோழ நாட்டை அடைந்தார்கள்.

சோழ நாட்டுக்கு வந்து தங்கியது கலியுகம் - 2312 எனக் கல்வெட்டில் காணப்படுகிறது. கி.பி.700 இல் அவர்கள் சோழ நாட்டை அடைந்தார்கள்.

அப்போது சோழ நாட்டை ஆண்ட மன்னன் மனுநீதிச் சோழன் ஆவான். இவன் நீதி நெறி தவறாத செங்கோல் மன்னன்.

பசுவின் கன்றைத் தேர்க் காலில் நசுக்கிக் கொன்ற தன் மகனையே (இளவரசனையே) தன் மகன் என்னும் பாசத்திற்கு ஆட்படாமல், அதே தேர்க்காலில் வைத்து நசுக்கிக் கொன்றான். இவ்வாறு நீதியை நிலை நாட்டியதால், அவன் இயற்பெயர் மறைந்து காரணப் பெயராகிய மனுநீதிச் சோழன் என்ற பெயர் நிலைக்கலாயிற்று.

அன்புள்ள தலைவனும் தலைவியும் செம் மண்ணில் விழுந்த நீர் போல ஒன்றானதைச் "செம்புலப் பெயல் நீர்போல் அன்புடை நெஞ்சம்

Koviloor Digital Library

தாம் கலந்தனவே" என அகத்துறைப் பாட்டில் வரும் 'செம்புலப் பெயல் நீர்' என்ற உவமையையே அப் பாடலைப் பாடிய புலவரின் பெயராய் அமைத்து, 'செம்புலப் பெயல் நீரார்' எனக் குறித்ததைப் போல, ஆராய்ச்சி மணி கட்டி நீதி வழங்கிய மன்னனை 'மனுநீதிச் சோழன்' என அழைத்தனர்.

புதிதாகத் தன் நாட்டிற்கு வந்திருப்பவர்களைப் பற்றி அறிந்த மன்னன், அவர்களை அழைத்து விசாரித்தான்.

அவர்கள் ஆதியோடு அந்தமாக இதுவரை நடந்தவற்றைச் சொல்லி, "நாங்கள் தட்சிண தேசம் போவதற்காக வந்துள்ளோம்" என்பதைத் தெரிவித்தார்கள்.

இதனைக் கேட்ட அரசன், "நீங்கள் நம்முடைய தேசத்திலேயே இருங்கள். சகல மன்னிணை மரியாதையும் தந்து, முக்கிய (பிரதான) வைசியர்களாகவும், எங்கள் வமிசத்திற்கு மகுடம் சூட்டுவதற்காக 'மகுட வைசியர்'களாகவும் வைத்துக் கொள்கிறோம். காவிரிப் பூம்பட்டினத்தில் வடக்குத் தெருவில் பலவகை வணிகர்கள் (வைசியர்கள்) இருப்பதனால், நீங்கள் மற்ற மூன்று தெருவிலும் குடியிருங்கள்" என்று சொன்னதாகக் கல்வெட்டால் அறிகிறோம்.

மேலும், மாளிகையில் தங்கக் கலசமும், சிங்கக் கொடியும் வைத்துக் கொள்ள அனுமதித்தான்.

அதுமட்டுமல்ல; ருத்திராபதீசுவர தரிசனமும், காவிரி நீராடலும், சிதம்பரத்தில் உள்ள பதஞ்சலி சேத்திரத்தில் ஈசான்ய சிவா சாரியாரிடத்தில் தீட்சை பெற்றுக் கொள்ளவும் அனுமதி அளித்தான்.

காவிரிப்பூம்பட்டினத்தில் அவர்களைத் தங்கச் சொன்னதற்குக் காரணம், அவர்கள் கடல் வாணிபத்தில் சிறந்து விளங்கியமையே ஆகும்.

சோழ நாடு வளம் பெற இவர்கள் துணையிருப்பார்கள் என மன்னன் கருதினான்.

மன்னன் எண்ணம் பொய்க்கவில்லை. புகழ் பெற்றிருந்த புகார் துறைமுகத்தைப் பயன்படுத்தி வாணிபம் செய்து, தாங்களும் வளமாகி, நாட்டையும் வளப்படுத்தினர்.

Koviloor Digital Library

வடக்குத் தெருவில் பல வணிகர்கள் இருப்பதனால், நீங்கள் மற்ற மூன்று தெருவிலும் (கீழத்தெரு, மேலத்தெரு, தெற்குத் தெரு) குடியிருங்கள் என்று மன்னன் சொன்னதினாலே, ஏற்கனவே தன் நாட்டில் வசிக்கும் வணிகர்களுடன் இவர்களை வசிக்கச் சொல்ல, அதாவது பத்தோடு பதினொன்றாக, அல்லது, கூட்டத்தோடு கூட்டமாக மன்னன் இவர்களை நடத்த விரும்பவில்லை எனத் தெரிகிறது.

கோட்டை போல வீடுகட்டி இவர்கள் ஆதியில் இருந்தே வாழ்ந்து வந்தனர் என மன்னன் அறிந்ததினாலே, மாளிகை கட்டிக்கொள்ள அனுமதி வழங்கினான்.

கலசம் வைத்து மாளிகை கட்டிக் கொள்ளும் உரிமை, மரபு மன்னர்களுக்கு மட்டுமே உரியது. அதனை இவர்களுக்கும் மன்னன் வழங்கியதால், இவர்களின் சிறப்பை நன்கு உணர்ந்து, இவர்களின் பெருமையைப் பாதுகாக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் மன்னன் அனுமதி வழங்கினான் எனக் கருத வேண்டியுள்ளது.

மேலும், இவர்கள் வளமானவர்கள் என்பதை நன்கு அறிந்த மன்னன் தங்கக் கலசம் வைத்துக் கொள்ள அனுமதி அளித்தான்.

மன்னர்களை அடையாளப் படுத்த கொடி உதவும். சோழ அரசன் புலிக் கொடியை உடையவன்.

இவர்களைச் சிங்கக் கொடி வைத்துக் கொள்ள மன்னன் அனுமதித்ததில் இருந்து நாட்டுக்குத் தலைவனான மன்னனை விட இவர்கள் உயர்ந்தவர்கள் என மன்னன் எண்ணியிருப்பானோ எனச் சிந்திக்க வைக்கிறது.

காட்டுக்கு அரசன் சிங்கம் என்பதை நாம் அறிவோம்.

ஏற்கனவே தன் நாட்டில் வசித்த வைசியர்களிலிருந்து இவர்களை வேறுபடுத்திக் காட்டவும், பெரும் செல்வ வளம் உடையவர்களாய் இவர்கள் வாழ்ந்தமையாலும், இவர்களைத் 'தன வைசியர்' என அழைத்ததாக அறியலாம். தனம் என்றால் செல்வம் என்பது பொருள்.

மகுடம் சூட்டும் உரிமையை மன்னன் ஏன் வழங்கினான்?

காவிரிப் பூம்பட்டினத்தில் 8000 குடும்பத்தார் வாழ்ந்து வந்தனர். இதில் எந்தக் குடும்பத்துக்கு இவ்உரிமை வழங்கப்பட்டது?

Koviloor Digital Library

நகரத்தார்களின் முதல் கோவிலாகிய இளையாற்றக் குடியில் ஒக்கூருடையார் பிரிவினர், நகரத்தாரின் மானம் காத்ததினால், நகரப் பொதுவில் நடக்கும் எந்த விழாவிலும் முதல் மரியாதையை அப்பிரிவினர்க்குக் கொடுப்பர். அதுபோல 8000 குடும்பத்தில் எக் குடும்பத்திற்கு மகுடம் சூட்டும் உரிமை வழங்கப்பட்டது என்று அறிய சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை.

ஊர்த் திருவிழாவில் ஊர் கூடித் தேர் இழுக்கும்போது, தேர் இழுப்பவர்களை உற்சாகப்படுத்த, தேரின் மையப் பகுதியில் ஏறி நின்று வெள்ளை வீசும் உரிமை காரணக்காரராகிய அம்பலகாரருக்கு மட்டுமே உரியது.

அம்பலகாரர் (பெரும்பாலும் கள்ளர் இனத்தைச் சேர்ந்தவர்கள்) இனத்தார் ஊரில் பலர் இருந்தாலும், ஊர் அம்பலகாரர், அதாவது, ஊர்த் தலைவர் என ஒருவர் இருப்பார். அவருடைய வாரிசுதாரர்களே அம்பலப் பட்டத்திற்கு உரியவர்கள்.

அதுபோல 8000 குடும்பத்தில் ஒரு குடும்பத்தினருக்கு மட்டுமே மகுடம் சூட்டும் உரிமை வழங்கப்பட்டிருக்கும். அக் குடும்பம் எதுவென அறிய இயலவில்லை.

தன வைசியர்களில் ஒருவருக்கு இப்பெருமை கிடைத்தது என்று அறிகின்றபோது நகரத்தாரின் பெருமையை என்னவென்று சொல்வது?

சோழ மன்னனுக்குத் தனவைசியர்களின் சிறப்பு எவ்வாறு தெரிந்தது? வேற்றுத் தேசத்திலிருந்து சோழ நாட்டுக்கு வந்தவர்கள் இவர்கள். முன்,பின் அறிமுகம் இல்லாதவர்கள் இவர்கள். இம் மண்ணுக்குப் புதியவர்கள் இவர்கள்.

இவ்வாறு பல காரணங்கள் இருந்தாலும், பல நாள் பழகியவர் களைப் போல, மன்னன் அவர்களுக்கு மகுடம் சூட்டும் உரிமையை, மரியாதையை அளித்தான். அதற்குக் காரணம் ஒற்றர்கள் மூலம் அவன் செய்தி அறிந்தே சிறப்புச் செய்தான் என முடிவுக்கு வருவது ஏற்புடையதே.

Koviloor Digital Library

ஓர் அரசனுக்கு நால்வகைப் படையைக் காட்டிலும் மிகச் சிறந்ததாக அமைய வேண்டிய படை ஒற்றர் படையே. அதன் முக்கியத்துவம் அறிந்தே வள்ளுவர் 'ஒற்றாடல்' என்ற அதிகாரத்தை எழுதினார்.

சிறந்த ஒற்றர்கள் சோழ மன்னனிடம் இருந்ததினாலேயே, அவர்கள் மிகைப்படுத்தாத உண்மையை, செய்தியை, மன்னனுக்குத் தெரிவித்தார்கள். அதனாலேயே மன்னன் இந்தப் பெருமையை இவர்களுக்கு அளித்தான்.

இரத்தின வியாபாரம் செய்ததினாலே, இவர்கள் 'இரத்தின தன மகுட வைசியர்கள்' என்று பெயர் பெற்று பெருமை அடைந்தனர். அதனால் 'மன்னவர் பின்னோர்' என மதிக்கப் பெற்றனர்.

மரகத விநாயகர் பூசை செய்து, சைவ சமய நெறியில் வழுவாது குளம் (தடாகம்) வெட்டி, சிவாலயம் கட்டி, குல தருமம் அழிந்து விடாமல் காத்து நெடிய காலம் வாழ்ந்து வந்தனர்.

நாக நாட்டிலிருந்து காஞ்சிபுரம் வந்து, பின் காவிரிப்பூம் பட்டினம் வந்து வாழ்கின்றவரை இவர்கள் வாழ்வில் எந்த மாற்றமும் நிகழவில்லை.

இவர்கள் மானமுடையவர்கள் என்பதை உலகத்தார்க்கு இறைவன் உணர்த்த விரும்பினானோ, என்னவோ, பெண்ணால் பெரும் சோதனை ஏற்பட்டது.

அடியார்கள் பெருமையை உலகிற்கு அறிவிக்க இறைவன் அவர்களைச் சோதிப்பதைப்போல, இரத்தின தன மகுட வைசியர் களுக்குச் சிறு பெண் வடிவிலே துன்பம் தொடங்கியது.

அப்போது சோழ நாட்டை 'பூவந்திச் சோழன்' என்ற மன்னன் ஆண்டு வந்தான். வணிகர்களின் வளம் அவன் கண்ணை உறுத்திக் கொண்டிருந்தது.

ஏழு நீள் நிலைகொள்
மாடத்து இரவியின் புரவி ஏழும்
தாழுவ இருபத்து ஏழு மாதரும்
தானும் தாண்டி

Koviloor Digital Library

வீழுவன் இந்து இந்த விதம்
உயர மனையில் நன்கு
வாழுவர் வணிகர் வீதி
வளம் சொல வல்லார் யாரே

என்ற பாடலால் வணிகர் வீதியின் வளத்தை நாம் அறியலாம்.

ஒரு நாள் பூவந்திச் சோழன் தன் குதிரையில் ஏறி வணிகர்கள் வீதியில் வந்தான்.

அப்போது அவ் வீதியில் வணிக குலச் சிறுமிகள் (சிறு பெண்கள்) சிற்றில் அமைத்து, சிறு சோறாக்கி விளையாடிக் கொண்டிருந்தனர்.

வளமான வணிகர்கள்; எனவே, அப் பெண்கள் வளமாக விளையாடினர் என்பதைக் கீழ்க்கண்ட பாடல் நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது.

செம்பொன்னில் உருக்கி வார்த்த
சிறுகட்டி அடுப்புக் கூட்டி
நம்பிய குளியல் போந்த
குடச் சங்கு நடுவில் ஏற்றிப்
பம்புதேன் உலைநீர் பெய்து
பவளத் தீ விறகு மூட்டி
அம்பொனின் மகளிர் வெண்முத்து
அரிச் சோறு ஆக்குவாரால்

'அடுப்பில் ஏற்றும் சட்டி செம் பொன்னால் செய்யப் பெற்றது. தேன் போன்ற சுவையான உலை நீர் அக் குடத்தில் ஊற்றப்படுகிறது. தீ மூட்டுகிறார்கள். அத் தீ செந்நிறமாய், மஞ்சளாய், நீலமாய் எரிகிறது. அது பவளம் போலக் காட்சியளிக்கிறது. அழகிய பொன்போல மின்னும் சிறு பெண்கள் வெண்முத்துப் போன்ற அரிசிச் சோற்றைச் சமைக்கின்றனர்.' என இப்பாடல் அவர்களின் வளத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது!

பொன், பவளம், முத்து போன்ற விலை உயர்ந்த பொருட்களின் மேல் ஆதியில் இருந்தே இவர்கள் விருப்பமாய் இருந்தார்கள். அவைகளை அணிந்து தங்கள் வளத்தை உலகிற்குக் காட்டினார்கள்.

Koviloor Digital Library

அவைகளை அணிந்து வந்தால் தங்களுக்குப் பெருமை கூடும் என்று நினைத்தார்கள் என்ற உண்மையும் இப்பாடலால் நமக்குத் தெரிகிறது.

இன்று வரை நகரத்தார்கள் தங்கம், வெள்ளி, வைரம், வைடூரியம், நவரத்தினம் போன்றவற்றை அணிவதும், அவற்றை ஒரு சேமிப்பாகக் கருதுவதும் இங்கு நினைத்துப் பார்க்கத் தக்கது.

இற்றைக்கு நகரத்தார் ஆண்கள் கழுத்துச் சங்கிலி (மைனர் செயின்) கைச் சங்கிலி (பிரேஸ்லெட்) அணிவதை நாம் பார்க்கிறோம்.

வீதியில் விளையாடிக் கொண்டிருந்த சிறு பெண்களில் அழகுடைய 5 வயதுப் பெண்ணைக் கண்டு மன்னன் பெரிதும் ஆசைப் பட்டான்!

முன்பொருகால் வீதியில் விளையாடிக் கொண்டிருந்த சிறுபிராயத்துச் சுந்தரரைக் கண்டு நரசிங்க முனையர் என்ற மன்னன் ஆசைப்பட்டான். பெற்றோர் சம்மதத்துடன் அவரை அரண்மனைக்கு அழைத்துச் சென்றான்.

ஆனால் இங்கே பூவந்திச் சோழன் பெண்ணின் பெற்றோருக்குத் தெரியாமல் அச் சிறுபெண்ணைக் குதிரையில் ஏற்றிச் சென்று அரண்மனையை அடைந்தான்.

அழகு எப்போதுமே ஆபத்தையே தரும்.

மன்னன் அப் பெண்ணை அழைத்து வந்ததை அறிந்த அரண்மனையில் உள்ளோர், வணிகர்களின் இயல்பைக் கூறி மானமே பெரிதென வாழ்பவர்கள் என்ற உண்மையை மன்னனுக்கு எடுத்துக் கூறினர்.

மன்னன் அச் சிறுபெண்ணை அழைத்துச் சென்று விட்டான் என்ற செய்தியறிந்த வணிகர்கள் அரண்மனைக்குச் சென்று மன்னனைச் சந்தித்து அச் சிறு பெண்ணை விட்டுவிடும்படி கேட்டனர்.

வணிகர்களின் குல வழக்கத்தை அறிந்த மன்னன், "நீங்கள் இச் சிறுபெண்ணைக் கொன்று விடுவீர்கள் என அறிகிறேன். அங்ஙனம் செய்தால் உங்கள் தலையை வாங்கி விடுவேன். 8000 பொன்னும் தண்டம் தர வேண்டும்" என ஆணையிட்டு அச் சிறுபெண்ணை மன்னன் விடுத்தான்.

Koviloor Digital Library

அவர்கள் அரசன் ஆணைக்குக் கட்டுப்படுவதாகக் கூறி அச் சிறு பெண்ணை அழைத்துச் சென்றனர்.

ஆனால், தங்கள் குல வழக்கப்படி அப் பெண்ணைக் கொன்றனர்.

பெண்கள், அவர்கள் சிறு பெண்ணாய் இருந்தாலும், வீட்டுப் படி தாண்டினால் பத்தினித் தன்மை போய்விட்டதாக அவர்கள் கருதினார்கள். மானம் காக்க உயிரைவிடத் துணிந்தனர். மானம் பெரிது, உயிர் பெரிதல்ல என வாழ்ந்தனர்.

மன்னன் ஆணைப்படி 8000 பொன்னுடன், தண்டனையை ஏற்றுக் கொள்ள அரண்மனைக்குச் சென்றனர்.

செய்தி அறிந்த அரசன் இவர்கள் மனத் துணிவையும், பணச் செருக்கையும் எண்ணிக் கோபமுற்றான்.

ஆனால், கோபத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல், சிறு பெண்ணின் கொலைக்குத் தான் காரணமாகித் தன் மீது பழி வந்து விட்டதே என்று வருத்தம் அடைபவனைப் போல நடித்து, "ஒரு பழி போதும், நீங்கள் போகலாம். உங்களை மன்னித்தேன்" எனத் துக்கம் தாழாதவனைப் போலப் பேசினான்!

மன்னனின் வஞ்சக எண்ணத்தை அறியாத அவர்கள், புலி பதுங்குவது பாய்வதற்குத்தான் என்பதை உணராத அவர்கள், அரண்மனையை விட்டுச் சென்றனர்.

சில நாட்கள் சென்றன.

காவிரி பெருக்கெடுத்து ஊரெங்கும் அழிக்கத் தலைப்பட்டது. அது கண்ட மன்னன், ஊரில் உள்ள அனைவரும் மண்வெட்டி, கூடையுடன் வந்து மண்ணை வெட்டிக் கூடையில் அள்ளிக் கொட்டி உடைப்பை அடைக்க வேண்டும் என ஊர் ஊழியத்துக்கு ஆணையிட்டான்.

மதுரை வைகையிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஊரை அழிக்கத் தொடங்கியபோது, வீட்டுக்கொருவர் ஊழியம் செய்ய வரவேண்டும் எனப் பாண்டிய மன்னன் ஆணையிட்டான்.

Koviloor Digital Library

வந்தி என்ற புட்டு விற்கும் கிழவி வீட்டில் ஆள் இல்லாததால் ஆள் அனுப்ப இயலாது தவித்தாள். மன்னன் ஆணை அவளை அச்சுறுத்தியது. சொக்கலிங்கப் பெருமானிடம் வேண்டினாள்.

அவளின் தவிப்பைப் போக்க நினைத்த பெருமான் கூலி ஆளாக வந்து புட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்டுத் திருவிளையாடல் நிகழ்த்தியதை நாம் அறிவோம் அல்லவா?

அதே போன்று, பூவந்திச் சோழ அரசனின் ஆணை பறை அறைந்து அறிவிக்கப்பட்டது. அதைக் கேட்ட காவிரிப் பூம்பட்டினத்து தன வைசியர்கள் தங்கள் பண்டக சாலையில் உள்ள பஞ்சு மூட்டைகளால், தாங்கள் வசிக்கும் மூன்று தெருக்களில் ஏற்பட்ட உடைப்பை அடைத்தனர்.

"ஏழு நகரத்தார் பள்" என்னும் நூலில், 'பஞ்சுப் பொதி கொண்டு காவேரி ஊரைப் பரவாது அடைத்த வணிகேசர்' எனக் கூறப்பட்டு இருப்பதிலிருந்தும்,

பாடுவார் முத்தப்ப செட்டியார் தாம் பாடிய 'திருமுக விலாசத்தில்'

–'யாரும் அதிசயிக்கக் காவேரி ஆறுதனைப் பஞ்சுப் பொதியால் அடைத்த புகழாளர் எனக் கூறியதிலிருந்தும், இவ் உண்மையை நாம் அறியலாம்.

இவர்கள் செயலைக் கண்ட பூவந்திச் சோழ மன்னன் இவர்கள் மீது தீராத கோபம் கொண்டான்.

இவர்கள் செருக்கை அடக்க விரும்பிய மன்னன், வணிகர்களின் வீடுகளில் வெள்ளியால் போடப்பட்டிருந்த தெரு வாசல் கதவுகள் அனைத்தையும் பிடுங்கி அரண்மனைக்குக் கொண்டு வருமாறு ஏவலர்களுக்குக் கட்டளையிட்டான்!

ஏவலர்கள் அவ்வாறே செய்தனர்.

மன்னனுக்குப் பாடம் கற்பிக்க விரும்பிய வணிகர்கள் இரவோடு இரவாகப் பத்தரை மாற்றுத் தங்கத்தால் தெருவாசல் கதவுகளை அமைத்தனர்.

பொழுது விடிந்தது.

Koviloor Digital Library

வணிகர்கள் தங்கக் கதவு அமைத்ததை, பாடுவார் முத்தப்ப செட்டியார், தாம் பாடிய திருமுக விலாசத்தில்,

—வல்இரவில்
வற்கதவு வெள்ளிதனை வாங்கிடவே
அக் கணமே
பொற்கதவு நாட்டிப் புகழ் படைத்தோர்

எனப் பாடி மகிழ்கிறார்.

இந்த நிகழ்வினை 'ஏழு நகரத்தார் பள்' என்னும் நூல்,

'பாங்கான வெள்ளிக் கதவு பிடுங்கிப் பின் பைம் பொன்னால் இட்ட வணிகேசர்' எனக் கூறுகிறது.

அந்த மூன்று தெருவிலும் காலையில் மன்னன் உலாவந்தான்.

வணிகர்களுக்குச் செருக்கு அடங்கி இருக்கும் என எக்காளமுடன் வந்த மன்னனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது!

ஆம், வெள்ளிக் கதவுகளுக்குப் பதிலாகத் தங்கக் கதவுகள் மின்னின. அக்கதவுகள் மன்னனை வரவேற்றன.

நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்று.

வணிகர்களின் செருக்கை அடக்க மன்னன் நினைத்தான். ஆனால் அவர்கள் ஓசைப்படாமல் மன்னனின் செருக்கை அடக்கினர்!

மன்னனின் முகத்தில் கரி பூசப்பட்டது!

அடிபட்ட பாம்பு, மிக்க கோபமுடன் சீறுவதைப் போல, கதவுகளைப் பார்த்த மன்னன் மிக்க கோபம் அடைந்தான்.

வணிகர்களுக்குத் தகுந்த பாடம் கற்பிக்க விரும்பிய மன்னன், வணிகக் குலப் பெண்கள் அனைவரையும் சிறையிடச் சூழ்ச்சி செய்தான்!

மன்னனின் சூழ்ச்சியை அறிந்த வணிகர்கள் 8000 குடும்பத்தாரும், தங்கள் ஆண் பிள்ளைகளை மட்டும் தங்கள் குருவாகிய ஆத்தும நாத சாத்திரியாரிடம் ஒப்படைத்து, தங்களுடைய எல்லாப் பொருட்களையும் அவர் வசம் ஒப்புவித்து, குழந்தைகளைக் காப்பாற்றும் படி வேண்டி, மரகத விநாயகர் பூசையை நடத்தும் படி செய்து, மானத்தைக் காக்க உயிர் துறந்தனர்.

Koviloor Digital Library

இதை அறிந்து தான் வள்ளுவர்,

மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். (குறள் 969)

என எழுதினாரோ?!

மானம் காக்க உயிர்விட்ட சேர மன்னன் கணைக்கால் இரும் பொறையைப் பற்றி நாம் அறிவோம். அவன் மன்னனாய் இருந்தாலும் தனி மனிதன்.

ஆனால், வணிகர்கள் ஓர் இனம்.

மானம் காக்க உயிர் துறந்த பெருமை உடைய இனம். இவர்களைத் தவிர உலகத்தில் வேறு எந்த இனமும் இலலை என்கின்ற போது, இவர்களின் பெருமையை எழுத்தில் வடிக்க இயலுமா?

நாக நாட்டரசனின் கொடுங்கோல் ஆட்சியை வெறுத்துக் காஞ்சிபுரம் வந்த வைசியர்கள், காஞ்சி மன்னன் பிரதாபராசன் கொடுங்கோல் ஆட்சியையும் வெறுத்து, தட்சிண தேசம் செல்ல விரும்பியவர்களை மனுநீதிச் சோழன் தன் நாட்டில் தங்க வைத்ததால், இக் கொடுமையை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

விதி யாரை விட்டது?!

ஆனால், முன்னர் வாழ்ந்த இடங்களில் பெண்களின் கற்புக்குப் பங்கம் வந்ததாகத் தெரியவில்லை.

சோழ நாட்டில் இக் கொடுமை நடந்தது என்றால், அப் பெண்களின் அழகும், திரண்ட செல்வமுமே காரணமாய் இருத்தல் வேண்டும்.

வைசியர்களின் உயிர்த் தியாகம் பூவந்திச் சோழ மன்னனைக் கலங்க வைத்து விட்டது. பழி வாங்க விரும்பிய மன்னன், தீராப் பழியைத் தேடிக் கொண்டான்.

சோழர் குலத்திற்கே மறையாத களங்கம் இது.

ஆறு பல பொருட்களை அடித்துச் சென்று கடலில் சேர்ப்பதைப் போல, வரலாறும் இப்படிப்பட்ட கயவர்களைச் சுமந்து காலத்தை உருளச் செய்கிறது.

Koviloor Digital Library

இரத்தின தனமகுட வைசியர்களின் ஆண் பிள்ளைகளை ஆத்தும நாத சாத்திரியார் வளர்த்து வந்தார்! அவர்களுக்குக் கல்வி கற்பித்தார்.

அவர்கள் வாழ்ந்து வாலிபர் ஆனார்கள்.

வைசியர்களின் உயிர்த் தியாகத்தால் அதிர்ச்சியுற்ற சோழ மன்னன், பழி வாங்கும் எண்ணத்தைக் கைவிட்டு, அவர்களின் பிள்ளைகள் தன் நாட்டிலேயே தங்கி வாழ, கல்வி கற்க அனுமதித்தான்.

காலம் ஓடியது.

கி.பி. 1100 இல் பூவந்திச் சோழன் முதுமை அடைந்து, தன் மகன் இராசபூசணனுக்குப் பட்டம் கட்ட விரும்பினான்.

"எங்கள் குல வழக்கப்படி, வைசியர்கள் மகுடம் எடுத்துக் கொடுத்து என் மகனுக்குப் பட்டம் சூட்ட வேண்டும்" எனப் பிள்ளைகளிடம் கேட்டான்.

"பிரம்மச்சாரிகளாய் உள்ள நாங்கள் மகுடம் எடுத்துக் கொடுக்கத் தகுதியற்றவர்கள்" எனப் பிள்ளைகள் கூறினர்.

மேலத்தெரு 6 வழியில் 600 பிள்ளைகளும், தெற்குத் தெரு 4 வழியில் 400 பிள்ளைகளும், கீழத் தெரு 7 வழியில் 502 பிள்ளைகளும், ஆக மொத்தம் 1502 பிள்ளைகளும் ஒரே பதிலைச் சொல்ல, மன்னன் செய்வதறியாது திகைத்தான்!

பின்னர், வைசியர்களின் குருவாகிய ஈசானிய சிவாச்சாரியாரையும் மற்ற சான்றோர்களையும் அழைத்து, "இதற்கு என்ன செய்யலாம்?" எனக் கேட்டான்.

அவர்கள் தீர ஆலோசித்துக் கீழ்க்கண்ட முடிவை மன்னனிடம் தெரிவித்தார்கள்.

"சாத்திரத்தில் பிரம குலத்தார் சத்திரிய குலத்திலும், சத்திரிய குலத்தார் வைசிய குலத்திலும், வைசிய குலத்தார் வேளாளர் குலத்திலும் பெண்களைத் திருமணம் செய்து கொள்ளலாம் என விதியிருக்கிறது."

Koviloor Digital Library

இதனைக் கேட்ட மன்னன் வேளாளர்களையும் அவர்களுடைய குருமார்களையும் அழைத்து விவரத்தைக் கூறிப் பெண் கேட்டான்.

"எப்பொழுதும் கொள்வினை, கொடுப்பினை (பெண் கொடுத்துப் பெண் எடுத்தல்) வைத்துக் கொள்ள உடன்பட்டால், எங்களுக்குச் சம்மதம்" என வேளாளர்கள் அரசனிடம் கூறினர்.

அரசன் வைசியர்களைப் பார்த்தான்.

"நாங்கள் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளச் சம்மதிக்கிறோம். ஆனால், பெண் கொடுக்கச் சம்மதமில்லை" என வைசியர்கள் கூறினர்.

அரசனும், ஆதீன குருமார்களும் வைசியர்கள் சொல்வதை ஆமோதித்தனர்.

"எங்கள் பெண்கள் எங்கள் ஆதீனக் குருவிடம் தீட்சை பெறச் சம்மதிக்க வேண்டும்" என வேளாளர்கள் கேட்டனர்.

இதற்கு வைசியர்கள் ஒப்புக் கொண்டனர்.

இவ் உடன்பாட்டால் மன்னன் மகிழ்ந்தான். தான் செய்த பாவச் செயலுக்கு இதன் மூலம் பரிகாரம் தேடிக் கொண்டான்.

பாவத்தை உணர்ந்தபோதே அது மன்னிக்கப்படுகிறது என்பார்கள்.

தங்கள் முன்னோர்களுக்குச் செய்த பாவத்தை மன்னன் உணர்ந்து, தங்களைக் குடும்பத்தார் ஆக்க முயற்சிக்கிறான் என்பதை உணர்ந்த வைசியர்கள், மன்னனை மன்னித்து விட்டார்கள்.

பெண் பாவம் புரிந்த மன்னன், மகுடம் சூட்டும் உரிமையை மாற்றாமல், மறக்காமல், மறுக்காமல் இவர்களுக்கே வழங்கினான் என்பதை அறியும்போது, இவர்கள் பெருமையை என்னவென்று சொல்லுவது?

மேலத்தெரு ஆறு வழி 600 பிள்ளைகளும் கார்காத்த வேளாளர் பெண்களைத் திருமணம் செய்து கொண்டனர். அந்தப் பெண்களுக்குத் திருநாவுக்கரசு குருக்களை தீட்சை அளிக்கும் குருவாக நியமித்தனர்.

Koviloor Digital Library

தெற்குத்தெரு நான்கு வழி 400 பிள்ளைகளும், காணிய வேளாளர் பெண்களைத் திருமணம் செய்து கொண்டனர். அந்தப் பெண்களுக்கு கும்பகோணம் சிவஞானக் குருக்களை தீட்சை அளிக்கும் குருவாக நியமித்தனர்.

கீழத்தெரு ஏழு வழி 502 பிள்ளைகளும், சோழிய வேளாளர் பெண்களைத் திருமணம் செய்து கொண்டனர். அந்தப் பெண்களுக்கு ஸ்ரீவாஞ்சியம் நிரம்ப அழகிய குருக்களை தீட்சை அளிக்கும் குருவாக நியமித்தனர்.

இவ்வாறு 1502 பிள்ளைகளும் திருமணம் செய்து குடும்பத்தார் ஆகினர். பின்பு இராசபூசண சோழ மன்னன் பட்டம் சூட மகுடம் எடுத்துக் கொடுத்தனர். முன்பு போலவே எல்லா மரியாதையும் பெற்றனர்.

வேளாளர்கள் சீதனச் சீர்வரிசை செய்தனர். பெண்களுக்கு வேலை செய்ய வெள்ளாட்டிகள் (வேலைக்காரிகள்) வைத்தனர். பெண் வழியாகிய வேளாள குலத்து மாமனுக்குச் சடங்கு செய்யும் உரிமை இல்லை என்றும், உபய குல சம்பந்தமாய் உண்டாகும் இரண்டு வழி மாமன்மார்களுக்கும் சடங்கு செய்யும் உரிமை உண்டு என்றும், இதுவன்றி நன்மை, தீமை செய்கிறதில்லை என்றும் வாக்குறுதி செய்து கொண்டனர்.

வேளாளர்குலப் பெண்களை வைசியர்கள் மணந்தது காலத்தின் கட்டாயமாகும். இதன் மூலம் கலப்பு மணம் நடந்ததாக நாம் கருதி விடக்கூடாது. ஏனெனில், பெண் கொள்ள வைசியர்கள் விரும்பினார்களே அன்றி, பெண் கொடுக்க அவர்கள் உடன்பட வில்லை. எனவே, ஆதி முதலே கலப்பு மணத்தை அவர்கள் ஆதரிக்க வில்லை எனத் தெரிகிறது. இன்றும் அதே நிலை நீடிப்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

அவர்கள் ஒரே குல வேளாளர் பெண்களை மணக்கவில்லை. ஒவ்வொரு தெருவாரும் வெவ்வேறு பிரிவு வேளாளக் குலப் பெண்களை மணந்ததில் இருந்து, ஒரே கோவில்ப் பிரிவில் மணம் செய்யாமல், வேறு கோவில்ப் பிரிவில், அல்லது அக் கோவிலின் உட் பிரிவில் (இளையாத்தங்குடி, மாத்தூர் கோவில்கள் 7 உட் பிரிவுகளை

Koviloor Digital Library

உடையது) மணம் செய்து கொள்ளும் வழக்கத்தை அவர்கள் அன்றே பின்பற்றத் தொடங்கினர் எனத் தெரிகிறது.

செட்டிய வீட்டில் பிரபலமாய் உள்ள குட்டிகளை (வேலைக்காரப் பெண்கள்) அவர்கள் அன்றே வெள்ளாட்டிகள் என்ற பெயரில் வைத்திருந்தனர் எனவும் தெரிகிறது.

சீதனம், சீர்வரிசைகள் எல்லாம் பெண்களுக்குக் கொடுத்தனர் என்பதிலிருந்து ஆதிகாலம் முதலே சீதனமும், சீர்வரிசையும் பெண்களின் வாழ்வுக்கு ஆதாரமாய் வழங்கப்பட்டன எனவும் தெரிகிறது.

3 பிரிவு வேளாளர் குலப் பெண்களுக்கும் தீட்சை கொடுக்க அன்று 3 குருமார்கள் நியமிக்கப்பட்டனர். ஆனால், இன்று ஸ்ரீவாஞ்சியம் நிரம்ப அழகிய குருக்கள் மட்டுமே குன்றக் குடிக்கருகில் துலாவூரில் வீற்றிருந்து பெண்கள் குருபீடமாக விளங்குகின்றார்கள். இவர்கள் இல்லற வாழ்வேற்று குடும்பமாக உள்ளார்கள்.

உபயகுல பூபால வைசியர் இரத்தின தன மகுட வைசியர், கெங்காகுல வேளாளப் பெண்களை மணந்து கொண்டதால் 'சந்திர கெங்காகுல வைசியர்கள்' எனச் சிறப்புப் பெற்று, சைவ சமய சிவதரும நெறியில் வாழ்ந்து வந்தனர்.

பாண்டிய நாட்டில் குடியேறுதல்:

சவுந்தர பாண்டியன் சோழ மன்னனிடம் நற்குடிகளைக் கேட்டுப் பெற்று எல்லா வைசியர்களையும் பாண்டிய நாட்டிற்கு அழைத்துச் சென்றதாகக் கல் வெட்டால் அறிகிறோம்.

இது உண்மையாய் இருக்குமா?

எந்த மன்னனும் நற்குடிகளைத் தன் நாட்டை விட்டுப் போக அனுமதிக்க மாட்டான். மேலும், நற்குடிகளைக் கேட்டுப் பெற முடியாது. போரிட்டு வெற்றி பெற்று, அம் மக்களைச் சிறைப் பிடித்துக் கொண்டு செல்ல இயலுமே அல்லாது, விருப்பத்தின் பேரில் அழைத்துச் செல்ல இயலாது.

கல்வெட்டுச் செய்தி பொருத்தமில்லாதது.

Koviloor Digital Library

பின் ஏன் சோழ நாட்டை விட்டுப் பாண்டிய நாடு சென்றார்கள்?

இராச பூசண சோழனுக்குப் பட்டம் கட்ட வேண்டிய நிலை ஏற்பட்டதால், மன்னன் மணமுடித்து வைத்து, மகுடம் சூடி, மரியாதை செய்தான். இதே நிலை தொடரும் என உறுதியாகச் சொல்ல முடியாத சந்தேகம் நிலவியது.

மன்னனை அவர்கள் மன்னித்தாலும் பழைய காயங்கள் மனதை விட்டு அகலவில்லை. இராசபூசண சோழ மன்னன் நல்லவன் என்றால், இவனுக்குப் பின் வரும் மன்னன் எப்படி இருப்பானோ என்ற அச்சம் அவர்களை அரித்துக் கொண்டே இருந்தது.

பயந்து பயந்து வாழ்வதைவிட, பாண்டிய நாட்டில் வாழ்வது சிறந்ததென எண்ணியே அவர்களாகவே, பாண்டிய நாட்டில் குடியேறினர் எனக் கருதுவதே ஏற்புடையது. இதனை அறிஞர்கள் ஆராய்க.

பாண்டிய நாட்டில் உள்ள ஓங்காரக்குடி என்ற இடத்தில் வந்து அவர்கள் குடியேறினார்கள்.

பாண்டிய மன்னன், இவர்கள் குடியேற்றத்தைப் பற்றி அறிந்தான். இவர்கள் பெருமையை அவன் அறிந்திருந்ததால், அவர்களைத் தக்க மரியாதையுடன் நடத்த விரும்பினான்.

அவர்களை அழைத்து, 'கடலுக்கு மேற்கு, வைகைக்கு வடக்கு, பிரான்மலைக்குக் கிழக்கு, வெள்ளாற்றிற்குத் தெற்கு என்ற இந்த நான்கு எல்லைக்குட்பட்ட பகுதி வேளாளர் பூமியாய் இருப்பதால், நீங்கள் அனைவரும் இங்கேயே குடியிருங்கள் என அனுமதி அளித்தான்.

அரியூர், சுந்தரபட்டினம், இளையாற்றக்குடி ஆகிய மூன்று நகரங்களும், பிரான்மலைக் கோவில், சுந்தரபட்டினக் கோயில், இளையாற்றக்குடிக் கோயில் ஆகிய மூன்று கோவில்களும், குருமார்கள் மடம் கட்டிக் கொள்ள அனுமதியும் வழங்கினான்.

காலம் செல்லச் செல்ல வைசியர்களின் ஒற்றுமை குலைந்தது.

எங்கு சென்றாலும் ஒன்றாகச் சென்றும், ஒரே இடத்தில் வாழ்ந்தும் பழக்கப்பட்ட அவர்கள் 3 நகரங்களையும், 3 கோவில்களையும்

Koviloor Digital Library

பாண்டிய மன்னனிடம் பெற்று வாழ்ந்ததினால், அவர்களுக்குள் ஒற்றுமைச் சிதைவு ஏற்பட்டது.

ஏனெனில், நாக நாட்டில் சாந்தியாபுரி நகரில் வாழ்ந்தபோதும், தொண்டை மண்டலத்தில் காஞ்சிபுரத்தில் வாழ்ந்தபோதும், சோழ நாட்டில் காவிரிப் பூம்பட்டினத்தில் வாழ்ந்தபோதும், ஒரே இடத்தில் வாழ்ந்தனர்.

இப்போது 3 பிரிவு வேளாளக் குலப் பெண்களை மணந்ததால் 3 குரு பீடங்கள் ஏற்பட்டன. பாண்டிய மன்னன் வழங்கிய 3 நகரங்கள், 3 கோவில்கள் என அமைந்ததால், அவர்களுக்குள் ஒற்றுமைச் சிதைவு ஏற்பட்டது.

பிரிந்து வாழாத இயல்புடைய அவர்கள் பிரிந்து வாழ்வதே நல்லது எனத் தீர்மானித்தனர்.

அதன்படி, மேலத் தெரு ஆறு வழியார் அரியூர் நகரத்தையும், பிரான்மலைக் கோவிலையும் பெற்றனர். இவர்கள் 'அரியூரார்' என அழைக்கப்பட்டனர். (இவர்கள் தங்களை இப்போது அரியூர் நகரத்தார் என்றே அழைத்துக் கொள்கின்றனர்). பிரான்மலையைச் சுற்றியுள்ள ஊர்களில் இவர்கள் தற்போது வாழ்ந்து வருகின்றனர்.

தெற்குத் தெரு நான்கு வழியார் சுந்தர பட்டினத்தையும், சுந்தரபட்டினக் கோவிலையும் பெற்றனர். இவர்கள் 'சுந்தரத்தார்' என அழைக்கப்பட்டனர். இவர்கள் நாகர்கோயில் கோட்டார் பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். மரகத விநாயகர் அங்குதான் உள்ளது.

கீழத்தெரு ஏழு வழியார் இளையாற்றக்குடி நகரத்தையும், இளையாற்றக்குடிக் கோவிலையும் பெற்றனர். இவர்கள் இளையாற்றக் குடியார் என அழைக்கப்பட்டனர்.

காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்து பாண்டிய நாட்டிற்கு வந்த வைசியர்கள் ஓங்காரக் குடியில் தங்கினர் எனக் கல்வெட்டால் அறிகிறோம். ஓங்காரக்குடியின் தற்காலப் பெயர் என்ன என அறிய இயலவில்லை.

ஒருவேளை அன்றைய ஓங்காரக்குடி இன்றைய இளையாற்றக் குடியாய் இருக்கலாம். ஏனெனில், கீழத்தெரு ஏழு வழியாரும்

Koviloor Digital Library

இளையாற்றக்குடி நகரையும் கோவிலையும் பெற்று அங்கேயே தங்கினர். இக்கோவிலே நகரத்தார்களின் முதல் கோவிலாகும்.

இதிலிருந்தே மற்ற ஆறு வழியாரும் தங்களுக்குள் ஆறு கோவில்களை அமைத்துக் கொண்டனர். பின்னர் இளையாற்றக்குடிக் கோவில் மேலும் இரு பிரிவாகி (பிள்ளையார்பட்டி, இரணியூர்) ஒன்பது வழியினராயினர்.

எனவே, ஓங்காரக்குடி இன்றைய இளையாற்றக்குடியாய் இருக்கலாம் எனக் கருதுவதில் தவறில்லை. அறிஞர்கள் ஆராய்க.

இளையாற்றக்குடி நகரம், நாட்டுக்குள் கோட்டைபோல் நடு மண்டலமாதலால் ஏழு வழியினருக்கு மட்டும் 'நாட்டுக் கோட்டை நகரத்தார்' என்ற பெயர் வந்தது.

முன்பு வைசியர்கள் என அழைக்கப்பெற்றவர்கள், பாண்டிய நாட்டில்தான் 'நகரத்தார்கள்' என அழைக்கப் பெற்றனர்.

காலம் மாறியது.

நகரத்தார்கள் கருத்தும், ஒற்றுமையும் மாறியது. சிலர் தவிர எனையோர் தங்களுக்கெனத் தனிக் கோவில்கள் வேண்டு மெனப் பாண்டிய மன்னனிடம் கேட்டனர். மன்னனும் அவ்வாறே வழங்கினான். அவை: மாற்றூர், இலுப்பக்குடி, வயிரவன் பட்டி, நேமம், சூரக்குடி, வேலங்குடி இவை 'நகரக்கோவில்கள்' என அழைக்கப்படுகின்றன. முன்னர் ஏழு பிரிவாய் இருந்தவர்கள், பிள்ளையார்பட்டி, இரணியூர் என மேலும் இரு பிரிவாகி ஒன்பது பிரிவினர் ஆயினர்.

எனவே, நகரக் கோவில்கள் ஒன்பது.

செட்டிநாடு:

நகரத்தார்களுக்குச் செட்டியார்கள் என்று ஒரு பெயருமுண்டு. நகரத்தார்கள் வாழும் பூமியை நகரத்தார் நாடு என அழைக்காமல், செட்டிநாடு என அழைக்கக் காரணம் நாக நாட்டில் ஏற்பட்ட கசப்பான அனுபவமாய் இருக்கலாமோ என எண்ணத் தோன்றுகிறது.

Koviloor Digital Library

செட்டி நாட்டின் எல்லை :

வெள்ளாறது வடக்காமேற் குப்பிரான் மலையாந்
தெள்ளார் புனல் வைகை தெற்காகும் – ஒள்ளிய நீர்
எட்டிக் கடற்கிழக்கா மிஃதன்றோ நாட்டரண்சேர்
செட்டிநாட் டெல்லையெனச் செப்பு.

இளையாற்றக்குடியை விட்டு வெளியேறிய நகரத்தார்கள் வெவ்வேறு ஊர்களில் அந்தந்த நாட்டுக் குடிகளுடன் வாழத் தலைப் பட்டனர். அவற்றை 96 ஊர் எனக் கணக்கிட்டிருக்கிறார்கள். எனவே, இவர்கள் 'தொண்ணூற்றாறு ஊர் நகரத்தார்' என அழைக்கப் பெற்றனர்.

ஆனால் தற்போது 96 ஊர்களில் சில ஊர்களில் நகரத்தார்கள் இல்லை.

முன்பிருந்த ஊரிலிருந்து தற்போது குடியேறிய ஊராக ஒரு பட்டியலைப் பெரும் புலவர் பண்டிதமணி அவர்கள் தமது "நாட்டுக் கோட்டை நகரத்தார் வரலாறு" என்ற நூலில் தெரிவித்துள்ளார்கள்.

1 அதன் விபரம் வருமாறு :

முன்பிருந்த ஊர்	குடியேறிய ஊர்
அழகிச்சிபட்டி	சொக்கலிங்கபுரம் (மதகுபட்டி)
ஆலங்குடி, ஆலம்பட்டு, நேமம் அருகில் ஆற்காடு, இலங்குடி, கீரணிப்பட்டி, கூத்தலூர், கொறட்டி, செவர கோட்டை, செஞ்சை, நடுவிற்கோட்டை, நெய்வாசல், பட்டணம் கல்லுப்பட்டி, மல்லாகோட்டை, மேல மாகாணம், வாரியப்பட்டி	காரைக்குடி
ஆய்ங்குடி	கானாடுகாத்தான்.
ஆலம்பட்டு, இலங்குடி, இலுப்பைக்குடி இரவிசேரி, உடப்பன் பட்டி, உதையாச்சி ஓலைக்குடிப்பட்டி, கடகம்பட்டி, சுண்ணன் கோட்டை, கல்லிவயல்,	தேவகோட்டை

Koviloor Digital Library

காவணவயல், கீழக்கோட்டை, கைக்குளம், கொல்லங்குடி அளகாபுரி, சித்தாட்டிவயல், சுண்டைக்காடு, செங்கல் கோவில், செப்பாவயல், செம்பொன்மாரி, சேதுராப்பட்டி, சேந்தணி, தெண்ணீர் வயல், பக்கிரிப்பட்டி, பறியன்வயல், புலிகுளம், பேயன்பட்டி, மல்லாக் கோட்டை, மாங்குடி, வித்திராவயல்	தேவகோட்டை
ஆத்திக்காடு	தெக்கூர்
இளையாத்தன்குடி, கீரணிப்பட்டி குருவிக்கினாம்பட்டி	கீழ்ச்சிவல்பட்டி
உறங்கான்பட்டி சாலூர்	கீழப்பூங்குடி
ஓணான்குடி	இராயவரம்
தாஞ்சூர்	அரிமளம்
கருணாக்குடி, வேங்கா வயல்	புதுவயல்
கடியாவயல்	அரியக்குடி
கண்ணனூர்	வேகுப்பட்டி
கம்பனூர்	நாச்சியாபுரம்
கம்பங்காடு, கானாப்பூர், சித்தாட்டிவயல், பாலையம் பட்டி, வடகாட்டுப்பட்டி	கண்டனூர்
களபம், பெருங்கானூர்	ஆறாவயல்
கெவுரிபட்டணம்	சொக்க நாதபுரம்
கொறட்டி	உ. சிறுவயல்
சாத்துப்புளி	கொ.அழகாபுரி
சீராத்தக்குடி, மல்லுப்பட்டி	கோனாபட்டு

Koviloor Digital Library

சீராத்தக்குடி, சேதுராப்பட்டி பறளிப்பட்டணம், பழைய ஆத்தன்குடி வாரியப்பட்டி	ஆத்தன்குடி
சேதுராப்பட்டி, வாரியப்பட்டி	பலவான்குடி
தளக்காவூர்	மாநகிரி
சூரக்குளம், மேலமங்கலம்	நாட்டரசன் கோட்டை
நகரம்பட்டி	பாகநேரி
நெய்க்கோணம்	நெ.இலக்குமிபுரம்
நெய்க்கோணம்	விரையாச்சிலை
புலிகுத்தி	கல்லுப்பட்டி
பொன்னான்குடி	கண்டரமாணிக்கம்
முனையந்தை	கடியாபட்டி
வயிரவன்பட்டி	சிறுகூடற்பட்டி
வெளியாரி	கல்லல்

நாட்டரசன் கோட்டையில் குடியேறுதல் :

கலியுக ஆண்டு 4644இல் நகரத்தார்கள் நாட்டரசன் கோட்டையில் குடியிருந்ததாகத் தெரிகிறது. அப்போது அங்கு கொள்ளையும், கலகமும் நடந்து சில நகரத்தார் பெண்கள் கற்பு அழிந்து போனது.

இதனால் நகரத்தார்கள் கவலையடைந்து குருபீடங்களிடம் சென்று முறையிட்டனர்.

"எங்கள் பெண்களில் சிலரது கற்புக்குப் பழுது வந்து விட்டது. எங்கள் குல முறைப்படி அவர்களைத் தண்டிக்க அனுமதி தரவேண்டும்" எனக் கேட்டனர்.

"அறிந்து செய்தால்தான் குற்றம். இது கலகத்தினால் கொள்ளையினால், அவர்கள் அறியாமல், சம்மதமில்லாமல் ஏற்பட்டது. இது பிழையேயன்றி, குற்றமல்ல. எனவே, அவர்களை மன்னித்து விடுங்கள்" எனக் குருமார்கள் கூறினர்.

தரும நியதியைக் குருமார்கள் கூறியும், நகரத்தார்கள் கேட்கவில்லை.

"அவர்களை வைத்திருந்தால் மானபங்கம் உண்டாகும். எனவே தண்டிக்க வேண்டும். அனுமதி கொடுங்கள்" என வேண்டினர்.

Koviloor Digital Library

வேறு வழியில்லாமல் குருமார்களும் அனுமதி வழங்கினர்.

இச் செயல் குருமார்கள் மனத்தைப் பெரிதும் வருந்தியதால், காசிக்குப் போய் கங்கையில் நீராடி இப் பாவத்திலிருந்து விடுபடுவோம் என எண்ணி அவர்கள் காசிக்குப் புறப்பட்டனர்.

அதனால் நகரத்தார்களுக்கு இப்போது குருமார்கள் இல்லாமல் இருந்தது.

தங்கள் குல வழக்கப்படி அப் பெண்களை நகரத்தார்கள் தண்டித்தனர்.

மூன்றாண்டுகள் கழித்து ஸ்ரீவாஞ்சியம் நிரம்ப அழகிய குருக்கள் மட்டும் காசியிலிருந்து திரும்பி வந்தார். ஆனால் பாண்டிய நாட்டுக் குருக்கள் வரவில்லை.

12 ஆண்டுகளாகியும் பாண்டிய நாட்டுக் குருக்கள் திரும்பி வராததால், நகரத்தார்களில் சிலர் வேறு குருவை நியமிக்க வேண்டுமென எண்ணினர்.

அதன்படி, திருப்புனவாயிலில் வேறு செட்டிகளுக்கும், வேளாளர்களுக்கும் குருவாய் இருக்கிறவரை அடைந்து விவரம் சொல்லி தீட்சை பெற்று வந்தனர்.

21 ஆண்டுகள் கழித்து பாண்டிய நாட்டுக் குருக்கள் காசியிலிருந்து திரும்பி வந்தார்.

திருப்புனவாயிலில் தீட்சை பெற்றவர்கள் பயந்து பாண்டிய நாட்டுக் குருக்களிடம் உண்மையைக் கூறி அவர் தரும் தண்டனையை ஏற்றுக் கொள்ளத் தயாராய் இருப்பதாகத் தெரிவித்தார்கள்.

"திருப்புனவாயிலில் தீட்சை பெற்றவர்கள் அவரிடமே தொடர்ந்து தீட்சை பெற்றுக் கொள்ளுங்கள். எஞ்சியவர்கள் என்னிடம் தீட்சை பெற்றுக்கொள்ளுங்கள்" எனப் பாண்டிய நாட்டுக் குருக்கள் அனுமதி வழங்கினார்.

நகரத்தார்கள், இப் பதிலால் நிம்மதி அடைந்தனர்.

அன்று முதல், ஆண்களுக்கு கலாமடம், பாதரக்குடி மடம் என இரண்டு மடங்களும், பெண்களுக்குத் துலாவூர் மடமும் குரு மடங்களாய் விளங்கின.

Koviloor Digital Library

தற்போது (1975 முதல்) கலாமடமும், பாதரக்குடி மடமும் இணைந்து ஒன்றாகி பாதரக்குடி மடம் ஆண்களுக்கு குருபீடமாகவும், துலாவூர் மடம் பெண்களுக்கு குருபீடமாகவும் விளங்கி வருகின்றன.

காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து பாண்டிய நாடு வந்த தன வைசியர்கள் முதலில் குடியேறிய இடம் நாட்டரசன் கோட்டை என ஒரு கருத்தும் நிலவுகிறது.

காவிரிப்பூம்பட்டினம் போலவே நாட்டரசன்கோட்டை நகரை நிர்மாணம் செய்திருக்கின்றனர். ஊரின் நடுவில் பெருஞ் சதுக்கம் அமைத்து, அதில் பல திருக்கோவில்களையும் கடடி, குளங்கள் வெட்டி, சுற்றிலும் வீடுகள் கட்டி வாழ்ந்தனர். இவ் அமைப்பை நாட்டரசன் கோட்டையில் இன்றும் காணலாம்.

நாட்டரசன்கோட்டையில் ஏற்பட்ட கலகத்தினால், பலர் ஊரைவிட்டு வெளியேறி பல இடங்களில் தங்கினர். எனவே தான் நகரத்தார் ஊர்கள் 96 ஆயிற்று என்கின்றனர். இதன் உண்மையை அறியப் போதுமான சான்றுகள் கிடைக்கவில்லை.

ஆனால், ஒன்று மட்டும் மிக நன்றாக, தெளிவாகத் தெரிகிறது.

பூவந்திச் சோழன் காலம் தொடங்கி, நாட்டரசன்கோட்டைக் கலகம் வரை நகரத்தார் பெண்களுக்குச் சோதனையும், வேதனையும், கற்புக்கு ஊறு நேர்தலும், நகரத்தார் குல தருமப்படி அப்பெண்களைத் தண்டித்தலும் நடைபெற்று வந்தது, என்பதை அறியும்போது, 'பட்ட காலே படும்; கெட்ட குடியே கெடும்' என்ற பழமொழிதான் நினைவுக்கு வருகிறது.

'நகரத்தார் பெண்களின் அழகும், அவர்கள் அணிந்திருந்த தங்க, வைர அணிகலன்களும்தான் அவர்களின் துன்பத்திற்குக் காரணமாய் இருந்திருக்க வேண்டும்' என எண்ணத் தோன்றுகிறது.

நகரத்தார் ஆண்களும், பெண்களும் எவ்வாறு தோற்றம் அளிப்பார்கள் என்பதைப் பெரும்புலவர் பண்டிதமணி அவர்கள், தாம் எழுதிய 'நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு' என்ற நூலில் கூறியுள்ளதையும், அவற்றை திரஸ்ட்டன், தாம் எழுதிய 'அகில சாதி சரித்திரம்' என்ற நூலில் புகைப்படமெடுத்துச் சேர்த்திருப்பதையும் இங்கு முன்னரே கூறப்பட்டுள்ளதை அறிக.

Koviloor Digital Library

காவிரிப்பூம்பட்டினத்தை விட்டுத் தன வைசியர்கள் வெளியேறியவுடன், உலகின் தலை சிறந்த வாணிபத் துறைமுகமாகிய அந் நகர் பாழ்பட்டது. கடலால் காவு கொள்ளப்பட்டது.

பூவந்திச் சோழன் நகரத்தார்களுக்குச் செய்த பாவத்திற்குக் கடல் பழி வாங்கியதைப் பார்க்கும்போது, 'தெய்வம் நின்று கொல்லும்' என்பது எவ்வளவு பெரிய உண்மை என்பது புலனாகிறது!

தருமத்திற்கு அழிவில்லை.

பூங்கொன்றை வேலங்குடியில் நகரத்தார்கள் நிர்ணயஞ் செய்த சாதிமுறை நியாயங்கள் வருமாறு:

1. மாதா, பிதா, குரு, தெய்வம், பிராமணர், குலதேவதை - இவர்களை வணங்கிப் பூசிப்பது.
2. கோவில்களுக்கும், குரு மடங்களுக்கும் உள்ள கிராமம் முதலியவற்றை நகரத்தார் விசாரணையில் வைத்துக் கொண்டு, அவைகளில் வரும் ஊதியத்தை அந்தந்த தருமங்களுக்கே உபயோகப்படுத்துவது.
3. சாதி முறை நியாயங்களில் தவறி நடப்பதில்லை. நற் கருமங்களைச் செய்வது.
4. ஆண்களும், பெண்களும் தங்கள் தங்களுக்கு என ஏற்பட்டிருக்கும் குரு மடத்திலேயே தீட்சாகிரியை முதலியவை வழக்கப்படி செய்துகொள்வது. வேறு ஒருவரிடத்தும் தீட்சாகிரியை முதலியவை செய்து கொள்ளக் கூடாது.
5. சிவ மதத்திலேயே இருப்பது. அந்நிய மதங்களில் சேரக் கூடாது.
6. ஏக கோத்திரத்தில் திருமணம் செய்து கொள்வதில்லை. (கோத்திரம் என்பது கோவில்களும், உட் பிரிவுகளும்) சுய கோத்திரத்தில் புத்திர சுவீகாரம் செய்து கொள்வது.
7. திருமணத்தில் மாப்பிள்ளை தொட்டுக் கொடுக்க, நம்மவர்களில் ஒரு பெரியவர் வாழ்த்தி திருமாங்கல்யம் பூட்டுவது.

Koviloor Digital Library

8. இரத்தினம், சுவர்ணம், பலசரக்கு முதலிய வியாபாரங்கள் செய்வது. சீவ வதையான வியாபாரங்கள் செய்வதில்லை. குதிரை வியாபாரமும், வெற்றிலை முதலிய அழுகற் சரக்கு வியாபாரமும் செய்யக் கூடாது.

9. தரும வட்டி வாங்குவது.

10. குடிவாரத்திற்கு உழுது பயிரிடுவதில்லை. ஊரில் அம்பல, உம்பள முதலிய உத்தியோக வேலை பார்க்கக் கூடாது.

11. திருட்டு வியாபாரம் செய்யக் கூடாது. பிறன் மனைவியுடன் சேரக் கூடாது. தாசிகளிடத்தில் கொடுக்கல், வாங்கல் செய்யக் கூடாது.

12. நகரமுறை தவறினவர்களுடனும், இராசதண்டனைக்கு உட்பட்டவர்களுடனும், சோரஞ் செய்தவர்களுடனும் சேரக்கூடாது.

13. கடலுக்கு மேற்கு, பிரான்மலைக்குக் கிழக்கு, வைகைக்கு வடக்கு, வெள்ளாற்றிற்குத் தெற்கு இந் நான்கு எல்லைக்குட் பட்ட வேளாளர் பூமியாகிய இந்த நாட்டிலேயே குடியிருப்பது. வேறு இடங்களில் குடும்பத்துடன் போய் குடியிருத்தல் கூடாது.

14. பெண்கள் சுவாமி தரிசனம், தீர்த்த யாத்திரைகளுக்கு ஆண்களுடன் போய் வர வேண்டியது. இதர காரியங்களுக்குப் பெண்கள் போவதில்லை.

15. எந்தச் செயலிலும் முன் வழக்கப்படி நடந்து கொள்வது.

16. நகரக் கூட்டம் கோவில் அல்லது மடத்து வாசலில் கூடிச் சாதி நியாயம் பேசுவது.

17. ஒன்பது கோவில் நகரத்தார்களுக்கும் அவரவர்களுக்குரிய கோவில்களில் இருந்து சுவாமிக்குச் சாத்தின மாலையும், விபூதிப் பிரசாதமும் வந்துதான் திருமணம் நடத்தல் வேண்டும். திருமணம் நடக்கிற விவரத்தைப்பற்றிக் கோவில் வாசல்களில் தாம்பூலம் வைத்து முன்னமே தெரிவித்தல் வேண்டும்.

Koviloor Digital Library

18. இரணியூர்க் கோவிலாரும் பிள்ளையார்பட்டிக் கோவிலாரும் சகோதரர்களின் வமிசத்தார். ஆதலால் தம்முள் திருமணம் செய்து கொள்ளக் கூடாது. மற்றைக் கோவில்களில் செய்து கொள்ளலாம்.

வரலாறு போற்றும் நகரத்தார்

முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் திரையாயிரத்து ஐந்நூற்றுவர் சுமத்திராவிற்குச் சென்றிருந்ததாக சுமத்திராவில் உள்ள கல்வெட்டுக்களின் வாயிலாக அறிகிறோம்.

–கே.ஏ.நீலகண்ட சாத்திரியார்

இராசராச சோழனுடைய காலத்தில் (கி.பி.988-1014) நகரத்தார் மத்தியதரைக் கடலினை அடுத்த நாடுகளுக்குச் சென்று வியாபாரம் செய்தனர்.

விசய நகரப் பேரரசு காலத்தில் தாய்லாந்திற்கும், அங்கோர் வாட் முதலிய பகுதிகளுக்கும் நகரத்தார் சென்று தமிழர் பெருமையைப் பரப்புவாராயினர்.

–மறைமலையடிகள்

(நன்றி : இணையற்ற இளையாற்றங்குடி)

நானும் செட்டியார்தான்:

பூம்புகார் நகரத்தில் 1463 ஆண்டுகள் தன வணிகர்கள் சீரும் சிறப்புமாக வாழ்ந்தார்கள். அப்போது அவர்கள் எட்டாயிரம் குடிகள் இருந்தார்கள். தன வணிகர்கள் சிவநெறிச் செல்வர்களாகவே இருந்தார்கள்.

மாராயம் என்ற ஒரு சொல் தொல்காப்பியத்தில் வருகிறது. மாராயம் என்பது அரசனிடம் பெறும் சிறப்பாகும். அது போன்ற சிறப்பை தன வணிகர்கள், மன்னனிடம் பெற்றிருக்கிறார்கள். அவைகள்: எட்டி, காவிதி போன்ற பட்டங்களாகும். இந்த எட்டிப் பட்டத்தைப் பெண்கள் கூடப் பெற்றிருப்பதாகக் கல்வெட்டுத் தகவல் தருகிறது.

எட்டி என்ற பட்டம்தான் நாளடைவில் "செட்டி" என்று மருவிற்று. செட்டி என்ற சொல்தான் நாளடைவில் சேட்டு என்று வழங்கப் பெற்றது.

Koviloor Digital Library

வட இந்திய மொழிகளில் 'எகரம் இல்லை. 'ஏ' காரந்தான் உண்டு. செட்டியே பின்னால் சேட்டு என்றாயிற்று.

'வணிகன்' என்பதையே 'பனியன்' என்று வட நாட்டில் குறிக்கிறார்கள். காந்தியடிகள் இந்த 'பனியா' இனத்தைச் சேர்ந்தவர். பனியா என்ற சொல் வேதத்தில் காணப்படுகிறது.

'யங் இந்தியா'வில் (பக்.334) காந்தியடிகள், செட்டி நாட்டு மக்களுக்குச் சில அறிவுரைகள் எழுதியிருக்கிறார். அதில், "உங்களைப் போல நானும் ஒரு செட்டி" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

-நன்றி மேற்படி நூல்

63 நாயன்மார்களில் 5 பேர் நகரத்தார்கள்

சைவ சமயம் தழைத்தோங்கப் பாடுபட்டு, இறைவனுடன் இரண்டறக் கலந்த 63 நாயன்மார்களில் 5 பேர் நகரத்தார்கள். அவர்கள்: இயற்பகை நாயனார், அமர்நீதி நாயனார், கலிக்கம்பர் நாயனார், காரைக்காலம்மையார், மூர்த்தி நாயனார்.

Koviloor Digital Library

2.
நகரக் கோவில்கள்

–கோவில் தழுவிய குடிகள்

"நகரத்தார் பெருமக்கள் கோவிலைச் சார்ந்த குடிகள். குடிகள் சார்ந்த கோவிலை உடையவர்கள்" என்பார் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்.

"நகரத்தார்கள் இல்லையேல் கோவிலும் இல்லை, வேதமும் இல்லை" என்பார் காஞ்சிப் பெரியவர் பரமாச்சாரியார்.

"கோவில் கூரையில் விரிசலா? கூப்பிடு செட்டியாரை" என்ற சொலவடையும் உண்டு.

உலகில் உள்ள சைவ, வைணவ கோவில்களைக் கட்டிக் காக்கும் வள்ளல்களாக நகரத்தார்கள் திகழ்கின்றார்கள்.

திருக்கோவிலைக் கட்டியும் அல்லது புதுப்பித்தும் குளங்கள் வெட்டியும், வேத பாடசாலை, தேவார பாடசாலை ஏற்படுத்தியும் நந்தவனம் உண்டாக்கியும் பசுமடங்கள் எற்படுத்தியும் தருமம் செய்த நகரத்தார்கள், அத் தருமம் தொய்வின்றித் தொடர பெரும் நிதிகளை வைத்தனர். அந் நிதியைத் தருமத்திற்கன்றி வாழ்க்கைச் செலவுக்கு எடுப்பதில்லை என உறுதி பூண்டனர். இன்றும் முன்னோர்கள் செய்த அறங்களை விடாமல் தொடர்ந்து செய்யும் பெருமை உடையவர்கள் பலர் உள்ளனர்.

Koviloor Digital Library

தூபம் பாவத்தைப் போக்குவதாலும், தீபம் மரண பயத்தைப் போக்குவதாலும், நைவேத்தியம் வறுமையைப் போக்குவதாலும், பூசையில் இவை மூன்றும் இடம் பெறுகின்றன. எல்லாக் கோவில் களிலும் இம் மூன்றும் தொய்வின்றி நடைபெற நகரத்தார்கள் உதவி புரிகின்றனர்.

நகரத்தார் யாவரும் ஒன்பது கோவில்களைச் சார்ந்தவர்கள். ஒன்பதுகோவில் ஊர்களிலிருந்து வாழ்வின் விரிவு வேண்டி 96 ஊர்களுக்குச் சென்றவர்கள். தாங்கள் சென்று வாழத் தொடங்கிய அந்தந்த ஊர்களில், முன்பிருந்த கோயில்களாக இருந்தாலும் சரி, புதியதாகக் கட்டிய கோயில்களாக இருந்தாலும் சரி, தங்கள் பிரிவின் கோயிலில் உறையும் இறைவனின் பெயரையோ, அல்லது ஒரே விதம் என வேறு ஒரு பெயரினையோ இட்டு அழைத்து வணங்காமல், இறைவனுக்கு 37 பெயர்களையும் இறைவிக்கு 27 பெயர்களையும், இட்டு வணங்கும் பாங்கு, அவர்களிடம் சைவத்தின் தத்துவம் எவ்வளவு வேரூன்றி இருக்கின்றது என்பதையும் அந்நிய மதங்களில் சேரக் கூடாது என்று பூங்கொன்றைக் கல்வெட்டும், துலாவூர் செப்பேடும் கூறுவதை இன்றளவும் கைக்கொண்டு வாழுவதையும் காணலாம்.

நன்றி – நாட்டரசன் கோட்டை சிவகாமி அம்மன்
உடனாய கரிகால சோழீசுவரர் குடமுழுக்கு மலர்.

துணைப் பதிப்பாசிரியர் நா.சே.நாராயணன்

நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர் அனைவரும் சைவ சமயத்தினராக விளங்குகின்றனர். அதன் பயனாகச் சைவ சமயத்தின் பொது நோக்கு அவர்கள் பாலும் விளங்கக் காண்கின்றோம். முதலியார், நாயுடு, பிள்ளைமார் போன்ற பிற சமூகத்தினரில் சைவநெறிப் பட்டவர்களும், வைணவ நெறிப்பட்டவர்களும், ஆக இரு சாராரும் உளர். இன்னும் சில சமூகங்களில் கிறித்தவர்கள், இந்துக்கள் ஆகிய இரு சமயத்தினரும் உள்ளனர். நகரத்தார் பால் இது போன்ற பிரிவினை கிடையாது. அனைவரும் சைவரே. ஆயினும் காழ்ப்பற்ற சமரச நோக்கத்தில், திருமாலை வழிபடுவதிலும் அவர்கள் சிறந்து விளங்குகின்றனர்.

–மேற்படி மலரில் தமிழண்ணல்

Koviloor Digital Library

பஞ்சாட்சர உபதேசம் பெற்றுக் கொள்வது என்பது தொன்று தொட்டு நம் நகரத்தார்களிடம் இருந்து வரும் சிறந்த பழக்கமாகும். இதனைத் தான் உபதேசம் என்று சொல்கிறோம். உபதேசம் கேட்டுக் கொண்டதை முன்பெல்லாம் "உபதேசப் புதுமை" என்றே ஐந்து நாட்கள் ஒரு விழாவாகவே கொண்டாடி வந்திருப்பதாக தொண்ணூற்று ஆறு ஊர் நகரக் கூட்டத் தீர்மானங்களிலிருந்து அறிய முடிகிறது.

உடலைத் தூய்மை செய்து கொள்ள நீராடுவதைப் போல, உள்ளத்தைத் தூய்மை செய்து கொள்ள பஞ்சாட்சரத்தைச் செபம் செய்ய வேண்டும்.

சைவ சாதனங்களாகிய திருநீறு, உருத்திராட்சம், ஸ்ரீபஞ்சாட்சரம் ஆகியவற்றை நாம் கைக்கொள்வதற்குரிய தகுதி நமக்கு சிவதீட்சை யினாலேயே வருவதாகும்.

முற்காலப் பழக்கப்படி, ஒருவரின் 7ஆம் ஆண்டு முதல் 9ஆம் ஆண்டுக்குள் சமய தீட்சை பெற்றுச் சாதகர்களாய் நம் முன்னோர்கள் வாழ்ந்திருந்தனர். இப்போது திருமணத்திற்குப் பின்னர்தான் கேட்டுக் கொள்ளுகின்ற நிலை வந்துவிட்டது.

மேற்படி மலரில் பழ.அண்ணாமலை

காசி விசாலாட்சி கவின்மதுரை மீனாட்சி
கட்டியுள்ள ஆடைகளும் கழுத்திலுள்ள பொன் நகையும்
சுற்றியுள்ள மண்டபமும் தூக்கிவரும் வாகனமும்
மற்றும் அழியாத மொட்டைக் கோபுரத் தழகும்
அண்ணாமலையில் அமர்ந்திருக்கும் பேரழகும்
ஆக்கிக் கொடுத்தவர்கள் அங்கிருந்து காத்தவர்கள்
நாட்டுக்கோட்டை வளர்த்த நகரத்தார் அல்லோமோ.

-கவியரசர் கண்ணதாசன்

பாண்டிய மன்னனிடமிருந்து பெற்ற இளையாற்றங்குடிக் கோயில் மற்றும் இளையாற்றங்குடி நகரில் வாழ்ந்து வந்த நகரத்தார் களில் ஒரு சிலர் அங்கேயே இருக்க விரும்பினர். மற்ற ஆறு வழியாரும் தங்களுக்குத் தனித்தனிக் கோவிலும், ஊரும் வேண்டுமென நினைத்தனர்.

Koviloor Digital Library

தங்கள் விருப்பத்தைப் பாண்டிய மன்னனிடம் தெரிவித்தனர். மன்னன் அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றினான்.

அதன்படி, ஏழு கோவில் ஆயிற்று. பின்னர் இளையாற்றங்குடிக் கோவில் திருவேட்புடையார் பிரிவினர், தனியே போக விரும்பியதால், அவர்கள் இரு பிரிவாய்ப் பிரிந்து சென்றதால், ஒன்பது கோவில் ஆயிற்று. எனவே, நகரக்கோயில்கள் ஒன்பது.

அதன் விபரம் வருமாறு :

1. இளையாற்றக்குடி கோவில்

சுவாமி பெயர் : கைலாச நாதர்.
அம்பாள் பெயர் : நித்திய கல்யாணி.

நகரத்தார்களின் முதல் கோவில் இது. இக்கோவில் கேரள சிங்க வளநாடாகிய கல்வாச நாட்டில் இளையாற்றக்குடியான குலசேகரபுரம் உடையார் ஏழு வகைப் பிரிவினர்க்கும் உரியது.

காரைக்குடியிலிருந்து கீழச்சிவல்பட்டி வழியாக 25 கி.மீ. தொலைவில் இளையாற்றக்குடி உள்ளது. இக் கோவில் பாண்டிய மன்னனால் கி.பி. 707இல் நகரத்தார்க்கு வழங்கப்பெற்றது. முதன் முதலில் நகரத்தார்கள் தங்கிய பகுதி இது. எனவே, இதுதான் நகரத்தார்களின் முதல் கோவில்.

இங்கு ஆதிகேசவப் பெருமாள் என்ற திருமால் ஆலயம் ஒன்றைக் கழனிவாசல் பிரிவைச் சேர்ந்த நகரத்தார்கள் கட்டி வழிபாடு செய்து வருகின்றனர். இக்கோவிலைச் சார்ந்த நகரத்தார் கீழ்க்கண்ட 7 பிரிவுகளாக உள்ளனர். (முதலில் திருவேட்பூர் உடையாரைச் சேர்த்து எட்டுப் பிரிவாய் இருந்தது. பின்னர் அவர்கள் பிரிந்துசென்று தனிக் கோவில்களை உண்டாக்கிக் கொண்டதால் ஏழு பிரிவாயிற்று.)

அவை : ஒக்கூருடையார், பட்டணசாமியார், பெருமருதூருடையார், கழனிவாசக்குடியார், கிங்கிணிக் கூருடையார், பேரசெந்தூருடையார், சிறு சேத்தூருடையார்.

ஒவ்வொரு பிரிவினரும் தனித்தனியே பிள்ளையார் கோவிலும், ஊருணியும் அமைத்துள்ளனர். பட்டணசாமியார் பிரிவினர் தனியே ஒரு சிவாலயமும், நகர விடுதியும் கட்டியுள்ளனர்.

Koviloor Digital Library

2. மாற்றூர் கோவில்

சுவாமி பெயர் : ஐநூற்றீஸ்வரர்
அம்பாள் பெயர் : பெரியநாயகி

காரைக்குடியில் இருந்து 7 கி.மீ. தொலைவில் மாற்றூர் உள்ளது. கி.பி. 712இல் பாண்டிய மன்னனால் நகரத்தார்களுக்கு வழங்கப்பட்ட கோவில் இது. சித்தர்கள் வாழ்ந்து சிவனை வழிபட்ட கோவில் இது. திரிபுவன சக்கரவர்த்தியால் பிரதிட்டை செய்யப்பெற்ற கோவில் இது. கொங்கணச் சித்தர் இரசவாதத்தால் உருவாக்கிய தங்கத்தின் மாற்று உரைத்துப் பார்த்த ஊர் இது. ஆகையால் இது மாற்றூர் என வழங்கப்படுகிறது.

இக் கோவிலைச் சார்ந்த நகரத்தார்கள் 7 பிரிவுகளாக உள்ளனர். அவை : உறையூருடையார், அரும்பாக் கூருடையார், மணலூருடையார், மண்ணூருடையார், கண்ணூருடையார், கருப்பூருடையார், குளத்தூருடையார்.

மூன்று கட்டுகள் உடைய பெரிய நகர விடுதி உள்ளது. ஊருணியின் வடகரையில் கலங்காத கண்ட விநாயகர் கோவில் உள்ளது. இக் கோவிலின் பிரகாரத்தில் வரதராசப் பெருமாள், நிலமகள், திருமகளுடன் நின்ற கோலத்தில் அருள் வழங்கும் சன்னதி அமைந்துள்ளது.

இராசகோபுர வாயிலில் உள்ள இரு நிலைக்கால்களில் நட்சத்திர எண்ணிக்கை போல 27 முனிவர்களின் தியானக் கோலக் காட்சி எழிலுற வடிக்கப் பட்டுள்ளது. சிலைகளில் இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், இரமணமகரிஷி சிலைகள் கண்டுகளிக்கத் தக்கன.

தட்சிணாமூர்த்தி சன்னதியில் உள்ள தூணில் யாளி வாயில் உள்ள எடுக்க முடியாத வழவழப்பான கல் உருண்டையின் அழகும், நுண்ணிய வேலைப்பாடும் கூர்ந்து நோக்கத் தக்கது. நந்தியெம் பெருமான் சிம்ம பீடத்தில் வீற்றிருக்கிறார்.

Koviloor Digital Library

3. இலுப்பைக்குடிக் கோவில்

சுவாமி பெயர் : தான்தோன்றி ஈசர்
அம்பாள் பெயர் : சௌந்தர நாயகி

காரைக்குடியிலிருந்து 5 கி.மீ. தொலைவில் இலுப்பைக்குடி உள்ளது. கி.பி. 714இல் பாண்டிய மன்னன் இக் கோவில் நிர்வாகத்தை நகரத்தார்களுக்குக் கொடுத்தான். திரிபுவன சக்கரவர்த்தியால் பிரதிட்டை செய்யப்பெற்ற கோவில் இது.

தனபதி என்ற நகரத்தார் கனவில் சிவபெருமான் தோன்றி சூடாமணி ஒன்றை வழங்கி சிவபுண்ணியச் செயல்களை இத்தலத்தில் செய்து வருமாறு கட்டளை இட்டதாக "இலுப்பைக்குடி புராணம்" கூறுகிறது.

பிரம்மதீர்த்தம், சிவகங்கை தீர்த்தம், கௌரிதீர்த்தம் உள்ளது. நகர விடுதி உள்ளது. பிரமன், திருமால், இந்திரன் ஆகியோரின் விண்ணப்பத்தை ஏற்று சிவபெருமான் வைரவக்கோலம் பூண்டு கும்பாண்டகன் என்ற அசுரனை அழித்து இங்கே எழுந்தருளியுள்ளார்.

நகரத்தார் கோவில்களில் பிரம்மோற்சவம் நடைபெறும் கோவில் இது ஒன்றே. சித்ரா பௌர்ணமிக்கு 10 நாள் முன்பு திருவிழா தொடங்கி பௌர்ணமி அன்று விழா நிறைவுபெறும்.

இங்குள்ளது சுயம்புலிங்கம். நடராசர் சன்னதிக்கு எதிரே உள்ள தூணில் இரண்டு கட்டைவிரல் உயரம், மூன்று செ.மீ. சதுரத்துக்குள் சிறிய விநாயகர் உருவம் செதுக்கப் பெற்றுள்ளது. வைரவர் சன்னதிக் கூடுகளில் 15 வகையான வைரவரின் திருக்கோலமுள்ளது. தட்சிணா மூர்த்தி சன்னதியில் கல்லில் முறுக்குக்கம்பிபோல செதுக்கப் பட்டுள்ளது. சீறிப் பாயும் சிங்கங்களின் வாயினுள் பெரிய கல் உருண்டை உள்ளது. திருவிளையாடல் புராணக் காட்சிகள் தீட்டப் பட்டுள்ளன. 30 செப்புத் திருமேனிகள் உள்ளன. வள்ளல் அழகப்பர் கல்விக் கோவில் இருப்பது இக் கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் தான்.

இவர்கள் சூடாமணிபுரமுடையார் எனப்படுகின்றனர்.

Koviloor Digital Library

4. பிள்ளையார்பட்டிக் கோவில்

சுவாமி பெயர் : திருவீசர், மருதீசர்

அம்பாள் பெயர் : சிவகாமவல்லி, வாடாமலர் மங்கை

காரைக்குடியிலிருந்து குன்றக்குடி வழியாக 14 கி.மீ. தொலைவில் பிள்ளையார்பட்டி உள்ளது. குடைவரைக் கோயில் இது.

குடைவரைக் கோவிலை இணைத்து நகரத்தார் கற்றளித் திருப்பணி செய்து இரு கோவில்களையும் இணைத்தமையால், இங்கு இரு இறைவரும், இரு இறைவியும் இருந்து அருள் வழங்குகின்றனர். ஒரு இறைவன் திருவீசர், இறைவி சிவகாமவல்லி. மற்றொரு இறைவன் மருதீசர். இறைவி வாடாமலர் மங்கை. உலகெங்கும் பக்தர்களைக் கொண்டவர் கற்பகப் பிள்ளையார்.

13ஆம் நூற்றாண்டில் பாண்டிய மன்னனிடமிருந்து இக் கோவிலை, இளையாற்றங்குடியிலிருந்து பிரிந்து வந்த திருவேட்பூருடையார் என்ற சகோதரர்களில் இளைய சகோதரர் பெற்று, தங்களுக்குரிய தனிக் கோவிலாக்கிக் கொண்டனர்.

அதனால் இக்கோவிலைச் சார்ந்த நகரத்தார் முதலில் இங்கு திருமணத்திற்குப் பாக்கு வைத்து, பின் இளையாற்றங்குடியிலும் பாக்கு வைத்து கோவில் மாலை பெற்றுக் கொள்கிறார்கள்.

இக் கோவில் நந்திராசனால் பிரதிட்டை செய்யப்பெற்றது.

குன்றில் குடையப்பட்ட கற்பக விநாயகர் வடக்கு நோக்கி அமர்ந்து அருள் பாலிக்கிறார். இவர் வலம்புரி விநாயகர். இச் சிற்பம் மிக அரிய சிற்பமாகும். கற்பகப் பிள்ளையார் இரண்டு திருக்கரங்கள் கொண்டு விளங்குகிறார். வலக் கையில் சிவலிங்கத்தை ஏந்தி பூசை செய்யும் அமைப்புடன் உள்ளார். இத்தகைய சிற்பம் குன்றக்குடி கீழ்க் கோவிலிலும், ஆப்கானிஸ்தானத்திலும் உள்ளது.

10 நாள் திருவிழாவாக விநாயகர் சதுர்த்தி கொண்டாடப் படுகிறது. நகர விடுதி, பெண்கள் விடுதி உள்ளது.

கற்பகப் பிள்ளையார் படம் இல்லாத வீடே இல்லை.

இக்கோவில் நகரத்தார் திருவேட்பூருடையார் என்ற பிரிவைச் சார்ந்தவர்கள்.

Koviloor Digital Library

5. வைரவன் கோவில்

சுவாமி பெயர் : வளரொளி நாதர்
அம்பாள் பெயர் : வடிவுடையம்மை

காரைக்குடியில் இருந்து குன்றக்குடி வழியாக 15 கி.மீ. தொலைவில் வைரவன்பட்டி உள்ளது. இக்கோவில் வளவேந்திர ராசனால் பிரதிட்டை செய்யப்பெற்றது.

அரக்கர்களால் ஏற்பட்ட துன்பத்திலிருந்து தேவர்களை மீட்க, சிவபெருமான் வைரவர் கோலம் பூண்டு கற்பக விநாயகர் தலைமையில் அரக்கர்களை சம்ஹாரம் செய்தார். நான்மறைகளே நாய் வடிவுடன் வைரவருக்கு வாகனமாக விளங்குவதாகக் கூறுவர். பிரம்மனின் அகந்தையை அடக்கியதாகக் கந்தபுராணம் கூறுகிறது.

கி.பி.712இல் இக் கோவிலைப் பாண்டிய மன்னனிடமிருந்து நகரத்தார் பெற்றனர்.

இக்கோவில் நகரத்தார் கீழ்க் கண்ட 3 பிரிவுகளைச் சார்ந்தவர் களாவர். அவை: பெரிய வகுப்பு, தெய்யனார் வகுப்பு, பிள்ளையார் வகுப்பு.

இக் கோவிலில் பிரிவு மாற்றித் திருமணம் செய்யும் (மாற்றூர் கோவில் போல) வழக்கமில்லை.

ஒரே கல்லினால் ஆன சண்டீசுவரர் கோபுரம் உள்ளது. இத் தலத்தின் தலவிருட்சம் ஏறழிஞ்சி மரம். இதன் கற்சிற்பம் இங்கு வழிபாட்டில் உள்ளது. நடராசர் சன்னதியில் காணப்படும் இரண்டு குதிரை வீரர் சிற்பங்களும், கண்ணப்ப நாயனார் சிற்பமும் சிறப்பானது.

"வைரவர் கோவில் புராணம்" இத் தலத்தின் பெருமையைக் கூறுகிறது. இதனை 37 ஓவியங்களாக மேற் கூரையில் தீட்டி உள்ளனர். இராமாயணக் காட்சிகள் 43 ஓவியங்களாக வரையப் பட்டுள்ளன. நகர விடுதி உள்ளது. நகரத்தாருக்கு மட்டுமே உரிய பிள்ளையார் நோன்பு விழா இங்கு சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது.

Koviloor Digital Library

6. நேமம் கோவில்

சுவாமி பெயர் : செயங்கொண்ட சோழீசர்
அம்பாள் பெயர் : சௌந்தர நாயகி

காரைக்குடியிலிருந்து குன்றக்குடி வழியாக 12 கி.மீ. தொலைவில் நேமம் உள்ளது. நேமராசனால் இக் கோவில் பிரதிட்டை செய்யப் பெற்றது. கி.பி. 714இல் சௌந்தர பாண்டியனால் இக் கோவில் நகரத்தார்களுக்கு வழங்கப்பட்டது. செட்டிநாட்டுப் பகுதியில் கிடைக்காததாகிய வெள்ளைக் கற்களைத் தருவித்து கோவில் கட்டப்பட்டுள்ளது. பேசும் சித்திரங்களாகச் சிலைகள் அமைந்துள்ளன.

செயங்கொண்ட சோழீசர் கிழக்குப் பார்க்க, சௌந்தர நாயகி தெற்குப் பார்க்க, நேமங்காளியின் உக்கிரத்தைத் தணிக்க வைரவர் மேற்குப் பார்க்க, இவ்வூர் காவல் தெய்வம் அழகிய நாச்சியாரம்மன் வடக்குப் பார்க்க, தெய்வங்கள் அமைந்து எல்லாத் திசைகளையும் காக்கின்றன.

இங்கு இரண்டு அம்மன்கள் உள்ளன. (திருஉருவங்கள்) கோவில் திருமதிலின் பின்புறம் சக்தி பீட வடிவில் நேமங்காளி இருக்கின்றாள். நகர விடுதி உள்ளது.

இக் கோவில் நகரத்தார் இளநலமுடையார் பிரிவைச் சார்ந்தவர்கள்.

7. சூரைக்குடிக் கோவில்

சுவாமி பெயர் : தேசிக நாதர்
அம்பாள் பெயர் : ஆவுடைய நாயகி

காரைக்குடியிலிருந்து கழனிவாசல் வழியாகக் கானாடுகாத்தான் (திருச்சி பைபாஸ் ரோடு) சாலையில் 10 கி.மீ. தொலைவில் சூரைக்குடி உள்ளது. கி.பி.718 இல் இக்கோவில் நகரத்தாருக்கு வழங்கப் பெற்றது. இங்கும் வைரவர் வழிபாடு மிகவும் விசேடம். தேய்பிறை அஷ்டமியில் வைரவர் வழிபாடு செய்தால் சகல செல்வங்களும் கிடைக்கும்.

Koviloor Digital Library

மதுரை மீனாட்சிக்கு அமைந்தது போல, இங்கு அம்மன் நான்கு திருக்கரங்களுடனும், மூன்று கண்களுடனும் காட்சி தந்து அருள் பொழிகிறாள்.

தட்சிணாமூர்த்தியின் முதுகுப் பகுதியும், ஆலமரத்தின் தண்டுப் பகுதியும் தனித்தனியே தோன்றும் வண்ணம் ஒரே கல்லில் செதுக்கப் பட்டுள்ளது.

நிலவறை, சிற்பச் சிறப்பான இடமாகும்.

நந்தியம்பெருமானின் மேற்புறம் 5 வளையங்களோடு கூடிய கல் சங்கிலி சிற்ப எழிலைப் பறை சாற்றுகிறது.

நகர விடுதி உள்ளது.

இக் கோவிலைச் சார்ந்த நகரத்தார்கள் புகழ் வேண்டிய பாக்கமுடையார் பிரிவைச் சார்ந்தவர்களாவர்.

8. இரணியூர் கோவில்

சுவாமி பெயர் : ஆட்கொண்ட நாதர்
அம்பாள் பெயர் : சிவபுரந்தேவி

காரைக்குடியிலிருந்து கீழச்சிவல்பட்டி வழியாக 24 கி.மீ. தொலைவில் இரணியூர் உள்ளது.

கி.பி.714இல் காருண்ய பாண்டிய அரசனால் இக் கோவில் பிரதிட்டை செய்யப் பெற்றது. இளையாற்றக்குடி கோவிலைச் சார்ந்த திருவேட்பூருடையாரில் மூத்த சகோதர வழியினர் இரணியூர்க் கோவிலைத் தமக்குரிய தனிக் கோவிலாக்கிக் கொண்டனர்.

இளைய சகோதரர் வழியினர் பிள்ளையார்பட்டிக் கோவிலைத் தமக்குரியதாக்கிக் கொண்டதால், இவ்விரு கோவிலாரும் அண்ணன் - தம்பி முறை ஆயினர். அதனால், இவ்விரு கோவிலாரும் இளையாற்றக் குடியில் பாக்கு வைத்து திருமணமாலை பெற்றுக் கொள்கின்றனர்.

இரணியனைக் கொன்ற பாவம் நீங்க நரசிங்கப் பெருமான் வழிபட்ட தலம் இது எனக் கூறுவர்.

Koviloor Digital Library

இங்கு 600 கல்வெட்டுக்கள் உள்ளன. நம் சுதந்திரப் போராட்டக்காலத்தில் இங்கு திருப்பணி நடந்ததால், இங்கு பாரதமாதா, தேசக்கொடி, இராட்டை, காந்தி சிற்பங்கள் உள்ளன.

மதுரைக் கோவிலில் உள்ளது போல, அட்ட லெட்சுமி மண்டபம் இங்குள்ளது.

இங்கு நீலமேகப் பெருமாள் கோவில், பத்திரகாளியம்மன் கோவில், சேங்கை (ஊருணி) முதலியன உள்ளன.

இக்கோவிலில் கோட்டச் சிலைகள் ஐம்பொன் சிற்பங்களாகும். அற்புத வேலைப்பாடுடன் உள்ள பசுபதி லிங்கம், பதுமலிங்கம் உள்ளது. பிட்சாடனர் சிற்பம் கலையழகு மிக்கது. வச்சிரம், சூலம், வாதமுத்திரை, அபய முத்திரையுடன், நான்கு கரத்துடன் உள்ள முத்துக் கந்தர் சிலையும், அவருடன் உலாவரும் வீரபாகு சிலையும் இக்கோவிலில் மட்டுமே கண்டு வழிபட முடியும். இவர் திருக்கார்த்திகைத் திருநாளில் திருவீதி உலாவருவார்.

இங்குள்ள அழகிய கற்சிற்பங்களின். எண்ணிக்கை 626 தூண் சிற்பங்களின் எண்ணிக்கை 71. ஐம்பொன் சிற்பங்கள் 27 உள்ளன.

கால சம்ஹார மூர்த்தியின் கால் நரம்புகள் கூட நம் கண்ணுக்குப் புலப்படும்படி மிக நுட்பமாக வடிக்கப்பட்டுள்ளது. முப்புரம் எரித்தவர், உமையொருபாகன் முதலிய சிறந்த சிற்பங்கள் இங்குள்ளன.

மழைநீர் சேகரிப்பு அமைப்புள்ளது. நிலவறை உள்ளது. கற்சாளரம், கற்குழாய் அமைப்புகள் உள்ளன.

இக்கோவிலைச் "செட்டிநாட்டின் சிற்பக் களஞ்சியம்" எனலாம்.

இக் கோவிலைச் சார்ந்த நகரத்தார்கள் திருவேட்பூருடையார் பிரிவைச் சார்ந்தவர்களாவர்.

Koviloor Digital Library

9. வேலங்குடிக் கோவில்

சுவாமி பெயர் : கண்டீசுவரர்.

அம்பாள் பெயர் : காமாட்சியம்மை.

காரைக்குடியிலிருந்து பள்ளத்தூர் செல்லும் வழியில் 9 கி.மீ. தொலைவில் வேலங்குடி உள்ளது. கி.பி. 718இல் பாண்டிய மன்னனால் இக் கோவில் நகரத்தார்களுக்குக் கொடுக்கப்பட்டது.

கோவிலுக்குத் தென்புறமுள்ள ஊருணியின் மேல்கரையில் தேசிய நாராயணப் பெருமாள் கோவில், தட்சிணாமூர்த்தி கோவில் உள்ளது.

நகரத்தார் கோவில்களில் புள்ளிகள் மிகக் குறைவாய் உள்ள கோவில் இது.

நடராசப் பெருமான் சன்னதியில் தண்டம் ஒன்று வைத்து வழிபடப் பெறுகிறது.

அருகில் உள்ள வயல் நாச்சியம்மன் கோவிலில் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறும். சொற்கேட்டான் விநாயகர் கோவில் இங்குள்ளது.

இக் கோவிலைச் சார்ந்த நகரத்தார்கள் கழனி நல்லூருடையார் பிரிவைச் சார்ந்தவர்களாவர்.

பாண்டிய நாட்டில் ஏற்பட்ட சோதனை:

நிம்மதியாக வாழ பாண்டிய நாட்டிற்கு வந்த நகரத்தார்களுக்கு, பாண்டிய நாட்டிலும் சோதனை ஏற்பட்டது.

சோழ நாட்டில் நடந்த நிகழ்வு போலவே பாண்டிய நாட்டிலும் நடந்தது.

ஆம், சிறு பெண் வடிவிலே இங்கும் அவர்களை விதி துரத்தியது!

பூங்கொன்றை நாட்டு வேலங்குடி என்ற சுண்டைக்காட்டு வேலங்குடியில், மாணிக்கப் பெருந்தெருவில் வசித்துக்கொண்டிருந்த நேமம் கோவிலைச் சார்ந்த முத்துவீரப்ப செட்டியார் மகன் அருணாசலம்

Koviloor Digital Library

செட்டியார் மகள் 5 வயதுள்ள முத்து மீனாட்சி என்ற பெண்ணை காருண்ய பாண்டிய மன்னன் வேட்டைக்கு வந்தபோது எடுத்துச் சென்றான். அப் பெண்ணை, தன் நகருக்குக் கொண்டு சென்றான்.

5 வயது சிறு பெண்ணை மன்னன் ஏன் தூக்கிச் சென்றான்?!

உண்மையான காரணம் அறிய இயலவில்லை.

சிறு பெண்ணின் அழகு மன்னனைக் கவர்ந்ததா? இல்லை... அப் பெண்ணின் வெடுக்குப் பேச்சும், துடுக்குத்தனமும் மன்னனை ஈர்த்ததா? அல்லது, அப் பெண்ணின் அறிவும், புத்திக் கூர்மையும் மன்னனை மயக்கியதா? அதுவன்றி, மன்னனுக்குப் பிள்ளைப் பேறு இல்லாமல் இருந்ததா? ஆண் மகவு இருந்தபோதிலும், பெண் மகவு இல்லையே என்ற ஏக்கத்தினால் நடந்ததா?

இப்படிப் பலவாறு ஊகம் செய்யத்தான் முடிகிறது.

ஆனால், காருண்ய பாண்டியனுக்கும், நகரத்தார்களுக்கும் பகை இல்லை. பகை இருந்திருந்தால் கி.பி. 714இல் இம் மன்னன் இரணியூர்க் கோவிலைப் பிரதிட்டை செய்து அதன் பின் நகரத்தார்களுக்கு வழங்கி இருக்கமாட்டான்.

காருண்ய பாண்டியன் காமுகனாய் இருந்திருந்தால், நகரத்தார்கள் கேட்டவுடன் அப் பெண்ணைத் திரும்பக் கொடுத்து இருக்கமாட்டான்.

மன்னன் அச் சிறு பெண்ணைத் தூக்கிச் சென்றதால் மற்றவர்கள் பலவிதமாகப் பேச அது வழி ஏற்படுத்திக் கொடுத்தது.

நகரத்தார்கள் மானம் பெரிதென வாழ்பவர்கள். தங்கள் குலப் பெண். படி தாண்டினால், அப்பெண்ணைக் கொன்றுவிடுவதைத் தங்கள் குல வழக்கமாய், குல தருமமாய்க் கொண்டு வாழ்பவர்கள்.

மன்னன் செய்த செயல் நகரத்தார்களுக்குத் தெரிந்தது. நகரத்தார்கள் கூட்டம் கூடி, சிறையெடுக்கப்பட்ட பெண்ணுக்குச் சாதி முறைப்படி தண்டனை வழங்குவது என முடிவு செய்தனர்.

Koviloor Digital Library

அம்முடிவுடன் அரண்மனை சென்றனர். மன்னனைச் சந்தித்து அப் பெண்ணை விட்டுவிடும்படி கேட்டனர்.

"உங்கள் பெண் என்று தெரிந்திருந்தால் தூக்கி வந்திருக்க மாட்டேன். உங்கள் குல வழக்கப்படி அப் பெண்ணைக் கொல்லக் கூடாது. அப் பெண்ணை நீங்கள் கொன்றதாகத் தெரிந்தால், அந்த ஒரு தலைக்கு எட்டுத் தலையும், 8000 பொன்னும் தண்டமாக தங்களிடம் வாங்குவேன்" என்றான் மன்னன்!

மன்னனின் நிபந்தனையை ஏற்றுக்கொண்டு, நகரத்தார்கள் அப்பெண்ணை அழைத்துச் சென்றனர்.

மன்னன் ஆணைக்குக் கட்டுப்பட்ட நகரத்தார்கள், தங்கள் குல வழக்கத்தை மாற்றிக் கொள்ள விரும்பவில்லை.

அப் பெண்ணைக் கொன்றனர்.

"உங்கள் பெண் என்று தெரிந்திருந்தால் தூக்கி வந்திருக்க மாட்டேன்" என்று மன்னன் கூறியதிலிருந்து மன்னனுக்குத் தீய நோக்கமோ, எண்ணமோ இல்லை எனத் தெரிகிறது.

நாட்டரசன்கோட்டையில் நடந்த கலகத்தில் நகரத்தார் பெண்களுக்கு ஏற்பட்ட அவமானம் போல, இதுவும் ஏற்பட்டது என எண்ண வேண்டியுள்ளது.

அறிந்து செய்தால்தான் பிழை, குற்றம்.

இப்பெண் அறிந்து குற்றம் செய்யவில்லை. ஆனால் தண்டனை அடைந்தாள். காரணம், யாரும் தங்கள் இனத்தை அவமானமாகக் கருதக் கூடாது என நகரத்தார்கள் நினைத்தமையேயாகும்.

கொலை செய்வது பாவம் என உணர்ந்து, புலால் உணவை மறுத்து, சைவ உணவை உண்டு வாழ்ந்த நகரத்தார்கள், 'இனத்திற்குப் பழி வரக்கூடாது' எனக் கருதியே இவ் வழக்கத்தைத் தங்கள் குலதருமமாக ஏற்றுக் கொண்டனர்' என எண்ண வேண்டியுள்ளது.

Koviloor Digital Library

முதல் மரியாதை

மன்னனின் ஆணைக்குக் கட்டுப்பட்ட நகரத்தார்கள், ஏழு வழியாய் தாங்கள் இருப்பதால் எட்டுத் தலை எவ்வாறு கொடுப்பது எனக் கூட்டம் கூடி யோசித்தனர்.

இளையாற்றக்குடியில் ஒக்கூருடையார் பிரிவில், இரு பிரிவினர் (திருவேட்பூருடையார்) பிரிந்து, தங்களுக்கென்று தனிக் கோவில்களை ஏற்படுத்திக்கொண்டு வாழத் தலைப்பட்டனர். ஒரு பிரிவினர் பிள்ளையார்பட்டிக் கோவிலையும், மற்றொரு பிரிவினர் இரணியூர்க் கோவிலையும் பாண்டிய மன்னனிடம் பெற்று வாழ்ந்தனர். எனவே, ஏழு வழியினர் இப்போது ஒன்பது வழியினராயினர்.

இளையாற்றக்குடி ஒக்கூருடையார் 3 பிரிவாய்த் தாங்கள் இருப்பதால், வேணாக (அதிகமாக) ஒரு தலையைத் தருவதாகவும், அதாவது எட்டாவது தலையைத் தாங்கள் தருவதாகவும், அதற்குப் பதிலாக நகரப் பொது விழாக்களில் முதல் மரியாதையைத் தங்களுக்குத் தரவேண்டும் என்றும் கூட்டத்தில் கேட்டனர்.

இதனை நகரத்தார் அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

அதன்படி இன்றுவரை நகரத்தார்கள் நடந்து வருவது பெருமைக்குரிய செய்தி மட்டுமல்ல. நகரத்தார்கள் வாக்குத் தவறாதவர்கள் என்பதும் இதன் மூலம் அறியப்படும் சிறப்புச் செய்தியாகும்.

மன்னன் மன்னித்தல்

ஒரு முடிவை நகரக் கூட்டத்தில் எய்தியவுடன், நகரத்தார்கள் எட்டுப் பேரும், 8000 பொன்னுடனும் அரண்மனைக்குச் சென்றனர்.

நடந்தவற்றை மன்னனிடம் கூறி, தண்டனையை ஏற்றுக் கொள்ளத் தயாராய் வந்திருப்பதாய்த் தெரிவித்தார்கள்.

செய்தி கேட்ட மன்னன் மிக்க வருத்தமுற்றான்.

"என்னுடைய செய்கையினால் ஒரு பெண்பழி ஏற்பட்டது போதும். மேலும் பழிக்கு ஆளாக வேண்டாம். நீங்கள் தலையும் தரவேண்டாம், பொன்னும் தர வேண்டாம். உங்களை மன்னித்தேன். போய் வாருங்கள்" என்றான் மன்னன்.

மன்னனின் மன்னிப்பைப் பெற்ற நகரத்தார்கள் ஊர் திரும்பினர்.

Koviloor Digital Library

ஆண்டவனின் மன்னிப்பைப் பெற உருத்திர பசுபதீசுவரருக்குத் திருப்பணி செய்து, குளம் வெட்டி, திருவிழா நடத்தினர். அத் தருமம் தடையின்றி நடைபெற சொத்துக்கள் வாங்கி வைத்தனர்.

இனிப் பூங்கொன்றை வேலங்குடியில் இருக்கக் கூடாதெனத் தீர்மானித்தனர். மாற்றூர் முதலிய இடங்களில் குடியேறினர்.

செட்டிநாடும் செம்மண்ணும்

'செட்டி நாட்டுச் செம்மண்ணும் கவிபாடும்' என்பார்கள்! செட்டிநாடு செம்மண்ணாய் இருக்கக் காரணம் என்ன? அநேக செட்டி நாட்டு ஊர்களில் உள்ள குடி தண்ணீர் நிறம் செங்காவியாய்த்தான் இருக்கும். ஆனால், சுவையாய் இருக்கும். இதன் காரணம் என்ன?

பூவந்திச் சோழன் வைசியப் பெண்களை அநியாயமாய்ப் பிடித்துச் சிறை வைத்தான். அதனால் 8000 குடும்பத்தாரும் ஆண் பிள்ளைகளை ஆசிரியர் ஆத்துமநாத சாத்திரியாரிடத்தில் ஒப்படைத்து விட்டு, மானம் காக்க உயிர் துறந்தனர். அன்று அவர்கள் இந்த மண்ணில் இரத்தம் சிந்தினர்!

நாட்டரசன்கோட்டையில் குடியிருந்த காலத்தில் கொள்ளைக் கலகம் நடந்தது. அதில் சில நகரத்தார் பெண்களின் கற்புக்குப் பங்கம் ஏற்பட்டது. நகரத்தார்கள் தங்கள் குல வழக்கப்படி அப் பெண்களைக் கொன்றனர். அப்பெண்கள் நாட்டரசன்கோட்டையில், செட்டி நாட்டில் இரத்தம் சிந்தினர்! அவர்கள் சிந்திய இரத்தத்தாலும் செட்டிநாட்டு மண் செம்மண்ணாயிற்று!

இரத்தம் நீண்ட நேரம் உறைந்தால் கருப்பாக மாறும். எனவே செட்டி நாட்டில் சில பகுதி மண் கருப்பாயிற்று!

காருண்ய பாண்டிய மன்னனால் கவர்ந்து செல்லப்பட்ட 5 வயதுச் சிறு பெண் முத்து மீனாட்சி சிந்திய இரத்தத்தாலும் செட்டி நாட்டு மண் சிவப்பாயிற்று!

மானம் நீங்கின் உயிர் வாழாத உத்தம செட்டியார்கள் வாழ்வதால் செட்டி நாட்டு மண் சிவப்பாயிற்று!

Koviloor Digital Library

3.
நகரத்தார்களின் ஆலயப்பணிகள்

'அறம் செய விரும்பு' என்று கூறிய அவ்வையார் 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றும் கூறினார்.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' எனத் தாய், தந்தையை, முன்னோர்களைப் போற்றி, வணங்கி வாழ்பவர்கள் நகரத்தார்கள். இதற்குச் சான்றாக வீட்டுப் படைப்பையும், பங்காளிகள் படைப்பையும் கூறலாம்.

தருமம் செய்வது நகரத்தார்களின் இரத்தத்தோடு கலந்த ஒன்று.

மோர் விற்ற காசையும், முருங்கைக் காய் விற்ற காசையும் சிறுகச் சிறுகச் சேர்த்து கோவில் குடமுழுக்குக்கு ஆச்சிமார்கள் கொடுப்பார்கள் எனக் கூறுவர்.

ஆச்சியும், செட்டியாரும் அறம் செய்வதிலே சிறந்து நின்றார்கள்.

"கோவில் கூரையில் விரிசலா? கூப்பிடு செட்டியாரை" என்ற சொலவடைக்கேற்ப, பல கோவில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்தார்கள். பல கோவில்களைப் புதிதாகக் கட்டி திருப்பணி செய்து, குட முழுக்குச் செய்தார்கள்.

"செல்வம் பெற்றதன் பயன் சிவதருமம் புரிதலே என்பதைச் செவ்வனம் உணர்ந்தவர்கள் நகரத்தார்கள்" என்றும்,

Koviloor Digital Library

"கோவில்களின் சீர்கேடான நிலையை நீக்கும் பொருட்டு சிவபிரானே நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் உள்ளத்தில் புகுந்து திருப்பணி செய்யத் திருவுள்ளம் பற்றியருளினார்" என்றும் பெரும் புலவர் பண்டிதமணி அவர்கள் தாம் எழுதிய "நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு" என்ற நூலில் கூறுகிறார்.

கோவில் அமைப்பில் இவர்கள் தனிப் பாணியைப் பின்பற்றினர். சோழர்காலப்பாணி, பாண்டியர்காலப் பாணி என்பதைப் போல, நகரத்தார் பாணிக் கோவில்கள் என்றழைக்கும் நிலையை உண்டாக்கினர்.

இவர்கள் சைவர்களாய் இருந்த போதிலும், மத வேறுபாடு இல்லாமல் வைணவத்தையும் ஆதரித்தனர்.

எனவே, சிவன் கோவிலைக் கட்டியதைப் போலவே, பெருமாள் கோவிலையும் கட்டினர். சான்றாக அரியக்குடி சீனிவாசப் பெருமாள் கோவிலைக் கூறலாம்.

அம்மன் கோவிலையும் கட்டினர் என்பதற்குச் சான்றாக உ. சிறுவயல் பொன்னழகி அம்மன் கோவிலைக் கூறலாம்.

இது தவிர, கிறித்துவ தேவாலயம் கட்டவும், முகமதியர் பள்ளிவாசல் கட்டவும் பெரும் செல்வத்தை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

கோவில் திருப்பணி செய்வதிலும், அவற்றைப் பராமரித்துப் பேணிக் காத்து வருவதிலும் நகரத்தார்கள் அதிக ஈடுபாடு கொண்டிருந்தனர்.

நகரத்தார்கள் கட்டிய கோவில்களில் உள்ள சிலைகள் சிற்ப சாத்திர முறைப்படி அமைந்தவையாகும்.

அவர்கள் ஆகம விதிப்படி கோவில்களைக் கட்டினர்.

கட்டிய கோவில்களில் பூசை முட்டின்றி நடைபெற பெரும் பொருளை, சொத்தை - வைப்பு நிதியாக நகரத்தார்கள் ஏற்படுத்தினர். அந் நிதியிலிருந்து வாழ்க்கைச் செலவுக்கு பணமெடுக்கும் பழக்கம் நகரத்தார்களிடம் இல்லை.

Koviloor Digital Library

'சிவன் சொத்து குல நாசம்' என வாழ்ந்தவர்கள் நகரத்தார்கள். அதாவது கோவில் சொத்தை எடுத்தால் குடும்பம் அழியும் என்ற கொள்கையுடையவர்கள். இக் கொள்கையை இன்றுவரை கடைப்பிடிக்கின்றனர்.

கோவில் பூசைக்கு வேண்டிய பூக்களுக்காக நந்தவனத்தை ஏற்படுத்தினார்கள். கோவில் அபிடேகத்திற்கு வேண்டிய பாலுக்காக பசுமடம் வைத்தனர். திருமஞ்சனத்திற்காக குளம் அல்லது கிணறு வெட்டினர். கோவில் பணியாளர்கள் தங்க வீடுகள் கட்டிக் கொடுத்தனர். நித்திய பூசை நைவேத்தியத்திற்காக நிலங்கள் வாங்கி வைத்தனர்.

கோவில் தல விருட்சங்களைப் போற்றிப் பாதுகாத்தனர்.

பாண்டிய மன்னன் வழங்கிய ஒன்பது நகரக் கோவில்களையும் தங்கள் பாணிக்கேற்ப மாற்றியமைத்துக் கட்டியவர்கள் நகரத்தார்களே.

நகரக் கோவில்களில் இன்றைக்குக் காணப்படும் அமைப்பு பாண்டிய மன்னர்கள் காலத்தில் இல்லை.

நகரத்தார்கள் தாங்கள் வாழ்கின்ற ஊர்களில் நகரப் பொதுவில் சிவன் கோவிலைக் கட்டி, நகரச் சிவன் கோவிலாகப் பராமரித்து வருகின்றனர். சில ஊர்களில் ஊர்ப் பொது சிவன் கோவில் உள்ளது. இதன் நிர்வாகம் அரசிடமோ அல்லது தேவத்தானத்திடமோ உள்ளது.

நகரச் சிவன் கோவில் அந்த ஊரில் உள்ள அனைத்து நகரத்தார் களுக்கும் உரியது. ஊர்ப் பொது சிவன் கோவில் நகரத்தார்களுக்கு மட்டுமின்றி ஊரிலுள்ள அனைத்து இந்து மக்களுக்கும் பொதுவில் உரியது.

ஊர்ப் பொது சிவன் கோவில் நிர்வாகம் அரசிடம் உள்ளதற்கு உதாரணம் வெற்றியூர் அருந்ததீசுவரர் கோவில்.

தேவத்தான நிர்வாகத்தில் உள்ளதற்கு உதாரணம் நாட்டரசன் கோட்டை கரிகால சோழீசர் கோவில்.

நிர்வாகம் யாரிடம் இருந்த போதிலும், கோவிலுக்குச் செய்வதைத் தங்கள் கடமையாகக் கருதி வாழ்வது நகரத்தார்களின் பண்பாகும்; பழக்கமாகும், இது தனிச் சிறப்புக்குரிய பெருமையாகும்.

Koviloor Digital Library

கடல் கடந்து "கொண்டு" விற்கப் போனபோதும், உள்நாட்டில் தொழில் செய்யும்போதும், தெய்வத்தின் பெயரைக் குறிப்பிட்டு அதன் பேரில் வரவு வைத்து, லாபத்தில் பங்கு வைப்பது நகரத்தார்கள் தொன்றுதொட்டுக் கடைப்பிடித்து வரும் பழக்கமாகும். ஏனெனில் இவர்கள் கோவில் தழுவிய குடிகள்.

இவர்கள் வாழ்க்கையின் ஆணிவேராக இருப்பது ஒன்பது நகரக் கோவில்களே.

சிவன் கோவில் மட்டுமன்றி, பெருமாள் கோவில், சுப்பிரமணியர் கோவில், பிள்ளையார் கோவில், அம்மன் கோவில் போன்ற கோவில்களையும் நகரத்தார்கள் கட்டியுள்ளனர்.

ஆதி முதல் மரகத விநாயகர் பூசையைக் கைக்கொண்டதால், பெரும்பாலான ஊர்களில் பிள்ளையார்கோவிலைக் கட்டியுள்ளனர்.

முன்பு மதுரை மீனாட்சியம்மையின் வடக்குக் கோபுரம் முழுமையடையாமல் மொட்டைக் கோபுரமாய் இருந்தது. அதனை முழுக்கோபுரமாக்கியவர்கள் அமராவதிபுதூர் வயிநாகரம் நாகப்ப செட்டியாரும், வெங்கடாசலம் செட்டியாரும் ஆவார்கள்.

கோவில் பூசை செய்ய ஆட்கள் தேவை என்பதற்காக வேத பாடசாலையும், பூசையின்போது தேவாரம் பாட ஓதுவார்களும் தேவை என்பதற்காகத் தேவாரப் பாடசாலையும் ஏற்படுத்தினர். அதில் படிப்பவர்களுக்குத் தங்க இடமும், உணவும் இலவசமாக வழங்கினர்.

காசி முதல் கன்னியாகுமரி வரை அன்னசத்திரங்கள் கட்டிப் பசிப் பிணியைப் போக்கினர்.

கோவிலுக்கு வேண்டிய நகைகள், வாகனங்கள், மரத்தேர் சப்பரம், வெள்ளிரதம், தங்கரதம், முதலியவற்றைச் செய்து கொடுத்தனர்.

காசியில் (வாரணாசி) விசுவநாதருக்குத் திருவனந்தல், உச்சிக் காலம், அர்த்தசாமம் முதலிய பூசைகளுக்குரிய பொருள்கள் 1868 முதல் காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரத்திலிருந்து அனுப்பப் படுகிறது. அந்நகரில் 144 தடையுத்தரவு அமுலில் இருந்தாலும், பூசைக்குரிய இப்பொருள்களைக் கொண்டு செல்லத் தடை இல்லை. நகரத்தார்களுக்கு இது மிகப் பெரிய பெருமையாகும்.

Koviloor Digital Library

நகரச் சத்திரத்திலிருந்து இப்பொருட்களை மேளதாளத்துடன் எடுத்துச் சென்று கோவிலை அடைவர். அப்போது, பூசைப் பொருள் செல்லும் வழியில் உள்ள மக்கள் அனைவரும், சாதி, மதம், மொழி, வேறுபாடின்றி எழுந்து நின்று வணங்கி மரியாதை செய்வர்.

"ஊருணிகள், கூபம் இவை உண்டுபண்ணி மிக்க தர்மம் தாரணியில் செய்திட்ட சத்புருசர்" என நகரத்தார்களை பாடுவார் முத்தப்ப செட்டியார், தாம் எழுதிய "திருமுக விலாசத்தில்" புகழ்கிறார்.

ஏரிக்கரையில் காவல்காத்து நிற்கும் அய்யனாருக்கும் கோவில் கட்டியவர்கள் நகரத்தார்கள். அதனால் வெற்றியூரில் ஒரு வீட்டிற்குக் 'கோவில் செட்டியார் வீடு' என்ற பெயர் ஏற்பட்டது.

நகரத்தார்களின் கோவில் பணியை நாமக்கல் கவிஞர் பின்வருமாறு கூறுகிறார்.

பண்டிருந்த தமிழர்களின் பெருமை வாய்ந்த
பழக்க வழக்கங்கள் பல இன்றும் பார்க்கக்
கொண்டிருந்து காத்துவரும் குலத்தின் மக்கள்
கோடானு கோடி பணம் செலவு செய்து
பெண்டிருந்த சரிபாதிப் பெருமான் கோலப்
பெருங்கோயில் திருப்பணிகள் பெரிதும் பேணும்
தொண்டுமிகும் தனவணிகர்..............

நகரத்தார்கள் கோவில் கட்டவும், பிற தருமங்கள் செய்யவும் எவ்வளவு பணம் செலவாயிற்று, என்னென்ன தருமங்கள் செய்தனர் என்ற விபரத்தைப் பெரும் புலவர் பண்டிதமணி அவர்கள் தாம் எழுதிய "நாட்டுக் கோட்டை நகரத்தார் வரலாறு" என்ற நூலில் குறிப்பிட்டு உள்ளார்கள். அதன் சுருக்கத்தை எழுதியுள்ளேன்.

அப்பெரும் புலவர்க்கும், அந்நூலின் உரிமையாளருக்கும் என் நன்றி.

முதலில் நகரக்கோவில்களில் நகரத்தார்கள் செய்த தர்மத்தை அறிவோம்.

இளையாற்றங்குடி : நகரத்தார்களின் முதல் கோவில் இது. இக் கோவில் ஏழு பிரிவினரும் தனித்தனியே பிள்ளையார் கோவில் கட்டி,

Koviloor Digital Library

ஊருணி வெட்டியுள்ளனர். பட்டணசாமியார் பிரிவினர் தனியாகச் சிவன் கோவில் கட்டியுள்ளனர்.

பொதுவில் கைலாசநாதர் உடனாய நித்திய கல்யாணி கோவிலைக் கட்டினர்.

இக்கோவிலின் கழனிவாசல் குடியார் ஆதிகேசவப் பெருமாள் கோவிலைக் கட்டியுள்ளனர்.

மாற்றூர் கோவில் : பொதுவில் ஐந்நூற்றீசர் உடனாய பெரிய நாயகி கோவிலைக் கட்டினர். இக்கோவில் சித்தரால் பூசிக்கப்பெற்றுப் புகழ்பெற்ற பெருங்கோவில். அவர் சித்த வன்மையால் செம்பொன் செய்து ஐந்நூறு மாற்றுக் கண்டனர். அதனால் இந்த மூலலிங்கப் பெருமானுக்கு "ஐந்நூற்றீசர்" என்ற பெயர் அமைந்தது.

வைரவன் கோவில் : பொதுவில் வளரொளி நாதர் உடனாய வடிவுடையம்மை கோவிலைக் கட்டினர்.

இலுப்பைக்குடிக் கோவில் : பொதுவில் தான்தோன்றியீசர் உடனாய சவுந்தரநாயகி கோவிலைக் கட்டினர். அந்தணர் உறையுள், பசுமடம், விடுதி, நந்தவனம், ஊருணி அமைத்து திருப்பணி செய்தனர்.

தேவகோட்டை மெ. வகையராப் பொதுவில் அம்மன் சன்னதி திருக்குளமும், பிள்ளையார் கோவிலும் கட்டியுள்ளனர்.

பூங்குடிக் கூராண்டான் குடும்பத்தினர் ஓர் ஊருணி வெட்டித் தெப்பத் திருவிழா நடத்தி வருகின்றனர்.

இரணியூர்க் கோவில் : பொதுவில் ஆட்கொண்ட நாதர் உடனாய சிவபுரந்தேவி கோவிலைக் கட்டினர்.

இக்கோவில் நகரத்தார்கள் நீலமேகப் பெருமாள் கோவில் திருப்பணி செய்தனர். அந்தணர் உறையுள் அமைத்தனா. கீழச் சிவல்பட்டியிலிருந்து கோவிலுக்கு வர சாலை அமைத்தனர்.

இக் கோவிலைச் சார்ந்த நகரத்தார் இருவர் தனிப்பட்ட முறையில் வெள்ளிப் பெருச்சாளி வாகனமும், அம்மைக்குத் திருக்கவசமும் உபயமாகச் செய்து கொடுத்தனர்.

Koviloor Digital Library

சூரைக்குடிக் கோவில் : பொதுவில் தேசிகநாதர் உடனாய ஆவுடைய நாயகி கோவிலைக் கட்டினர். அந்தணர் உறையுள், பசுமடம், நந்தவனம், விடுதி, ஊருணி அமைத்துத் திருப்பணி செய்தனர்.

நேமம் கோவில் : பொதுவில் செயங்கொண்ட சோழீசர் உடனாய சவுந்தரநாயகி கோவிலைக் கட்டினர். அழகிய நாச்சியம்மன் கோவில் திருப்பணி, பிள்ளையார்கோவில், பசுமடம், நந்தவனம் அமைத்தனர்.

இக்கோவிலைச் சார்ந்த காரைக்குடி அரு.அ.குடும்பத்தாரால் பிள்ளையார் கோவிலும், குளமும் நிறுவப்பட்டது.

பிள்ளையார் பட்டிக் கோவில் : பொதுவில் கற்பக விநாயகர், திருவீசர் உடனாய சிவகாமவல்லி, மருதீசர் உடனாய வாடாமலர் மங்கை கோவில் திருப்பணி செய்தனர். பெரிய கருப்பர், மருதங்குடி, அய்யனார் கோவில்களும், அலுவலர் இல்லங்களும், பெண்கள் விடுதியும், இரண்டு வெள்ளி இடபங்களும் மஞ்சமும் செய்தனர்.

இக்கோவிலைச் சார்ந்த நகரத்தார் நால்வர் வெள்ளி இடபவாகனமும், கேடகமும், வெள்ளி மயில் வாகனமும், வெள்ளிப் பெருச்சாளி வாகனமும் செய்து கொடுத்துள்ளனர். பசுமடம் நிறுவி, தண்ணீர்ப் பந்தல் எற்படுத்தி, பாடசாலையும் எற்படுத்தினர்.

வேலங்குடிக் கோவில் : பொதுவில் கண்டீசுவரர் உடனாய காமாட்சியம்மை கோவிலைக் கட்டினர். மகாலெட்சுமி உடனாய தேசிக நாராயணப்பெருமாள் கோவில் திருப்பணி செய்தனர். அந்தணர் உறையுள், விடுதி, நந்தவனம், பசுமடம், தண்ணீர்ப் பந்தல் அமைத்தனர்.

தேவகோட்டை செ.பி.ச.சண்முகம் செட்டியார் பெரிய நாயகியம்மை கோவில் திருப்பணிக்காகவும், குடமுழுக்கிற்காகவும் பெரும் பணம் செலவு செய்தார்.

அமராவதிபுதூர் : இவ்வூரைச் சார்ந்த வயிநாகரம் குடும்பத்தார் பழமையாய் இருந்த சிவன் கோவிலைப் புதுப்பித்தனர்.

அரண்மனை சிறுவயல் : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணியும், பெருமாள் கோவில் திருப்பணியும் செய்யப் பெற்றன.

Koviloor Digital Library

அரிமளம் : கட்டையன் செட்டியார் குடும்பத்தாரிடம் கோவிலுக்கு இடம் வாங்கி நகரத்தார்கள் சிவாலயத் திருப்பணி செய்தனர். பெரிய பொற்குடையான் ஊருணி, சிறிய பொற்குடையான் ஊருணி, நந்தவனம், மடங்கள், பெருமாள் கோவில், முருகன் கோவில், வேதபாடசாலை, சத்திரம் அமைத்தனர்.

அரியக்குடி : நகரத்தார்கள் சிவாலயத் திருப்பணி செய்தனர்.

திருமலை வேங்கடேசர் திருவருளால் திருவரங்கத்திலிருந்து சினிவாசப் பெருமாள் உற்சவமூர்த்தியைச் சின்னச் சேவுகன் செட்டியார் கொணர்ந்து, நகரத்தார் பலரின் உதவியுடன் சன்னதிகளும், கோபுரங்களும் கட்டினார். நகரத்தார் பலர், பல வாகனங்களும், திருவாபரணங்களும், நிலங்களும், நந்தவனமும் பெருமாள் கோவிலுக்களித்தனர்.

கானாடுகாத்தான் க.வெ. சிதம்பரம் செட்டியார் முயற்சியால் உட் பிரகாரமும், மண்டபமும், வெளித் திருமதிலும், பெரிய இராச கோபுரமும் கட்டி திருப்பணி செய்யப்பட்டது.

அழ.கி.முரு.குடும்பத்தார்கள் திருக்குளமும், பிள்ளையார் கோவிலும் கட்டினர்.

அலவாக்கோட்டை : சி.அரு. சின்னான் செட்டியாரால் சிவன் கோவில் திருப்பணி செய்யப்பெற்றது.

பி.நா. குடும்பத்தினர் சீனிவாசப் பெருமாள் கோவில் திருப்பணி செய்தனர்.

நகரத்தார் சிலர் பிள்ளையார் கோவில், முருகன் கோவில், நந்தவனம் நிறுவினர்.

(கண்டனூர்) அழகாபுரி : காலஞ்சென்ற அள.அரு. அழகப்ப செட்டியாரால் திருப்பணி தொடங்கப் பெற்றது. பின்னர் பூர்த்தியானது.

(கொல்லங்குடி) அழகாபுரி : நகரத்தாரால் விநாயகர் கோவில் திருப்பணி செய்யப்பெற்றது.

ஆத்தன் குடி : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணியும், இராச கோபுரத் திருப்பணியும் செய்யப் பெற்றன. சுவாமி சந்நிதித் திருக்குளம்,

Koviloor Digital Library

வெளிப் பிள்ளையார் கோவில் திருவாபரணம், வாகனம், வெள்ளித்தேர் முதலியனவும் செய்யப் பெற்றன.

ஆத்திக்காடு தெக்கூர் : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது.

நா.பழ. குடும்பத்தாரால் ஊருணிகளும், சொ.ராம.கரு. முத்தையா செட்டியாரால் பிள்ளையார் கோவிலும் அமைக்கப் பெற்றன.

ஆவினிப்பட்டி : நகரத்தார்கள்ால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது. நந்தவனம், ஊருணி, பசுமடம் நிறுவியுள்ளனர்.

உ.சிறுவயல் : சா.ராம. பழநியப்ப செட்டியார் குடும்பத்தாரால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது.

நகரப் பொதுவில் பொன்னழகியம்மன் கோவில் திருப்பணி செய்யப் பெற்றது.

மெ.சு.மெ. நாராயணன் செட்டியாரால் பசுமடமும், இலுப்பைக்குடி நகரத்தார்களால் சிவாலயச் சன்னதி திருக்குளமும், பெரியண்ணன் செட்டியாரால் பொன்னழகி அம்மன் கோவில் சன்னதி திருக்குளமும், நல்லழகன் செட்டியாரால் அய்யனார் கோவிலும் அமைக்கப்பெற்றன.

உலகம்பட்டி : நகரத்தாரால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது.

பழ.சிவ. சிவராமன் செட்டியாரால் நந்தவனமும், பழ.கரு.நா. நாகப்ப செட்டியாரால் பசுமடமும், நகரத்தார்களாலும், கரு.பழ.கரு. குடும்பத்தினராலும் ஞானியார்மடத்தில் முருகன் கோவிலும், திருக்குளமும் அமைக்கப்பெற்றது.

நகரத்தாருள் சிலர் சேர்ந்து வேறு இரண்டு திருக்குளங்களை அமைத்தனர்.

ஒக்கூர் : சி.கரு.சி. மற்றும் சி.கரு.ஆ. என்ற இரண்டு குடும்பத்தினர் சோழபுரம், காளையார்கோவில், திருவில்லிபுத்தூர் ஆகிய ஊர்களில் திருப்பணி செய்துள்ளனர்.

சி.கரு.சி. ஆ.வீர.ராம; பி.சு.ஆத. ஆகிய இம்மூவரால் பிள்ளையார் கோவிலும், சி.கரு.சி.லெ.வால் ஊருணியும் அமைக்கப் பெற்றது.

Koviloor Digital Library

கடியாபட்டி (இராமச்சந்திரபுரம்) : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது. வெள்ளி வாகனங்கள், நவரத்தின ஆபரணங்கள், செய்து வைத்தனர்.

உமையாள்புரம் என்ற ஊரில் தீ.நா. முத்தையா செட்டியார் சாலைப் பாலமும், சிவாலயத் திருப்பணியும் செய்தார்.

வெ.மு. குடும்பத்தாரால் அய்யனார் கோவில் திருப்பணியும், செ.ராம. இராமசாமி செட்டியாராலும், நகரப் பொது நிதியிலிருந்தும் மாரியம்மன் கோவில் திருப்பணியும், கொத்தமங்கலம் ராம.அ. பொதுக் குடும்பத்தாரால் வெள்ளைக்கல் திருக்குளமும், நகரத்தாருள் சிலரால் நந்தவனம், பாடசாலை, சத்திரம், ஊருணிகளும் அமைக்கப் பெற்றன.

கண்டரமாணிக்கம் : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது. பொதுவில் மாணிக்க நாச்சியம்மை கோவில் திருப்பணி செய்யப் பெற்றது.

பழ.சுப. குடும்பத்தார் மாணிக்க நாச்சியம்மைக்குத் தங்க அங்கி செய்து வைத்தனர்.

நகரத்தாருள் சிலரால் பிள்ளையார் கோவில், மடம், குளம், நந்தவனம், அன்ன சத்திரம் முதலியன நிறுவப்பட்டன.

பெ.ஆத. ஆதப்ப செட்டியார் சுவாமிக்கும், அம்பாளுக்கும் தங்க அங்கி செய்துவைத்தார்.

கண்டவராயன்பட்டி : நகரத்தாரால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது.

பழ.கரு. பொதுவில் வெள்ளைக்கல் திருக்குளம் அமைத்தார்.

தெ.சி.நா.வால் தண்டாயுத பாணி கோவிலும், அதைச் சார்ந்த குளமும் அமைக்கப்பெற்றன.

வீர.கரு. கருப்பஞ் செட்டியாரால் பிள்ளையார் கோவிலும், வடு.பெரி.ந.கரு. நல்லகருப்பஞ் செட்டியாரால் பசுமடமும் நிறுவப் பெற்றன.

கண்டனூர் : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணியும், செல்வநாயகி அம்மன் கோவில் திருப்பணியும் செய்யப் பெற்றன.

Koviloor Digital Library

சி.நெ.வீர. குடும்பத்தாரால் பெருமாள் கோவில் திருப்பணி செய்யப் பெற்றது.

நகரத்தாருள் சிலரால் பசுமடமும், அன்னசத்திரமும், குருபூசை மடமும், குளமும், பிள்ளையார் கோவிலும் அமைக்கப் பெற்றன.

கருங்குளம் : நகரத்தார்களால் விநாயகர் கோவில் திருப்பணி செய்யப் பெற்றது. பரநாச்சியம்மனுக்குத் திருவாபரணங்கள் செய்து வைத்துள்ளனர்.

கல்லல் : மெ.ராம. வெள்ளையப்பய்யாவால் மிகப் பழமையான இந் நகர் சிவாலயம் திருப்பணி செய்யப் பெற்றது. அதன் பின்னர், மெ.ராம.வெ., ஆ.மு., கரு.பெரி., பெரி.சுப., ராம.மு.ராம.இராமன் செட்டியார் முதலியோரால் மீண்டும் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது.

பெரி.சுப.பழ. சுப்பையா செட்டியாரால் அரங்கநாதர் கோவில் திருப்பணி செய்யப் பெற்றது.

நகரத்தாருள் சிலரால் பசுமடம், நந்தவனம், குருபூசை மடம், சத்திரம் அமைக்கப் பெற்றன.

கல்லுப்பட்டி : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி, முருகன் கோவில் திருப்பணி, பிள்ளையார்கோவில் திருப்பணி முதலியன செய்யப் பெற்றன.

காரைக்குடி : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி, திருவாபரணம், வாகனங்கள் செய்யப் பெற்றன.

ராய. நாகப்ப செட்டியாரால் நாகநாதபுரம் புதூரில் நாகநாதசுவாமி, நாக நாயகியம்மை, நாகலிங்க விநாயகர், கிருட்டிண மூர்த்திப் பெருமாள், செண்பகவல்லித் தாயார், கோவில் திருப்பணிகளும், பசுமடம், நந்தவனம், ஊருணி, விடுதி முதலியனவும் அமைக்கப் பெற்றன.

நகரத்தார்களால் பொய் சொல்லா மெய்யர் என்ற அய்யனார் கோவில் திருப்பணி செய்யப் பெற்றது.

கொப்புடையம்மன் கோவில் திருப்பணி நகரத்தார்களால் செய்யப் பெற்றது.

மெ.செ.மெ.மெ.மெய்யப்பசெட்டியார் குடும்பத்தாரால் துவாதசி மடம் அமைத்து 50 ஆண்டுகளாய் உணவளிக்கப் பெறுகிறது.

Koviloor Digital Library

நகரத்தார் பலரால் வேதபாடசாலை, தேவாரப் பாடசாலை, குருபூசை மடம், கண்ணன் கோவில், ஊருணிகள், பசுமடம், நந்தவனம், பிள்ளையார்கோவில் முதலியன அமைக்கப் பெற்றன.

காளையார் மங்கலம் : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி, கோவில் வீடுகள், நந்தவனம் முதலியன அமைக்கப் பெற்றன.

கானாடு காத்தான் : நகரத்தார்களால் சிதம்பரவிநாயகர் கோவில் திருப்பணி செய்யப் பெற்றது.

க.வெ.ராம.வெங்கடாசலம் செட்டியார் முயற்சியால் ஒப்பிலாம்பிகை உடனாய கைலாச நாதர் கோவில் திருப்பணியைக் கானாடுகாத்தான், நேமத்தான்பட்டி நகரத்தார்கள் சேர்ந்து செய்தனர்.

சா.ராம.மு.அ. அண்ணாமலை செட்டியார் மீனாட்சி - சுந்தரேசுவரர் கோவில் திருப்பணி செய்தார்.

கீழச் சிவற்பட்டி, பி. அழகாபுரி : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது.

வெ.கரு.க. கருப்பஞ் செட்டியார் பலர் உதவியுடன் கூடலழகியப் பெருமாள் கோவில் திருப்பணி செய்தார்.

நகரத்தார்களுள் சிலரால் குரு பூசை மடம், சாதுக்கள் மடம், தேவாரப் பாடசாலை, நந்தவனம், பசுமடம், திருவாபரணம், வெள்ளித் தேர், இரு ஊருணிகள், விநாயகர் கோவில் முதலியன நிறுவப் பெற்றன.

குருவிக்கொண்டான் பட்டி : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது. திருக்குளம் வெட்டப்பட்டது.

சித.அ.சி. சிதம்பரம் செட்டியாரால் நந்தவனம் அமைக்கப்பட்டது.

குழிபிறை : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது.

நகரத்தாருள் சிலரால் ஊருணி, நந்தவனம், பிள்ளையார் கோவில், முருகன் கோவில் நிறுவப் பெற்றன.

கொத்தமங்கலம் : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது.

Koviloor Digital Library

மாற்றூர் அரும்பாக்கூர் நகரத்தார்களால் ஆவுடைநாயகி உடனாய திருவீசர் கோவில் திருப்பணி செய்யப் பெற்றது.

நகரப் பொதுவில் உலக நாயகி அம்மன் கோவில் திருப்பணி செய்யப் பெற்றது.

பலரால் நந்தவனம், ஊருணி, மடங்கள் நிறுவப் பெற்றன.

சி.அ.சு.செ. செல்லப்ப செட்டியாரால் வாசுதேவப் பெருமாள் கோவில் கட்டப் பெற்றது.

கொப்பனாபட்டி : நகரப் பொதுவில் முத்து மாரியம்மன் கோவில் திருப்பணி செய்யப் பெற்றது. பிள்ளையார் கோவில், ஊருணி நிறுவப் பெற்றது.

கோட்டையூர் : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது.

நகரத்தார் சிலர் நந்தவனம், ஊருணிகள், பிள்ளையார் கோவில்கள், சத்திரம், மடம் நிறுவியுள்ளனர்.

கோனாபட்டு : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி, இராசகோபுரம் கட்டப் பெற்றது.

அழகப் பெருமாள் என்பவர் ஊருணி வெட்டி, அதன் மேல் கரையில் கற்பக விநாயகரைப் பிரதிட்டை செய்தார். இக் கோவிலில் அற்புதமான சிலாவிக்கிரகங்கள் உள்ளன. சு.முருகப்ப செட்டியார் மேற்பார்வையில் இக் கோவில் திருப்பணி செய்யப் பெற்றது.

மு.மு.ப. குடும்பத்தார் மேற்பார்வையில் நகரத்தார் பொதுவில் கொப்புடையம்மன் கோவிலும், பெரிய கருப்பர், சின்னக் கருப்பர் கோவில்களும், தேரும், அதற்குக் கட்டிடமும் கட்டினர்.

சிவா. பழநியப்ப செட்டியார் அடியார்களுக்கு அன்னதானம் செய்து வந்தார்.

கி.நா.ராம.ராம., நா.ராம., உ.அரு;ராம.மு.ராம., மு.அ., என்ற ஐந்து வீட்டார் கூடிச் சாதுக்களுக்குத் தினமும் காலை வேளையில் பழைய அமுது வழங்கி வந்தனர்.

நகரத்தாருள் சிலரால் முருகன் கோவில், நந்தவனம், ஊருணிகள், துவாதசி மடம், திருமடம், பிள்ளையார் கோவில்கள், விடுதிகள் நிறுவப் பெற்றன.

Koviloor Digital Library

சக்கந்தி : உல.க.கண.சோமசுந்தரம் செட்டியார் விநாயகர் ஆலயத்தைப் புதிதாகக் கட்டியும் சிவாலயத்தைக் கட்டி முடித்தும், திருவாரூர்த் தேர் புதிதாகச் செய்வதற்கு முழுக் காரணமாய் இருந்தும் தொண்டு செய்தார்.

சண்முகநாதபுரம் : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது. பிள்ளையார் கோவில், குளங்கள், நந்தவனம், பசுமடம் அமைக்கப் பெற்றது.

சிராவயல் : க.மு.நா.மெய்யப்ப செட்டியார், பெரி.மு. முத்தையா செட்டியார் ஆகிய இருவரின் முயற்சியால் திருப்பணி செய்யப் பெற்று, நகரத்தார்களிடம் ஒப்புவிக்கப்பட்டது.

பெரி.மு.நா.வால் பசுமடமும், க.மு.நா.மெ., பெரி.மு.மு.வால் நந்தவனமும், நகரப் பொதுவில் அந்தணர் உறையுளும், புராதன மடமும் அமைக்கப்பெற்றன.

சிறுகூடற்பட்டி : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது.

வீர.பழ.மு.முத்தையா செட்டியாரால் நந்தவனமும், ஆத.மு.பழ.மு. முத்தையா செட்டியாரால் பசுமடமும், துவாதசி மடமும், கரு.சி.பழ. பழநியப்பச் செட்டியாரால் கஞ்சி மடமும், குப.அ.வால் பிள்ளையார் கோவிலும், குளமும் அமைக்கப் பெற்றன.

செம்பனூர் : கும.நா.நாச்சியப்ப செட்டியார், மேற்படியார் தம்பி சுப்பிரமணியன் செட்டியார் ஆகிய இருவராலும் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது.

இவ்வூர் நகரத்தாராலும், தேவகோட்டை மெ.லெ.மெ. இராமநாதன் செட்டியாராலும், சுந்தரராசப் பெருமாள் கோவில் திருப்பணி செய்யப் பெற்றது.

கும.நா.சுப்பிரமணியன் செட்டியார் சாதுக்கள் மடம் நிறுவியுள்ளார். கும.நா. குடும்பத்தாரால் நந்தவனமும், மேற்படி குடும்பத்தாருடன், சு.சி.இராம.இராமநாதன் செட்டியாரும் சேர்ந்து பசுமடமும், மேற்படி குடும்பத்தாருடன், தேவகோட்டை நா.அழ. அழகப்ப செட்டியாரும் சேர்ந்து சேவுகப் பெருமாள் அய்யனார்

Koviloor Digital Library

கோவில் திருப்பணியும், நகரப் பொதுவில் அக்கசாலை விநாயகர் கோவில் திருப்பணியும், கும.நா. குடும்பத்தாரால் நகர மடமும், நகரத்தார்களால் நான்கு ஊருணிகளும், கும.நா.குடும்பத்தாரால் கோவில் அலுவலர்களுக்கென ஓட்டடுக்குக் கட்டிடமும் அமைக்கப் பெற்றன.

செயங்கொண்டபுரம் என்ற செக்காலை : நாட்டார் வயல் சோமசுந்தரம் செட்டியாரால் கல்வெட்டுக் குளமும், விநாயகர் கோவிலும், விடுதியும், வாரியப்பட்டி சுப்பிரமணியன் செட்டியாரால் ஒரு குளமும், பிள்ளையார் கோவிலும் அமைக்கப் பெற்றன.

செவ்வூர் : நகரத்தார்களாலும், செ.ராம. சொக்கலிங்கம் செட்டியாராலும் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது.

பழ.முரு.முருகப்ப செட்டியாரால் விநாயகர் கோவில், நகரத்தார் களால் முருகன் கோவில், நந்தவனம், திருக்குளம், கிணறுகள், அந்தணர் உறையுள், பழ.ப. பழநியப்ப செட்டியாரால் விநாயகர் கோவில் முதலியன அமைக்கப்பெற்றன.

சொக்கநாதபுரம் : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது.

சொக்கலிங்கபுரம் (மதகுபட்டி) : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது.

சொக்கலிங்கம் புதூர் : நகரத்தார்கள் சிவாலயத் திருப்பணி, ஊருணி, பிள்ளையார் கோவில் முதலியன செய்யப் பெற்றன.

நகரத்தாருள் சிலரால் சத்திரம், ஊருணி, பிள்ளையார் கோவில், பசுமடம், செட்டியார் ஊருணி, பிள்ளையார் கோவில், தண்ணீர்ப் பந்தல், குளம் முதலியன நிறுவப் பெற்றன.

சோழபுரம் : ஒக்கூர் சி.கரு.சி. பொதுக் குடும்பத்தாரால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது. சி.கரு.சி.கரு. குடும்பத்தாரால் இராசகோபுரமும், முன் மண்டபமும் திருப்பணி செய்யப் பெற்றன.

சி.கரு.சி.லெ. லெட்சுமணன் செட்டியாரால் நந்தவனமும், சி.கரு.சி.கரு.வெ. குடும்பத்தாரால் நந்தவனமும், சுப.க.அ. குடும்பத்தாரால் அன்னசத்திரமும். கூ.அரு.க.வால் வேத பாட சாலையும், அலவாக்

Koviloor Digital Library

கோட்டை சி.வெ. வகையராவால் பசுமடமும், பி.சு.ஆத.வால் ஊருணியும், ஒக்கூர் சி.கரு.சி.கரு.வால் தண்ணீர்ப் பந்தலும் நிறுவப் பெற்றன.

சொர்ண நாதபுரம் (தாணிச்சாவூருணி) : கண்டதேவி சிவாலயத் திருப்பணி செய்தனர். கற்பக முத்து விநாயகர் கோவிலும், தாணிச்சா ஊருணியும் நிறுவினர். சிவன் கோவிலுக்கு பேரிவயல் கிராமம் மானியமாக விடப்பட்டது.

தேவகோட்டை : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்று, அக்கிரகாரமும், பசுமடமும் நிறுவப் பெற்றன.

நகரத்தார்களால் கோட்டைஅம்மன் கோவில், மாரியம்மன் கோவில், வடகலை, தென்கலைப் பெருமாள் கோவில்கள், அம்மச்சி ஊருணிக் கரையில் கண்ணன் கோவில், இரவிசேரி சிவன்கோவில், தண்ணீர்ப் பந்தல்கள் முதலிய பணிகள் செய்யப் பெற்றன.

மு.கு.மு.ப. குடும்பத்தாரால் ஊருணியும், வேதாந்த விநாயகர் கோவில் திருப்பணியும் செய்யப் பெற்றன.

பி.ச.அரு.அரு. குடும்பத்தாரால் நந்தவனம் உண்டாக்கப் பெற்றது.

உ.ராம.உ.மு. பொதுவில் பாடசாலை நடத்தினர்.

முத்து.கரு. குடும்பத்தாரால் எழுவன்கோட்டை அகிலாண்டேசுவரி உடனாய விசுவநாதர் கோவில் திருப்பணி செய்யப் பெற்று, நந்தவனமும், ஊருணியும், சத்திரமும் அமைக்கப் பெற்றன.

திண்ணன் செட்டியார் ஊருணியும், அதன் கரையில் வெள்ளைக் கல் திருமதில், இராசகோபுரம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் அமைந்த பிள்ளையார் கோவில் திருப்பணி செய்தார்.

பழ.செ. குடும்பத்தாரால் நித்திய கல்யாணி உடனாய கைலாசநாதர் கோவில் திருப்பணி செய்யப் பெற்று, கோவில் அலுவலர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. கோவில் செலவிற்கு நிலங்கள் வாங்கிவிடப் பட்டன.

பழ.செ. பங்காளிகளால் வேதபாராயணப் பாட சாலை, குருபூசை மடம், திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் மடாலயம் எனப் பெயரிடப்பட்டு அமைக்கப்பட்டது.

Koviloor Digital Library

தூங்கன் செட்டியாரால் சிலம்பணி விநாயகர் கோவில் கட்டப் பெற்றது.

மெ. வகையராவால் குருபூசை மடம் அமைக்கப்பெற்றது.

ராம.அரு.அரு. அருணாசலம் செட்டியார் புதூரில் பிள்ளையார் கோவிலும், குளமும், சத்திரமும் அமைத்தார்.

பழ.செ.வால் நந்தவனம் அமைக்கப் பட்டது.

பழ.ராம. குடும்பத்தாரால் கருத்தான் ஊருணியும், பிள்ளையார் கோவிலும், வெள்ளையார் கோவிலும், ஐந்நூற்றீசுவரர் கோவிலும் அமைக்கப் பெற்றன.

வீர.அழ. பொதுவில் ஊருணி வெட்டினார்.

வள்ளியப்ப செட்டியார் வகையராவால் ஊருணியும், பிள்ளையார் கோவிலும் அமைக்கப் பெற்றன.

தேனிபட்டி : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்று இரண்டு குளங்கள் வெட்டப்பட்டன.

செல்லப்ப செட்டியார் வகையராவால் குளமும், பிள்ளையார் கோவிலும் அமைக்கப் பெற்றன.

நகரத்தார் சிலரால் குருபூசை மடமும், துவாதசி மடமும் நிறுவப் பெற்றது.

நடராசபுரம் : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்று, குளம் வெட்டப்பட்டது.

பனங்குடி கண.மு.பெரி.வெ., கண.க.க.கண., மு.பெரி.வீர. கண.க.வெ.சா. ஆகிய நால்வரும் சுந்தர விநாயகர் திருப்பணி செய்தனர்.

நகரத்தார் சிலரால் பசுமடமும், நந்தவனமும், துவாதசி மடமும், மற்றோர் மடமும் அமைக்கப் பெற்றன.

நற்சாந்துபட்டி : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது.

ந.க.சுப.வால் பசுமடம் அமைக்கப்பட்டது.

Koviloor Digital Library

கும.பெரி.வால் நந்தவனமும், மடமும் அமைக்கப்பட்டது.

சா.வீர.அ. குடும்பத்தாரால் சத்திரம் அமைக்கப்பட்டது.

கும.பெரி. குடும்பத்தாரால் கம்பன் செட்டி சத்திரம் நிறுவப் பட்டது.

வீ.மு. வீரப்ப செட்டியாரால் பெருமாள் கோவில் திருப்பணியும், ஊருணியும் அமைக்கப்பெற்றன.

நாச்சியாபுரம் : நகரப் பொதுவில் நாச்சியாரம்மன் கோவில், தண்டாயுதபாணி கோவில் கட்டப்பெற்றன.

சுப.ராம. இராமன் செட்டியார் சிவாலயமும், ஊருணியும் நிறுவினார்.

பெரி.பெ. குடும்பத்தாரும், கூத்தக்குடி இராமசாமி பிள்ளையும் சேர்ந்து கம்பனூர் சிவாலயத் திருப்பணி செய்தனர்.

நாட்டரசன்கோட்டை : நகரத்தார்களால் சிவாலயத்திருப்பணி, சீனிவாசப் பெருமாள் கோவில் திருப்பணி, கண்ணுடைய நாயகி அம்மன் கோவில் துவசத்தம்பம், அணியொட்டிக்கால் மண்டபம், திருமதில், இராசகோபுரம் முதலியன செய்யப் பெற்றன. வெள்ளிரதம் செய்யப் பெற்றது.

கண.உலகப்ப செட்டியாரால் அந்தணர் உறையுள் அமைக்கப் பட்டது.

சேவு. சித.சி.த. வகையராவால் நந்தவனம் ஏற்படுத்தப்பட்டது.

லெ.லெட்சுமணன் செட்டியாரால் ஒரு நந்தவனமும், தீர்த்தகுளமும், தேசிக விநாயகர் கோவிலும் அமைக்கப் பெற்றன.

அடைக்கப்ப செட்டியார் ஊருணி, மாணிக்கவல்லி ஊருணி உண்டாக்கப்பட்டன.

ஒக்கூர் சி.கரு.சித.சிதம்பரம் செட்டியாரால் நாலாயிரப் பிரபந்த சேவை புரிபவர்கள் குடியிருந்து வர நான்கு வீடுகள் கட்டப்பட்டன.

வெ.க.சு. வகையராவால் தெப்பக்குளம் கல் திருப்பணியாகக் கட்டி முடிக்கப்பட்டது. விடுதி கட்டினர்.

Koviloor Digital Library

கண.ஆவி.அரு. அருணாசலம் செட்டியாரால் கம்பர் சமாதியில் மண்டபமும், கொட்டகையும் அமைக்கப் பெற்றது.

நெற்குப்பை : நகரத்தார்களால் சுப்பிரமணிய சுவாமி கோவில் திருப்பணியும், இராசகோபுரத்தில் நூதனமாக தூபி வைத்ததும் செய்யப் பெற்றன.

தெ.பெரி.பெரியண்ணன் செட்டியாரால் சுவாமி கோவில் திருப்பணி செய்யப் பெற்றது.

ராம.சா.பழ.சா.சாத்தப்ப செட்டியாரால் அம்மை கோவில் திருப்பணி செய்யப் பெற்றது.

பழ.பெரி. பெரிய கருப்பஞ் செட்டியார் சதுர்வேத மங்கலம் ஆத்ம நாயகி அம்மைக்குத் தங்கக் கவசம் செய்து வைத்தார்.

முரு.பழ.பொதுக் குடும்பத்தாரால் மாணிக்க நாச்சியம்மை கோவில் திருப்பணியும், பிடாரியம்மை கோவில் திருப்பணியும் செய்யப் பெற்றன.

ராம.சா. குடும்பத்தாரால் நந்தவனமும், துவாதசிமடமும் நிறுவப் பெற்றன.

நகரத்தார் சிலரால் தண்ணீர்ப் பந்தல், நான்கு ஊருணிகள், பிள்ளையார் கோவில், நகரமடம் அமைக்கப் பெற்றது.

நேமத்தான்பட்டி : மெ.மு.பழ.வால் சத்திரமும், முருகன் கோவிலும் கட்டப்பெற்றது.

மு.பெ.வால் குருபூசை மடம் கட்டப் பெற்றது.

பட்டமங்கலம் : இறைவன் திருவிளையாடல் நிகழ்ந்த இத்தலத்தில் அப்பனுக்கும், அம்மைக்கும், அட்டமாசித்தி உபதேசித் தருளிய தட்சிணா மூர்த்திப் பெருமானுக்கும், வீர. அ. அடைக்கப்ப செட்டியாரால் திருப்பணி செய்யப் பெற்று கோவில் அமைக்கப்பட்டது. தெப்ப உற்சவம் கொண்டருள நடுவே பெரிய மண்டபம் அமையப்பெற்ற திருக்குளம் அமைக்கப் பெற்றது. வெள்ளி வாகனங்கள், நந்தவனம், அலுவலர்களுக்குப் பன்னிரண்டு வீடுகள், விடுதி அமைக்கப் பெற்றது.

இது அட்டமாசித்தித்தலம் என்பதனை,

"பட்டமங்கையில் பாங்காய் இருந்தங்கு
அட்டமா சித்தி அருளிய...."

என்ற திருவாசகத்தால் அறியலாம்.

Koviloor Digital Library

அட்டமாசித்தி உபதேசித்த நாளாகிய அமாவாசையில் திருக்குளத்தில் நீராடி வழிபடுகின்றனர். கோவில் விமானம், இராச கோபுரம் முதலியவற்றின் வனப்பினைக் கண்டு மகிழ்கின்றனர்.

கண்டரமாணிக்கம் செ.சி.நா. நாராயண்ன் செட்டியாரால் அழகு சவுந்தரி அம்மை கோவில் திருப்பணி செய்யப் பெற்றது.

பலவான்குடி : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணியும், குளமும், தண்ணீர்ப் பந்தலும், மடங்களும் அமைக்கப் பெற்றன.

அழகு பழநியப்ப செட்டியாரால் செங்கமல நாயகி அம்மன் கோவில் திருப்பணி செய்யப் பெற்றது. ராம.கு.குடும்பத்தாரால் விநாயகர், நடராசர் கோவில்களும், திருவாசக பாடசாலையும், உணவு விடுதியும், திருக்குளமும், கோவிந்த சாமி சமாதி கோவிலும் அமைக்கப் பெற்றன.

புதுவயல் வைரவன் கோவில் வகுப்பாரால் செட்டியார் ஊருணியும், பிள்ளையார் கோவிலும் அமைக்கப் பெற்றன.

குஞ்சான் செட்டியார் வகையரா பங்காளிகளால் புதூருணியும், குஞ்சரவிநாயகர் கோவிலும், மடமும் அமைக்கப்பெற்றன.

வீ.சித.சிதம்பரம் செட்டியாரால் நந்தவனம் அமைக்கப் பெற்றது.

பள்ளத்தூர் : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது.

நகரத்தாருள் சிலரால் நந்தவனம், குருபூசை மடம் வடக்கு ஊருணியும் அமைக்கப்பெற்றன.

முத்து வீரப்ப செட்டியார், நல்லழகப்ப செட்டியார் வகையரா வால் 130 ஆண்டுகளாக அழ.ராம. அன்னதான சத்திரம் நடந்து வருகின்றது.

அ.மு. வால் மூன்று மைல் அளவு மூடு மடையுடன் குளமும், பிள்ளையார் கோவிலும், கிழவன் செட்டியார் குளமும், பிள்ளையார் கோவிலும் அமைக்கப் பெற்றன.

பறியா மருதுப் பட்டி : நெற்குப்பை முரு.பழ.பொதுக் குடும்பத்தார் இவ்வூர் ஆலயத்தைத் திருப்பணி செய்து, விமான கோபுரங்கள், திருமதில்கள் எடுப்பித்தனர்.

Koviloor Digital Library

முரு.பழ. வகையராவால் அய்யனார் கோவில் கல்யாண மண்டபம் கட்டப்பெற்றது.

முரு.பழ. முத்துராமன் செட்டியார் குடும்பத்தாரால் பசுமடம் நிறவப்பட்டது.

முத்து.கு.மு. வகையராவால் ஊருணியும், விடுதியும் அமைக்கப் பெற்றன.

பனங்குடி : கண்டரமாணிக்கம் மு.கரு. கருப்பஞ்செட்டியார் பிள்ளையார் கோவில் கட்டினார். பெரியநாயகியம்மை கோவில் திருப்பணி செய்தார்.

பெரி.அ.முரு. கண்ணப்ப செட்டியாரால் மண்டபம் கட்டப் பட்டது.

நகரத்தார் பொதுவில் நகரவிடுதி கட்டினர்.

நகரத்தாருள் சிலரால் நந்தவனம் அமைக்கப்பட்டது.

பனையப்பட்டி : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது.

பாகநேரி : இவ்வூர் சிவாலயம் பாண்டியர் காலத்தில் கட்டப் பட்ட பழங்கோவிலாகும் குப.ராம.இக் கோவிலின் முன் மண்ட பத்தையும், அம்மன் கோவிலையும் கட்டினார்.

நகரத்தார்கள் பெருமாள்கோவில் திருப்பணி செய்தனர். தமிழ், வடமொழி, ஆங்கிலம் முதலிய பன்மொழி நூல்கள் நிறைந்த நூல் நிலையமும், வாசகசாலையும் அமைத்தனர்.

நகரத்தாருள் சிலரால் தேவார பாடசாலையும், துவாதசி மடமும் அமைக்கப்பெற்றன.

தெய்வானை ஆச்சி அவர்களால் அன்னதான சத்திரம் அமைக்கப் பெற்றது.

மு.நா. வகையராவால் பிடாரி அம்மன் கோவில் திருப்பணி செய்யப் பெற்றது.

நாட்டார் - நகரத்தாரால் சோழீசர் கோவில் புதுக்கி செம்மை செய்யப்பெற்றது.

Koviloor Digital Library

புதுப்பட்டி (பொன்னமராவதி) : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது.

காளியப்ப செட்டியார் மனைவி கண்ணம்மை ஆச்சி அவர்களால் பிடாரி அம்மன் கோவில் திருப்பணி செய்யப் பெற்றது.

புதுவயல் : நகரப் பொதுவில் கைலாச விநாயகர் கோவில் திருப்பணியும், திருவாபரணங்களும் செய்யப் பெற்றன.

பட்டணசாமி வகுப்பார் கோவிலுக்கு முன்னர் ஊருணி அமைத்துள்ளனர்.

அழ.சு.பழ.வீர. வீரப்ப செட்டியார் பெருமாள் கோவில் திருப்பணி செய்தார்.

சாக்கோட்டை செல்லும் வழியில் முருகப்ப செட்டியாரால் ஊருணியும், கரணாக் குடியார் மடம் ஊருணியும், பிள்ளையார் கோவிலும் அமைக்கப் பெற்றன.

கீழப் பூங்குடி : கூராண்டான் செட்டியார், தீர்த்தப்ப செட்டியார் வகையினரால் சிவாலயத் திருப்பணி செய்யப்பெற்றது. மிளகாய்ச் சாமி ஆலயத் திருப்பணி செய்யப் பெற்றது.

தீர்த்தப்ப செட்டியார். ஊருணிக் கரையில் ராம.நா. நாராயணன் செட்டியார் சித்திவிநாயகர் ஆலயம் கட்டினார்.

கூ.கண.க. முத்தையா செட்டியார் பேரன்மார்களால் நந்தவனம் அமைக்கப்பெற்றது.

கண்ணம்மை ஆச்சி அவர்களால் பசுமடம் நிறுவப்பெற்றது.

பூலாங்குறிச்சி : ராம.ப.வ. பொதுக்குடும்பத்தாரால் சண்முக விநாயகர் கோவிலும், சண்முக நதி என்ற ஊருணியும் கட்டப்பெற்றது.

ராம.ப.வ.ராம.தனதில், கான்சாத்து மலை முருகன்கோவிலில் பாலபிடேகம் செய்து வருகிறார்.

பொன்னமராவதி : ப.அ. அண்ணாமலை செட்டியார் பெருமாள் கோவிலைப் புதுப்பித்தார்.

Koviloor Digital Library

கோவில்முன் உள்ளதாகிய குளம் பழ.முரு.பழ. பழநியப்ப செட்டியாரால் புதுப்பிக்கப்பட்டது.

முத்துக்கருப்பன் செட்டியார் முன்னோர்களால் அழகிய நாச்சியம்மன் கோவிலும், சேங்கை ஊருணியும் அமைக்கப்பெற்றன.

மு.கா.லெ.கா. லெட்சுமணன் செட்டியாரால் கலுங்குப்பாறை ஊருணி அமைக்கப்பெற்றது.

மகிபாலன் பட்டி : நகரத்தார்களால் பிள்ளையார் கோவில் கட்டப்பெற்றது.

இவ்வூரைச் சுற்றிப் பல சிவலிங்க மூர்த்திகள் உள்ளன. இவ்வூருக்கு மேல்பால் "குடகுமலை" என்று வழங்கப்படும் ஒரு சிறு குன்றில் கர்ப்பக்கிரகம் குடைந்தமைத்து ஒரு சிவலிங்கம் பிரதிட்டை செய்யப் பெற்றுள்ளது.

பூங்குன்ற அய்யனார் கோவிலும், கொற்றவைக்குப் பூங்குன்ற நாயகி கோவிலும் உள்ளன. நகரத்தார்களால் பூங்குன்ற நாயகிக்குத் தேர்ப்பணி செய்யப் பெற்றது. மு.எ.ராம.வால் பூங்குன்ற அய்யனார் ஆலயத்திருப்பணி செய்யப்பெற்றது.

இவ்வூர் பெரும்புலவர் பண்டிதமணி அவர்கள் பிறந்த ஊராகும்.

மாநகரி : நகரத்தார்களால் பிடாரி அம்மன் கோவில் திருப்பணி செய்யப் பெற்றது.

லெ.அரு.வால் அன்னசத்திரம் அமைக்கப் பெற்றது.

மிதிலைப்பட்டி : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது.

பழ.சுப. சுப்பிரமணியன் செட்டியாரால் வரதராசப் பெருமாள் கோவில் திருப்பணி செய்யப் பெற்றது.

க.எ.பழ. குடும்பத்தாரால் பசுமடமும், நந்தவனமும் அமைக்கப் பெற்றன.

பழ.ப. வால் மடமும், நந்தவனமும் அமைக்கப் பெற்றது.

நகரத்தார் சிலரால் நான்கு ஊருணிகளும், இரண்டு பிள்ளையார் கோவில்களும் அமைக்கப்பெற்றன.

Koviloor Digital Library

ஆ.முத்துப்பட்டினம் : நகரத்தார்களால் உலக நாயகி அம்மன் கோவில் திருப்பணி செய்யப் பெற்றது.

நகரத்தாருள் சிலரால் பிள்ளையார் கோவில்களும், குளங்களும் அமைக்கப் பெற்றன.

சித.வெ.சு. நாச்சியப்ப செட்டியாரால் துவாதசி மடம் நிறுவப் பட்டது.

மேலைச்சிவபுரி : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது.

வ.பழ.சா. குடும்பத்தாரால் சோழ சிரோமணி ஊருணி அமைக்கப் பட்டது.

நகரத்தார் சிலரால் நந்தவனம், தண்ணீர்ப் பந்தல் அமைக்கப் பட்டது.

ராங்கியம் : வ.நா. குடும்பத்தாரால் சிதம்பர விநாயகர் கோவில் திருப்பணி செய்யப் பெற்றது.

ராயவரம் : வெ.மு. வேலன் செட்டியாரால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது. வெள்ளி இடபவாகனம், வெள்ளிக் கவசம் செய்தனர். கிராமங்களும், தோப்புக்களும் வாங்கி வைத்தனர்.

நகரப் பொதுவில் முத்து மாரியம்மை கோவில் திருப்பணி செய்யப் பெற்றது.

சாத.க.அ. அழகப்ப செட்டியாரால் வேதபாடசாலை நிறுவப் பட்டது.

நகரத்தார் சிலரால் நந்தவனங்கள், திருமடம், குருபூசை மடம், ஒன்பது ஊருணிகள் அமைக்கப்பெற்றன.

வெ.மு.வால் அந்தணர் உறையுள் கட்டப்பட்டது.

வெ.மு. குடும்பத்தாரால் புதூருணிக்கரையும் மடமும் கட்டப் பட்டது.

கொத்தமங்கலம் லெட்சுமிபுரம் : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப்பெற்றது.

Koviloor Digital Library

ந.சொ.அரு. அருணாசலம் செட்டியாரால் பெரிய கோவில் சிவாலயத்திற்கு வெள்ளி கைலாச வாகனம் செய்து கொடுக்கப் பெற்றது.

மு.சி.வி; ந.சொ.அரு.வால் பசுமடம், நந்தவனம் அமைக்கப் பெற்றது.

நெய்க்கோணம் லெட்சுமிபுரம் : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப்பெற்றது.

வ.செ.கி.வால் பசுமடம் நிறுவப்பட்டது.

வ.செ.கு.வ.கும.வால் நந்தவனம் அமைக்கப்பெற்றது.

அ.அ.சே.வால் அந்தணர் உறையுள் கட்டப்பட்டது.

நகரப் பொதுவில் திருக்குளம் வெட்டப்பட்டது.

வலையபட்டி : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது. கார்த்திகை மடம் அமைக்கப்பட்டது.

க.சா.அ.அண்ணாமலை செட்டியார் குடும்பத்தாரால் பிள்ளையார் கோவில் கட்டப் பெற்றது.

அ.மு.நா. நாகப்ப செட்டியாரால் பிள்ளையார் கோவிலும், குளமும் அமைக்கப் பெற்றது.

ஆவி.சித. குடும்பத்தாரால் நந்தவனம் அமைக்கப்பட்டது.

பு.கு.குமரப்பசெட்டியாரால் பசுமடம் நிறுவப்பட்டது.

பெரி.எ.அ. அண்ணாமலை செட்டியாரால் வேதாந்த மடம் நிறுவப்பட்டது.

வயி.வ. குடும்பத்தாரால் வையாபுரி குளம் அமைக்கப்பட்டது.

ந.ராம.வகையினரால் அடைக்கன் குளம் அமைக்கப்பட்டது.

க.மு.சு.சின்னையா செட்டியாரால் நகர மடம் கட்டப்பட்டது.

கு.கா.கு. அண்ணாமலை செட்டியார் சாதுக்கள் மடம் கட்டினார்.

Koviloor Digital Library

விராமதி : நகரப் பொதுவில் பிள்ளையார் கோவில் கட்டப் பெற்றது.

பழ.மு.பொதுவில் பசுமடம் கட்டினார்.

விரையாச்சிலை : அ.ராம. இராமநாதன் செட்டியார், சிவாலயத்தைப் புதுப்பித்து திருப்பணி செய்தார்.

வெற்றியூர் : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி, அன்ன பூரணி அம்மன் கோவில் திருப்பணி, கற்பக விநாயகர் கோவில் திருப்பணி முதலியன செய்யப் பெற்றன.

சுப. தீர்த்தப்ப செட்டியார் குடும்பத்தினரும், கண.மு. முத்துராமன் செட்டியார் குடும்பத்தினரும் விசாலவிநாயகர் கோவில் திருப்பணி செய்தனர்.

மேல ஊருணிக் கரையில் காளை விநாயகர் கோவிலை ராம. முத்தையா செட்டியார் அமைத்தார்.

அரு.மு.அரு.கதிரேசன் செட்டியார் என்ற முத்துக் கருப்பஞ் செட்டியாரால் மருதூருடைய அய்யனார் கோவில் திருப்பணி செய்யப்பெற்று, நந்தவனம் அமைக்கப்பட்டது. சித்ராபௌர்ணமியன்று தேவகோட்டையில் இருந்து வரும் காவடி எடுப்பை நடத்தினார். இதனால் இவர் வீட்டுக்குக் கோவில் செட்டியார் வீடு என்று பெயர்.

கதி.அரு.கதிர்வேலன் செட்டியார் மாலைகண்டான் என்ற ஊரில் வேலன் விநாயகர் பிரதிட்டை செய்து, வேலன்செட்டி ஊருணி என்ற குடிநீர் குளத்தை ஏற்படுத்தினார்.

நந்தவனத்தை நகரத்தார் ஒருவர் அமைத்தார்.

வெற்றியூரைச் சேர்ந்த நகரத்தார் ஒருவர் வட்டிக்கடை வைத்திருந்தபோது, ஆந்திரமாநிலம் பெசவாடாவிலிருந்து ஆறு மைல் தொலைவில் உள்ள ஒரு கிராமத்திலுள்ள மங்கம்மன் கோவிலுக்கு வைரப் பதக்கம் செய்து கொடுத்து, அறக் கட்டளை ஒன்றை நிறுவி, அக் கோவிலுக்கு நகரத்தார் யார் வந்தாலும் அவர்களுக்குப் பரிவட்டம் மரியாதை செய்து, அர்ச்சனை, அபிசேடம் செய்து, நகை சாற்றி

Koviloor Digital Library

கௌரவிக்க வேண்டும் என்று பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். இது உச்சிக் கால பூசையின்போது நடைபெறும்.

-நன்றி : முரு.பழ. இரத்தினம் செட்டியார்
நகரத்தார் குரல் அக்டோபர் 1990

வேகுப்பட்டி : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது. கோவில் அலுவலர்களுக்கு ஆறு இல்லங்கள் கட்டப் பெற்றன.

நகரத்தாருள் சிலரால் நந்தவனங்களும், பசுமடம், சாதக் கட்டளை, மேளக்கட்டளை தண்ணீர்ப் பந்தல், ஊருணி முதலியனவும் அமைக்கப்பெற்றன.

வேந்தன்பட்டி : நகரத்தார்களால் சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றது. குளம் வெட்டப்பட்டது.

ராம.மு. முத்துராமன் செட்டியாரால் பசுமடம் நிறுவப்பட்டது.

சுப.மு. முத்தையா செட்டியாராலும், முரு.மெ. மெய்யப்ப செட்டியாராலும் நந்தவனங்கள் ஏற்படுத்தப் பெற்றன.

நகரத்தார்கள் தத்தம் ஊர்களுக்கு அருகிலுள்ள வேற்றூர்களில் 33 ஊர்களிலும் காசிச் சத்திரத்திலும், சோழ நாட்டில் 96 ஊர்களிலும், பாண்டிய நாட்டில் 24 ஊர்களிலும், கொங்கு நாட்டில் 10 ஊர்களிலும், நடு நாட்டில் 11 ஊர்களிலும், தொண்டை நாட்டில் 20 ஊர்களிலும் அறச் செயல்களைச் செய்துள்ளனர்.

நகரத்தார்கள் செய்த அறச் செயல்களின் ரூபாய் மதிப்பு (1952 கணக்கெடுப்பின்படி) பத்துக்கோடியே அறுபத்து நான்கு லட்சத்து நாற்பதாயிரத்து எழுநூறாகும்.

-நன்றி : நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு-
பெரும்புலவர் பண்டித மணியவர்கள்

நகரத்தார்கள், தாங்கள் வழிபடும் கோவில் குல தெய்வங்களுக்கும் திருப்பணி செய்தனர். விடுதி கட்டினர். குளம் வெட்டினர் மாசிச் சிவராத்திரியன்றும், மறுநாளும் அன்னதானம் செய்வார்கள்.

Koviloor Digital Library

✓

நகரத்தாரின் பெருமை

உலகமெல்லாம் நகரத்தார் செய்த சேவை
உயர்கோவில் எழுப்பியது மட்டும் அன்று.
இலகுதமிழ் மேன்மேலும் ஓங்கச் செய்தார்.
இணையில்லாக் கல்விக்கே அடிக்கல் லானார்.
மலையளவு பொருள்தந்தார் அறத்தைக் காக்க.
மக்களைப் போல் கடவுளுக்கும் பங்கு வைத்தார்
நிலையுயர்ந்து நின்றவர்கள் இன்று தாழ்ந்தார்
நேரதால் மறுபடியும் எழுந்து நிற்பார்

காளத்தி தன்னிலவர் அறம் தொடங்கி
கன்னியாகுமரிவரை தொடர்ந்து செல்லும்
நாளெத்தனை என்றபோதும் அன்னார்
நற்பெயரை மனிதகுலம் புகழ்ந்து பாடும்
தாளத்தில் தவறாமல் நடனம் ஆடி
தனைக்காத்து தாய்காக்கும் நகரத்தார்கள்
நீள்சுற்றம் எந்நாளும் நிறைந்து வாழ
நீயருள்வாய் மீனாட்சி நெஞ்சத் தாயே!

–கவியரசர் கண்ணதாசன்

நன்றி: நகரத்தார்முரசு, மே 1999

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR
A. No. 16790
LIBRARY, KOVILOOR

4.
நகரத்தாரின் கல்விப் பணிகள் – அறச் செயல்கள்

ஆலயம் கட்டவும், அன்னதானம் செய்ய சத்திரம், மடம் நிறுவவும் அள்ளி அள்ளிக் கொடுத்த நகரத்தார்கள், 'ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்து'க் கோடிப் புண்ணியம் தேடக் கணக்கின்றி வாரி வழங்கினர்!

ஆம், கல்விச் சாலைகள் அமைத்துப் பலரின் கண்களைத் திறந்தவர்கள் நகரத்தார்கள்.

வறுமையைப் போக்க கல்வி உதவும் என்பதை உணர்ந்து செட்டி நாட்டில் தாங்கள் வாழ்கின்ற ஊர்களிலும், அருகிலுள்ள ஊர்களிலும், சிதம்பரத்திலும் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் நிறுவிப் பலரின் அறியாமையைப் போக்கியவர்கள் நகரத்தார்கள்.

பெருந்தலைவர் காமராசர், ஊர்கள் தோறும் ஆரம்பப் பள்ளிகளைத் துவக்குதற்கு முன்பே, தாங்கள் வாழும் ஊர்களில் பள்ளியை நிறுவியவர்கள் நகரத்தார்கள்.

மதிய உணவு இலவசமாய் வழங்குவதற்கு முன்பே, இலவசமாய் உணவளித்து கல்வி கொடுத்தவர்கள் நகரத்தார்கள்.

மாணவர்களுக்கு இலவச தங்குமிடம், புத்தகங்கள் வழங்குவது நடைமுறைக்கு வரும் முன்பே உணவும், இடமும், புத்தகங்களும் இலவசமாய் வழங்கி இயன்றவரை கல்விப் பணியும் மற்ற அறச் செயல்களும் செய்தவர்கள் நகரத்தார்கள்.

Koviloor Digital Library

நடை பழகும்போதே கொடை கொடுக்கும் எண்ணத்தைக் கைக் கொண்டவர்கள் நகரத்தார்கள். அதாவது, தருமம் செய்வது இவ் இனத்தின் இரத்தத்தோடு கலந்த பிறவிக் குணமாகும்.

திண்ணைப் பள்ளியிலே படித்து, எண் சுவடி கற்று, நீதி நூல்களைக் கற்றுத் தேர்ந்து, அதன்படி நடக்கும் நகரத்தார்கள் "கல்வி கரையில, கற்பவர் நாள் சில, மெல்ல நினைக்கின் பிணி பல" என்ற கூற்றை நடைமுறைப் படுத்தி, நாடு விடுதலை அடைவதற்கு முன்பாகவே பல ஊர்களில் பள்ளிகளை நிறுவியவர்கள் நகரத்தார்கள்.

கணக்கில் சிறந்தவர்களாய் நகரத்தார்கள் விளங்கியதால், அவர்களைச் "செட்டிப் பிள்ளை கெட்டிப் பிள்ளை" என்பர்.

வறுமை வந்தபோதும் தன் நிலை தாழாத தன்மையுடன் அவர்கள் வாழ்ந்ததால் "கெட்டாலும் செட்டி, கிழிந்தாலும் பட்டு" என்ற சொலவடை உருவானது. நாணயமும், வாக்குத் தவறாமையும் அவர்கள் சிறப்புக்கு, பெருமைக்குக் காரணமாகும்.

காரைக்குடியில் வள்ளல் அழகப்பர் கல்விச் சாலை என்ற கலைக்கோவிலை நிறுவாவிட்டால், ஏற்படுத்தாவிட்டால், நான் உட்பட பலர் வட்டிக் கடையில் பெட்டியடிப் பையனாய் வாழ்ந்து முடித்திருப்போம்.

நாட்டரசன்கோட்டை திரு.ச.இராம. இராமநாதன் செட்டியார், பள்ளிக் கூடம் நடத்துவதற்காகத் தான் பெற்ற பிள்ளையை சுவீகாரம் விடத் துணிந்தார். அன்றைக்குப் பள்ளியை நடத்தவும், ஆசிரியர் களுக்கு ஊதியம் வழங்கவும் அரசு நிதி உதவி செய்யவில்லை. தங்கள் சொந்த நிதியிலிருந்தே நடத்த வேண்டும்.

பெரும் செல்வந்தர் இல்லாத அவர், இலங்கையில் ஈட்டிய செல்வத்தை எல்லாம் தாம் நிறுவிய பள்ளிக்கே செலவழித்தார். தாம் குடியிருக்கும் வீட்டைக் கட்டாமல் பள்ளியைக் கட்டிய வள்ளல் அவர்.

"நாட்டரசன்கோட்டையில் நகரத்தார்கள் தருமம் செய்ய விரும்பினால், பள்ளியைத் தவிர வேறு தருமம் செய்யுங்கள்; பள்ளித் தருமம் என்னுடையதாய் இருக்கட்டும்" என அவர் சொல்வார்.

Koviloor Digital Library

அதனால்தான் பெரும் செல்வந்தர் கண. உலகப்ப செட்டியார் மகன் வெள்ளையப்ப செட்டியார் மீனாட்சி - வெள்ளையப்பா மகப் பேறு மருத்துவ மனையைக் கட்டினார்.

தெற்கு வட்டகையில் ஏற்படுத்தப்பட்ட முதல் உயர்நிலைப் பள்ளி நாட்டரசன்கோட்டை ச.இராம. இராமநாதன் செட்டியார் உயர்நிலைப் பள்ளியாகும். (இப்போது மேல்நிலைப் பள்ளி) அவ் வள்ளலின் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றதைப் பெருமையாகக் கருதுகிறேன். அவ் வள்ளலுக்கு என் நன்றி.

இது எதைக் காட்டுகிறது? கல்வியின் மீது அவர்களுக்கு இருந்த ஆர்வத்தைத்தானே! 'இனி வரும் காலங்களில் நம் இனம் கல்வியினால் மட்டுமே முன்னேற முடியும், வறுமையின்றி வளமாய் வாழ முடியும்' என்ற தொலைநோக்கு எண்ணத்தைத்தானேயன்றி வேறல்ல.

அக்கால கல்வி முறைக்கேற்ப பள்ளிகளை, கல்லூரிகளைத் தொடங்கிய நகரத்தார்கள், இக்காலக் கல்வி முறைக்கேற்ப கல்வி நிலையங்களை மாற்றியுள்ளனர்.

கணினிப் படிப்பு போன்ற புதிய புதிய படிப்புக்களைத் தம் கல்வி நிலையங்களில் நிறுவியுள்ளனர்.

> ''எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்''

> ''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
> கண்ணென்ப வாழும் உயிர்க்கு'' (–குறள் 392)

என்பதை வாழ்வியல் அறமாகக் கடைப்பிடித்தவர்கள் நகரத்தார்கள்.

தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை நகரத்தார்கள் நிறுவியுள்ளனர். சில ஊர்களில் கல்வி நிறுவனங்கள் கட்ட இடமும், கட்டிடமும் நன்கொடை கொடுத்து, தங்கள் பெயர்களை அந் நிறுவனங்களுக்கு சூட்டி அரசிடம் ஒப்படைத்து செயல்படச் செய்துள்ளனர்.

தொடக்கத்தில் தங்கள் சொந்த நிதியிலிருந்து கல்வி நிலையங் களை நடத்தினர்; தற்போது அரசின் நிதி உதவி பெற்று நடத்தி வருகின்றனர்.

Koviloor Digital Library

நகரத்தார்கள் செய்த கல்விப் பணி மற்றும் அறச் செயல்கள் வருமாறு:

இச் செய்திகள் பெரும்புலவர் பண்டிதமணி அவர்கள் எழுதிய 'நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு' மற்றும் பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பனார் பதிப்பித்த 'நகரத்தார் கலைக் களஞ்சியம்' ஆகிய நூல்களில் இருந்து எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அந்நூல் ஆசிரியர் களுக்கும், உரிமையாளர்களுக்கும் என் நன்றி.

கல்வித்துறையில் முத்திரை பதித்த மூன்று நகரத்தார் பெருமக்களைப் பற்றி முதலில் அறிந்து கொள்வோம். பின்னர் செட்டி நாட்டு ஊரிலுள்ள கல்விச் சாலைகளைப் பற்றி அறிவோம்.

டாக்டர் இராசா சர் மு.அண்ணாமலை செட்டியார்

ஆசிய நாடுகளிலேயே தனியொரு மனிதரின் பெருங்கொடை யால் உருவான முதல் பல்கலைக் கழகம் என்ற சிறப்பினை உடைய ஒன்று தமிழகத்தில் உளது. இதனை நிறுவியவர் கானாடுகாத்தான் மு.அண்ணாமலை செட்டியார் ஆவார்.

மீனாட்சி கல்லூரி எனத் தன் தாயார் பெயரால் 1920இல் தொடங்கப்பெற்ற கல்லூரி, தமிழ்க் கல்லூரி, இசைக் கல்லூரி வடமொழிக் கல்லூரி ஆகியவற்றை இணைத்து 1929இல் அண்ணா மலைப் பல்கலைக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது.

அண்ணாமலை செட்டியார் 20 இலட்சம் ரூபாயும், 600 ஏக்கர் நிலமும் நன்கொடையாகக் கொடுத்தார். அதனால் இப் பல்கலைக் கழகம் உருவானது.

இதனைச் சிறப்பிக்கும் வகையில் ஆங்கில அரசு இவருக்கு "இராசா" என்ற பட்டத்தைப் பரம்பரைப் பட்டமாக வழங்கியது.

கலைத்துறை, அறிவியல் துறை, பொறியியல், வேளாண்மை, கல்வியியல், உடற்பயிற்சியியல், இசை, பல் மருத்துவம், மருத்துவம் எனப் பல்வேறு புலங்கள் உள்ளன. மொழியியல் உயராய்வுமையமும், கடல் வாழ் உயிரினங்கள் பற்றி ஆய்வு செய்யும் மையமும் அமைந்து உள்ளன. மிகப் பெரிய தொலைதூரக் கல்வி தொடர்கல்வி நிறுவனத்தை இப் பல்கலைக் கழகம் நடத்தி வருகிறது.

Koviloor Digital Library

மாபெரும் நூலகம் உள்ளது.

இப் பல்கலைக் கழகத்தை,

> தில்லைப் பதியுடையான் சிற்றம் பலந்தன்னில்
> அல்லும் பகலும்நின் றாடுகின்றான் – எல்லைக்கண்
> அண்ணா மலைமன் அமைத்த கலைக்கழகம்
> கண்ணாரக் கண்டு களித்து

-எனக் கவிமணி பாராட்டியுள்ளார்.

நகரத்தார்கள் கல்வி அறப்பணியில் கவனம் செலுத்த இவரது கல்விப் பணி தூண்டு கோலாய் இருந்தது.

வள்ளல் அழகப்பர்

நகரத்தார் சமூகத்தில் முதன்முதலாக முதுகலைப் பட்டத்தைப் பெற்ற வள்ளல் அழகப்பர் பிறவிக் கொடைஞர். தாம் ஈட்டிய செல்வமனைத்தையும் கல்விக்கு எனச் செலவிட்ட பெருந்தகையாளர்.

திருவாங்கூர் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையை நிறுவ நன்கொடை கொடுத்தார்.

சென்னை சேவா தளத்தில் மகளிர் விடுதி கட்ட நன்கொடை அளித்தார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் கல்லூரி ஒன்றை நிறுவ நன்கொடை தந்தார்.

சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு நன்கொடை கொடுக்க, அப்பல்கலைக் கழகம் 'அழகப்ப செட்டியார் தொழில் நுட்பக் கல்லூரி'யை இவர் பெயரால் நிறுவியது.

1946இல் சென்னை தியாகராய நகரிலுள்ள தக்கர்பாபா வித்தியாலயத்தில் அழகப்பா மண்டபம் கட்ட நன்கொடை கொடுத்தார். இம் மண்டபத்துக்குரிய அடிக்கல்லை காந்தியடிகள் நாட்டினார்.

புது தில்லியில் தென்னிந்தியக் கல்விக் கழகத்திற்கு நன்கொடை, கொச்சி அரசு மாணவர்கள் வெளிநாடு சென்று தொழில் நுணுக்கக் கல்வி பயில உதவித் தொகை, அழகப்பா ஆலைத் தொழிலாளர்கள் வசிக்கும் அழகப்பா நகரில் மகப்பேறு மருத்துவ மனை நிறுவ

Koviloor Digital Library

நன்கொடை, இந்திய மருத்துவ முறை ஆய்வுக்கென எர்ணாகுளம் மகாராசா கல்லூரிக்கு நன்கொடை, கொச்சித் தனியரசில் பள்ளிச்சிறார் பகலுணவு பெற நன்கொடை என ஏராளமாய், தாராளமாய் வழங்கினார்.

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஏ.லெட்சுமணசாமி முதலியார் வேண்டுகோளை ஏற்று, காரைக்குடியில் 15-8-1947இல் அழகப்பா கல்லூரியை நிறுவினார். அன்றுமுதல் காரைக்குடி கல்விக் குடி ஆயிற்று.

மத்திய மின் வேதியியல் ஆய்வுக் கூடம் அமைய 300 ஏக்கர் நிலமும், 15 இலட்ச ரூபாயும் நன்கொடை கொடுத்தார். 1949இல் பண்டித நேரு அடிக்கல்நாட்ட, 1953இல் டாக்டர் இராதாகிருட்டிணன் திறந்து வைத்தார்.

1950இல் அழகப்ப செட்டியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, அதன் இணைப்பாக 1951இல் மாதிரி உயர்நிலைப் பள்ளி (இப்போது மேல்நிலைப் பள்ளி)யைத் தொடங்கினார்.

1952இல் அழகப்ப செட்டியார் பொறியியல் கல்லூரி, 1954இல் அழகப்பா மகளிர் கல்லூரி, முதலியவற்றைத் தொடங்கினார். இம் மகளிர் கல்லூரியைக் கோட்டையூரில் தாம் வசிப்பதற்காகக் கட்டிய 'ஸ்ரீநிவாஸ்' என்ற தம் இல்லத்திலேயே தொடங்கினார். இதனை மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார், வள்ளல் அழகப்பரைப் பற்றித் தாம் பாடிய 'கொடை விளக்கு' என்ற நூலில்,

> கோடி கொடுத்த கொடைஞன்
> குடியிருந்த வீடும் கொடுத்த விழுத் தெய்வம்

எனப் பாராட்டுகிறார்.

இம் மகளிர் கல்லூரி அழகப்பா கல்லூரியுடன் பின்னர் இணைக்கப் பெற்றது. தற்போது வள்ளலின் மகள் டாக்டர் உமையாள் இராமநாதன் மகளிர் கல்லூரியைத் தொடங்கியுள்ளார்கள்.

1955இல் அழகப்பா பல் தொழிற்பயிற்சி நிலையம், 1956இல் அழகப்ப செட்டியார் உடற்பயிற்சிக் கல்லூரி முதலியன தொடங்கப் பெற்றன.

Koviloor Digital Library

இவர் தோற்றுவித்த கல்வி நிறுவனங்கள் ஒன்றிணைக்கப்பட்டு 1985இல் 'அழகப்பா பல்கலைக் கழகம்' உருவானது. அதன் மூலம் அவர் கனவு நிறைவேறியது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார், பிரான்மலையில் நடத்திய பாரி விழாவில் கடையெழு வள்ளல்களில் வைத்துச் சிறப்பிக்கும் வகையில் இவரை எட்டாவது வள்ளல் என இரதத்தில் அமரவைத்து ஊர்வலமாய் அழைத்து வந்து பெருமைப் படுத்தினார்.

அரசர்கள் வள்ளல்களாய் இருப்பது இயல்பு. ஆனால் தனியொருவர் வள்ளலாய் இருப்பது அரிது.

அரிதான வள்ளல் அழகப்பரால் நகரத்தார்களுக்கே பெருமை.

கலைத் தந்தை தியாகராசர்:

கல்வி வளர்ச்சிக்காக வழங்கிய அறக்கொடைகளுக்காகவே 'கலைத் தந்தை' எனப் போற்றிப் புகழப் பெற்றார் தியாகராசர்.

"எந்தத் திக்கிலிருந்தும் மதுரைக்குள் நுழைந்தாலும், தியாகராசர் நிறுவிய ஆலையோ, அவர் தொடங்கிய கல்லூரியோ நம்மை வரவேற்கும்" என்று சோம.லெ. குறிப்பிடுகிறார்.

கல்விக்காக 5 அறக்கட்டளைகளை தியாகராசர் நிறுவினார். 1944இல் தியாகராசர் அறநிலை அமைக்கப் பெற்றது. 1948இல் தியாகராசர் தரும வணிகம் உருவாக்கப் பெற்றது. இதன் வருவாய் அனைத்தும் கல்விக்கே செலவிடப்பட வேண்டும் என்று வரையறுக்கப் பெற்றிருந்தது. 1951இல் தியாகராசர் கல்லூரி எண்டோமெண்ட் அறநிலை தொடங்கப்பெற்றது. 1962இல் தியாகராசர் அறப்பணிக் கழகம் பதிவு செய்யப்பெற்றது. தொழிற் கல்வி நிலையங்கள், வணிக மேலாண்மைக் கல்லூரி ஆகியவற்றின் செலவுக்காக தியாகராசர் கல்வி அறநிலை உருவாக்கப் பெற்றது.

11 பள்ளிகள், 4 கல்லூரிகள், 2 பல்தொழிற் பயிற்சிக் கல்லூரிகள் ஆகியன இவரால் தொடங்கப் பெற்றன.

முதலில் 1947இல் நேரு பெருமகனாரால் திறந்து வைக்கப்பெற்ற விசாலாட்சி கலாசாலை (ஆ,தெக்கூர்) என்ற உயர் நிலைப் பள்ளியைத் தொடங்கினார். (இப்போது மேல்நிலைப் பள்ளி).

Koviloor Digital Library

தியாகராசர் கலைக் கல்லூரி 1949இல் தொடங்கப் பெற்றது. இராமநாதபுரம் சேதுபதி மன்னரின் மாளிகையை வாங்கி அதைக் கல்விக் கொடையாகக் கலைத் தந்தை வழங்கினார். 8 முதுகலைக் கல்வித் துறை, ஆராய்ச்சித் துறை, பல இளங்கலைத் துறைகள், சைவ சித்தாந்த ஆராய்ச்சித்துறை முதலியன இக் கல்லூரியில் உள்ள துறைகளாகும்.

1956இல் தியாகராசர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தொடங்கப் பெற்றது. இதன் உறுப்பாக நன்முறை உயர் (மேல்) நிலைப் பள்ளி ஆரம்பிக்கப்பெற்றது.

1957இல் தியாகராசர் பொறியியல் கல்லூரி தொடங்கப் பெற்றது. 1961இல் தியாகராசர் மேலாண்மைக் கல்லூரி தொடங்கப் பெற்றது.

ஆ. தெக்கூரில் விசாலாட்சி பாலர் பள்ளி, விசாலாட்சி தொடக்கப் பள்ளி, விசாலாட்சி மகளிர் உயர்நிலைப் பள்ளி, விசாலாட்சி கலாசாலை மேல்நிலைப் பள்ளி முதலியன உள்ளன.

மணப்பாறையில் ஒரு பள்ளி உள்ளது. சேலத்தில் தியாகராசர் பல்தொழிற் கல்லூரி உள்ளது.

கலைத் தந்தையின் புகழை அவர் நிறுவிய கல்வி நிறுவனங்கள் கூறிக் கொண்டிருக்கின்றன.

ஸ்ரீசேவுகன் அண்ணாமலை கல்லூரி:

சேவு. அண்ணாமலை செட்டியார் தாம் பிறந்த மண்ணில், தேவ கோட்டையில் 1970இல் ஸ்ரீசேவுகன் அண்ணாமலை கல்லூரியைத் தொடங்கினார். கல்வித் துறையில் பின்தங்கி இருந்த தேவகோட்டை பகுதிக்கு இக் கல்லூரி அமைந்தது ஒரு சிறப்பாகும். இளங்கலை வகுப்புக்களில் பல பிரிவுகள் இக்கல்லூரியில் உள்ளன.

சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி

பள்ளத்தூர் உ.அ.பெரி.மு. அருணாசலம் செட்டியார் தன் மனைவி சீதாலெட்சுமி ஆச்சி பெயரால் 1962இல் இக் கல்லூரியைத் தொடங்கினார். பல முதுகலைப் பாடப் பிரிவுகளும், இளங்கலைப் பாடப்பிரிவுகளும், சுயநிதிக் கல்வி அடிப்படையில் சில பிரிவுகளும் இக் கல்லூரியில் உள்ளன. நகரத்தார்கள் மகளிர் கல்விக்கும் தொண்டு செய்துள்ளனர் என்பதற்கு இக் கல்லூரி சான்றாகும்.

Koviloor Digital Library

நகரத்தார்கள் தாங்கள் வாழ்கின்ற சொந்த ஊர்களில் கீழ்க்கண்ட கல்விப் பணிகளையும், மற்ற அறச் செயல்களையும் செய்துள்ளனர்; அதன் விபரம் வருமாறு:

அமராவதி புதூர்:

விடுதலைப் போராட்ட வீரர் பிச்சப்பா சுப்பிரமணியத்தால் தொடங்கப் பெற்ற தொடக்கப் பள்ளி இப்போது ஊராட்சி மன்றத்தால் நடத்தப்படுகிறது.

சொ.முருகப்பா மகளிர் இல்லம் தொடங்கினார். இப்போது ஸ்ரீ சாரதா நிகேதன் மகளிர் கல்லூரி அதில் நடைபெறுகிறது.

காரைக்குடி முத்துப்பட்டணம் சா.சு. சுப்பிரமணியன் செட்டி யாரால் குருகுலம் உயர்நிலைப் பள்ளி நடத்தப்படுகிறது.

அரண்மனை சிறுவயல்:

நகரத்தார்களால் பொதுவில் தாகூர் நடுநிலைப் பள்ளி நடத்தப்படுகிறது.

அரிமழம்:

1941இல் இராம.குப.பெரி. இராமநாதன் செட்டியார், பெரிய கருப்பஞ் செட்டியார், நா.மு.நா. செல்லப்ப செட்டியார் ஆகிய மூவரால் தொடங்கப்பட்டு நடைபெற்ற பள்ளி, இப்போது அரசு மேல் நிலைப் பள்ளியாகச் செயல்படுகிறது.

ப.செ.செ.கதி.செ. குடும்பத்தார் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி தொடங்க நன்கொடை அளித்து அறம் செய்துள்ளனர்.

வ.பெரி. குடும்பத்தார் தொடங்கிய தொடக்கப் பள்ளி, தற்போது ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தில் உள்ளது.

கதி. செல்லப்ப செட்டியார் செல்லப்பா அரசு மருத்துவ மனைக்கு நன்கொடை கொடுத்துள்ளார்.

அரியக்குடி:

வயி.இராம. கிருட்டிணன் செட்டியாரால் தொடங்கப்பெற்ற கல்யாண கிருட்டிணா தொடக்கப் பள்ளி இப்போது ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தில் உள்ளது.

Koviloor Digital Library

கிருட்டிணன் செட்டியார், இடம் நன்கொடை கொடுக்க, நாராயணன் செட்டியார், வெ.இராம.மு.சீ.இராம. வெங்கடாசலம் செட்டியார் கட்டிடம் நன்கொடை கொடுக்க அரசு மேல் நிலைப் பள்ளி செயல்படுகிறது.

கல்யாண கிருட்டிணா மருத்துவ மனைக்கு இடமும், கட்டிடமும், மருத்துவ கருவிகளும் வயி.இராம.கி. கிருட்டிணன் செட்டியார் நன்கொடை அளித்துள்ளார்.

(கண்டனூர்) அழகாபுரி:

1938இல் சித.அ.சித. நாச்சியப்ப செட்டியாரால் ஸ்ரீ அழகிய தேவி வித்தியாசாலை தொடக்கப்பள்ளி தொடங்கப் பெற்று, மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கப்பெற்றது.

(பில்லமங்கலம்) அழகாபுரி:

நா.சொ. குடும்பத்தார் பில்லமங்கலத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தைக் கட்டி அரசிடம் ஒப்படைத்துள்ளனர்.

இராம.மு. சோமசுந்தரம் செட்டியார் பிள்ளையார் பட்டியில் கற்பக விநாயகர் தொடக்கப் பள்ளியையும், காஞ்சிபுரத்தில் நாராயண சேவாசிரமம் என்ற ஆயுர்வேத மருத்துவ மனையையும் நடத்துகின்றார்.

ஆத்தன்குடி:

பெ.சு.பெ. செல்லப்ப செட்டியார், சு.சொ. சுப்பிரமணியன் செட்டியார் ஆகியோரால் 1945இல் நேரு வித்தியாசாலை பள்ளி தொடங்கப் பெற்றது.

கா.அரு. பழநியப்ப செட்டியார் நன்கொடையால் மருத்துவமனை நடைபெறுகிறது.

ஆ.தெக்கூர்:

கருமுத்து தியாகராசன் செட்டியாரின் அறக்கொடையால் விசாலாட்சி மழலையர் பள்ளி, விசாலாட்சி தொடக்கப் பள்ளி, விசாலாட்சி கலாசாலை மேல்நிலைப் பள்ளி, விசாலாட்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளி முதலியன நடைபெற்று வருகின்றன.

Koviloor Digital Library

ஆவினிப்பட்டி:

பழ.அ. வகையினரால் விவேகானந்தா கல்விக் கழகம் என்னும் நடு நிலைப்பள்ளி நடத்தப்பெற்று வருகிறது.

அலவாக்கோட்டை:

நா.சுப்பிரமணியன் செட்டியாரால் நாராயணன் செட்டியார் தொடக்கப் பள்ளி நடத்தப்பெற்று வருகிறது.

பாகநேரி இராம. முத்துப் பழநியப்ப செட்டியாரால் மருத்துவ மனை நடத்தப்பெற்று வருகிறது.

உ.சிறுவயல்:

நகரப் பொதுவில் நடுநிலைப் பள்ளி கட்டப்பெற்று அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. இப்போது அப் பள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியாகச் செயல்படுகிறது.

அம்மன் கோவில், சிவன் கோவில் இடம் நன்கொடையாகக் கொடுக்கப் பெற்று, சொ.லெ. லெட்சுமணன் செட்டியாரால் கட்டிடம் கட்டப்பெற்று, அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. அதில் அரசு மருத்துவமனை செயல்படுகிறது.

உலகம்பட்டி:

கரு.பழ. சுப்பையா செட்டியார், கரு.கா. கருப்பஞ்செட்டியார், கரு.மு. பழநியப்ப செட்டியார் ஆகிய மூவரால் 19-8-1958இல் பள்ளி தொடங்கப் பெற்றது. பின்னர் அரசிடம் ஒப்படைக்கப் பெற்றது. இப்போது நடைபெறும் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு நா.கரு. பழநியப்ப செட்டியார் இடம் நன்கொடை அளித்துள்ளார்.

நா.லெ. சிவலிங்கம் செட்டியார் நன்கொடை கொடுக்க 1964இல் சொர்ணம் சிவலிங்கம் மருத்துவமனை ஆரம்பிக்கப் பெற்றது.

ஒக்கூர்:

சி.க.அரு. சோமசுந்தரம் செட்டியார், தொடக்கப்பள்ளியைச் சோமசுந்தரம் செட்டியார் தொடக்கப் பள்ளி என்ற பெயரில் 1952இல் தொடங்கினார். அப் பள்ளி 1968இல்உயர்நிலைப் பள்ளியானது. இப்போது மேல்நிலைப் பள்ளியாகச் செயல்படுகிறது.

Koviloor Digital Library

மானாமதுரையில் ஒக்கூர் வெள்ளையன் செட்டியார் மேல்நிலைப் பள்ளியை இவ்வூரைச் சார்ந்த வெள்ளையன் செட்டியார் வழி முறையினர் நடத்தி வருகின்றனர்.

சி.க.அரு.க.அரு. சோமசுந்தரம் செட்டியார் இடமும், கட்டிடமும் நன்கொடை கொடுக்க அரசு ஆயுர்வேத மருத்துவமனை நடைபெற்று வருகிறது.

சி.கரு.சி.கரு. கருப்பஞ் செட்டியார் இலங்கை மாதம்பை என்னுமிடத்தில் ஓர் ஏக்கர் நிலம் நன்கொடை வழங்கி, 5-8-1958இல் சரசுவதி வித்தியாசாலை என்ற பௌத்த பள்ளியை நிறுவினார்.

இலங்கை கட்டுநேரிய லஞ்சிகம என்னும் இடத்தில் உள்ள முதியோர் இல்லம், ஆனந்தா கல்லூரி கட்டிட நிதிக்குப் பெருந்தொகை வழங்கினார்.

கடியாபட்டி:

சொ.இராம. இராமசாமி செட்டியார் மருத்துவ மனை கட்டிக் கொடுத்துள்ளார்.

தீ.நா. முத்தையா செட்டியார் இராமச்சந்திரபுரத்திற்கும், இராயவரத்திற்கும் நடுவே உமையாள்புரம் என்ற ஊரில் சாலைப் பாலம் அமைத்தார்.

1917இல் தீ.சொ. நாகப்ப செட்டியார் ஸ்ரீபூமீஸ்வர தொடக்கப் பள்ளியை நிறுவினார். அப் பள்ளி 1986இல் மேல்நிலைப் பள்ளியாகி, 1987இல் உலகப்பர் மேல்நிலைப் பள்ளி எனப் பெயர் மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது.

பி.கு. குடும்பத்தினர் கணேசர் நடுநிலைப் பள்ளியை நடத்தி வருகின்றனர்.

மு.சித. குடும்பத்தினர் ஒரு தொடக்கப் பள்ளியை நடத்தி வருகின்றனர்.

தீ.சொ.குடும்பத்தினர் இடம் நன்கொடை கொடுக்க, பி.கு. குடும்பத்தினர், உ.இராம. குடும்பத்தினர், நா.மு. குடும்பத்தினர் ஆகிய மூன்று குடும்பத்தினரும் கட்டிடம் நன்கொடை கொடுக்க அரசு மருத்துவமனை இயங்கி வருகிறது.

Koviloor Digital Library

தீ.நா. முத்தையா செட்டியார் திருமயத்தில் சத்தியமூர்த்தி உயர்நிலைப் பள்ளியை நிறுவினார்.

கண்டரமாணிக்கம்:

பெரி.பெரி.சுப. நாராயணன் செட்டியார் தண்டாயுதபாணி நடுநிலைப் பள்ளியை 15-11-1937இல் நிறுவினார். அப் பள்ளி இப்போது உயர்நிலைப் பள்ளியாய் இயங்கி வருகிறது. அதன் இணைப்பாகத் தொடக்கப் பள்ளி உள்ளது.

நா.பி.ச.வெ. குடும்பத்தாரால் மெய்யம்மை ஆச்சி பிச்சக்குட்டி பெண்கள் உயர்நிலைப் பள்ளி நிறுவப்பட்டு நடந்து வருகிறது.

முரு.அரு.சுப. சுப்பிரமணியன் செட்டியார் சுப்பிரமணியன் மருத்துவ மனையை நிறுவி அரசிடம் ஒப்படைத்துள்ளார்.

என்.பி.எஸ். பிச்சக்குட்டி செட்டியார் மெய்யம்மை ஆச்சி பிச்சக்குட்டி மருத்துவ மனையை நிறுவியுள்ளார்.

கண்டவராயன்பட்டி:

ஸ்ரீபணிச்சாருடையார் தருமகலாசாலையை 8-6-1930இல் சி.உ.இராம. இராமசாமி செட்டியார் நிறுவினார். இது நடுநிலைப் பள்ளியாகும்.

தெ.சி.நா. சொக்கலிங்கம் செட்டியார் திருப்பத்தூர் கண்டவராயன் பட்டிச் சாலையைத் தம் சொந்தச் செலவில் அமைத்தார்.

கண்டனூர்:

வீ.தெ. வீரப்ப செட்டியாரால் 1942இல் சிட்டாள் ஆச்சி நினைவு தொடக்கப் பள்ளியை நிறுவினார். அப் பள்ளி இப்போது உயர்நிலைப் பள்ளியாய் இயங்கி வருகிறது.

எஸ்.வி. இராமையா குடும்பத்தினர் ஒரு பாலர் பள்ளியை நடத்துகின்றனர்.

புலவர் இராம. வீரப்பன் செல்லத்தாள் பாலர் பள்ளியை நடத்துகின்றார்.

Koviloor Digital Library

லெ.சித.லெ.பழ. குடும்பத்தினர் காந்திமதி மருத்துவமனையை நடத்துகின்றனர்.

சித.அரு. சிதம்பரம் செட்டியார், சித.பழ.இராம. இராமசாமி செட்டியார், அ.சி.நா.சித. சிதம்பரம் செட்டியார் ஆகிய மூவரும் சேர்ந்து ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் வைத்தியசாலைக்குக் கட்டிடங்கள் கட்டிக் கொடுத்து மருத்துவக் கருவிகள் வாங்கிக்கொடுத்து அரசு மருத்துவ மனை ஆக்கியுள்ளனர்.

சி.இராம.சொ. குடும்பத்தார் இராமேசுவரத்தில் சதாவிருத்திச் சத்திரம் கட்டியுள்ளனர்.

லெ.சித. குடும்பத்தார் திருநெல்வேலியில் ஒரு சத்திரம் கட்டியுள்ளனர்.

அ.நா. குடும்பத்தார் மயிலாடுதுறையில் அ.நா.அன்னசத்திரம் அமைத்துள்ளனர். அ.சித. வேதபாடசாலை நடத்துகின்றார்.

கல்லல்:

10-7-1947இல் ஆ.மு.ஆ.முரு. முருகப்ப செட்டியார் கல்லல் முருகப்பா உயர்நிலைப் பள்ளியை நிறுவினார். அப் பள்ளி இப்போது மேல்நிலைப் பள்ளியாய் இயங்கி வருகிறது.

மேற்படியார் 4-7-1949இல் சுப்பிரமணியன் செட்டியார் மருத்துவ மனையைக் கட்டி அரசிடம் ஒப்படைத்தார். அது இப்போது அரசு மருத்துவமனையாய் உள்ளது.

கல்லுப்பட்டி:

பழ.மெ. சாமிநாதன் செட்டியார் 1935 இல் மெய்யப்பா தொடக்கப் பள்ளியை நிறுவினார். அப் பள்ளி இப்போது நடுநிலைப் பள்ளியாய் செயல்படுகிறது.

காரைக்குடி:

ஆவி.பழ. சிதம்பரம் செட்டியார் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் உயர் நிலைப் பள்ளியை நிறுவினார். அப் பள்ளி இப்போது மேல்நிலைப் பள்ளியாய் செயல்படுகிறது.

Koviloor Digital Library

மெ.செ.மெ. மெய்யப்ப செட்டியார் 2-11-1917இல் பெண்கள் ஆரம்பப் பாடசாலையை நிறுவினார். அப் பள்ளி நடுநிலைப் பள்ளியாகி, உயர்நிலைப் பள்ளியாய் உயர்ந்து, மேல்நிலைப் பள்ளியாகச் செயல்படுகிறது. மாணவிகளுக்குச் சம்பளம் இல்லை. இலவசப் புத்தகமும், கல்வி உபகரணங்களும் மாணவிகளுக்கு வழங்கப்பட்டன.

மெ.செ.மெ.மெ. மெய்யப்ப செட்டியாரால் 1936இல் மெய்யப்பா மகப்பேறு மருத்துவமனை நிறுவப்பட்டது.

மேற்படியார் நான்கு குடிநீர்க் குழாய்கள் அமைத்து, இருபது இடங்களில் பொதுமக்கள் தண்ணீர் பிடிக்க வசதி செய்தார். தற்போது நகராட்சி நிர்வாகத்தில் இத் தருமம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வள்ளல் அழகப்பரின் கல்வி நிலையங்கள் காரைக்குடியைக் கல்விக்குடி ஆக்கியுள்ளன.

காளையார் மங்கலம்:

நகரத்தார் நன்கொடையால் தொடங்கப்பெற்ற அரசு மருத்துவமனை நடைபெற்று வருகிறது.

கானாடு காத்தான்:

சா.இராம.மு.அ. அண்ணாமலை செட்டியாரால் லேடி பென்ட்லெண்டு மருத்துவமனை நிறுவப்பெற்று அரசிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

சா.அ.குடும்பத்தினர் மருத்துவ மனையைக் கட்டி நடத்தினர். பின்னர் மாவட்டக் கழகத்திடம் ஒப்படைத்தனர்.

மு.சித.மு. குடும்பத்தார் 1956இல் தொடக்கப் பள்ளியை நிறுவினர். அப்பள்ளி நடுநிலைப் பள்ளியாகி, 1973இல் உயர்நிலைப் பள்ளியாய் உயர்ந்து இயங்கி வருகிறது.

சி.வி.சிடி. அறநிலையால் மீனாட்சி ஆச்சி ஆங்கிலப் பள்ளி நடத்தப்பெறுகிறது.

சென்னையில் மு.சித.மு. குடும்பத்தார் மேல்நிலைப் பள்ளியை நடத்துகின்றனர்.

Koviloor Digital Library

நாட்டரசன்கோட்டையில் பிறந்து இங்கு பிள்ளை வளர வந்த கொழும்பு சுப்பையா செட்டியார், தாம் பிறந்த ஊரில் கா.மு.சு.செ. பெண்கள் உயர்நிலைப் பள்ளியை 1967இல் நிறுவினார். அப் பள்ளி 1981இல் மேல்நிலைப் பள்ளியானது.

செட்டிநாட்டு இராசா குடும்பத்தார் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், முத்தையா பாலிடெக்னிக், சென்னை அடையாறில் சில பள்ளிகள், செட்டிநாட்டில் அண்ணாமலை பாலிடெக்னிக் முதலிய கல்வி நிலையங்களை நடத்தி வருகின்றனர்.

யோகி இராமையா நேமத்தான்பட்டியில் உடற்பயிற்சி மருத்துவ நிலையத்தை நடத்தி வருகிறார்.

ஸ்பிக் அறக்கட்டளையினரால் நேமத்தான்பட்டி சூரக்குடியில் மருத்துவமனை நடத்தப்பட்டு வருகிறது.

கீழச்சிவல்பட்டி:

கீழச்சிவல்பட்டி பி. அழகாபுரி நகரத்தார் பொதுவில் 1923இல் ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரர் கலாசாலையை நிறுவினர். அத் தொடக்கப் பள்ளி 1928இல் உயர் தொடக்கப் பள்ளியானது. 1949இல் உயர்நிலைப் பள்ளியானது. 1981இல் மேல்நிலைப் பள்ளியானது.

சித.அ. அண்ணாமலை செட்டியார் மகன், வள்ளியம்மை ஆச்சி மருத்துவ மனையைக் கட்டி அரசிடம் ஒப்படைத்தார்.

நா.சொ. சொக்கலிங்கம் செட்டியார் பில்ல மங்கலத்தில் மருத்துவ மனையைக் கட்டினார்.

கீழப்பூங்குடி:

கண. வேதாம்பாள் ஆச்சி இரண்டு ஏக்கர் நிலமும், நிதியும் அளிக்க 1993முதல், அரசு மேல்நிலைப் பள்ளி நடந்து வருகிறது.

கூ.அரு.க. குடும்பத்தார் நிலமும், கட்டிடமும் நன்கொடை அளிக்க அரசு ஆரம்ப சுகாதார நிலையமும், தாய் சேய் நல விடுதியும் நடைபெற்று வருகின்றன.

கூ.க.வயி.மகள் விசாலாட்சி ஆச்சி அளித்த நன்கொடைக் கட்டிடத்தில் அரசு தொடக்கப் பள்ளி நடைபெற்று வருகிறது.

Koviloor Digital Library

கூராண்டான் செட்டியார் வகையராவால் ஒக்கூருக்கும் - கீழப்பூங்குடிக்கும் சாலை அமைக்கப் பெற்றது.

குருவிக்கொண்டான்பட்டி:

சித.அ.சி.சிதம்பரம் செட்டியாரால் சொக்கலிங்கம் மீனாட்சி வித்தியாசாலை என்ற தொடக்கப் பள்ளி 1950இல் தொடங்கப் பெற்று நடந்து வருகிறது.

அ.சொ. சொக்கலிங்கம் செட்டியார் மருத்துவமனை இயங்கி வருகிறது.

குழிபிறை:

மு.சித.இராம. இராமநாதன் செட்டியார் அவர்களால் தொடங்கப் பட்ட மு.சித.இராம. தொடக்கப் பள்ளியும் மேல்நிலைப் பள்ளியும், உள்ளூர் நகரத்தார் சிலரின் கூட்டுப் பொறுப்பில் தொடங்கப்பட்ட வள்ளுவர் நடு நிலைப்பள்ளியும் இங்கு சிறந்த முறையில் இயங்கி வருகின்றன.

மு.மு.இராம. குடும்பத்தினரால் மீனாட்சி மகப்பேறு மருத்துவ மனை நடத்தப் பெற்று வருகிறது.

கொத்தமங்கலம்:

நகரப் பொதுவில் தொடக்கப்பள்ளி, செல்வ நாயகி நடுநிலைப் பள்ளி, இராம.சுப. உமையாள் ஆச்சி குடும்பத்தாரால் நடத்தப்பெறும் ஆங்கில வழி தொடக்கப் பள்ளி முதலியன இங்குள்ள கல்வி நிலையங்களாகும்.

எம்.ஆர். குடும்பத்தினரின் எம்.ஆர். அறநிலை சார்பில் ஒரு மருத்துவ மனை நடத்தப்பட்டு வருகிறது.

கொப்பனாபட்டி:

நகரப் பொதுவில் 1930இல் தொடக்கப் பள்ளி தொடங்கப் பெற்று மாவட்டக் கல்விக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

15-9-1935இல் பெண்களுக்கென கலைமகள் கல்லூரியை அ.மெ. மெய்யப்ப செட்டியாரும், நகரத்தார்களும் சேர்ந்து தொடங்கினர். இக் கல்லூரியில் தமிழ்க் கல்வியும், ஓரளவு ஆங்கிலமும் கற்பித்தனர்.

Koviloor Digital Library

'கலைச்செல்வி' 'கலைமணி' என்ற பட்டங்களை தேர்வில் வென்றவர் களுக்கு வழங்கினர்.

பழ.லெ. குடும்பத்தார், 'லெ.மெய்யம்மை ஆச்சி தொடக்கப் பள்ளி'யை நடத்துகின்றனர்.

மு.நா. நாராயணன் செட்டியார் உயர்நிலைப் பள்ளியை நடத்துகிறார்.

மு.இராம. சேதுராமன் செட்டியாரால் பொறியியல் கல்லூரி நடத்தப் பெறுகிறது.

மு.நா. குடும்பத்தார் நிலமும், கட்டிடமும் நன்கொடையாய் வழங்க மு.நா. நாச்சம்மை ஆச்சி அரசு மருத்துவமனை நடைபெறுகிறது.

கோட்டையூர்:

வள்ளல் அழகப்பரின் கல்விக் கொடைகள் காரைக்குடியில் உள்ளன அவ்வள்ளலால் கல்விக் குடியாகி, கணக்கற்றவர்கள் பட்டம் பெற்று பெருவாழ்வு பெற்றனர்.

க.வீ.அழ. முத்தையா செட்டியாரால் 1928இல் மருத்துவமனை தொடங்கப் பெற்றது.

க.வீ.சொ. அழகப்பய்யா சனாதன தரும வித்தியாசாலை என்ற பெயரில் ஒரு தொடக்கப் பள்ளியை 1940இல் நிறுவி, 1972 வரை தங்கள் சொந்தச் செலவில் நடத்தினர். தற்போது அரசு உதவி பெற்று நடத்தி வருகின்றனர்.

வெ.சி.அரு.அழ.அரு.அழ. அருணாசலம் செட்டியார் நன்கொடை அளிக்க, 1958இல் தஞ்சாவூர் அருணாசலம் செட்டியார் அரசு உயர்நிலைப் பள்ளி தொடங்கப்பெற்றது. அப் பள்ளி இப்போது மேல் நிலைப் பள்ளியாய் இயங்கி வருகிறது.

அ.க.அ.சித.அழ. சிதம்பரம் செட்டியார் 1965இல் சிதம்பரம் செட்டியார் பெண்கள் உயர்நிலைப் பள்ளியைத் தொடங்கினார் அப் பள்ளியும் இப்போது மேல்நிலைப் பள்ளியாய் இயங்கி வருகிறது.

க.வீ.அழ.மு.அழ. முத்தையா செட்டியார் 1974இல் முத்தையா அழகப்பா மெட்ரிகுலேசன் பள்ளியைத் தொடங்கி நடத்தி வருகிறார்.

Koviloor Digital Library

அ.ச. நாராயணன் செட்டியார் 1969இல் மேநாடு மெமோரியல் ஆயத்தப் பள்ளியை நிறுவி 5ஆம் வகுப்புவரை நடத்துகின்றார்.

நகரத்தார் பலர் சேர்ந்து விசுவேசுவரா அறக்கட்டளை ஏற்படுத்தி விசுவேசுவரா மருத்துவமனையை நடத்துகின்றனர்.

மெ.க.குடும்பத்தார் திருவண்ணாமலையில் 1872முதல் அன்ன சத்திரம் நடத்திவருகின்றனர். 1903 மற்றும் 1944இல் மேற்படி குடும்பத்தார் அண்ணாமலையார் குடமுழுக்கு விழாவை நடத்தினர்.

கோனாபட்டு:

மகாதேவ முருகப்ப செட்டியார் நகரத்தார்களின் பொருளுதவி பெற்று 10-6-1912இல் கற்பக விநாயகா கலாசாலை, ஞானசம்பந்த நற்சபை, வாணிமந்தர புத்தக சாலை என்ற நூல் நிலையம் முதலிய வற்றைத் தோற்றுவித்தார். இதனைப் பெரும்புலவர் பண்டிதமணி அவர்கள் திறந்து வைத்தார்கள். கற்பக விநாயகா கலாசாலையைப் புதுப்பித்து 1950க்குப் பிறகு நகரப் பொதுவில் சு.மு.இராம.முரு. முருகப்ப செட்டியார் மேற்பார்வையில் சரசுவதி தொடக்கப்பள்ளி, சரசுவதி உயர்நிலைப் பள்ளி எனப் பெயர் மாற்றி நடத்தி வருகின்றனர். (இப்போது மேல் நிலைப் பள்ளி.)

சக்கந்தி:

நாராயணன் செட்டியார் நன்கொடை வழங்க, நாராயணன் செட்டியார் - சிட்டாள் ஆச்சி அரசு தொடக்கப்பள்ளி 1970முதல் நடைபெற்று வருகிறது.

சண்முகநாதபுரம்:

மேற்கே அமராவதிபுதூர் வரையிலும், கிழக்கே கண்டதேவி வரையிலும் நகரத்தார்களால் சாலை அமைக்கப் பெற்று 10-4-1922இல் திறக்கப்பட்டது.

எஸ்.ஆர்.எம்.எஸ்.சாத்தப்ப செட்டியார் 13-11-1935முதல் நடு நிலைப் பள்ளியை நடத்தி வருகிறார். அப் பள்ளி 1963இல் பி.எஸ். சாத்தப்ப செட்டியார் தொடக்கப் பள்ளி, பி.எஸ். சாத்தப்ப செட்டியார் உயர்நிலைப் பள்ளி எனப் பெயர்மாற்றப்பட்டு நடைபெற்று வருகிறது.

Koviloor Digital Library

நகரப்பொதுவில் மருத்துவ மனை நடத்தப்பெற்று வருகிறது.

சிராவயல்:

1926இல் மு.கா. காசிவிசுவநாதன் செட்டியார் சரசுவதி வித்தியா சாலை என்ற தொடக்கப் பள்ளியைத் தொடங்கி நகரப் பொதுவில் ஒப்படைத்தார். அப்பள்ளி 1948இல் சோமசுந்தரம் நடுநிலைப்பள்ளி எனப் பெயர் மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது.

சிறுகூடல்பட்டி:

ஆத.மு.பழ.மு. முத்தையா செட்டியார் மருத்துவ மனையைக் கட்டினார்.

திருப்பத்தூர் - புதுக்கோட்டை சாலையில் கிழக்கே இவ்வூர் வரை சாலை அமைத்தனர்.

ஆத.கு.பழ.சுப. குடும்பத்தினரால் தொடங்கப் பெற்ற கலைமகள் வித்தியாசாலை தொடக்கப் பள்ளி இப்போது நடுநிலைப் பள்ளியாய் நகரத்தார் நிர்வாகத்தில் நடந்து வருகிறது.

செம்பனூர்:

கும.நா. சுப்பிரமணியன் செட்டியார் கலாசாலையை நிறுவினார்.

சுப.கா. காசி விசுவநாதன் செட்டியார் இடமும், கட்டிடமும் நன்கொடை கொடுக்க, மெய்யம்மை - காசி விசுவநாதன் அரசு உயர் நிலைப்பள்ளி நடைபெறுகிறது.

கும.நா.நா.சா.நா. குடும்பத்தார் இடமும் கட்டிடமும் நன்கொடை கொடுக்க அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

செவ்வூர்:

செ.இராம.சொ.இராம. சகோதரர்களால் தொடக்கப்பள்ளி நிறுவப்பெற்று அரசிடம் ஒப்படைக்கப்பட்டது.

கும.பெரி. பழனியப்ப செட்டியார் குடும்பத்தார் பழநியப்பன் - சானகி ஆச்சி நடுநிலைப் பள்ளியைக் கட்டி அரசிடம் ஒப்படைத்து உள்ளனர்.

செ.இராம. குடும்பத்தார் ஆத்திரம்பட்டியிலும், மலம்பட்டியிலும் பள்ளியைக் கட்டியுள்ளனர்.

Koviloor Digital Library

மு.கும.பெரி. சிதம்பரம் செட்டியார் மகன் இரத்தினம் செட்டியார், தன் தந்தையின் நினைவாக தொடக்கப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டிக் கொடுத்துள்ளார்.

சோழபுரம்:

சுப.க.அ. குடும்பத்தார் நிலம் நன்கொடை வழங்க யோகி சுத்தானந்த பாரதியார் தவக்குடில் கட்டி, உயர் நிலைப்பள்ளியை நடத்தி வருகின்றனர்.

சொக்கலிங்கம்புதூர் (சொக்கனேந்தல்)

நகரப் பொதுவில் மாணிக்க வாசக வித்தியாசாலை பள்ளியைக் கட்டி அரசிடம் ஒப்படைத்துள்ளனர்.

தேவகோட்டை:

வெ.அழ. அழகப்ப செட்டியார் அவர்கள் சொர்ணமூர்த்தி பெண் பாடசாலையை நிறுவினார்.

1919இல் பெரி.சோம. குடும்பத்தார் பெண்கள் மகப்பேறு மருத்துவ மனையைக் கட்டினர்.

நகரத்தார்களால் நகரத்தார் ஸ்ரீ மீனாட்சி வித்தியா பரிபாலன சங்கம் என்ற பெயரில் 15-6-1921இல் உயர்நிலைப் பள்ளி நிறுவப் பெற்றது. அதற்குப் புதுக்கட்டிடம் கட்டி 26-8-1945இல் இராசா சர் மு. அண்ணாமலை செட்டியார் திறந்து வைக்க செயல்பட்டு வந்த பள்ளி, இப்போது மேல்நிலைப் பள்ளியாய் நடைபெற்று வருகிறது.

இராம.அரு.அரு. அருணாசலம் செட்டியார் ஒரு வித்தியா சாலையை நிறுவினார்.

ஸ்ரீ மீனாட்சி வித்தியா பரிபாலன சங்கம் சார்பில் 1928இல் தொடக்கப் பள்ளி நிறுவப்பெற்றது. இச் சங்கம், அ.இராம.அ.லெ.அ. குடும்பத்தார் அளித்த நன்கொடையால், பெத்தாள் ஆச்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியை நடத்தி வருகிறது.

Koviloor Digital Library

ஸ்ரீசேவுகன் அண்ணாமலை கல்லூரி 1970இலும் ஸ்ரீசேவுகன் அண்ணாமலை மெட்ரிகுலேசன் பள்ளி 1973இலும் சேவு. அண்ணாமலை செட்டியார் நிறுவ நடத்தி வருகின்றனர்.

சேவு. வடிவேல் செட்டியார் வைரம் மெட்ரிகுலேசன் பள்ளி, வைரம் தொழிற்பயிற்சி பள்ளி முதலியவற்றை நடத்துகிறார்.

சோம.நாராயணன் செட்டியார் இராம கிருட்டிணா நடுநிலைப் பள்ளியை நடத்துகிறார்.

சேவு.அ. அருணாசலம் செட்டியார் குடும்பத்தாரால் சேர்மன் மாணிக்கவாசகம் செட்டியார் நடுநிலைப் பள்ளி நடத்தப்பெற்று வருகிறது.

பெரி.சோம. சாத்தப்பசெட்டியார் குடும்பத்தார் வழங்கிய நன்கொடையால் அரசு மருத்துவ மனை நடைபெறுகிறது.

நடராசபுரம்:

முரு.இராம.இராம. குடும்பத்தார் 1950இல் இராமாயி நினைவு தொடக்கப் பள்ளியை நிறுவினர். 1962இல் முரு.இராம. இராம. குடும்பத்தாரால் இராமசாமி செட்டியார் நினைவு உயர்நிலைப் பள்ளி தொடங்கப் பெற்று நடந்து வருகிறது.

முரு.இராம.சுப.இராம.இராமநாதன் செட்டியார் நிலமும், கட்டிடமும் நன்கொடை கொடுக்க அரசு மருத்துவ மனை செயல்படுகிறது.

முத்து.உல.சுப.சுப்பிரமணியன் செட்டியாரால் தெப்பக்குளம் கட்டப்பட்டுள்ளது.

நற்சாந்துபட்டி:

கு.இராம. குமரப்பசெட்டியாரால் 11.6.1954 இல் அவரது தந்தையார் நினைவாக இராமநாதன் செட்டியார் நடுநிலைப் பள்ளி நிறுவப்பட்டது. இவர் மகன் கும. இராமநாதன் செட்டியார் 1958இல் உயர்நிலைப் பள்ளியாய் உயர்த்தினார். அப் பள்ளி 1988இல் மேல்நிலைப் பள்ளியானது.

Koviloor Digital Library

நகரப்பொதுவில் ஸ்ரீசண்முக விலாச கலாசாலை என்ற தொடக்கப் பள்ளி நடத்தப்பட்டு வருகிறது.

கு.இராம.கும. குமரப்ப செட்டியார் கொடுத்த நன்கொடையால் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் நடைபெறுகிறது.

நாச்சியாபுரம்:

நகரப் பொதுவில் செயங்கொண்டார் விநாயகர் வித்தியா சாலை என்ற தொடக்கப் பள்ளியும், செயங்கொண்டார் விநாயகர் உயர் நிலைப் பள்ளியும் நடைபெற்று வருகிறது.

சு.வி.நா. குடும்பத்தார் நிலமும், கட்டிடமும் நன்கொடை அளிக்க அரசு மருத்துவமனை நடைபெறுகிறது.

நாட்டரசன்கோட்டை:

கண.உல. வெள்ளையப்பா செட்டியாரால் மீனாட்சி - வெள்ளையப்பா மகப்பேறு மருத்துவமனை நடைபெற்று வருகிறது.

ச.இராம. இராமநாதன் செட்டியார் 10-6-1929இல் தொடக்கப் பள்ளியைத் தொடங்கினார். அப் பள்ளி 1943இல் உயர்நிலைப் பள்ளியாய் உயர்ந்தது. 1985இல் மேல்நிலைப் பள்ளியாய் மாறியது. தொடக்கப் பள்ளி திருமதி விசாலாட்சி வித்தியா சாலை எனப் பெயர் மாற்றம் செய்யப்பெற்று நடைபெறுகிறது.

1930இல் குப.இராம. இராமநாதன் செட்டியாரால் குப.இராம. தொடக்கப் பள்ளி தொடங்கப் பெற்று நடைபெற்று வருகிறது.

இவ்வூரில் பிறந்து கானாடுகாத்தானுக்குப் பிள்ளை வளரச் சென்ற சுப்பையா செட்டியார், தாம் பிறந்த ஊரில் கானாடுகாத்தான் முத்தையா சுப்பையா செட்டியார் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை 1967இல் நிறுவினார். அப் பள்ளி 1981இல் மேல்நிலைப் பள்ளியானது.

சத்தியமூர்த்தி மோகன் தொழிற்பயிற்சி நிலையம் உள்ளது.

“உடைமை என்பது கல்வி உடைமை” “கல்வியே நல்லொழுக்கம்”, பேணிப் படிப்பது பெரிதும் நன்று”, “பேணிப் படிப்பவர் பெரிதும் போற்றப்படுவர்” “இயன்றால் காலணா சந்தா, இல்லையேல் இலவசம்.

Koviloor Digital Library

எப்படியும் கல்வியைப் பரப்புவதே நோக்கம்" என்ற கொள்கை முழக்கத்துடன், பாரதி வாசகசாலை நகரத்தாரால் 1941முதல் நடத்தப்பட்டு வருகிறது.

நெற்குப்பை:

இராம.சா.சாத்தப்ப செட்டியார் குடும்பத்தாரால் நிலமும், கட்டிடமும் நன்கொடை கொடுக்க சாத்தப்பா அரசு உயர்நிலைப் பள்ளி 1956இல் தொடங்கப் பெற்றது.

தி. கனகசபை செட்டியார், அ. கனகசபை செட்டியார் குடும்பங்களால் தியாகராாசன் - அண்ணாமலை தொடக்கப்பள்ளி நடைபெற்று வருகிறது.

சுப.அ. பழநியப்ப செட்டியார் தொடங்கி நடத்திய அலமேலு - பழநியப்பா மருத்துவமனை தற்போது அரசு மருத்துவமனையாய் இயங்கி வருகிறது.

நேமத்தான்பட்டி:

20-9-1926இல் சி.வீ.நா. பழநியப்ப செட்டியாரால் திருநாவுக்கரசு வித்தியாசாலைப் பள்ளி, திருநாவுக்கரசு நூல் நிலையம், மருணீக்கியார் இசையரங்கம் என எங்கும் திருநாவுக்கரசர் பெயரால் கல்வி நிலையங்கள் தோற்றுவிக்கப் பெற்றன.

ஈ.கா.சோ.சோமசுந்தரம் செட்டியாரால் 1934இல் சோமசுந்தர வித்தியாசாலை என்ற தொடக்கப்பள்ளி தொடங்கப் பெற்றது. அப் பள்ளி 1947இல் நடுநிலைப் பள்ளியானது.

பட்டமங்கலம்:

அ.வீர. அடைக்கப்ப செட்டியார் நிலமும், கட்டிடமும் நன்கொடை அளிக்க அரசு தொடக்கப் பள்ளி நடைபெறுகிறது. கருங்குளம் ரெ. குடும்பத்தினர் வள்ளியம்மை ஆச்சி மேல்நிலைப் பள்ளியை நடத்துகின்றனர்.

அ.வீர.அ.வீர. அடைக்கப்ப செட்டியார் 1987 முதல் ஸ்ரீ அட்டமாசித்தி வேத ஆகமப் பாடசாலையை நடத்தி வருகிறார்.

Koviloor Digital Library

பள்ளத்தூர்

உ.அ.பெரி.மு. அருணாசலம் செட்டியார் 1922இல் அருணாசலம் செட்டியார் உயர்நிலைப் பள்ளியை நிறுவினார். அப் பள்ளி இப்போது மேல்நிலைப் பள்ளியாய் இயங்கி வருகிறது.

சொ.மா.கரு.அண.கரு. குடும்பத்தாரால் அழகம்மை ஆச்சி தொடக்கப் பள்ளி 100 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது.

மு.வெ. குடும்பத்தாரால் சீதை ஆச்சி நடுநிலைப்பள்ளியும், சீதை ஆச்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளியும் நடத்தப்பெற்று வருகிறது.

உ.அ.பெரி.மு.அரு. குடும்பத்தாரால் 1962முதல் சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி நடத்தப்பெற்று வருகிறது. நகரத்தாரால் நடத்தப் பெறும் முதல் மகளிர் கல்லூரி இது. இப்போது வள்ளல் மகள் டாக்டர் உமையாள் இராமநாதன் மகளிர் கல்லூரியைத் தொடங்கியுள்ளார்.

அ.மு.மு. குடும்பத்தார் அ.மு.மு. மருத்துவமனையை நடத்து கின்றனர்.

அரு. அண்ணாமலை செட்டியார் இராமகிருட்டிணா தபோவனம், சின்மயானந்தா பள்ளி, திருவள்ளுவர் தவச்சாலை, திருக்குறள் அஞ்சல் வழி கல்வி நிலையம் முதலியவற்றிற்கு நன்கொடை அளித்துள்ளார்.

பனையபட்டி :

சி.மு.மு. அருணாசலம் செட்டியார் 1947இல் சி.மு. உயர்தர ஆரம்பப்பாட சாலையை நிறுவினார். இப்பள்ளி சி.மு.மு.அரு. அலமேலு - அருணாசலம் நடுநிலைப்பள்ளி என 1987இல் பெயர் மாற்றப்பட்டு, நகரத்தார் சங்கம் நிருவாகத்தில் நடத்தப்பெற்று வருகிறது.

சி.மு. சின்னையா செட்டியார் நன்கொடை மூலம் தொடங்கப் பட்ட அரசினர் மருத்துவமனை ஒன்றும் ஆரம்ப சுகாதாரப் பணிகளைச் செய்து வருகிறது.

பாகநேரி: பெரி.அழ.முத்துக்கருப்பன் செட்டியார் மகள் தெய்வானை ஆச்சி (இவர்கள் ஒக்கூரில் வாழ்க்கை பெற்றவர்கள்) நிலமும், கட்டிடமும் நன்கொடை கொடுக்க தெய்வானை ஆச்சி அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி 1963 முதல் நடைபெற்று வருகிறது.

Koviloor Digital Library

கண. அருணாசலம் செட்டியார் நிலமும், கட்டிடமும் நன்கொடை கொடுக்க கண. அருணாசலம் செட்டியார் அரசு மருத்துவமனை 1980 முதல் நடைபெற்று வருகிறது.

பெரி.அழ.மு. குடும்பத்தினர் தனியாக மருத்துவமனை கட்டித் தம் சொந்தச் செலவில் நடத்தி வருகின்றனர்.

வித்துவான் காசிச் செட்டியார் தம்மிடம் இருந்த ஆயிரக் கணக்கான நூல்களை அரசிடம் ஒப்படைத்து, அவர் பெயரால் மாவட்டக் கிளை நூலகம் செயல்பட்டு வருகிறது.

புதுப்பட்டி (பொன்னமராவதி):

சா.மு.இராம. சண்முகம் செட்டியார் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசு ஆரம்பப் பாடசாலை நடைபெறுகிறது.

நாக.இராம. இராமசாமி செட்டியார் நிலமும், கட்டிடமும் நன்கொடை கொடுக்க நாகப்ப செட்டியார் நினைவு அரசு ஆரம்பப் பள்ளி நடைபெற்று வருகிறது.

சிவ.மு. முத்தையா செட்டியார் கலியாணி பெண்கள் தையற் பயிற்சி நிலையம் நிறுவி, பெண்களுக்கு இலவசப் பயிற்சி அளிக்கிறார்.

புதுவயல்:

நகரத்தார் தொடங்கிய ஸ்ரீசரசுவதி சங்கம் சார்பாக 1933இல் ஸ்ரீசரசுவதி வித்தியாசாலை என்னும் பெண்கள் நடுநிலைப் பள்ளியைத் தொடங்கினர். அப்பள்ளி இப்போது உயர்நிலைப் பள்ளியாய் உயர்ந்து நடைபெற்று வருகிறது.

வடு.மு.இராம. குடும்பத்தினர் முத்தையா மீனாட்சி ஆங்கில வழித் தொடக்கப்பள்ளியை நடத்துகின்றனர்.

வடு.மு. இராமநாதன் செட்டியார் தொடக்கப் பள்ளியையும், மேல் நிலைப் பள்ளியையும் நடத்தி வருகின்றார்.

பூலாங்குறிச்சி:

வ.சொ. சொக்கலிங்கம் செட்டியாரால் மீனாட்சி சொக்கலிங்கம் மருத்துவ மனை கட்டப்பெற்று அரசு மருத்துவமனையாகச் செயல்படுகிறது. இம் மருத்துவமனை ஆண்களுக்குரியது.

Koviloor Digital Library

வ.சொ.இராம. வள்ளியப்ப செட்டியாரால் இராமநாதன் பெண்கள் குழந்தைகள் மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

வ.சொ.இராம. வள்ளியப்ப செட்டியார் நிலமும், கட்டிடமும் நன்கொடை கொடுக்க, 15-6-1943 முதல் அரசு தொடக்கப்பள்ளி செயல் பட்டு வருகிறது.

வ.செ. குடும்பத்தாரால் வ.செ. மீனாட்சி ஆச்சி தொடக்கப்பள்ளி நடத்தப் பெற்று வருகிறது.

சுப,சொ. குடும்பத்தார் அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டிக் கொடுத்துள்ளனர்.

வ.செ. சிவலிங்கம் செட்டியார் இடமும், பணமும் நன்கொடை வழங்க வ.செ. சிவலிங்கம் செட்டியார் அரசு கலைக் கல்லூரி நடை பெற்று வருகிறது.

மகிபாலன் பட்டி:

நகரத்தார்கள் மங்கள விநாயக வித்தியாசாலை தருமப்பள்ளிக் கூடத்தைக் கட்டி அரசிடம் ஒப்படைத்துள்ளனர்.

கண்டவராயன் பட்டியிலிருந்து மகிபாலன்பட்டி வரை, இவ்வூரில் பிறந்து தேவகோட்டைக்குப் பிள்ளை வளரச் சென்ற அ.கண. வீரப்ப செட்டியார் தாம் பிறந்த ஊரின் நினைவாகச் சாலை அமைத்தார்.

மதகுபட்டி:

உல.செ.சு. இராம.இராமசாமி செட்டியார் குடும்பத்தாரால் 1950 இல் கற்பக மாதா நடுநிலைப்பள்ளி தோற்றுவிக்கப்பட்டது.

சுப.கண.சுப.மு. வள்ளியம்மை ஆச்சி இடமும், கட்டிடமும் நன்கொடை வழங்க, அரசு ஆயுர்வேத மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

மானகிரி

லெ.அருணாசலம் செட்டியார் 1928இல் லெ.அரு. நடுநிலைப் பள்ளியை நிறுவி நடத்தி வருகின்றார்.

Koviloor Digital Library

இராம.சு. இராமசாமி செட்டியாரால் கட்டப்பெற்ற மகப்பேறு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

மிதிலைப்பட்டி:

ந.பழ.சித.மு.ந. நல்லகருப்பஞ் செட்டியாரால் 1979இல் தொடங்கப் பெற்ற சிவலிங்கம் - மீனாட்சி தொடக்கப் பள்ளி அரசுப் பள்ளியாய் செயல்படுகிறது.

சிவயோகபுரத்தில் கா.மு.வயி.கரு.இராம. இராமசாமி செட்டியார் நிலமும், கட்டிடமும் நன்கொடை வழங்க, அரசுப் பள்ளியாய் செயல்படுகிறது.

மேலைச்சிவபுரி:

வ.பழ.சா. குடும்பத்தாரால் தமிழ் வளர்ச்சி கருதி 1909 இல் சன்மார்க்க சபை என்ற ஒரு கழகம் நிறுவப் பெற்றது. அதன் சார்பில் கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, தொல்காப்பியனார் புத்தகசாலை, முதலியன நிறுவப்பெற்றன. இக் கல்லூரியில் தமிழ்ப் பிரவேசம், பால பண்டிதம், பண்டிதம் வகுப்புக்கள் நடத்தப்பெற்றன. பின்னர் வித்துவான் வகுப்பு நடத்தப்பெற்றது. இப்போது கலைப்பிரிவும், மாலை நேரக் கல்லூரி, மற்றும் முதுகலைப் பட்ட ஆய்வு வகுப்புகள் முதலியனவும் நடைபெறுகின்றன. இச்சங்கம் சார்பாகத்தொடக்கப் பள்ளியும், கணேசர் மழலையர் பள்ளியும் நடத்தப் பெறுகின்றது.

வ.பழ.சா. குடும்பத்தார் வேந்தன்பட்டியிலிருந்து மேலைச்சிவபுரி வழியாக பொன்னமராவதிக்குச் சாலை அமைத்தனர்.

முருகமணி முரு. பழநியப்ப செட்டியார் நன்கொடையால் அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளியாய் செயல்பட்டு வருகிறது.

இராங்கியம்:

1948இல் நகரத்தார் பொதுவில் சிவகாமி அம்பிகை தொடக்கப் பள்ளியை நிறுவினர். அப் பள்ளி பின்னர் உயர்நிலைப் பள்ளியாய் உயர்ந்தது. இப்போது தொடக்கப் பள்ளியும், உயர்நிலைப் பள்ளியும் நடத்தப்பட்டு வருகிறது.

வ.நா.வள்ளியப்ப செட்டியார் அரசு மருத்துவமனை அவர் நன்கொடையால் நடைபெற்று வருகிறது.

Koviloor Digital Library

இராம.வீர.இராமசாமி செட்டியார் கல்வி உதவி மற்றும் திருமண உதவி செய்ய இராமசாமி செட்டியார் கல்வி அறப்பணிக் கழகத்தைத் தொடங்கியுள்ளார்.

இராயவரம்:

சு.கதி. கதிரேசன் செட்டியார் தம் மணி விழாவில் காந்தி பாடசாலை என்ற தொடக்கப் பள்ளியை நிறுவினார். அப் பள்ளி பின்னர் உயர்நிலைப் பள்ளியாகி இப்போது மேல்நிலைப் பள்ளியாய் நடந்து வருகிறது.

மு.அ.மு. குடும்பத்தினர் சுப்பிரமணியன் பல்தொழில் பயிற்சி நிலையத்தை நடத்திவருகின்றனர்.

சுப்பிரமணியன் செட்டியார் நன்கொடையால் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் நடந்து வருகிறது.

கொத்தமங்கலம் லெட்சுமிபுரம்:

ந.சொ.அரு. அருணாசலம் செட்டியாரால் 6-3-1927 முதல் சொக்கலிங்கம் வித்தியாசாலை நடைபெற்று வருகிறது.

நெய்க்கோணம் லெட்சுமிபுரம்:

நகரப்பொதுவில் தொடக்கப் பள்ளி நடைபெற்று வருகிறது.

வலையபட்டி:

நா.மு.இராம. குடும்பத்தாரால் 1920இல் சித்தி விநாயகர் செந்தமிழ்க் கலாசாலை தொடங்கப் பெற்றது.

வயி.வ. வடுகநாதன் செட்டியார் குடும்பத்தாரால் 1930இல் அலமேலு ஆரம்பப் பாடசாலை தொடங்கப் பெற்றது.

குப.ச. பழநியப்ப செட்டியார் குடும்பத்தாரால் பழநியப்பா நடுநிலைப் பள்ளி தொடங்கப்பெற்றது.

1944இல் வடு. வகையினரால் வடுகநாதன் பள்ளி தொடங்கப் பெற்றது. இப்போது அப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாய் இயங்கி வருகிறது.

வி.எஸ்.டி. குடும்பத்தாரால் வி.எஸ்.டி. சிதம்பரம் மெட்ரிகுலேசன் பள்ளி நடத்தப்பட்டு வருகிறது.

Koviloor Digital Library

ந.இராம.அ. பெரிய கருப்பன் செட்டியார் குடும்பத்தார் நிலமும், கட்டிடமும் நன்கொடை கொடுக்க பாப்பாயி ஆச்சி அரசு மருத்துவமனை நடத்தப்பெற்று வருகிறது.

வடு. வைரவன் செட்டியார் வடு. இலக்குமணன் செட்டியார், வடு. நாகப்பசெட்டியார், வடு. வடுகநாதன் செட்டியார், ஆகிய நால்வரும் 9-5-1930இல் அலமேலு பெண்கள் கல்லூரியை நிறுவினர்.

விராமதி:

சு.வே.கதி. குடும்பத்தாரால் 1934இல் தொடங்கப் பெற்ற சு.வே.கதி. சிகப்பி ஆச்சி வித்தியாசாலை என்ற தொடக்கப் பள்ளி நடைபெற்று வருகிறது.

விரையாச்சிலை:

1926இல் பெரி.மெ. மெய்யப்ப செட்டியார் கட்டிடமும், ஆசிரியர் இல்லமும் கட்டி நன்கொடையாக அரசிடம் ஒப்படைக்க ஸ்ரீபெரி.மெ. மெய்யப்பசெட்டியார் தொடக்கப் பள்ளி நடைபெற்றது. 1962இல் அவரே ஏற்று ஸ்ரீபெரி.மெ. மெய்யப்ப செட்டியார் நடுநிலைப் பள்ளியை நடத்தி வருகிறார்.

வேகுப்பட்டி:

நகரத்தாரில் சிலர் வாசகசாலையை ஏற்படுத்தினர்.

கும.கு.இராம.வால் வேகுப்பட்டியிலிருந்து கொப்பனாபட்டி வரை சாலை அமைக்கப்பட்டது.

ஆ.பழ. குமரப்ப செட்டியாரால் 1920 இல் சிவகாமசுந்தரி செந்தமிழ் பாடசாலை என்ற தொடக்கப் பள்ளி நிறுவப்பட்டது.

வேந்தன் பட்டி:

13-4-1927இல் திருவள்ளுவர் வாசகசாலை ஏற்படுத்தப் பட்டது.

லெ.நா. சொக்கலிங்கம் செட்டியார் கட்டிடம் நன்கொடை கொடுக்க, நகரப் பொது நிர்வாகத்தில் நகரத்தார் தொடக்கப் பள்ளி நடைபெற்று வருகிறது.

Koviloor Digital Library

நன்றி : பெரும் புலவர் பண்டிதமணி அவர்கள் எழுதிய நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு என்ற நூல். பதிப்புச் செம்மல் தமிழவேள் தொகுத்த நகரத்தார் கலைக் களஞ்சியம்

நகரத்தாரின் கொடைத் திறத்தை மகாகவி பாரதியார் இவ்வாறு பாராட்டுகிறார்.

உண்மையே தாரகம் என்று உணர்ந்திட்டார்
அன்பு ஒன்றே உறுதி என்பார்.
வண்மையே குலதர்மம் எனக் கொண்டார்.
தொண்டு ஒன்றே வழியாக் கண்டார்.
ஒண்மையுயர் கடவுளிடத்து அன்புடையார்
அவ்வன்பின் ஊற்றத்தாலே
திண்மையுறும் இந்துமத அபிமான
சங்கம் ஒன்று சேர்த்திட்டாரே.
பல நூல்கள் பதிப்பித்தும் பலபெரியோர்
பிரசங்கம் பண்ணுவித்தும்
நலமுடைய கலாசாலை புத்தகசாலை
பலவும் நாட்டியும்தம்
குலமுயர நகருயர நாடுயர
உழைக்கின்றார்........

– பாரதியார்

Koviloor Digital Library

5. நகரத்தார் வீடுகள் கட்டிடப் பாணி

ஆரம்பத்தில் நகரத்தார்கள் மண்சுவர் வைத்துக் கட்டப்பெற்று, மேற்கூரையாக ஓலை (பனைஓலை) வேயப்பட்ட வீடுகளில் வாழ்ந்தனர்.

அயல் நாடுகள் சென்று செல்வம் திரட்டியவுடன், தங்கள் செல்வச் செழிப்பைக் காட்ட மண் சாந்து வைத்து செங்கலால் கட்டப் பெற்று, மேற் கூரையாக நாட்டு ஓடு போடப்பட்ட வீடுகளில் வாழ்ந்தனர். கட்டிடம் கட்ட பனைமரத்தையும், வேப்பமரத்தையும், காட்டு மரத்தையும் பயன்படுத்தினர்.

அதன் பின்னர் நிலைகள், சன்னல்கள், சுவர் அலமாரிகள் வருகின்ற இடங்களில் சுண்ணாம்புச் சாந்து வைத்துக் சுட்ட செங்கல் வைத்துக் கட்டினர். (முன்பெல்லாம் வேகாவரிக் கல் என்ற சரியாகச் சுடாத செங்கலையே வைத்துக் கட்டினர்). மற்ற இடங்களில், அதாவது சுவர் எழுப்புகின்றபோது மண்சாந்து வைத்துச் செங்கலால் கட்டினர். மேற்கூரையில் சீமைஓடு போட்டனர். அவ்வீட்டில் வாழ்ந்தனர்.

மண்சாந்து வைத்துக் கட்டியதால் வீடுகளில் கரையான் களுக்குக் குறைவில்லை. தமிழ் ஏடுகளைக் கரையான் சுவைத்து அழித்ததைப் போல, நகரத்தார் வீட்டுக் கைமரங்களையும், உத்திரங் களையும், சாமான்களையும் கரையான் சுவைத்து அழிக்கின்றது. வெளியூர்களில் வாழும் ஆச்சிமார்களும், செட்டியார்களும், சொந்த ஊரில் உள்ள சொந்த வீட்டுக்கு வரும்போது, இக் கரையான்களைக்

Koviloor Digital Library

கூட்டியள்ளி, சுத்தப்படுத்தி, கரையான் எண்ணெய் அடித்து, வாழும் ஊர்களுக்குத் திரும்புவர். இவர்கள் படும்பாட்டை எழுத்தில் வடிக்க முடியாது.

அதனால் நகரத்தார்கள் மேக்கோப்பைப் பிரித்து விற்று விட்டு (மகளின் திருமணத்திற்காகவும், வறுமையின் காரணமாகவும் விற்பவர்களும் உண்டு). கட்டிடத்தை இடித்துத் தரைமட்டமாக்கி சிறிய அளவில் தாரிசு வீடு கட்ட ஆரம்பித்தனர். செட்டி நாட்டுப் பகுதி செம்மண்ணாய் இருப்பதால் கரையானுக்குப் பஞ்சமில்லை.

காலமாற்றத்தால் பெரும் செல்வந்தர்கள் ஆன நகரத்தார்கள், சுண்ணாம்பை சாந்தாக அரைத்து (இதற்காகப் பல வீடுகளில் சுண்ணாம்பு அரைக்க செக்கு அமைத்தனர்) முட்டையின் வெள்ளைக் கரு, கருப்பட்டிச் சாறு கலந்து சுவர்களில் பூசி வழுவழுப்பாக்கிக் கட்டிய வீடுகளில் வாழ்ந்தனர்.

பின்னர் சாந்து, சித்துக்கல், அட்டைக்கை என்ற சிறிய உத்திரங்கள் வைத்து தாரிசு போட்டு, அதன்மேல் செங்கல்தூளைப் போட்டு (இதற்கு சுருக்கி போடுதல் என்பர்) அதன்மேல் தட்டோடு என்ற சதுர மண் கல்லைப் பதிப்பர். அவ்வாறு செய்வதால் மழைநீர் வீட்டினுள் இறங்காது பாதுகாப்பாய் இருக்கும். அதாவது வீடு ஒழுகாது. சித்துக்கல்லை (செங்கல் போல உள்ள சிறிய கல்) சுண்ணாம்புச் சாந்தில் வைத்து ஒட்ட, கருப்பட்டித் தண்ணீரில் கடுக்காயை ஊறவைத்து, அத்தண்ணீரையே பயன்படுத்துவர். இதற்கு 'மதறாசு தாரிசு' எனப் பெயர்.

இப்போது சிமிண்ட்டைப் பயன்படுத்தி வீடு கட்டுகின்றனர். மேற் கூரையில் கம்பியைக் கட்டி, சல்லிக்கல்லைச் சிமிண்ட்டில் கலந்து குழைத்து கான்கிரீட் தாரிசு போடுகின்றனர். அதிலும் செங்கல் தூள் சுருக்கி போட்டுத் தட்டோடு பதிப்பர். இதற்குப் 'பாம்பே தாரிசு' என்று பெயர்.

தாரிசு வீடுகள் வெய்யில் காலங்களில் அதிக வெப்பமுடையதாய் இருக்கும். சுவர்களும், தரையும் கொதிக்கும். இவ் வெப்பத்தைத் தணிக்க மின்விசிறியைப் பயன்படுத்தினால் அது அனல் காற்றை வீடு முழுவதும் வாரி இறைக்கும்.

Koviloor Digital Library

தங்கள் செல்வ வளத்திற்கேற்ப, தாரிசு வீடுகளில் வசதிகளைச் செய்து கொள்கின்றனர்.

முன்பெல்லாம் பனை ஓலை விசிறி, தென்னை ஓலை விசிறியை வெய்யில் காலத்தில் பயன்படுத்துவர். சில செல்வந்தர் வீடுகளில் உத்தரத்தில் மரச் சட்டத்தில் பொருத்தப்பட்ட துணி கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும். அதில் ஒரு நீளமான கயிற்றைக் கட்டிக் கீழே தொங்கவிட்டிருப்பர். அந்த விசிறிக்கு 'வங்கா' என்று பெயர், அது தொட்டில் போல அசையும். அக் கயிற்றைப் பிடித்து தொட்டில் போல ஆட்டிக் காற்றை உண்டாக்க வேலையாள் ஒருவர் இருப்பார்.

நகரத்தார்கள் முதன் முதலில் கட்டிய வீடுகளில் தரையெல்லாம் மண்தரையாகவே இருந்தது. அதில் சாணி போட்டு மெழுகுவர். மண் தரையாய் இருந்தாலும் தரை வழுவழுப்பாய் இருக்கும்.

பின்பு தரையில் சாந்து (சுண்ணாம்பு) போட்டுப் பூசினர். அதன் பின்னர் சிமிண்ட் கலவையைப் போட்டுத் தரையைப் பூசினர். பிறகு சின்னச் சின்னக் கற்களைப் பரப்பி வழுவழுப்பாக்கும் இயந்திரத்தால் அக்கற்களைத் தேய்த்து தரையை மெழுகினர். அத் தரைக்கு 'மொசைக் தரை' என்று பெயர். சில வீடுகளில் ஆத்தங்குடி பூங்கற்களைத் தரையில் பதித்து வீட்டை அழகுபடுத்தினர்.

அதன்பின் 'டைல்ஸ்' என்று சொல்லப்படுகின்ற பலவண்ண பூக்கற்களைத் தரையில் பதித்தனர். இது இத்தாலிக் கற்களைப் போல அழகாய் இருக்கும். அதன்பின் "மார்பிள்" என்று சொல்லப்படுகின்ற சலவைக் கற்களைத் தரையில் பதித்தனர்.

தற்போது 'கிரானைட்' என்று சொல்லப்படுகின்ற கருப்புக் கற்களைப் பதித்து தரையை அமைக்கின்றனர். வெய்யிலில் சுற்றிவிட்டு வீட்டுக்குள் நுழைந்தால் தரையில் தண்ணீர் கிடப்பதைப் போன்ற மாயத்தோற்றம் உண்டாகும். பாண்டவர்கள் மாளிகைக்குள் துரியோதனன் நுழைகின்றபோது தரையில் தண்ணீர் கிடப்பதாக நினைத்து ஆடையை மேலே தூக்க, திரௌபதி அவனைப் பார்த்து சிரித்தாளே அக் காட்சி நினைவுக்கு வரும்.

முன்பு சுவரில் மயில், பூப்போன்ற கற்களை ஒட்டியதைப் போல, இப்போது 'டைல்ஸ்' என்ற கற்களை ஒட்டுகின்றனர். வீட்டைப் பல

Koviloor Digital Library

இலட்சம் செலவழித்து அழகுபடுத்தித் தங்கள் செல்வ வளத்தைக் காட்டுகின்றனர்.

பல இலட்சம் செலவழித்து இன்று வீடு கட்டியும், அந்தக்கால வீடுகள் போல வெளிச்சமோ, காற்றோட்டமோ இல்லை. காற்றுக்குக் காற்றாடி தேவைப்படுகிறது. இது செயற்கைக் காற்று. இயற்கைக் காற்று உள்ளே நுழைய வழியில்லை. வெளிச்சத்திற்கு கண்ணைக் கூச வைக்கும் பல விளக்குகளைப் பகலிலும், இரவிலும் எரிய விடவேண்டும். இல்லையெனில் இருட்டாய் இருக்கும். இயற்கை வெளிச்சம் வர வழியில்லை.

சாணியால் மெழுகி சுகாதாரத்தை அனுபவித்த நகரத்தார்கள், இன்று பல்வேறு "கிளினீங் பவுடர்"களைப் போட்டுத் தரையை மெழுகி சுத்தமாக்குகின்றனர். சாம்பலை வைத்துப் பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவிய நாம், இன்று 'சபீனா', 'விம்', 'பிரில்' இன்னும் பல பவுடர்களை வைத்துப் பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவுகிறோம்.

நகரத்தார் வீடுகள் அமைப்பில் மாறிவிட்டன. ஆனால் பண்பாட்டில் மாறவில்லை!

நகரத்தார் வீட்டின் அமைப்பு கீழ்க்கண்டவாறு இருக்கும். முதலில் முகப்பு. அடுத்து வளவு. அதனை அடுத்து இரண்டாங் கட்டு, சாப்பாட்டுக் கூடம், அடுப்படி, தோட்டம் என அமைந்து இருக்கும்.

முகப்பு:

நகரத்தார் வீட்டின் முகப்பு ஒரு வீதியில் இருக்கும், பின்கதவு அடுத்த வீதியில் இருக்கும். வீட்டின் உள்ளே நுழைந்தவுடன் உள்ள பகுதி முகப்பு எனப்படும். முகப்பு என்பது வீதியிலிருந்து பல படிகள் ஏறி வீட்டினுள் நுழைந்தவுடன் உள்ள பகுதியாகும். முகப்பின் இரு புறங்களிலும் திண்ணைகள் இருக்கும். இதற்கு முகப்புத் திண்ணை என்று பெயர்.

முகப்பு நிலையில் பல சிற்ப வேலைப்பாடுகள் செய்யப் பட்டிருக்கும். நிலையின் நெற்றிப் பகுதியில், இருபுறமும் யானைகள்

Koviloor Digital Library

மாலை ஏந்தி வாழ்த்தி நிற்க, இலக்குமி என்னும் திருமகள் தாமரை மலரில் வீற்றிருக்கும் நிலை வடிக்கப்பட்டிருக்கும்.

அதனால்தான் அருட்கவி பாடுவார் முத்தப்பர், ''வேள் வணிகர் வீடுகட்கு அன்றைக்கு வந்த அம்மா இலக்குமியே என்றைக்கும் நீங்காதிரு'' எனப் பாடினார்.

நிலையின் நெற்றிப் பகுதியில் பல சிற்பவேலைப்பாடுகள் நிறைந்திருப்பதால் இதனை 'எழுதகம்' என்பர்.

வளவு:

முகப்பைக் கடந்தவுடன் வருவது வளவு. வளவு என்பது நான்கு பக்கமும் பத்தி என்று சொல்லப்படும் பகுதி இருக்கும். அப் பத்தியின் ஒரு நீளப் பகுதியில் அறைகள் இருக்கும். சில வீடுகளில் ஒரு அறைக்குள் மற்றொரு அறை இருக்கும். இந்த அறைக்கு உள்வீட்டறை என்று பெயர். இந்த அறைக்குத் தனியாக நிலை, கதவும், கதவைப் பூட்டித் தனியாக வைத்துக்கொள்ளும் முறையிலும் அமைக்கப் பட்டிருக்கும்.

பெரும்பாலும் அறையின் கதவு ஒரே கதவாகத்தான் இருக்கும். ஒரு அறை இருந்தால் 'ஒற்றை அறை' வீடு என்றும், ஒரு அறையினுள் மற்றொரு அறை இருந்தால் 'இரட்டை அறை' வீடு என்றும் அழைப்பர்.

இரட்டை அறை வீட்டில் சாமி படங்களும், முக்கியமான சாமான்களும் இருக்கும். சிலர் இந்த இரட்டை அறை வீடுகளை ஆண்டு வாடகைக்கு அடுத்தவர்கள் தங்கள் சீர்வரிசை சாமான்களை வைத்துக் கொள்ள விட்டுவிடுவர். தங்கள் வீடுகளில் போதிய அறை இல்லாதவர்கள். வேறு வீடுகளில் உள்ள வீடுகளில் வாடகை கொடுத்து சாமான்களை வைப்பர்.

இவ்வாறு வைக்கப்படும் சாமான்கள், அவர்களுடைய மகள் திருமணத்தின்போதுதான் எடுக்கப்படும்.

அறைவீடுகளில் ஒரு அறை வீட்டை சாமி வீடு எனப் பொதுவில் வைத்துக்கொள்வர். அவ்வீட்டில் 'படைப்பு' எனப்படும் முன்னோர் வழிபாடு நடைபெறும்.

Koviloor Digital Library

அறைகள் உள்ள பத்திக்கு எதிர் பத்தியில் 'பீரோ'க்கள் வரிசையாய் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.

நான்கு பக்க மூலையில் ஓட்டின் இடையில் தூப்பாய் போல பள்ளமான பகுதி இருக்கும். அப்பகுதியில் குழைவு தகரத்தைப் பொருத்தி இருப்பர். இத் தகரங்கள் துத்தநாகத் தகரங்களாய் இருப்பதால், எளிதில் இற்றுப் போகாது. அத் தகரத்திற்குக் 'கூடல்வாய்த் தகரம்' என்று பெயர்.

மழைக் காலங்களில் கூடல் வாய்த் தகரங்கள் வழியே தண்ணீர் அருவி போலக் கொட்டும். நான்கு மூலைகளிலும் கொட்டுகின்ற தண்ணீரை வளவு வாசலில் பெரிய காசாணி (செப்பு) அண்டாக்களில் பிடித்து வைப்பர். காசாணி அண்டாவின் வாயில் துணியைக் கட்டி மழைநீரை அதன் மூலம் வடிகட்டுவர். அத்துணி கட்டுதலை 'வேடுகட்டுதல்' என்பர்.

அத் தண்ணீர் கெடாமல் பல மாதங்கள்வரை இருக்கும். அந்நீரைக் குடிப்பதற்கும் சமைப்பதற்கும் பயன்படுத்துவர்.

வளவின் நடுவில் வாசல் இருப்பதால் கிணறு போன்று நீரைச் சேமிக்க வழி உள்ளது. மழைநீரைச் சேமிக்கும் பழக்கத்தை அந்தக் காலத்திலேயே நகரத்தார்கள் கைக்கொண்டிருந்தார்கள் என்பதையே இந்த அமைப்புமுறை காட்டுகிறது!

வளவில் வாசல் இருப்பதால் வளவில் நல்ல வெளிச்சமும், காற்றோட்டமும் இருக்கும். வெய்யில் காலங்களில் வளவு வாசலில் தண்ணீரை மாலையில் ஊற்றி அல்லது தெளித்து வெப்பத்தை நீக்கி, இரவில் படுத்துறங்கினால் சுகமான தூக்கம் வரும். அச் சுகத்தை எழுத்தில் வடிக்க முடியாது. அனுபவித்து உணர வேண்டும்.

வளவை அந்த வளவின் நீளத்திற்கேற்பத் தூண்கள் தாங்கி நிற்கும். இத்தூண்கள் வெள்ளைக் கல்லிலோ, கருப்புக் கல்லிலோ மரத்திலோ இருக்கும்.

வளவு வாசலில் திருடர்கள் வீட்டினுள் நுழைந்துவிடாமல் இருக்கவும், வாசலில் காயப்போடும் பொருள்களைக் காக்கை போன்ற பறவைகள் கொத்திச் செல்லாமல் இருக்கவும் கம்பி வைத்து அடைத்திருப்பார்கள்.

Koviloor Digital Library

அக் கம்பி வலையின் சிறு பகுதி திறந்து மூடக்கூடியதாய் இருக்கும். அக் கதவைப் பூட்டி வைத்திருப்பர். வேண்டும்போது திறந்து கொள்வர். வளவில் ஏதாவது பழுது ஏற்பட்டால் அக் கதவைத் திறந்து மேலே ஏறிச் சென்று பழுதை நீக்குவர்.

மே(ல்)வீடு:

வளவின் ஒரு மூலையில் சிறிய வழி வைத்து அதில் படிக் கட்டுக்கள் கட்டி மேலே ஏறிச் செல்வர். வளவு அறையை ஒட்டிய இப் பகுதிக்குத் தனிக்கதவும், பூட்டித் திறக்கும் அமைப்பும் வைக்கப்பட்டிருக்கும். இதனை மேல்மாடி என்பர்.

இம் மாடிப் பகுதி நீளப்பத்தியாய் இருக்கும். பத்தியில் ஒரு பகுதியைத் தடுத்து அறைகள் கட்டப்பட்டிருக்கும். இந்த அறைக்கு "மே(ல்)வீட்டறை" என்று பெயர். தனி நிலையும், கதவும் பூட்டித் திறக்கும் அமைப்பும் உள்ள இவ் அறைகளில் தாங்கள் கொண்டு வந்த சீர்வரிசை சாமான்களை அடுக்கி வைப்பர். தன் மகள் கல்யாணத்தில் அச் சாமான் களைப் பரப்பித் தான் பிறந்த வீட்டின் பெருமையைக் காண்பிப்பர்.

சாப்பாட்டுக் கூடம்:

கல்யாணம் போன்ற மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும்போதும், அமங்கல நிகழ்ச்சியின்போதும் உறவினர்கள், பங்காளிகள், மற்றவர்கள் உணவருந்த ஒரு நீளப் பகுதி இருக்கும். அதற்கு சாப்பாட்டுக் கட்டு அல்லது பந்திக் கட்டு என்று பெயர். சில ஊர்களில் இதனைக் கல்யாணக் கொட்டகை என்பர்.

இரண்டாங் கட்டு:

பந்திக்கட்டை அடுத்து வளவு போல சுற்றுப் பத்தி உடையதாய் ஒரு பகுதி இருக்கும். அதற்கு இரண்டாங்கட்டு என்று பெயர்.

சில வீடுகளில் மூனாங்கட்டு என்ற ஒரு பகுதியும் இருக்கும்.

அடுப்படி:

இரண்டாங்கட்டுக்கு அடுத்த பகுதி அடுப்படி எனப்படும். உணவு சமைக்கும் இடத்திற்கு அடுப்படி என்று பெயர். நல்ல வெளிச்சத்துடனும், புகை எளிதில் வெளியேறும் வகையிலும், சுகாதாரத்துடனும் அடுப்படி கட்டப் பெற்றிருக்கும்.

Koviloor Digital Library

வெஞ்சனம் வைக்கும்போது குழம்பையும், கூட்டையும் இரசத்தையும் தாளிப்பர். அப்போது சட்டி காய்ந்த நெடி ஏற்பட்டுத் தும்மல் வரும். அந்த நெடி மூக்கில் ஏறாவண்ணம் அடுப்படியைக் கட்டியிருப்பர்.

தற்போது கட்டும் தாரிசு வீடுகளில் புகை வெளியேற்றி (எக்ஸ்ஸாஸ்ட் ஃபேன்) என்ற விசிறியை அடுப்படிச் சுவரில் பதித்து மின்சக்தியின் உதவியினால் புகையை வெளியேற்றுகின்றனர்.

தோட்டம்:

அடுப்படிக்கு அடுத்த பகுதி தோட்டம் எனப்படும். தோட்டத்தில் வீட்டு வெஞ்சனத்திற்குத் தேவையான கத்தரிக்காய், வெண்டைக்காய், புடலங்காய், அவரைக்காய் போன்ற காய்கறிகளையும், இறைவனை வழிபடுவதற்கும், எழிலாய்க் கூந்தலில் சூடிக் கொள்வதற்கும் உரிய மல்லிகை, கனகாம்பரம், செம்பருத்தி, திசம்பர்பூ போன்ற செடி களையும், மருந்தாய்ப் பயன்படும் துளசி, கற்பூரவல்லி, விபூதிப் பச்சை போன்ற செடிகளையும், முக்கனிகளாகிய மா, பலா, வாழை மரங்களையும், உடல் வெப்பத்தைத் தணிக்கும் இளநீரைத் தரும் தென்னையையும் வைத்து நீர் பாய்ச்சிப் பாதுகாப்பர்.

தோட்டத்தில் கிணறு இருக்கும். சில வீடுகளில் முகப்பிலும் கிணறு இருக்கும்.

சில வீடுகளில் பால் மாடுகள் இருக்கும். வண்டி மாடுகளும் இருக்கும்.

பெரும்பாலான வீடுகளில் முகப்பில் இருபுறமும் திண்ணைகள் இருக்கும்.

நகரத்தார்கள் ஆதியில் இருந்தே கடல் வாணிபம் செய்தவர்கள். அவர்கள் பர்மா, இலங்கை, மலேயா, சாவா, சுமத்திரா, செய்கோன் முதலிய நாடுகளுக்குப் பாய்மரக்கப்பலில் பயணம் செய்து பெரும் பொருள் (செல்வம்) ஈட்டியவர்கள். ஆகையால் பர்மா தேக்கில் நிலை, கதவு, சன்னல் முதலியவற்றைச் செய்தனர்.

பர்மாவில் தேக்கு மரத்தை (அதனைத் தடி என்பர்) வாங்கி, பல தடிகளை ஒன்றாகக் கட்டி, அம் மரங்களில் விலாசமும், ஊரும்,

Koviloor Digital Library

தண்ணீரில் அழிந்து போகாதமையால் எழுதி ஐராவதி ஆற்றில் விட்டு விடுவர்.

அவ்வாற்றின் போக்கிலேயே அந்தத் தடிகள் மிதந்து வந்து கடலில் விழும். பின்னர் கடலில் மிதந்து வந்து தொண்டிக் கடற் கரையை அடையும். அதன் பின்னர் தங்கள் ஊர்களுக்குப் பெரிய மாட்டு வண்டியில் ஏற்றி வருவர். வீட்டின் ஓரத்தில் வீதியில் அடக்கி வைப்பர்.

வெய்யிலிலும், மழையிலும் நனைந்து காய்ந்து அம் மரங்கள் நன்கு பதப்பட்டவுடன், வீட்டிற்கு வேண்டிய நிலை, கதவு, சன்னல் முதலியவற்றைச் செய்வர். இதனால் நிலையில் விரிசலோ, கதவில் இடைவெளியோ வராது. கதவு, சன்னல் முதலியன சாத்தும்போது திகட்டாது.

பர்மாவிலிருந்து தொண்டி வர எப்பருவம், எக் காற்று உகந்தது என்பதை நன்குணர்ந்து, அம் மரங்களை அனுப்பிய நகரத்தார்களின் அறிவுக் கூர்மை வியப்புக்குரியது.

வெளி நாடுகள் பலவற்றில் 'கொண்டு' விற்றதால், வெளி நாட்டுப் பொருள்களைக் கொண்டு தங்கள் வீடுகளைக் கட்டுவதைப் பெருமையாகவும், சமூக மதிப்பாகவும் நகரத்தார்கள் கருதினார்கள்.

மழை நீரும், கழிவு நீரும் வீட்டிற்குள்ளிருந்து வெளியேறி வீதிக்கு வரத் தூம்பு என்ற தூப்பாய் அமைத்தனர். அத் தூப்பாயின் வாய் சிங்கம், புலி வாயைத் திறந்திருப்பதைப் போலச் சிற்ப வேலைப்பாட்டுடன் அமைத்தனர்.

நிலை வாசற்படி, அறை வாசற்படி எல்லாவற்றிலும் வெள்ளைக் கல்லில் சிற்றுளியால் கொத்திப் பலமுனை அடி எனப்படும் கல் வேலை செய்து பதித்து, அதில் இரண்டு புறமும் சிறுகுழி தோண்டி இருப்பர். மரநிலையின் அடியில் இருபுறமும் கூரடித்து, அக் குழிக்குள் நிலை அசையாமல் நிற்கும்படி செய்து வீடு கட்டுவர்.

வளவு வாசல் பத்தியின் நான்கு பக்க ஓரங்களிலும் பட்டியக் கல் எனப்படும் வெள்ளைக் கல்லைச் சிற்றுளியால் கொத்திப் பலமுனை அடி அடித்துப் பதிப்பர்.

Koviloor Digital Library

வளவைத் தாங்கும் கல் தூண்கள், மரத்தூண்களில் அழகிய வேலைப் பாடுகளைச் செய்திருப்பர்.

வளவைத் தாங்கும் மரத்தூண் அல்லது கல்தூணுக்கு இடையில் அழகிய வேலைப்பாடுடைய போதையக் கட்டையை வைப்பர்.

இவ்வாறு வீட்டின் ஒவ்வொரு பகுதியையும் நன்கு பார்த்துப் பார்த்து திருத்தமாய்க் கட்டுவர்.

கோவில் கட்டுவதில் நகரத்தார் பாணி என்றிருப்பதைப் போல, வீடு கட்டுவதிலும் நகரத்தார் பாணி என்ற கலை நயத் தனிப் பாணியைப் பின்பற்றினர். கலைநயமிக்க வீடுகள் கட்டுவது நகரத்தார்களின் பாணியாகும்.

சொந்த ஊரில் வீடில்லாத நகரத்தாருக்குச் சமூகத்தில் மதிப்புக் கிடையாது.

எனவே, வீடு என்பது அவசியமான ஒன்று மட்டுமல்ல; சமூக மதிப்பையும் பெற்றுத் தரும் அடையாளமுமாகும்.

பார்வையாலேயே எதையும் எடைபோடும் இயல்புடைய நகரத்தார்கள் வீட்டின் வெளித் தோற்றத்தை வைத்தே அவ் வீட்டின் சொந்தக்காரரின் சொத்தை, செல்வ வளத்தை எடைபோட்டு விடுவர்.

உள் நாட்டிலோ, வெளி நாட்டிலோ வேலை அல்லது தொழில் செய்யும் நகரத்தார்கள் தங்கள் மகள் அல்லது மகன் திருமணத்தைத் தங்கள் சொந்த ஊரில் சொந்த வீட்டில் நடத்துவதையே பெருமையாக, மரபாக, இராசியாகக் கருதுவர். தாங்கள் தற்காலிகமாக வசிக்கும் ஊரில் நடத்துவது சமூகப் பெருமையைத் தராது என நினைப்பர்.

60 ஆண்டு நிறைவு மணிவிழா, 70 ஆண்டு நிறைவு பீமரத சாந்தி விழா, 80 ஆண்டு நிறைவு சதாபிடேக விழா போன்றவற்றைத் தங்கள் சொந்த ஊரில், சொந்த வீட்டில் செய்வர். அல்லது தாங்கள் சார்ந்த கோவிலில் (உதாரணமாக மாத்தூர்) செய்வர்.

தற்போது நாகரிகம் கருதியும், தாங்கள் வசிக்கும் இடத்தில் உள்ள வசதிகள் தங்கள் சொந்த ஊரில் உள்ள சொந்த வீட்டில் இல்லாத காரணத்தாலும், போக்குவரத்து வசதி கருதியும், தங்கள் சொந்த ஊருக்கு

Koviloor Digital Library

அருகில் உள்ள நகரங்களில் (உதாரணமாக காரைக்குடி, தேவகோட்டை) உள்ள திருமண மண்டபங்களில் திருமணத்தை நடத்துகின்றனர். அதற்கு உறவினர்களையும், பங்காளிகளையும் அழைத்துச் செல்கின்றனர்.

அமங்கல நிகழ்ச்சி நடைபெற்றால் வாழுமிடத்தில் உறவினர்கள் மற்றும் பங்காளிகளுக்குத் தெரியப்படுத்திக் காரியத்தைச் செய்து முடிப்பர். பின்னர் உறவினர்கள், பங்காளிகள் அனைவருக்கும் தாங்கள் என்றைக்கு ஊருக்கு வருகிறோம், அங்கு எத்தனை நாள் இருப்போம் என்பதைத் தொலைபேசி மூலம் (முன்பெல்லாம் கடிதம் எழுதுவது பழக்கம்) தெரிவித்து, பங்காளிகளுக்கு ஒரு வேளை சோறு வடிப்பர். இது நகரத்தாரின் மரபாகும்.

இம் மரபை மீறுபவர்களை அந்த ஊர் நகரத்தார்கள் மதிப்புக் குறைவாக நினைப்பார்கள். எனவே, சமூக மதிப்புப் பெற இதனை அவசியம் செய்வர்.

இவ்வாறு மங்கல, அமங்கல நிகழ்வுகளில் சொந்த ஊரில் உள்ள சொந்த வீடு முக்கியப் பங்கு வகிப்பதால் அது சமூக மதிப்பீட்டின் சின்னமாகக் கருதப்படுகிறது.

Koviloor Digital Library

6.
நகரத்தார்களின் திருமண நிகழ்வுகள்

மனித வாழ்வின் மிக முக்கியமான நிகழ்வு திருமணமாகும். ஒவ்வொரு ஆணும், பெண்ணும் திருமணத்தைப் பற்றிப் பல்வேறு கனவுகள் காண்கின்றனர். கனவு நனவாகும்போது களிப்பும், கனவு கனவாகவே ஆனபோது வெறுப்பும் அடைகின்றனர்.

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப் பெறுகின்றன என்று சொல்வார்கள். அதனால்தான் கவியரசர் கண்ணதாசன் "மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" என்றார். கணவன் அமைவதும் இறைவன் கொடுத்த வரம்தான்.

இப்போதெல்லாம் திருமணங்கள் ரொக்கத்தில் அமைவதால் பெரும் சுமையாய் உள்ளது. பண்பாட்டின் பிறப்பிடமான நகரத்தார்கள் பணத்தை அதிகமாய் எதிர் பார்ப்பதால், பல பெண்கள் முதிர் கன்னிகளாய் உள்ளனர்.

நகரத்தார் சமூகத்தில் நடைபெறும் திருமணச் சடங்குகள் தள்ளரிய பொருள் உடையவை. திட்டமிட்டுத் தெளிவடைந்து தீர்மானிக்கப்பட்ட சடங்குகள் அவை. காலம் மாறினாலும், கல்யாண விருந்து நாள்களைக் குறைத்தாலும் மணச் சடங்குகள் மாறாத இயல்புடையவை.

மரபுக்கு மாற்றம் ஏது?

Koviloor Digital Library

முன்பு திருமணம் 7 நாட்கள் நடைபெற்றன. மாப்பிள்ளை வீடு, பெண் வீடு என இரண்டு வீட்டிலும் மாறிமாறித் திருமணச் சடங்கும், விருந்தும் நடைபெற்றன.

ஏழு நாள் கலியாணம் மூன்று நாள் கலியாணமானது. சிலப்பதி காரத்தில் குறிப்பிடுவதைப் போல சடங்குகள் நடைபெற்றன.

காலத்தின் அருமையும், தேவையும் கருதி மூன்றுநாள் கலியாணம் ஒருநாள் கலியாணமானது. தற்போது ஒருநாள் கலியாணமே நடைபெறுகிறது.

நகரத்தார் திருமண நிகழ்வுகள் கீழ்க்கண்டவாறு அமையும்.

பேசி முடித்தல்:

நனி சிறப்புடைய நகரத்தார் திருமணச் சடங்கில் முதலில் பேசி முடித்தல் நிகழ்வு நடைபெறும். செட்டிநாட்டுப் பகுதி குன்றக்குடியை மையமாக வைத்து மேலவட்டகை, கீழவட்டகை, தெற்குவட்டகை, நடுவட்டகை என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பிள்ளை வீட்டாரும், பெண் வீட்டாரும் பிள்ளை வீட்டில் திருமணத்தைப் பேசி நல்ல நாளில் முடித்துக் கொள்வர். திருமணத்தைப் பேசி முடிப்பதைப் 'பேசி முடித்தல்' என்பர். இன்னார் மகனுக்கு இன்னார் மகளைத் திருமணம் செய்வதாய் பங்காளிகளை வைத்தும், உறவினர்களை வைத்தும் பேசி முடிப்பர்.

சிட்டை எழுதிக் கொள்ளுதல்:

திருமணம் பேசி முடிக்கும் அன்றே சிலர் சிட்டை (மாமியார் சாமான் எவ்வளவு, சீதனம் எவ்வளவு, மற்ற முறைகள் எவ்வளவு எனப் பேசுதல்) எழுதிக் கொள்வர். சிலர் நல்ல நாள் பார்த்துப் பெண் வீட்டில் மாலை நேரத்தில் சிட்டை எழுதிக் கொண்டு, திருமணம் உறுதிப் பட்டதற்கு அடையாளமாகத் தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு நிறைந்த வாளியை மாற்றிக் கொள்வர். சிலர் திருமணம் பேசி முடித்த அன்றே வாளியை மாற்றிக் கொள்வர்.

பஞ்சாங்க அய்யரை அழைத்து வந்து, இரு வீட்டாரும் (பெண் வீடு, மாப்பிள்ளை வீடு) வளர்பிறை முகூர்த்தத்தில் பெண், மாப்பிள்ளை நட்சத்திரம், யோகம் முதலியவற்றிற்கு ஏற்புடைய முகூர்த்த நேரம்

Koviloor Digital Library

(திருப்பூட்டும் நேரம்), மாப்பிள்ளை அழைப்பு, பெண் அழைப்புக்குரிய நேரங்கள் முதலியவற்றைக் குறித்துத் தரச் சொல்லுவார்கள்.

அவர் பஞ்சாங்கத்தைப் பார்த்து முகூர்த்தச் சிட்டை இரண்டு எழுதி, மஞ்சள் தடவி, வெற்றிலை பாக்குத் தட்டில் வைத்துக் கொடுக்க, ஆளுக்கொரு சிட்டை எடுத்துக் கொள்வார்கள். இரு வீட்டாரும் அய்யருக்கு மரியாதை செய்து அனுப்பி வைப்பர்.

முகூர்த்தம் வைத்தல்:

தெற்கு வட்டகையில் 'கழுத்தூரு' அணிகலனுக்குப் பொன் கொடுத்தல் என்று வழங்கப்படும் முகூர்த்தம் வைத்தல் திருமணத்தில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும்.

பெண் வீட்டில் நடைபெறும் இச் சடங்கில் மாப்பிள்ளை வீட்டார் ஒரு பவுனும், பெண் வீட்டார் ஒரு பவுனும் கொடுக்க, (இப்போது மாப்பிள்ளை வீட்டார் மட்டுமே பொன் கொண்டு வருகின்றனர்) அதனை மஞ்சள் - குங்குமம் தடவி, ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, பூ, எலுமிச்சம்பழம் வைத்து இரு வீட்டாரிடமும் ஆசாரி கொடுப்பார். இதற்கு ஆசாரி 'தட்டிக் தருதல்' என்று பெயர் அத் தட்டை இரு வீட்டுப் பெரியவர்களும் தலைப் பாகை கட்டி எடுத்துச் சென்று சாமி வீட்டில் வைத்து சாமி கும்பிட்டு விபூதி பூசிக் கொள்வார்கள்.

மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்த பெரியவருடன் சில பங்காளி களும் உடன் வந்து முகூர்த்தம் வைப்பார்கள். இது திருமணத்தின் தொடக்க நிகழ்வாகும். திருமணத்தன்று மாப்பிள்ளை அழைப்புக்கு முன்பாக இது நடைபெறும்.

ஆசாரி தட்டித் தந்த பொன்னைக் 'கழுத்தூரில்' சேர்த்துச் செய்வர். 'கழுத்தூரு' என்ற அணிகலன் நகரத்தார் பெண்கள் மட்டும் அணியும் அணிகலனாகும்.

கழுத்தில் அணியும் அந்த நகையில் இலக்குமியின் உருவமும், தும்பு, மணி, மற்ற உருவங்களும் இணைந்து 33 உருப்படிகள் இருக்கும். (குச்சித் தும்பை திருமணம் முடிந்தபின் நல்ல நாள் பார்த்து கழுத்தூரில் கோர்ப்பர்) கழுத்தில் உருவத்தை அணிந்து கொள்வதால் 'கழுத்துரு'

Koviloor Digital Library

என அழைக்கப்பட்டது. காலப்போக்கில் மருவி அது 'கழுத்தாரு' ஆகி விட்டது.

செல்வ அரசியாம் இலக்குமியின் கருணையை ஆச்சி வேண்டுகிறாள். ஆச்சி இல்ல அரசி. அதற்காகவே அந்நகையைக் கழுத்தில் அணிந்து கொண்டிருக்கிறாள்.

திருமணத்திலும், மங்கல நிகழ்வுகளிலும், அமங்கல நிகழ்வு களிலும், இந் நகையை இல்ல அரசி அணிந்து கொள்வது வழக்கமாகும்.

நகரக் கோவிலில் பாக்கு வைத்தல்:

நகரத்தார் திருமணத்தில் முக்கிய நிகழ்வு நகரக் கோவிலில் பாக்கு வைத்தலாகும்.

மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்த பங்காளி ஒருவர் தான் சார்ந்துள்ள நகரக் கோவிலுக்குச் (மாத்தூர் போல) சென்று, இன்னார் மகனுக்கு இன்னார் மகளைத் திருமணம் செய்யப் போகிறோம் என்பதைத் திருமணப் பதிவேட்டில் பதிவு செய்து, திருமணத் தேதியையும் கிழமையையும் எழுதிப் பாக்குவைப்பார். திருமணப் பதிவேட்டில் கையெழுத்துச் செய்வார். இதற்குரிய கட்டணத்தையும் கட்டி வருவார்.

அதேபோல பெண்வீட்டைச் சார்ந்த பங்காளி ஒருவர் தான் சார்ந்துள்ள நகரக் கோவிலுக்கு (வயிரவன் கோவில் போல) சென்று பாக்கு வைப்பார். அவரும் திருமணப் பதிவேட்டில் திருமணத்தைப் பதிவு செய்து கையெழுத்துப் போடுவார்.

திருமணத்தைப் பதிவு செய்வதை முதன் முதலில் செய்தது நகரத்தார் இனம் மட்டுமே.

திருமணப் பதிவு செய்த கோவிலில் உறையும் இறைவன் கழுத்தில் அணிவித்துப் பூசை செய்த மாலை திருமண வீட்டாருக்கு அனுப்பப்படும். ஒரே முகூர்த்தத்திற்கு ஒரே கோவிலைச் சேர்ந்த பலர் இப்படிப் பாக்கு வைத்தால், பலருக்கும் கோவில் மாலை அனுப்ப வேண்டியிருக்கும். இதற்கு வயிராவிகள் (கோவில் மாலை கொண்டு வருபவர்) பலரை ஏற்பாடு செய்ய வேண்டியிருப்பதால் திருமணம் நடப்பதற்கு 3 தினங்களுக்கு முன்பே பாக்கு வைத்துவிட வேண்டும்.

Koviloor Digital Library

திருமணத்திற்கு முதல் நாள் வயிராவி கோவில் மாலையைக் கொண்டு வருவார். சங்கை ஊதி மாலையை வாங்கி சாமி வீட்டில் வைப்பர்.

நகரக் கோவிலில் இருந்து மாலை வந்தால்த்தான் திருமணம் செல்லுபடியாகும்.

சுருங்கச்சொன்னால் திருமணத்தை ஒப்புக்கொண்டு நகரத்தாரில் 'புள்ளி' யாவது கோவில் மாலையினால்த்தான்.

திருமணம் நடைபெறுவதற்கு 3 நாட்கள் முன்னால் சென்று பாக்கு வைக்காமல், முதல் நாள் சென்றால் கூடுதல் கட்டணம் கட்ட வேண்டும்.

சாமிக்குப் படைத்தல்:

தெற்கு வட்டகையில் சாமிக்குப் படைத்தல் என்றும், மற்ற வட்டகைகளில் 'கூடியாக்கி உண்ணுதல்' என்றும் அழைக்கப்படும் இச் சடங்கு திருமணத்திற்கு முதல் நாள் இரவில் பங்காளிகள் (ஒரே கோவிலையும், பிரிவையும் சேர்ந்தவர்கள் பங்காளிகள் எனப்படுவர்) அனைவரும் தங்களுடைய முன்னோர்களை நினைத்து சாமி கும்பிடுதலைக் குறிக்கிறது.

சாதாரணமாக நகரத்தார் வீட்டில் முறுக்கு, தேன்குழல், வடை, பணியாரம் போன்ற சிறப்புப் பலகாரங்கள் செய்கின்றபோது சாமிக்கு முன்னால் வைத்து (படைத்து) கும்பிட்ட பிறகு சாப்பிடுவது மரபாகும்.

சில வீடுகளில் கோழி (ஒரு கோழி மட்டுமே) கசாப்பு வைத்துப் படைத்து சாமி கும்பிடுவார்கள். சில வீடுகளில் காய்கறிகளைச் சமைத்து வைத்துப் படைத்துச் சாமிகும்பிடுவார்கள்.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென் றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை (குறள்–43)

என்ற வள்ளுவர் வாக்கை மறவாமல் கடைப்பிடிக்கும் சடங்கே சாமி கும்பிடுதல் என்னும் சாமிக்குப் படைத்தலாகும்.

மனை போடுதல்:

நகரத்தார் திருமணம் பெண் வீட்டில் நடைபெறும். சாமிக்குப் படைத்தவுடன் பெண் வீட்டைச் சேர்ந்த பங்காளி வீட்டு ஆச்சிமார்கள் ஆளுக்கொரு செங்கல்லை எடுத்து, மனை போடப்போகும் பத்தியில்

Koviloor Digital Library

மண்சாந்தை அப்பி அதன் மீது செங்கலை வைப்பர் (6 செங்கல் வைப்பர்). அதன்பிறகு பங்காளி வீட்டுச் செட்டியார்கள் மனையைக் கொண்டு (மரத்தால் செய்யப்பட்ட உயரமான பலகைக்கு மனை என்று பெயர்) வந்து வைப்பர்.

மாப்பிள்ளையும், பெண்ணும் ஒரே ஊராய் இருந்தாலும் மாப்பிள்ளை வீட்டில் மனை போடுவதில்லை.

மாற்றுக் கட்டுதல்:

திருமணம் நடைபெறும் இடத்தின் மேற்கூரையில் சலவைத் தொழிலாளி கொண்டு வந்த இரண்டு (கலர்) வண்ணச் சேலைகளைப் பங்காளிகள் கட்டுவர்.

நகரத்தார் வீடுகளில் சுதந்திரமாகத் திரியும் பல்லி, பாச்சை போன்றவை திருமண நேரத்தில் பெண் - மாப்பிள்ளை தலையில் பல்லி விழுந்து அபசகுனத்தை உண்டாக்காமல் இருக்க மாற்றுக் கட்டுவர்.

நீல விதானத்து நித்திலப் பூப்பந்தல் கீழ் கோவலன் கண்ணகியை மணந்து கொண்டதை மாற்றுக் கட்டுதல் நினைவூட்டுகிறது.

அரசாணிக்கால் நடுதல்:

நீளவாட்டத்தில் சிறிய அடுப்பு போலவும், இடது புறத்தில் குழியாகவும் சிமிண்டால் செய்யப் பெற்றுக் கருப்பு வண்ணம் பூசப் பட்டிருக்கும் ஒரு சிறுகல் அரசாணிக்கால் எனப்படும். குழி போன்ற பகுதியில் பவளத்தைப் போட்டு, பாலை ஊற்றிப் பங்காளிகள் கிளுவைக் குச்சியையும், பாலைக்குச்சியையும் இணைத்துக் கட்டிக் குழிக்குள் வைப்பர். அக் குச்சிகளை வளவுப் பகுதியில் திருமணம் நடைபெறும் இடத்தில் உள்ள உத்திரத்தில் கட்டுவர். அக் குச்சிகளைச் சுற்றி அரச இலையையும், மாவிலையையும் கட்டுவர்.

அரசன் ஆணைப்படி திருமணம் நடைபெற்றது என்பதைக் குறிப்பதே அரசாணிக்கால் (அரசாணைக்கால்) ஊன்றுதல் என்ற சடங்காகும்.

திருமணம் முடிந்து, பெண்ணை அழைத்து விட்டவுடன் பங்காளிகள் அரசாணிக்காலை அவிழ்ப்பர். பாலைக் குச்சியையும், கிளுவைக் குச்சியையும் வீட்டுத் தோட்டத்தில் நட்டு வைப்பர். அக் குச்சிகள் துளிர்விட்டுத் தழைக்கும்.

Koviloor Digital Library

'மாப்பிள்ளையும், பெண்ணும் ஆல்போல் தழைத்து, அருகு போல் வேரோடி வாழ வேண்டும்' என்பதை நினைவூட்டுவதே இச் சடங்கின் குறிக்கோள்.

கோலம் போடுதல்:

திருமணம் நடைபெறும் சாமி வீட்டில், பச்சரிசி மாவினால் செய்த கோலக் கூட்டில் ஏட்டுக் கயிறை நனைத்து சுவரில் தும்பு பிடிப்பர். அதன்பின் சாமி வீட்டின் உள்ளேயும், வாசற்படியிலும், வளவு வாசற்படி, வளவுக்குள் நுழையும் பத்தி, வீதி வாசற்படி முதலிய இடங்களிலும் பங்காளி வீட்டுப் பெண்கள் கோலம் போடுவர். இதில் நடு வீட்டுக் கோலம் சிறப்பாய் அமைந்திருக்கும்.

பூரம் கழித்தல் :

மணப் பெண்ணை நீராடச் செய்து அழைத்து வந்து மனையில் அமர வைப்பார்கள். பஞ்சாங்க அய்யர் மந்திரங்களைச் சொல்லிப் பெண்ணுக்கு எந்த விதமான விக்கினங்களும் ஏற்படக் கூடாது எனக் கடவுளிடம் வேண்டுவார்.

பெண்ணின் அம்மான் - மாமக்காரர் (பெண்ணின் தாயாருடன் பிறந்தவர்) பெண்ணின் கையில் காப்புக் கட்டுவார். அதன்பின் பெண் வீட்டைச் சார்ந்த ஆண்கள் பால் சட்டியில் பிய்த்துப் போட்டிருக்கும் பூவை இரண்டு கைகளிலும் வைத்துக்கொண்டு பெண்ணீன் மணிக்கட்டு, முழங்கை, தோள்பட்டை முதலிய உறுப்புகளைத் தொட்டு, இதுபோல மூன்று முறை செய்து, மூன்றாவது முறையில் பெண்ணின் தலைக்கு அப்பாலே போடுவர். இது 'மணமிடுதல்' எனப்படும்.

பெண்ணுக்குத் திட்டி கழிப்பதை மணமிடுதல் என்பர்.

மணமிடுவதற்கு முன்பாக ஊற வைத்த நவ தானியங்களைப் பித்தளையால் செய்யப்பட்ட முளைப் பாரியில் போடுவர்.

கன்னி நீராடல்:

திருமணத்திற்கு முன்பு நாவிதர் முடி எடுக்க, பெண் வீட்டில் இருந்து வந்த எண்ணெய், சீயக்காய் முதலியவற்றைப் பயன்படுத்தி நீராடி மாப்பிள்ளை இருப்பார். இதற்கு 'கன்னி நீராடல்' என்று பெயர். 1975 வரை இச்சடங்கு நடைபெற்றது.

Koviloor Digital Library

மாப்பிள்ளை அழைப்பு:

வெளியூரிலிருந்து வரும் மாப்பிள்ளையைப் பிள்ளையார் கோவில் அல்லது மடத்தில் தங்க வைப்பர். பெண் வீட்டிலிருந்து மாப்பிள்ளைக்கும், மாமக்காரருக்கும், மாப்பிள்ளையின் தாயார், சகோதரிகள் முதலியவர்களுக்குக் காலைப் பலகாரம் வரும். அவர்கள் அங்கேயே சாப்பிடுவார்கள்.

மாப்பிள்ளை வீட்டிலிருந்து சிலர் சென்று பெண் வீட்டில் முகூர்த்தம் வைத்துக் கோவில் அல்லது மடத்துக்குத் திரும்புவர்.

அதன்பின், பெண் வீட்டில் இருந்து மேள தாளத்துடன் பெண்ணின் அய்யா அல்லது தந்தை தலைப்பாகை கட்டி, மணமாலை, கெண்டை வேட்டி, கெண்டைத் துண்டு, பூச்செண்டு, கழுத்துச் சங்கிலி, கைச்சங்கிலி, மோதிரம், கெடிகாரம் வைத்த தட்டைத் தூக்கி வர, உறவினர்கள், பங்காளிகள் சூழ்ந்து வர மாப்பிள்ளையை அழைக்க வருவர்.

கொண்டு வந்த அத்தனையையும் மாப்பிள்ளைக்கு அணிவித்து, பிள்ளையாரை வணங்கிய பின் மாப்பிள்ளையை அழைத்துச் செல்வர்.

பெண் எடுக்கிக் காட்டுதல்:

மாப்பிள்ளையை அழைத்து வந்து திருமண வீட்டின் முன்பு வீதியில் நிற்க வைப்பர். பெண்ணின் அத்தை, பெண்ணைக் கூட்டி வந்து முகப்பு வாயிலில் நிற்க வைத்து, பெண்ணின் மேவாயில் கையை வைத்துப் பெண்ணின் முகத்தைத் தூக்கி மூன்று முறை பெண்ணை மாப்பிள்ளைக்குக் காட்டி, பின்பு வீட்டினுள் அழைத்துச் செல்வாள்.

அந் நாளில் பெண்ணை முதன் முதலில் பெண் எடுக்கிக் காட்டும் போதுதான் மாப்பிள்ளை பார்ப்பார். இப்போது திருமணம் நிச்சயிக்கின்றபோதே ஒருவரை ஒருவர் பார்த்துப் பேசி சிரித்து மகிழ்கின்றனர். பின்னர் தொலைபேசியிலும் தினம் பேசிக் களிக்கின்றனர்.

பூ எறிதல்:

பெண் எடுக்கிக் காட்டியவுடன், பெண்ணின் சகோதரன் தண்டல்காரர் பிடித்திருக்கும் தடுக்குக்கு மேல் மூன்று முறை மாப்பிள்ளையின் மேல் பூ எறிந்து (மலர் தூவி) மாப்பிள்ளையை வரவேற்பார்.

Koviloor Digital Library

ஆலாத்தி (ஆரத்தி) எடுத்தல்:

பெண் எடுக்கிக் காட்டி, பூ எறிந்தவுடன், மாப்பிள்ளையை வீட்டினுள் அழைத்துச் செல்வர். வளவின் நுழைவுப் பத்தியில் போடப் பட்டிருக்கும் கோலத்திற்கு முன்பாக மாப்பிள்ளையையும், அவரின் தாய், தந்தை, சகோதரி(கள்) முதலியோரையும் நிற்க வைப்பர்.

பெண்ணின் அத்தை சிலேட்டு விளக்கை எடுத்து வந்து கோலத்தில் வைத்து, அனைவரையும் "வாங்க, வாங்க" என வாய் நிறைய வரவேற்று ஆலாத்தியில் (சோறு, மஞ்கள் பொடி முதலியவற்றைக் கலந்து, பஞ்சுத்திரி வைத்து நெய்தடவி இருப்பது ஆலாத்தி எனப்படும்) நெருப்பைப் பற்ற வைத்து அனைவரையும் 'திட்டி கழிப்பதைப் போல' அத்தை ஆலாத்தி எடுப்பாள்.

பின்பு அனைவருக்கும் திருநீறு பூசுவாள். அதன்பின் மாப்பிள்ளையும், மற்றவர்களும் விளக்கின் வலது புறத்தில் சுற்றிச் செல்வர்.

மாப்பிள்ளையை வளவு வாசலில் கிழக்கு முகமாய் உட்கார வைப்பர்.

ஆலாத்தி எடுக்கும் உரிமை, அத்தைக்கு மட்டுமே உண்டு. எக் காரணத்தைக் கொண்டும் அவ் உரிமையை அவள் விட்டுக் கொடுக்க மாட்டாள்.

பகவத் தியானம் செய்தல்:

மாப்பிள்ளையை மாமக்காரர் அழைத்துச் சென்று மண மேடையில் உட்கார வைப்பார். பஞ்சாங்க அய்யர் கடவுளை வணங்கி, திருமாங்கல்ய பூசை செய்வார். இதன் பிறகு பகவத் தியானம் என்ற பகவனம் செய்து, மாமக்காரரை மாப்பிள்ளைக்குக் காப்புக் கட்டச் சொல்வார்.

இதன் பிறகு மாப்பிள்ளைக்கு மணமிடுதல் நடைபெறும். பெண்ணுக்கு மணமிட்டதைப் போலவே, மாப்பிள்ளைக்கும் செய்வர்.

திருமாங்கல்யப் பூசைத் தட்டை பெண்ணின் மாமக்காரர் எடுத்து எல்லோரிடமும் காட்டி ஆசிர்வாதம் வாங்குவார். அதே

Koviloor Digital Library

போல, மாமக்காரர் மனைவி அங்கு குழுமியிருக்கும் மங்கலப் பெண்களிடம் காட்டி ஆசிர்வாதம் வாங்குவாள்.

பஞ்சாங்க அய்யர் வெளியேறிச் சென்ற பின், திருப்பூட்டுதல் நடைபெறும். திருமணம் நடைபெறும்போது அய்யர் சாட்சியாகச் செய்வது நகரத்தார் வழக்கமல்ல.

திருப்பூட்டுதல்:

பெண்ணின் கழுத்தில் மாப்பிள்ளை தாலி கட்டுவதை நகரத்தார்கள் திருப்பூட்டுதல் என்பர்.

தெற்கு வட்டகையில் திருப்பூட்டுதல் அறைக்குள் நடைபெறும். மற்ற வட்டகைகளில் மணப்பெண் மணவறையில் கிழக்குப் பார்த்து நிற்க, அவளுக்கு நேரே மாப்பிள்ளை தடுக்கில் நின்று தாலிகட்டுவார்.

நகரத்தார் திருமணத்தில் முதலில் கட்டப்பெறுவது கழுத்தூரு தான். கழுத்தூரு என்னும் திருமாங்கல்யத்தை மாப்பிள்ளை கட்டி மூன்று முடிச்சுப் போடும் போது, மாப்பிள்ளையின் சகோதரி மணப் பெண்ணின் பின்னால் நின்று உதவி செய்வாள்.

முன்பெல்லாம் பெரிய வயதானவர்கள் தாலி கட்டினர். இப்போது மாப்பிள்ளையே கட்டுகிறார்.

பின்பு தங்கச் சங்கிலியில் கோர்க்கப்பட்ட தாலியைப் பெண்ணுக்கு அணிவிப்பார். நண்டுக் கால் போல இருக்கும் தாலியின் இருபுறமும் இலக்குமி பொட்டிருக்கும். நகரத்தாருக்கென்றே தனி வடிவில் தாலி உண்டு.

திருமஞ்சனம் என்ற மங்கலக் கலவையைத் தாலியில் வைத்து குங்குமப் பொட்டையும் பூவையும் தாலியில் மாப்பிள்ளை வைப்பார். பெண்ணின் தலையைச் சுற்றி வலது கையால் நெற்றியில் பொட்டு வைப்பார்.

பெண்ணும், மாப்பிள்ளையும் மூன்று முறை மாலை மாற்றுவர் பிறகு கைகூப்பியவாறு இருவரும் இணைந்து நடந்துவர, இரு மாமக்காரரும், நாத்தனாரும் உடன்வர, எல்லோரிடமும் ஆசிர்வாதம் வாங்குவார்கள்.

பெண்ணின் நாத்தனார் அல்லது மாமியார் எல்லா சுமங்கலிப் பெண்களின் தாலியிலும் குங்குமப் பொட்டு வைப்பாள்.

Koviloor Digital Library

இத் திருமண (பந்தத்தை) உறவைக் கவியரசர் கண்ணதாசன் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகிறார்.

ஓரடி கற்பைக் காக்க
ஓரடி கணவர்க் காக
சீரடி மூன்றாம் பாதம்
சேர்ந்தோர் குலத்தைக் காக்க
நாலடி அச்சம் நாணம்
மடம் எனும் நலத்தைக் காக்க
ஐந்தடி புலன்கள் ஐந்தை
அடக்கியே வாழ்வைக் காக்க
ஆறடி சுவைக ளாறும்
கணவர்க்கே அன்பில் ஊட்ட
ஏழடி உலகம் ஏழும்
கணவனோ டிணைந்து வாழ!

-கவியரசர் கண்ணதாசன்

இசை குடிமானம்:

இன்ன கோவிலைச் சேர்ந்த இன்னார் மகளை, இன்ன கோவிலைச் சேர்ந்த இன்னார் மகனுக்குத் திருமணம் செய்து கொடுக்க இசைவு (சம்மதம்) தெரிவித்து பிள்ளை வீட்டாரும், பெண் வீட்டாரும் இசை குடிமானம் எழுதிக் கொள்வார்கள். அதில் மாப்பிள்ளையின் அப்பச்சியும் (அப்பாவும்) பெண்ணின் அப்பச்சியும் கையெழுத்துச் செய்வர். இசைகுடி மானத்தைப் பங்காளி ஒருவர் எழுதி, அதில் எழுதியதற்கு அடையாளமாகவும், திருமணம் நடந்ததை நேரில் பார்த்த சாட்சியாகவும் கருதி, அவரும் கையெழுத்துச் செய்வார்.

இரு வீட்டிலும் தனித்தனி இசை குடிமானம் எழுதப்படும். பெண் வீட்டில் எழுதும் இசை குடிமானத்தில் முதலில் பெண்சார்ந்த கோவில், பிரிவை எழுதிப் பின்பு மாப்பிள்ளை சார்ந்த கோவிலையும், பிரிவையும் எழுதுவார்கள்.

அதே போல மாப்பிள்ளை வீட்டில் எழுதும் இசை குடிமானத்தில் முதலில் மாப்பிள்ளை சார்ந்த கோவில், பிரிவை எழுதிப் பின்பு பெண் சார்ந்த கோவிலையும் பிரிவையும் எழுதுவார்கள்.

Koviloor Digital Library

பெண் வீட்டு இசை குடிமானத்தில் பெண்ணின் அப்பச்சி முதலில் கையெழுத்துச் செய்ய, பின்பு மாப்பிள்ளையின் அப்பச்சி கையெழுத்துச் செய்வார்.

அதேபோல மாப்பிள்ளை வீட்டு இசை குடிமானத்தில் மாப்பிள்ளையின் அப்பச்சி முதலில் கையெழுத்துச் செய்ய, பின்பு பெண்ணின் அப்பச்சி கையெழுத்துச் செய்வார்.

இருவரும் சாமி வீட்டில் பாயில் அமர்ந்து கையெழுத்துச் செய்து இசை குடிமானத்தை மாற்றிக் கொண்டு (அதாவது பெண் வீட்டு இசை குடிமானம் பிள்ளை வீட்டிலும், பிள்ளை வீட்டு இசை குடிமானம் பெண் வீட்டிலும் இருக்கும்) திருநீற்றைப் பூசிக்கொள்வர்.

திருமணம் செய்து கொள்வதற்கு இசைவு தெரிவித்ததற்கு இதை ஒரு பிடிமானம் எனக் கொள்வதால் இதனை இசை பிடிமானம் என்றும் கூறுவர்.

திருமணத்திற்கு முன்பு, நகரக்கோவிலில் பாக்கு வைத்துத் திருமணத்தைப் பதிவு செய்தும், திருமணத்தன்று இசை குடிமானம் மூலம் பதிவு செய்தும் நடைமுறைப்படுத்தியதை உற்று நோக்கும்போது, திருமணத்தை முதன் முதலில் பதிவு செய்தவர்கள் நகரத்தார்களே என உறுதிப்படுகிறது.

இசை குடிமானம் எழுதும் முறை:

<u>உ</u>

சிவமயம்

விய அண்டு தை மாதம் 8ஆம் தேதி
கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர்
நாட்டில், மாற்றூரான வீரபாண்டிய
புரத்தில் அரும்பாக்கூருடையார் அருணாசலம்

செட்டி மகன் கதிர்வேலனுக்கு, கேரளசிங்க வளநாடாகிய ஏழகப் பெருந்திருவான வீரபாண்டிபுரத்தில் வைரவன் கோவில் தெய்யனார் வகுப்பு கண்ணப்ப செட்டி மகள் கண்ணாத்தாளைப் பாணிக்கிரகணம் பண்ணிக்கொண்டமைக்கு இவர்/அவர் பூஷணம் பூட்டும் பொன் ஒன்பது (ஒன்பது மாற்றுள்ள ஆறு கல் எடை கொண்ட பொன்) ஆறு கல் எடை பொன் பதிமுக்கழஞ்சு (ஒன்றே காலே வீசம் வராகன் எடை)

Koviloor Digital Library

இவர்/அவர் சீதனம் கொடுக்கும் பொன் இம்மாறு (இங்ஙனம்) இவ் எடை பொன் ஆறு கழஞ்சு, வெள்ளி ஆறு கழஞ்சு, வெண்கலம் தராப்பலம் (8 பங்கு செம்பு 5 பங்கு ஈயம் கொண்ட கலப்பு உலோகம்) அறுபத்தொன்று, வெள்ளாட்டிக்குப் (வேலைக்காரி) பணம் (பணம் என்பது இரண்டணா அல்லது 12 பைசா) முப்பது, சீராட்டுச் சக்கரம் அறுபத்தொன்று, இவ் வகைப்படி செய்வோம். இவர்/அவர் நன்கொடை கொடுக்கும் பொன் ஐம்பது, மோதிரம் வராகனிடை மூன்று இவர்/அவர் உகந்துடைமையாகக் கொடுக்கும் பொன் வளையல் ஏழு கழஞ்சு, இவ்வகைப்படி செய்வோம், இந்த நாள் இவரிடும்/அவரிடும் பொன் இவர்/அவர் சொற்படி தெரிசனை பதின்முக்கழஞ்சு இவ்வகைப்படி செய்வோம். இந்த இசை குடிமானத்தில் எழுதினேன். கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் மாற்றூரான வீரபாண்டிய புரத்தில் அரும்பாக்கூருடையார் நல்லப்ப செட்டி நடேசன்.

கையெழுத்து : அருணாசலம் செட்டி

கையெழுத்து : கண்ணப்பசெட்டி

இசைகுடிமானம் முன்பு பனை ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதப்பட்டது. இப்போது அச்சடித்த புத்தகத்தில் எழுதப்படுகிறது.

இசைகுடிமானம் என்பது நகரத்தார்களின் பண்டைய பழக்க வழக்கங்களுக்கு இசைந்த மானமுள்ள குடியாக வாழ்வோம் என்பதை உறுதி கூறும் பத்திரமாகும்.

நகரத்தார்கள் அறுத்தக் கட்டும் இனமல்ல என்பதையும் இது உறுதிப் படுத்துகிறது.

சமூக, அரசு சட்டதிட்டங்களுக்கு இசைந்த மானமுள்ள குடிகள் நகரத்தார் குடிகள். அக்குடியில் பிறந்த நாங்களும் அவ்வாறே வாழ்வோம் என்று உறதி கூறும் பத்திரமுமாகும்.

திருமணங்களைப் பதிவு செய்ய வேண்டும் என்ற இன்றைய சட்டத்தை என்றோ நடைமுறையில் இசைகுடிமானத்தின் மூலம் கொண்டு வந்தவர்கள் நகரத்தார்கள். இது பெருமைக்குரிய செய்தி.

திருப்பூட்டுச் சடங்கு:

திருப்பூட்டி முடிந்தவுடன் பெண்ணின் நாத்தனார் அல்லது மாமியார் திருப்பூட்டுச் சடங்கைச் செய்வாள். ஒரு தட்டில் ஏழு

Koviloor Digital Library

கிண்ணங்கள் இருக்கும், அந்தத் தட்டிற்குச் சடங்குத் தட்டு என்றும், கிண்ணங்களுக்குச் சடங்குக் கிண்ணங்கள் என்றும் பெயர். ஒரு கிண்ணத்தில் பிள்ளையார், வெற்றிலை, பாக்கு இருக்கும்.

மற்ற கிண்ணங்களில் மஞ்சள், விபூதி, பச்சரிசி, உப்பு, புளி, பஞ்சு இருக்கும்.

நிறைநாழியில் நெல்வைத்து அதன்மேல் கத்தரிக்காய் ஒன்றை வைப்பார்கள் மூக்கு வைத்த கெண்டிச் செம்பில் தண்ணீர் இருக்கும்.

பெண்ணை மணவறையில் கிழக்கு முகமாக நிற்க வைத்து, சடங்கு செய்பவர் பெண்ணுக்கு நேரே எதிர் நின்று (தடுக்கில் நின்று) இச் சடங்கைச் செய்வர்.

பெண்ணின் கையில் வெற்றிலையைக் கொடுத்து சடங்கு செய்பவர் வெற்றிலையில் நீர் வார்க்க, பெண் அந் நீரைப் பாதங்களில் வடித்து விட்டு இரு கையினாலும் வெற்றிலையை நெற்றியில் வைத்து வணங்க வேண்டும்.

பெண்ணைத் தன் தாய் வீட்டுக்கு உரியவளாக்கும் சடங்கு இது.

மாமவேவு எடுத்தல்:

பெண்ணின் (தாயைப் பெற்ற) ஆயாள் வீட்டில் இருந்து வந்த அரிசி, காய்கறி, தேங்காய் முதலிய பொருட்களை வேவுக் கடகாத்தில் (பெட்டி அல்லது வாளி) வைத்து பெண்ணுக்கு ஆயா வீட்டுப் பங்காளிகள் ஒவ்வொருவரும் தலையில் துண்டால் தலைப் பாகை கட்டிக் கொண்டு தலையில் தூக்கிவைத்து ஒற்றைப் படை எண்ணிக்கையில் இறக்கி நடுவீட்டில் கொண்டுபோய் வைப்பார்கள்.

பெண்ணின் ஆயாள் வீடு இதனைச் செய்வதால் இதற்கு 'மாம வேவு' என்று பெயர். இவ் வேவு மூத்த பெண்ணிற்கு மட்டுமே செய்யப்படும்.

மணவறை இடுதல்:

மீண்டும் மணமிடுதல் சடங்கு நடைபெறும், இருவீட்டு மாமக் காரர்களும் மணமிட்டபின், மற்றவர்கள் மணமிடுவர்.

Koviloor Digital Library

பகவனம் செய்து வெளியேறிய பஞ்சாங்க அய்யரை அழைத்து வந்து இச் சடங்கைச் செய்வர்.

புதுமணமக்கள் இல்லறக் கடமைகளைச் செய்யத் தொடங்கி விட்டனர் என்பதன் அடையாளமாய் உணவு பரிமாறுதல் நடைபெறும்.

பணமெழுதுதல்:

திருமணத்தில் கலந்து கொண்டதற்கு அடையாளமாக (வருகை தந்ததாகவும் கொள்ளலாம்) பங்காளிகளும், உறவினர்களும் பண மெழுதுவார்கள். முன்பு பனை ஓலையில் எழுதப்பட்டது. இப்போது 'மொய்ப்பண ஏடு' என்ற புத்தகத்தில் எழுதப்படுகிறது. முன்பு கால் ரூபாய் பணமெழுதினர்; இப்போது ஒரு ரூபாய் எழுதுகின்றனர்.

இரு வீட்டிலும் தனித் தனியாகப் பணமெழுதப்படும்.

ஒரு பங்காளி பணமெழுத, மற்றொரு பங்காளி அவர் புள்ளி போட உதவுவார். அதற்கு 'நோட்டமிடுதல்' என்று பெயர்.

எல்லாப் பங்காளிகளும் பணமெழுதிய பின்பு, மாமக்காரர் சடங்குக்காரர் பணமெழுதுவர். பின்னர் சொந்தக்காரர்கள் பண மெழுதுவர்.

எழுதிய பணத்தைக் காசிப்பட்டில் (சிகப்பு வண்ணம்) வைத்து, மஞ்சள் தடவிச் சுற்றித் தாம்பாளத்தில் வைத்துப் பணமெழுதியவர் கொடுக்க, கல்யாணக்காரர் வாங்கி, சாமி வீட்டில் வைத்துக் கும்பிட்டு, விபூதி பூசிக் கொள்வார்.

பணமெழுதிய, மற்றும் நோட்டம் பார்த்த பங்காளிகள் இருவருக்கும் தட்டில் வெற்றிலைப் பாக்குடன் இரண்டு ரூபாய் வைத்து (முன்பு சிகப்போலைக் கொட்டானில்) "பாக்கு"க்கு எனக் கொடுப்பர்.

பணமெழுதுவதை 'மொய்ப்பணமெழுதுதல்' என்றும் கூறுவர். பங்காளிகள், உறவினர்கள் அனைவரும் திருமணத்தில் கூடுவதால் (மொய்ப்பதால்) 'மொய்ப் பணம் எழுதுதல்' என்றனர்.

கும்பிட்டுக் கட்டிக்கொள்ளுதல்:

மாப்பிள்ளையும், பெண்ணும் பெரியவர்களைக் கும்பிடுவர். பெரியவர்கள், 'மணமக்கள் பல்லாண்டு வாழ்க' என வாழ்த்திக் கும்பிடுவர். சிலர் பணமும், பரிசுப்பொருளும் கொடுப்பர்.

Koviloor Digital Library

முளைப்பாரி இடுதல்:

'ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி மூங்கில்போல் சுற்றம் முசியாமல் வாழ்ந்திருக்க" நவ தானியங்களை முளைப்பாரியில் இடுதலே 'முளைப்பாரி இடுதல்' சடங்காகும்.

மஞ்சள் நீராடுதல்:

திருமணம் செய்துகொள்ளும் மணமக்கள் உடல் சூட்டுடன் உடலுறவு கொள்ளக்கூடாது என்பதற்காக, எண்ணெய் நீராடுவர். தண்ணீரில் மஞ்சளைக் கரைத்து நீராடுவதால் இதற்கு 'மஞ்சள் நீராடல்' என்றனர்.

கால்மோதிரம் அணிதல்:

பெண்ணுக்கு மாமக்காரர் திருப்பூட்டி முடிந்தவுடன் காவல் காப்பைக் கழட்டிக் கொடுக்க, நாத்தனார் கால் மோதிரம் அணிவிப்பாள். இதனை 'மிஞ்சி' என்பர். 'திருமணமான பெண்' அவள் என்பதன் அடையாளமே மிஞ்சி அணிதலாகும்.

திருப்பூட்டும்போது கட்டியிருந்த 'பெரிய கண்டாங்கியை' (சேலை) மாற்றிவிட்டு, வேறு பட்டுக் கண்டாங்கி கட்டி இருக்க இச் சடங்கு நடைபெறும்.

பிள்ளை எடுக்கிக் கொடுத்தல்:

வெள்ளியினால் செய்த ஒரு சிறு குழவியை ஒரு சிறு பட்டுத் துணியில் வைத்துப் பெண்ணைப் பிள்ளைபோல வைத்துக் கொள்ளச் சொல்வர். அவள் பிள்ளையை எடுக்கி (தூக்கி) கொள்வதைப் போல வைத்திருக்க, பெரியவர்கள் ஒவ்வொருவரும் வாங்கி வாழ்த்துவார்கள்.

பெண் அழைப்பு:

மணப்பெண் கிழக்கு முகமாய் நிற்க, பாய் விரித்திருக்கும், அப் பாயின்மேல் மணமகளின் பெற்றோர், உறவினர்கள் ஒவ்வொருவராக வந்துநிற்க, பெண் 'கணவனுடன் போய் வருகிறேன்' என்ற பொருளில் 'சென்று வருகிறேன்' என்றுகூறி விடைபெறுவாள் (வணங்குவாள்).

காப்புக் கழட்டி, கால் மோதிரம் அணிவித்து, முளைப்பாரியை ஊருணியில் கொட்டிய பிறகு, பெண்ணை மாப்பிள்ளை வீட்டிற்கு அழைத்துச் செல்வர். இதற்குப் 'பெண் அழைப்பு' என்று பெயர்.

Koviloor Digital Library

மாப்பிள்ளை வீட்டிற்குப் பெண் வந்ததும், நாத்தனார் பெண் அழைப்புச் சடங்கைச் செய்வாள்.

குலம்வாழப் பிள்ளை எடுத்தல்:

மாப்பிள்ளை வீட்டிற்கு வந்த பெண், நீர் நிறைந்திருக்கும் ஒரு குடத்தில் கையை விட்டுத் தன் குலம் வாழப் பிள்ளையை எடுப்பாள்.

சாந்தி முகூர்த்தம்:

திருமணத்தன்று இரவே சாந்தி முகூர்த்தம் நடைபெறும்.

பொங்கல்வேவு, பிள்ளையார் நோன்பு வேவு, ஆடி வேவு:

திருமணத்தன்றே இவ் வேவுகளுக்குரிய ரூபாயை (முறைச் சிட்டையில் எழுதியபடி) பெண் வீட்டார் கொடுத்து விடுவர்.

நெய்ச்சோறிடுதல்:

திருமணம் முடிந்தவுடன் பெண், தன் தாய்வீட்டிற்கு மாப்பிள்ளையுடன் முதல் விருந்து சாப்பிட்டு 'பணம் பட்டை' வாங்கி வருவதை 'நெய்ச்சோறிடுதல்' என்பர்.

காய்ச்சி ஊற்றுதல் :

மாமக்காரரும் (ஆயாள் வீடு) சடங்குக்காரரும் பொண்ணு மாப்பிள்ளையை அழைத்துச் சென்று விருந்து கொடுத்து, பணம் பட்டை கொடுப்பர். இதற்குக் 'காய்ச்சி ஊற்றுதல்' என்று பெயர்.

காய்ச்சி ஊற்றியபின், மணமக்கள் மங்கல நிகழ்ச்சியில் முதலில் கலந்து கொள்வார்கள்.

காலத்தின் தேவைக்கேற்ப திருமணநாள் ஒரே நாளான போதிலும், பண்பாட்டின் வழி வந்த நகரத்தார்கள் எந்தச் சடங்கையும் விட்டுவிடாமல் இன்றைக்கும் செய்து வருவது பெருமைக்குரியது!

Koviloor Digital Library

7.
பெருமைக்குரிய நகரத்தார்கள்

மக்கள் தொகையில் மிகக் குறைவாக உள்ள நகரத்தார்கள் அனைவரும் பெருமைக்குரியவர்களே. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து இன்றுவரை அப்பெருமையைக் கட்டிக் காத்து வருகிறார்கள். குலப் பெருமையைக் காப்பதில் கவனமாய் இருப்பவர்கள் நகரத்தார்கள். அதனால், வாழையடி வாழையாக அப் பெருமை வளர்ந்து வருகிறது.

'செயற்கரிய செய்வர் பெரியர்' என்பர். நகரத்தார்களில் பலர், தொழிலால், அறப்பணியால், மனித நேயத்தால் பெருமை பெற்றுள்ளார்கள். நிறைகுடம் தளும்பாது என்பதைப் போல, அடக்கமாய் வாழும் இயல்புடைய நகரத்தார்கள், தங்கள் பெருமையைத் தாங்களே வெளிப்படுத்திக் கொள்வதில்லை.

போலி விளம்பரம் தேடாத அப் பெருமைக்குரிய நகரத்தார்களில் சிலரை இங்கு குறிப்பிட்டுள்ளேன். விடுபட்டவர்கள் மன்னிக்கவும். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறுதானே பதம்!

டாக்டர் ராசா சர் அண்ணாமலை செட்டியார்:

வெ.சா.இராம.முத்தையா செட்டியார்-மீனாட்சி ஆச்சிக்கு நான்காவது மகனாக 30-09-1881இல் கானாடுகாத்தானில் அண்ணாமலையார் பிறந்தார். இவர் இளையாற்றங்குடிக் கோவில் பட்டினசாமி பிரிவைச் சேர்ந்தவர்.

Koviloor Digital Library

இவருக்கு 1895இல் திருமணம் நடைபெற்றது. 1911இல் முதன் முறையாக இங்கிலாந்து சென்று, ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் முடிசூட்டு விழாவைக் கண்டு களித்தார்.

1912இல் 'ராவ் பகதூர்' பட்டத்தை ஆங்கில அரசு இவருக்கு வழங்கியது.

1915இல் கானாடுகாத்தானில் மாளிகை எழுப்பினார். கலை நயமிக்க அம் மாளிகை 'செட்டிநாடு மாளிகை' எனச் சிறப்பாக அழைக்கப்பெறுகிறது.

1916 முதல் 1919 வரை சென்னை சட்டமன்ற மேலவை உறுப்பினராகச் செயல்பட்டார்.

வெளிநாடுகள் பலவற்றுக்குப் பயணம் செய்த அண்ணாமலையார் அங்குள்ள கல்வி நிலையங்களைப் பார்த்தார். அவருக்கு கல்விப் பணியில் ஆர்வம் பிறந்தது. அதன் விளைவாக, சிதம்பரத்தில் 1920இல், தம் அன்னையார் மீனாட்சி ஆச்சி பெயரால் ஸ்ரீ மீனாட்சி கல்லூரியை நிறுவினார். இக் கல்லூரியே பின்னாளில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தோன்ற அடித்தளமாய் அமைந்தது.

1921 முதல் 1935 வரை அரசாங்க சபையில் மும்முறை பதவி வகித்தார். 1922இல் இவருக்குத் 'திவான் பகதூர்' பட்டத்தை அரசு வழங்கியது. 1923இல் 'சர்' என்ற உயரிய பட்டம் வழங்கப் பெற்றது.

1929இல் வெளிநாடுகளில் பயணம் செய்யச் சென்றார். 1929 சூலையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் செயல்படத் தொடங்கியது. தனி ஒருவரின் கொடையால் தொடங்கப் பெற்ற முதல் பல்கலைக் கழகம் இதுவேயாகும்.

1929இல் 'ராசா' என்ற பரம்பரைப் பட்டத்தை அரசு இவருக்கு வழங்கியது. அன்றுமுதல் இவர் ராசா சர் அண்ணாமலை செட்டியார் என அழைக்கப் பெற்றார்.

1929 முதல் பட்டங்கள் இவரைத் தேடி வந்தன. 1932இல் சென்னைப் பல்கலைக் கழகம் எல்.எல்.டி., (L.L.D) பட்டத்தை வழங்கியது.

Koviloor Digital Library

கல்விப் பணியுடன் கோவில் திருப்பணியும் செய்தார். 1934இல் சிதம்பரம் ஸ்ரீ கோவிந்தராசர் சன்னதி திருப்பணியைச் சிறப்பாகச் செய்தார்.

1927இல் தமிழ்க் கல்லூரியையும், வடமொழிக் கல்லூரியையும் தொடங்கினார். 1929 இல் இசைக் கல்லூரியைத் தொடங்கினார். எல்லாக் கல்லூரிகளையும் இணைத்துப் பல்கலைக் கழகம் தோற்றுவிக்க எண்ணினார். 1928இல் அரசு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவுவதற்கான சட்டத்தை நிறைவேற்றியது. இந்நாள் தமிழகக் கல்விப் பணியில் ஒரு மைல் கல்லாகும்.

இது நகரத்தாரின் அறப்பணிக்கு அழியாத சான்றாகும்.

1935இல் இரண்டாவது முறையாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் சென்று வந்தார்.

1941இல் இந்திய சட்டசபை நியமன உறுப்பினராக அரசால் நியமிக்கப்பட்டார்.

28-9-1941 இல் மணி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினார்.

1943இல் சென்னையில் தமிழ்இசைச் சங்கத்தைத் தோற்றுவித்தார். அந்நாளில் தமிழ் நாட்டில் தமிழ் இசை பாடப் படுவதில்லை என்ற இழி நிலை இதனால் அன்று முதல் நீங்கியது. மேடை தோறும் தமிழ் இசை முழங்க இச் சங்கம் பெரிதும் உதவியது. இது, அந்நாளில் பெரும் புரட்சியாகும்.

இதன்மூலம், சைவமும், தமிழும் நகரத்தார்களின் இரு கண்கள் என நிரூபித்தார்.

1917இல் சென்னையில் நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம் தோன்ற இவரே காரணம். இவர் சென்னை சட்டசபையில் நகரத்தாருக் கென்று ஓர் உறுப்பினர் பதவி கிடைக்க முயன்று வெற்றி பெற்றார். அரசு ஓர் உறுப்பினர் பதவியை ஒதுக்கியது.

பர்மாவில் நகரத்தார்கள் துன்பப்பட்ட பொழுது, அவர்களுக்காக இந்திய நாடாளுமன்றத்தில் பேசினார்.

செய்கோன் தனவணிகர்க்காகப் பிரான்சு நாட்டிற்குத் தூது சென்றார்.

Koviloor Digital Library

தேவாரம், திருவாசகம், திருக்குறள் முதலியவற்றைச் சிறுவயது முதல் விரும்பிக் கற்று, அதன் வழி வாழ்ந்து சிறந்தார்.

"பல்வேறு நாடுகளுக்கும் சென்று அங்குள்ள அரசியல், உழைக்கும் சக்தி, கல்வித்திறன், இவைகளை அறிந்து வந்து தமது ஓயாத உழைப்பு, நியாயமான சேமிப்பு இவைகளால் நல்ல பணிகளைச் செய்து தொண்டாற்றிய பெரியவர் அண்ணாமலை அரசர்.

ஒதுக்கி வைத்திருந்த தண்டபாணி தேசிகரை அழைத்துப் பாட வைத்து, அவரைப் பெரிய சங்கீத வித்துவானாக நாட்டுக்கு அடையாளம் காட்டினார்.

சிதம்பரம் செயராமனைப் பாடச் செய்து விளம்பரப்படுத்தியவர் அண்ணாமலை அரசர் தான்.

"'எழுத்தறிவித்தவன் இறைவன்' என்பர். கல்வித் தொண்டும், இன்னும் பல சேவைகளும் செய்த அண்ணாமலை அரசரைக் கடவுள் என்று கூடக் கூறலாம். அதில் தவறில்லை"

-முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர்.

இளையாற்றக்குடிக் கோவில், கரூர் பசுபதீசுவரர் கோவில், திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோவில், கொழும்பு இந்துக் கோவில் முதலியன இவரால் திருப்பணி செய்யப் பெற்ற ஆலயங்களில் சிலவாகும்.

ஒருவர் பொருளாதாரத் துறையில் சிறந்து விளங்க வேண்டுமானால், அவர் தன் சொத்தில் பாதியை வணிகத்திலும், கால் வாசியை வீட்டிலும், அரைக்கால் வாசியை நிலத்திலும், மீதியுள்ள அரைக்கால் வாசியை நான்காகப் பங்கிட்டு, ஒரு பங்கை பங்குகளிலும், (ஷேர்கள்) ஒரு பங்கைத் தங்கத்திலும், ஒரு பங்கை வெள்ளியிலும், ஒரு பங்கை ரொக்கமாகவும் வைத்திருக்க வேண்டும் என்பது அவர் கொள்கை.

கானாடுகாத்தானில் 25-03-1944இல் தம் கைப்பட எழுதிய கடிதத்தின் வாசகம் வருமாறு :

Koviloor Digital Library

உ

சிவமயம்

ஸ்ரீ நடராசப் பெருமானைத் தினந் தோறும் வணங்குவேன். அண்ணாமலை சர்வ கலாசாலையின் வளர்ச்சியை ஒவ்வொரு நாளும் சிந்திப்பேன். தமிழ் நாடெங்கும் தமிழிசை முழங்க வேண்டும் என்பது எனது ஆவல். ஈட்டலும், காத்தலும், வகுத்தலும் என் கொள்கை.

''தமிழ் மொழி வளர்ச்சிக்கும், தமிழிசை மேம்பாட்டுக்கும் அண்ணாமலை அரசர் ஆற்றிய பணி மறக்கற் பாலதன்று''

-நாவலர் நெடுஞ்செழியன்

''அண்ணாமலை அரசர் தமிழகம் பெற்றெடுத்த சரித்திர நாயகர்களில் ஒருவராவார். ஒரு தனி நபர் மாபெரும் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவியது சாதனையாகும்.

சிலம்புச் செல்வர் ம.பொ.சி.

''அண்ணாமலை அரசர் செல்வக் குடியில் பிறந்தார். செருக்கின்றிப் பாடுபட்டார். செல்வத்திலும், செல்வாக்கிலும் உயர்ந்தார். "செல்வத்துப் பயன் ஈதலே". அன்ன சத்திரம், கோவில் திருப்பணி, ஆகியவற்றிற்கே ஈந்து வந்த நகரத்தாருக்குப் புதுவழி காட்டிக் கல்வித் தொண்டு புரிந்தார்''

-நெ.து.சுந்தர வடிவேலு

''எட்டு நாட்டு அரசர்கள் கூடிச் செய்கின்ற காரியங்கள் செட்டிநாட்டு அரசரின் செயலுக்கு நிகரில்லை காண்''

-கவியரசர் கண்ணதாசன்

அண்ணாமலை அரசர் 15-6-1948இல் அமரர் ஆனார்.

Koviloor Digital Library

வள்ளல் அழகப்ப செட்டியார்

க.வீ.அழ. இராமநாதன் செட்டியார் - உமையாள் ஆச்சியின் இரண்டாவது மகனாகக் கோட்டையூரில் 6-4-1909 இல் அழகப்ப செட்டியார் பிறந்தார். இவர் மாத்தூர் கோவில் மண்ணூர் பிரிவைச் சேர்ந்தவர்.

இவரின் மூத்த சகோதரர் ராவ்பகதூர் இராமநாதன் செட்டியார். சகோதரிகள் உண்ணாமலை ஆச்சி, வள்ளியம்மை ஆச்சி.

பள்ளிப் படிப்பைக் காரைக்குடியிலும், பட்டப் படிப்பு, மேற் படிப்பு முதலியவற்றை சென்னை மாநிலக் கல்லூரியிலும் படித்தார். நகரத்தார் சமூகத்தில் முதுகலைப் பட்டத்தை முதன்முதலாகப் பெற்றவர் இவரே. அங்கு ஆசிரியப் பணியாற்றிய தத்துவமேதை, முன்னாள் குடியரசுத் தலைவர் சர்வபள்ளி இராதாக்கிருட்டிணனுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார்.

பின்பு இலண்டன் சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்று பார்-அட்-லா ஆனார். அன்றுமுதல் இவர் 'பார்-அட்-லா அழகப்ப செட்டியார்' என அழைக்கப் பெற்றார்.

இலண்டனில் படிக்கும்போது சீனிவாச சாத்திரியின் உதவியால் சார்ட்டர்டு வங்கியில் பயிற்சியாளராகச் சேர்ந்தார். கிராய்டனில் விமானம் ஓட்டப் பயிற்சி பெற்று, விமானிச் சான்றிதழ் பெற்றார்.

1933இல் பார்-அட்-லாவாக இந்தியா திரும்பிய அழகப்பர் 22-1-1943இல் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகத் தம்மைப் பதிவு செய்து கொண்டார்.

1945 - 46இல் தென் இந்தியா வணிகக் கழகத் தலைவர் ஆனார். 1937இல் கேரளாவில் புதுக்காடு என்னுமிடத்தில் ஆலையை நிறுவினார். அதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டிலும், கேரளாவிலும் பல ஆலைகளை நிறுவினார்.

இவரின் முதல் மனைவி வள்ளியம்மை ஆச்சியாவார். அவர் காலமானவுடன் 1928இல் இலக்குமி ஆச்சியை மணம் செய்து கொண்டார்.

Koviloor Digital Library

10-9-1943இல் தம் ஒரே மகள் உமையாளைத் தம் தமக்கையின் மகனான இராமநாதனுக்கு மணம் செய்து கொடுத்தார். தமிழகமே இத் திருமணத்தைக் கண்டு வியந்தது!

பம்பாயில் ரிட்ஸ் ஓட்டலில் தங்கச் சென்று அதனையே விலைக்கு வாங்கி நடத்தினார்.

1946இல் இவருடைய தொண்டுகளைப் பாராட்டி, ஆங்கில அரசு 'நைட்' (Knight) என்ற பட்டத்தை அளித்து இவரைப் பெருமைப் படுத்தியது.

15-8-1947இல் காரைக்குடியில் அழகப்பா கலைக் கல்லூரியை அன்றைய கல்வி அமைச்சர் தி.சு.அவினாசிலிங்கம் செட்டியாரைக் கொண்டு திறக்கச் செய்தார்.

நாடு விடுதலை பெற்ற அன்று தொடங்கப் பெற்ற கல்லூரி, காரைக்குடியைக் கல்விக் குடியாக்கி, பலரின் வறுமை வாழ்விற்கு விடுதலை கொடுத்தது.

காரைக்குடி காந்தி மாளிகையில் தொடங்கப் பெற்ற அக் கல்லூரியில் 149 மாணவர்கள் சேர்ந்து பயிலத் தொடங்கினர்.

இலுப்பக்குடி நகரக் கோவிலுக்குச் சொந்தமான 650 ஏக்கர் க்காட்டுப் பகுதியில் புதிய கட்டிடங்களைக் கட்டி 4-7-1948இல் சொந்தக் கட்டிடத்திற்கு மாற்றினார். இக் கட்டிடங்களை அன்றைய தமிழக முதல்வர் ஓ.பி.இராமசாமி ரெட்டியார் திறந்து வைத்தார்.

காரைக்குடியில் ஓர் ஆய்வுக் கூடம் அமைய வேண்டுமென விரும்பினார். அதற்காக 300 ஏக்கர் நிலமும் 15 இலட்ச ரூபாயும் நன்கொடை அளித்தார். மத்திய மின்சார வேதியியல் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 25-7-1949இல் பண்டிதநேரு அடிக்கல் நாட்டினார். 14-1-1953இல் டாக்டர் இராதாகிருட்டிணன் (அழகப்பரின் ஆசிரியர்) ஆய்வுக் கூடத்தைத் திறந்து வைத்தார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் கல்லூரி ஒன்றை நிறுவத் தாமே முன் வந்து 5 இலட்ச ரூபாய் வழங்கினார். இவரின் வள்ளண்மையைக் கண்ட செட்டி நாட்டரசர் அண்ணா மலையார் இவரை 'வள்ளல்' என அழைத்தார். அன்று முதல் இவர் 'வள்ளல் அழகப்பர்' ஆனார்.

Koviloor Digital Library

சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு 5 இலட்ச ரூபாய் நன்கொடை அளிக்க, 'அழகப்ப செட்டியார் தொழில் நுட்பக் கல்லூரியை' பல்கலைக்கழகம் தொடங்கியது.

அவர் அளித்த நன்கொடைகள் வருமாறு :

திருவாங்கூர் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறை நிறுவ ஒரு இலட்சத்து ஒரு ரூபாய் வழங்கினார்.

சென்னை சேவாதளத்தில் மகளிர் விடுதி கட்டத் தம் மகள் உமையாள் பெயரால் எழுபத்தைந்தாயிரம் ரூபாய் வழங்கினார்.

1946இல் சென்னை தியாகராய நகரில் தக்கர் பாபா வித்தியாலயத்தில் 'அழகப்பா மண்டபம்' கட்ட இலட்ச ரூபாய் வழங்கினார். இம் மண்டபத்தின் அடிக்கல்லை காந்தியடிகள் நாட்டினார்.

புதுதில்லி தென் இந்தியக் கல்விக் கழகத்திற்கு இருபத்தைந்தாயிரம் ரூபாய் நன்கொடை வழங்கினார்.

கொச்சி அரசு மாணவர்கள் வெளிநாடு சென்று தொழில் நுணுக்கக் கல்வி பயில ஒரு இலட்ச ரூபாய் வழங்கினார்.

திருச்சூர் அழகப்பா நகரில் மகப்பேறு மருத்துவமனை்யை அமைத்தார். இதற்கு இலட்ச ரூபாய் கொடுத்தார்.

இந்திய மருத்துவமுறை ஆய்வுக்கென எர்ணாகுளம் மகாராசா கல்லூரிக்கு எண்பதாயிரம் ரூபாய் நன்கொடை வழங்கினார்.

கொச்சி தனியரசில் பள்ளிச் சிறார் பகல் உணவு உண்ண ஒரு இலட்சத்து அம்பதாயிரம் ரூபாய் வழங்கினார்.

27-7-1950இல் காரைக்குடியில் அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியைத் தொடங்கினார். ஆசிரியர்கள் பயிற்சி பெற 1951இல் அழகப்பா ஆசிரியர் மாதிரி (Model) உயர்நிலைப் பள்ளி (இப்போது மேல்நிலைப் பள்ளி)யைத் தொடங்கினார்.

21-7-1954இல் கோட்டையூரில் தாம் வாழ்வதற்காகக் கட்டிய 'ஸ்ரீநிவாஸ்' என்ற இல்லத்தில் அழகப்பா மகளிர் கல்லூரியைத் தொடங்கினார். இவ் அறச் செயலை மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார்

Koviloor Digital Library

கோடிகொடுத்த கொடைஞன் – குடியிருந்த
வீடும் கொடுத்த விழுத்தெய்வம்

எனத் தாம் எழுதிய "கொடை விளக்கு" என்ற நூலில் வியந்து பாராட்டுகிறார்.

இம் மகளிர் கல்லூரி, பின்னர் அழகப்பா கலைக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டது. தற்போது அவர் மகள் உமையாள் இராமநாதன் ஒரு மகளிர் கல்லூரியைத் தொடங்கி உள்ளார்.

1955இல் அழகப்பா பல்தொழிற் பயிற்சி நிலையம் தொடங்கப் பெற்றது.

1956இல் அழகப்ப செட்டியார் உடற்பயிற்சிக் கல்லூரி தொடங்கப் பெற்றது.

இவ்வாறு பல கல்வி நிலையங்களை அவர் தோற்றுவித்தாலும், காரைக்குடியில் பல்கலைக் கழகம் அமைக்க வேண்டுமென அவர் கனவு கண்டார், விரும்பினார்.

அவரின் கனவு, விருப்பம் 1985இல் நிறைவேறியது. ஆம், தமிழக அரசு 'அழகப்பா பல்கலைக் கழகத்தைத் தொடங்கியது.

1943இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் டி.லிட், பட்டம் வழங்கிச் சிறப்புச் செய்தது.

சென்னைப் பல்கலைக் கழகம் எல்.எல்.டி.பட்டம் வழங்கிச் சிறப்புச் செய்தது.

26-1-57இல் இந்திய அரசு 'பத்ம பூஷண்' பட்டம் வழங்கியது.

1954இல் சப்பான் கியோட்டா நகரில் நடைபெற்ற 12ஆம் பசிபிக் உறவு மாநாட்டில் இந்தியாவின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்.

19-7-1955இல் பி.பி.சி. வானொலி தமிழோசையில் உரையாற்றினார்.

ஜுபிடர் ஏர்வேஸ் கம்பெனி, ஜுபிடர் இன்சூரன்ஸ் கம்பெனி முதலியவற்றை நடத்தினார்.

சீர்திருத்தச் செம்மல் சொ. முருகப்பா, பண்டிதமணி, தமிழ்க் கடல் இராய.சொ. கம்பன் அடிப்பொடி சா.க. போன்றோர் இவரின் தமிழ் வேட்கையை வளர்த்தனர்.

Koviloor Digital Library

சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராய் இருந்த டாக்டர் ஏ.இலக்குமணசாமி முதலியார் பிற்பட்ட பகுதியில் கல்லூரியைத் தொடங்கச் சொல்லி, இவரின் கொடை வேட்கையை வளர்த்தார்.

வேர்க்கடலை, சாக்லெட், இனிப்புக்கள், பனை நுங்கு, சோளக் கதிர், இளநீர், ஐஸ் கிரீம் முதலியவற்றைச் சுவைத்து உண்பார்.

'கொடை என்னும் ஒரே நினைவு உடையவர். அழகப்பரின் கொடையை இதுவரை யாரும் அளந்து அறிந்ததில்லை"

-மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார்

"அவர் நிறுவிய கல்லூரிகள் அழகப்பரின் பெயரையும், புகழையும் என்றென்றும் எடுத்துக் கூறும்."

-பெரியார் ஈ.வெ.ரா.

விரைவு, விரைவு, விரைவு, இதுவே அழகப்பரின் அன்றாட இயக்கம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் தாம் நடத்திய பாரி விழாவில் (பிரான்மலையில் நடைபெற்றது) அழகப்பரை இரதத்தில் ஏற்றி அழைத்து வந்து 'எட்டாவது வள்ளல்' எனச் சிறப்புச் செய்தார். (கடையெழு வள்ளல்களுக்குப் பிறகு இவரே வள்ளல்)

"கல்விக்காகச் செலவிடும்போது அடையும் நிம்மதி வேறு எதிலும் இல்லை. நாம் குறைந்த காலமே வாழப்போகிறோம். அதற்குள் நிறைந்த நல்ல காரியங்களைச் செய்து விடவேண்டும்" என்பார் அழகப்பர்.

'குமுதம்' வார இதழின் கௌரவ ஆசிரியராகப் பணியாற்றினார்.

"அழகப்பர் அன்பிலே தாயாகவும், உணர்ச்சியிலே தொட்டாற் சுருங்கியாகவும், அறிவிலே மேதையாகவும், பண்பிலே முழு மனிதனாகவும் திகழ்ந்தார்.

எத்தனையோ தொழில்களைச் செய்தாலும், எல்லாவற்றுக்கும் மேலாகக் கொடுப்பதையே தொழிலாகக் கொண்டுவிட்ட பெருமகனாய் விளங்குபவர் வள்ளல் அழகப்பர்"

-கம்பன் அடிப்பொடி சா.க.

Koviloor Digital Library

கல்வி வள்ளல் அழகப்பர் 5-4-1957இல் அமரரானார்.

கல்லூரி வளாகத்தில் அழகப்பரின் திரு உருவச் சிலை 19-9-1973 இல், அன்றைய பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியால் திறந்து வைக்கப் பெற்றது.

பண்டித நேரு "சமதர்ம முதலாளி" என்றும், காந்தியடிகள் "முன்மாதிரியான தர்மகர்த்தா" என்றும் வள்ளல் அழகப்பரைப் பாராட்டினர்.

இது நூற்றுக்கு நூறு உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை.

கலைத் தந்தை கருமுத்து தியாகராசன் செட்டியார்:

முத்துக் கருப்பன் செட்டியார் - வினை தீர்த்தாள் ஆச்சி மகனாக ஆ.தெக்கூரில் 16-6-1893இல் தியாகராசர் பிறந்தார். இவர் மாத்தூர் கோவில் மணலூர் பிரிவைச் சார்ந்தவர்.

(இவர்களது பூர்வீகம் பட்டமங்கலம் கருங்குளமாகும். இவர்கள் ஆ.தெக்கூருக்கு வலசை வந்தவர்கள்). வீடு என்பதில் 'கரு'வையும், முத்துக்கருப்பன் என்ற தன் தந்தையின் பெயரில் 'முத்து'வையும் எடுத்து, இரண்டையும் இணைத்துக் 'கருமுத்து' என அழைக்கப் பெறலாயினார்.

தொடக்கக் கல்வியைத் தெக்கூர் வெங்கட்ராமையர் பள்ளியிலும், உயர் நிலைப் படிப்பை மதுரை சேதுபதி பள்ளியிலும் பயின்றார்.

இவருக்கு ஆறு சகோதரிகளும், மூன்று சகோதரர்களும் உண்டு. இவர் பத்தாவதாகப் பிறந்தவர். எனவே, இவர்கள் வீட்டுக்குப் 'பத்துப் பிள்ளைக்காரர் வீடு' என்ற பெயருமுண்டு.

இளமையில் தந்தையை இழந்ததால், சகோதரர்கள் இலங்கைக்குக் கூட்டிச் சென்றனர். அங்கு ஆங்கிலக் கல்வி கற்றார்.

'மார்னிங் லீடர்' என்ற ஆங்கில இதழில் பணியாற்றினார். இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாகப் போராடி வெற்றி பெற்றார்.

1921 இல் மதுரையில் மீனாட்சி ஆலையை நிறுவினார். 1935இல் கோவையில் சரோசா ஆலை, 1945இல் மணப்பாறையில் தியாகராசர்

Koviloor Digital Library

ஆலை, சேலத்தில் இராசேந்திரா ஆலை, 1953இல் விருதுநகர் டெக்ஸ்டைல்ஸ் ஆலை, கோவை கமலா ஆலை, சிலைமான் ருக்குமணி ஆலை, பரவை மீனாட்சி ஆலை, தேனூர் சிவகாமி ஆலை, கப்பலூர் தியாகராசர் ஆலை, கோவில்பட்டி லாயல் டெக்ஸ்டைல்ஸ் ஆலை முதலிய ஆலைகளை நிறுவினார்.

மதுரை வங்கியை 1943இல் ஆரம்பித்தார். மதுரை ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனியை ஆரம்பித்து, பின்னர் எல்.ஐ.சி.யுடன் இணைத்தார்.

1947இல் தம் சொந்த ஊரில் தம் துணைவியார் பெயரில் ஸ்ரீவிசாலாட்சி கலாசாலை என்ற பள்ளியைத் தொடங்கினார். இதுவே இவர் செய்த முதல் கல்விப் பணியாகும்.

மதுரையில் 1949இல் தியாகராசர் கல்லூரியைத் தொடங்கினார். அதனைத் தொடர்ந்து, தியாகராசர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, மேலாண்மை நிருவாகப் பயிற்சிக் கல்லூரி போன்ற கல்வி நிலையங்களை நிறுவிக் கல்விப் பணி செய்தார்.

தமிழ்ப்பற்று மிக்கவர். இந்தித் திணிப்பைக் கடுமையாக எதிர்த்தார். நாள்தோறும் திருவாசகமும், திருக்குறளும் படிப்பார். ஆங்கிலத்திலும் நல்ல புலமை உடையவர். சைவ சமயத்தில் ஆழ்ந்த பற்று உடையவர். தனித் தமிழ் இதழாக 'தமிழ் நாடு' நாளிதழைத் தொடங்கி நடத்தினார்.

அழகிய பல கட்டிடங்களைக் கட்டியதால், அவர் 'கலைத்தந்தை' எனப் போற்றப்பட்டார்.

"எந்தத் திக்கிலிருந்து மதுரைக்குள் நுழைந்தாலும் தியாகராசர் நிறுவிய ஆலையோ, அவர் தொடங்கிய கல்லூரியோ நம்மை வரவேற்கும்"

–சோம.லெ.

தமிழக வரலாற்றில் கல்விக் கொடையால் நிரந்தர இடம்பெற்ற கலைத் தந்தை கருமுத்து தியாகராசன் செட்டியார் 29-7-1974இல் அமரரானார்.

Koviloor Digital Library

லெ. அழகு சுந்தரம் செட்டியார்:

செ.சி.நா.லெட்சுமணன் செட்டியார் - விசாலாட்சி ஆச்சியின் மூத்த மகனாக கண்டரமாணிக்கத்தில் 16-7-1907இல் பிறந்தார். இவர் பிள்ளையார்பட்டிக் கோவிலைச் சார்ந்தவர்.

இலங்கையில் கல்வி கற்று, சொலிஸிடரானார். இலங்கை யிலேயே வக்கீல் தொழில் செய்தார்.

இவரது தந்தையால் 1926 இல் மதுரை பசுமலையில் தொடங்கப் பட்ட மகாலெட்சுமி நூற்பாலையின் பொறுப்பை ஏற்று நடத்தினார்.

மதுரை நகரத்தார் சங்கத் தலைவர், சென்னைத் தமிழிசைச் சங்க அறங்காவலர், மதுரைத் தமிழிசைச் சங்கத் தலைவர், மனநிலை பாதிக்கப்பட்டோருக்காக நடத்தப்பெறும் அன்பகத்தின் தலைவர், இராமநாதபுரம் மாவட்டம் சேவா சமாஜத்தின் உறுப்பினர், தமிழ்நாடு இந்து அறநிலைய ஆணைக்குழுவின் ஆலோசனை உறுப்பினர் முதலிய பொறுப்புகளுடன் பொதுப்பணிகளில் ஈடுபட்டார்.

1948 முதல் 1958 வரை மதுரை மீனாட்சி அம்மன் கோவில் அறங்காவலராகவும், பழமுதிர்ச் சோலைத் திருப்பணிக் குழுவின் தலைவராகவும் பணியாற்றினார்.

'நகரத்தார் குரல்' சமூக இதழின் கௌரவ ஆசிரியர் பணியில் தாம் அமரர் ஆகும் வரை தொண்டாற்றினார்.

இவர் 20-9-1987இல் அமரரானார்.

தமிழ்க் கடல் இராய. சொக்கலிங்கம்

இராயப்ப செட்டியார் - அழகம்மை ஆச்சியின் மூத்த மகனாகக் காரைக்குடியில் 30-10-1898இல் இராய. சொக்கலிங்கம் பிறந்தார். இவர் இளையாற்றக்குடிக் கோவில் பெருமருதூருடையார் பிரிவைச் சார்ந்தவர்.

திண்ணைப் பள்ளியில் சுப்பையா ஆசிரியரிடம் படித்தார். தமிழாசிரியர் பண்டித சிதம்பர அய்யரிடம் தமிழ் இலக்கணம், இலக்கியம் கற்றார்.

பள்ளத்தூரில் பிறந்த உமையாள் ஆச்சியை 21.6.1918இல் மணந்தார்.

Koviloor Digital Library

சமூகச் சீர்திருத்தத் தந்தையாக விளங்கிய சொ. முருகப்பாவுடன் இணைந்து 1917இல் இந்து மதாபிமான சங்கத்தைத் தோற்றுவித்தார்.

'ஊழியன்' பத்திரிகையில் 20 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார்.

காந்தியடிகளிடம் பற்றுக் கொண்ட இவர், சட்ட மறுப்பு இயக்கத்தில் கலந்து கொண்டு 1932இல் ஓராண்டு சிறைத் தண்டனை அனுபவித்தார்.

1934இல் காந்தியடிகள் இவர் வீட்டில் தங்கி விருந்துண்டார்.

1938 முதல் 1941 வரை காரைக்குடி நகராட்சித் தலைவராகப் பணியாற்றினார்.

31-10-1958இல் மணிவிழாக் கண்ட இவருக்கு, இந்து மதாபிமான சங்கத்தார் 'தமிழ்க் கடல்' பட்டம் வழங்கிச் சிறப்பித்தனர்.

'சிவமணி', 'சிவம் பெருக்கும் சீலர்', 'வண்கவி வள்ளல்' என்ற சிறப்புப் பட்டங்களும் வழங்கப்பட்டன.

'காந்தியடிகள் பிள்ளைத் தமிழ்', 'கம்பனும், சிவனும்', 'வில்லியும் சிவனும்' ஆகிய நூல்களை எழுதிப் புகழ் பெற்றார்.

இவரின் அரசியல் குரு திரு.வி.க. ஆவார்.

காரைக்குடி நாகநாதபுரம் சிவன் - பெருமாள் கோவில் நிர்வாகத்தை ஏற்றுத் தொண்டு செய்தார். சேக்கிழாருக்கு விழா எடுத்தார்.

தமக்கு உரிமையாக இருந்த அமராவதிபுதூர் சொத்துக்களை இந்து மதாபிமான சங்கத்தின் திருப்பணிக்கு நன்கொடையாக வழங்கினார். அச் சங்கத்தின் மேல்மாடியில் 'இராய.சொ.உமையாள் மண்டபம்' என்ற கட்டிடத்தைக் கட்டிக் கொடுத்தார்.

தம்மிடம் இருந்த அனைத்து நூல்களையும் அழகப்பா கலைக் கல்லூரி நூலகத்திற்கு வழங்கினார்.

"அரசியல் மேடையில் தித்திக்கும் தமிழைப் பரவச் செய்த பெருமை தமிழ்த் தென்றல் திரு.வி.க.வுக்குப் பிறகு தமிழ்க் கடல் இராய.சொ.வுக்குரியது."

-சோம.லெ.

Koviloor Digital Library

"காந்தியடிகளின் கொள்கைகளையெல்லாம் தம் வாழ்விற் பொய்யாது பின்பற்றியவர் தமிழ்க் கடலார்"

-மூதறிஞர் வ.சுப. மாணிக்கம்.

"இராய.சொ.அவர்கள் கடைசிக்காலத்தில் சேக்கிழாரைப் போல் சிவன் கோவில் திருப்பணியையும், அய்யர் அவர்களைப் போல் பழந்தமிழ் நூல்களையும், வள்ளலாரைப் போல் இந்து மதாபிமான சங்கத்தையும் பேணிக் காத்து வளர்த்தார்.

-தவத்திரு குன்றக்குடி அடிகளார்

இவரின் அரசியல் குருவின் பாராட்டு இது :

"சொக்கலிங்கனார் கல்வி, கேள்வியுடையவர். ஆராய்ச்சியாளர். காய்தல், உவத்தல் இன்றி எதையும் சிந்தித்து முடிவு காண்பார்"

-தமிழ்த் தென்றல் திரு.வி.க.

கொள்ளும் தமிழ்க் கடல் கண்டதல்லால் – நூல்
கொடுக்கும் தமிழ்க்கடல் கண்டதில்லை
அள்ளும் தமிழ்க்கடல் கண்டதல்லால் – நூல்
அளிக்கும் தமிழ்க் கடல் கண்டதில்லை.

என மகாகவி பாரதியாரால் பாராட்டப்பெற்ற இராய. சொ. 30-9-1974 இல் அமரரானார். இவர் மனைவி 1-10-1960இல் இயற்கை எய்தினார்.

கவியரசர் கண்ணதாசன்

சாத்தப்ப செட்டியார் - விசாலாட்சி ஆச்சியின் எட்டாவது பிள்ளையாகச் சிறுகூடற்பட்டியில் 24-6-1927இல் பிறந்தார். இவர் மாத்தூர் கோவில் அரும்பாக்கூர் பிரிவைச் சார்ந்தவர். இவரின் பெற்றோர் முத்தையா எனப் பெயரிட்டு அழைத்தனர். இவர் காரைக்குடி அ.நா.பழநியப்ப செட்டியார் - சிகப்பி ஆச்சி வீட்டுக்குப் பிள்ளை வளரச் சென்றார். அங்கு இவரை நாராயணன் என அழைத்தனர்.

ஆனால் இவர், இவ்விரு பெயராலும் அறியப்படாமல், தானே வைத்துக்கொண்ட 'கண்ணதாசன்' என்ற பெயராலேயே எல்லோராலும் அறியப்படுகிறார்.

Koviloor Digital Library

அமராவதிபுதூரில் உள்ள குருகுலம் பள்ளியில் எட்டாவது வரை படித்தார்.

1944இல் இராமச்சந்திரபுரத்திலிருந்து வெளியான 'திருமகள்' இதழில் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். அப்போதுதான் கண்ணதாசன் ஆனார்.

'சண்டமாருதம்' இதழைச் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனம் நடத்தி வந்தது. 1948இல் அந் நிறுவனத்தார் அவ் இதழை நிறுத்தினர். அதனால் இவர் மாடர்ன் தியேட்டர்ஸ் கதை இலாகாவிற்கு மாற்றப்பட்டார். இதுவே இவர் திரை உலகில் நுழையக் காரணமாய் இருந்தது.

இவர் எழுதிய முதல் பாட்டு 'கன்னியின் காதலி' என்ற படத்தில் இடம் பெற்றது. அப் பாடலின் பல்லவி இது.

கலங்காது இரு மனமே–உன்
கனவெல்லாம் நினைவாகும் ஒரு தினமே

திரை உலகில் கலைஞருடன் ஏற்பட்ட தொடர்பால் திராவிட இயக்கங்களில் தீவிரப் பங்காற்றினார். பின்னர் தேசிய அரசியலில் பங்காற்றினார். பின்னர் அரசியலை விடுத்து, ஆன்மீகத்துறையில் எழுதி நிலைத்த புகழ் பெற்றார்.

1938இல் திரை இசைப் பாடல் எழுதத் தொடங்கிய இவர், இறுதி மூச்சுவரை (1981 வரை) ஏராளமான பாடல்களை எழுதினார். திரை இசைப் பாடலுக்கு இலக்கிய மதிப்பைப் பெற்றுத் தந்தார். விரைந்து இவர் பாடல் எழுதுவதால், இவரைக் 'கம்பியூட்டர் கண்ணதாசன்' என அழைக்கின்றனர்.

'மாங்கனி', 'ஆட்டனத்தி - ஆதிமந்தி', 'தைப்பாவை' முதலியன இவர் எழுதிய காப்பியங்கள்.

'கண்ணதாசன் கவிதைகள்' ஏழு தொகுதிகள் வெளிவந்துள்ளன.

'திரை இசைப் பாடல்கள்' தனி நூலாக வெளியாகியுள்ளது.

ஆதி சங்கரர் இயற்றிய 'கனகதாரா தோத்திரத்தைத் தமிழில் 'பொன் மழை'யாய்ப் பாடினார்.

Koviloor Digital Library

'ஏசு காவியம்' எழுதினார்.

'வனவாசம்', 'மனவாசம்' எனப் பொய்யுரை இல்லாத, எதையும் மறைக்காத, வெளிப்படையான தன் வரலாற்றைக் கட்டுரையாய் எழுதினார்.

'சேரமான்காதலி' என்ற இவரின் வரலாற்றுப் புதினத்திற்குச் சாகித்திய அகாதெமி பரிசு வழங்கிச் சிறப்பித்தது.

'அர்த்தமுள்ள இந்துமதம்' பத்துத் தொகுதிகளாக வெளிவந்து, இவருக்கு நிலைத்த புகழைப் பெற்றுத் தருகிறது.

1980இல் அண்ணாமலைஅரசர் பரிசைப் பெற்றார்.

'அழகி' என்ற இவருடைய கவிதை 14 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

'கண்ணதாசனின் குட்டிக் கதைகள்' கன்னடத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, கன்னடப் பல்கலைக் கழகத்தில் பாடநூலாய் வைக்கப்பட்டுள்ளது.

'பாடாய் தும்பீ,' 'மணவறை பாட்டு' என்ற கவிதைகளும் இந்திய மொழிகள் அனைத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

'விளக்கு மட்டுமா சிவப்பு?' மலையாளத்தில் மொழி பெயர்க்கப்பட, 'புஷ்பமாலிகா' மலையாளத்திலும், ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

1978இல் இவர் தமிழக அரசவைக் கவிஞராக எம்.ஜி.ஆ(ர்)ரால் நியமிக்கப் பட்டார்.

இவரின் புனைப்பெயர்கள்: வணங்காமுடி, அளசா, கமகப் பிரியா, பார்வதி நாதன், காரைமுத்துப் புலவர்.

இவர் ஆசிரியப் பொறுப்பேற்று நடத்திய இதழ்கள் வருமாறு: திரைஒலி, மேதாவி, சண்டமாருதம், தென்றல், தென்றல் திரை, முல்லை, கடிதம், நவசக்தி, கண்ணதாசன்.

'தென்றல்' இதழில் வெண்பாப் போட்டி வைத்து பல கவிஞர்களை உருவாக்கினார்.

இவர் எழுதிய முதல் புத்தகம் 'ஈழத்து ராணி'

Koviloor Digital Library

தன் கவிதைகளைப் பற்றிய கவியரசரின் மதிப்பீடு இது:

இலை புதிது மலர் புதிது
எனுமாறு என்றென்றும்
என் கவிதை ஒங்கி நிற்கும்

கண்ணதாசனின் கொள்கை இது :

போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் ஏற்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் அஞ்சேன்

கவியரசர் 17-10-1981இல் அமரரானார்.

ஜமீன்தார் அழ.அரு. இராமசாமி செட்டியார்:

தேவகோட்டையைச் சேர்ந்த இவர், இராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதியின் நெருங்கிய நண்பர்.

இராமநாதபுரம் ஜமீன் நீதிமன்ற நிர்வாகத்தில் இருந்தபோது, ஜமீன்தாரின் செலவுகளுக்கு இராமசாமி செட்டியார் எந்தவிதமான எழுத்து பூர்வ ஆதாரமுமில்லாமல் ரூபாய் மூன்றரை இலட்சம் வரை 1894இல் கடன் கொடுத்திருந்தார்.

ஜமீன் உரிமை வழக்கு நடைபெற்றபோது, நீதிமன்றத்தில் பாஸ்கர சேதுபதிக்குச் சாதகமாக சாட்சி சொன்னார். கடன் தொகையைக் கடன் என்று எழுதாமல், தனது பற்றாகக் கணக்கெழுதி இருந்தார். அதனால் வழக்கு பாஸ்கர சேதுபதிக்கு அனுகூலமாய் முடிந்தது.

இதனால் மன்னர் மகிழ்ந்து, செட்டியார் செய்த உதவிக்கு நன்றியாகத் தேவகோட்டைப் பகுதியில் உள்ள 22½ கிராமங்களுக்கு ஜமீன்தார் ஆக்கினார். அன்றுமுதல் தேவகோட்டை ஜமீன்தாரானார்.

இராமேசுவரம் இராமநாதசுவாமி திருக்கோவிலின் நிரந்தர அறங்காவலராகவும் ஆக்கினார்.

ஒருமுறை மன்னருடன் விருந்துண்ட செட்டியார் தாம்பூலம் தரித்தார். அப்போது தாம்பூலத்திற்குச் சுண்ணாம்பு வைக்கப் படவில்லை. அதனைப் பார்த்த மன்னர், "தாம்பூலத்திற்குச் சுண்ணாம்பு வேண்டாமா?" எனக் கேட்டார்.

Koviloor Digital Library

"நாங்கள் சுண்ணாம்பு பயன்படுத்துவதில்லை" என்றார் செட்டியார்.

"தீண்டுவீராயின் 'எம்மை'த் திருநீலகண்டம்" எனத் திருநீல கண்டரின் மனைவி கூற, இன்பத்துறையில் எளியரானவர், தம் மனைவி மட்டுமல்ல, வேறு எந்தப் பெண்ணையும் அதன்பிறகு தீண்டவில்லை. அதுபோல, "நாங்கள்" எனச் செட்டியார் கூறியதால் அக் குடும்பத்தினர் தாம்பூலத்திற்குச் சுண்ணாம்பைப் பயன்படுத்துவதில்லை என்பதும் தெளிவாகிறது.

வன்தொண்டர் செட்டியார்:

நாராயணன் என்ற இயற்பெயருடைய இவர், தேவகோட்டையில் முத்துராமன் செட்டியாரின் மகனாகப் பிறந்தார். ஐந்து வீட்டார் வகையைச் சேர்ந்த இவர், இலுப்பைக்குடிக் கோவிலைச் சார்ந்தவர்.

பிறவிக் குருடரான இவர், தமிழ் இலக்கண, இலக்கியங்கள், சைவ சித்தாந்த நூல்களைக் கற்க வேண்டுமென்ற ஆசையால் திரிசிர புரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணவரானார்.

வன்தொண்டர் மாணக்கர்களில் ஒருவர்தான் 'நகரத்தார் வரலாற்றை' முதன் முதலில் எழுதிய மேலவீட்டுச் சிந்நையா செட்டியார். சிந்நையா செட்டியார் நால்வர்க்கு இணையானவர் என வன்தொண்டரால் பாராட்டப் பெற்றார்.

வன்தொண்டர் பாண்டித்துரைத் தேவரின் சமகாலப் புலவர். 'மயில்மலை பிள்ளைத் தமிழ்', 'சிலம்பைப் பதிற்றுப் பத்தந்தாதி' முதலிய நூல்களைப் பாடியுள்ளார்.

சேக்கிழாருக்குத் தனி ஆலயம் தேவகோட்டையில் எழுப்ப முடிவு செய்து, குன்றத்தூர் மலையிலிருந்து சிலை தயாரித்து வந்தார்.

ஆனால், நகரத்தார்கள் வேண்டுகோளுக்கிணங்க, தாம் கோவில் கட்ட விரும்பிய இடத்தில் நகரச் சிவன்கோவில் கட்டிக் கொடுத்து உதவினார். நகரத்தார்கள் நகரச் சிவன் கோவிலில் தனிக் கருவறையைச் சேக்கிழாருக்கமைத்தனர். சிவன் கோவிலில் உள்ள பெரிய மணியில், 'சேக்கிழர் கோவில் மணி' என்று பெயர் பொறித்திருப்பதை இன்றும் காணலாம்.

Koviloor Digital Library

நினைவாற்றல் நிரம்பியவர் எனத் தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. 'என் சரிதம்' என்ற நூலில் போற்றியுள்ளார்.

'சிவஞான போத லகுவசனம்' என்ற நூலை எழுதி சைவ சித்தாந்தக் கருத்துக்களை விளக்கினார்.

திருவாவடுதுறை ஆதினகர்த்தர் மேலகரம் சுப்பிரமணிய தேசிக சுவாமிகள், இவரை 'வன்தொண்டர்' எனப் பாராட்டினார்.

தம் ஆசிரியரைச் 'சேக்கிழார் பிள்ளைத் தமிழ்' பாடித்தர வேண்டினார். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை மகிழ்ந்து, 1874இல் 'சேக்கிழார் பிள்ளைத் தமிழ்', 'சூரை மாநகர்ப் புராணம்' 'கோவிலூர்ப் புராணம்,' 'கண்டதேவிப் புராணம்,' 'வீரவனப் புராணம்', முதலியவற்றை இயற்றித் தந்தார்.

தமிழ்வாணன்:

இலக்குமணன் செட்டியார் - பிச்சம்மை ஆச்சியின் ஐந்தாவது பிள்ளையாகப் பிறந்த இராமநாதன், பின்னாளில் 'தமிழ்வாணன்' ஆனார். இவர் தேவகோட்டையில் 22-5-1926இல் பிறந்தார். இவர் மாத்தூர் கோவில் மணலூரர் பிரிவைச் சார்ந்தவர்.

இவர் தேவகோட்டையில் பள்ளி இறுதி வகுப்புவரை பயின்றார். பின்னர் தாமே முயன்று பல துறைகளில் அறிவு பெற்று, `Master of all subjects' ஆனார்.

தொடக்கத்தில் குழந்தைகளுக்காக எழுதத் தொடங்கினார். வானதி திருநாவுக்கரசுடன் இணைந்து 'ஜில் ஜில்' பதிப்பகத்தை 1940இல் தொடங்கினார்.

தமிழ் அறிஞர் கி.வா. சகந்நாதன் பரிந்துரையால் (சிபாரிசால்) சக்தி வை.கோவிந்தன் நடத்திய 'அணில்' என்ற சிறுவர் பத்திரிகையின் ஆசிரியராக 1944இல் ஆனார்.

1948 முதல் 'குமுதம்' எஸ்.ஏ.பி.யின் தொடர்பால் 'கல்கண்டு' பத்திரிகையின் ஆசிரியரானார். தாம் மறையும் வரை (1977) அதன் ஆசிரியராகப் பணியாற்றித் தனக்கெனத் தனியான, நிரந்தரமான வாசகர் வட்டத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

Koviloor Digital Library

இவரின் போதனைகள் பல இளைஞர்களைத் திருத்தியது.

இளமையில் வறுமையில் வாடிய இவர், கடின உழைப்பாலும், விடா முயற்சியாலும், துணிவே துணை என்ற நம்பிக்கையாலும் சிறந்து விளங்கினார். 29 ஆண்டுகள் 'கல்கண்டு' பத்திரிகையின் ஆசிரியராய் இருந்தார்.

கேள்வி - பதில் பகுதியை முதன் முதலில் தமிழ்ப் பத்திரிகை உலகில் அறிமுகப்படுத்தியவர் இவரே. பத்திரிகையின் அனைத்துப் பக்கங்களையும் எழுதி நிரப்பியவரும் இவரே.

துப்பறியும் நாவல்களில் 'சங்கர்லால்' என்ற கற்பனைப் பாத்திரத்தை உருவாக்கி உலவ விட்ட இவர், தம் எழுத்தாற்றலால் 'சங்கர்லால் உண்மையில் எங்கோ வாழ்கிறார்' என்ற உணர்வை, நம்பிக்கையை வாசகர்களிடம் உண்டாக்கினார்.

எழுத்துத் துறையில் 'தமிழ்வாணன் பாணி' என்ற புது உத்தியை உண்டாக்கினார்.

தம் நூல்களை வெளியிட 1957இல் 'மணிமேகலை பிரசுரம்' என்ற நிறுவனத்தைத் தொடங்கினார். 500க்கும் மேலான நூல்களை எழுதினார்.

தமிழ்த்தென்றல் திரு.வி.க. 'தமிழ்வாணன்' என்ற பெயரை இவருக்குச் சூட்டினார். தமிழ்த்தென்றல் திரு.வி.க.விடம் முறையாகத் தமிழ் கற்றார்.

முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆருக்கு 'மக்கள் திலகம்' என்ற பட்டத்தை வழங்கியவர் தமிழ்வாணன் அவர்களே ஆகும்.

'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் கலந்துகொண்டு மோகனூரில் ஆறுமாதம் சிறைத் தண்டனை அடைந்தார்.

சென்னை சைதாப்பேட்டை நீதி மன்றத்தில் கௌரவ மாஜிஸ்திரேட்டாகச் சேவை புரிந்தார்.

ஒரே குடும்பத்தைச் சார்ந்த மூவர் பத்திரிகை ஆசிரியராய் இருப்பது இவர் குடும்பத்தில் மட்டுமே. இவர் 'கல்கண்டு' ஆசிரியர். இவருக்குப் பின் இவர் மகன் லேனா அதன் ஆசிரியர். தமிழ்வாணனின் துணைவியார் மணிமேகலை 'திருவருள்' ஆசிரியர்.

Koviloor Digital Library

"தொடக்கத்தில் தமிழ்வாணன் செல்வாக்கால் கல்கண்டும், கல்கண்டின் வாயிலாகக் குமுதமும் வளர்ந்தன".

-சோம.லெ.

"தமிழ்வாணன் பல்துறை வித்தகர். Master of all Subjects.

-கிரிதாரி பிரசாத்

கறுப்புக் கண்ணாடி, தொப்பி, துணிவே துணை என்று வாழ்ந்த இவர் 10-11-1977இல் அமரரானார்.

சின்ன அண்ணாமலை:

நாச்சியப்ப செட்டியார் - மீனாட்சி ஆச்சியின் மகனாக உய்யக் கொண்டான் சிறுவயலில் 18-6-1920இல் பிறந்தார். இவர் இலுப்பைக் குடிக் கோவிலைச் சார்ந்தவர். இவர் பெற்றோர் இட்ட பெயர் நாகப்பன்.

தம் 12வது வயதில் தேவகோட்டைக்குப் பிள்ளை வளரச் சென்றார். அங்கு இட்ட பெயர் அண்ணாமலை.

அண்ணாமலை அரசரிடமிருந்து இவரை வேறுபடுத்திக் காட்ட இராசாசி சூட்டிய பெயர் சின்ன அண்ணாமலை என்பது.

பள்ளியில் படிக்கும்போது கமலா நேரு அவர்கள் காலமானார். அதற்காகப் பள்ளிக்கு விடுமுறை விட வேண்டும் எனப் போராட்டம் நடத்தினார்.

1935 - 36 இல் கோபி செட்டிப்பாளையம் டைமண்ட் ஜூபிலி உயர் நிலைப் பள்ளிக்குப் பேச வந்த சத்தியமூர்த்தி, இவருக்குக் கதராடையைக் கொடுத்தார். அன்றுமுதல் இவர் கதராடையே அணிந்தார்.

பினாங்கில் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டு, நாடு கடத்தப் பட்டார்.

1942 ஆகஸ்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டார். காசியில் தலைமறைவாய் இருந்தார். இவர் தலைக்கு ஆங்கில அரசு ரூபாய் பத்தாயிரம் விலை வைத்தது. காவல் துறையினர் பெற்றோர்களைத் துன்புறுத்தியதால் தேவகோட்டையில் சரணடைந்தார்.

1942 போராட்டத்தில் சிறையில் இருந்த இவரை, திருவாடானைச் சிறையை உடைத்து மக்கள் விடுவித்தனர்.

Koviloor Digital Library

நகைச்சுவையாகப் பேசுவதில் வல்லவர். உணர்ச்சி ததும்ப இவர் பேசுவதால், இவர் 'உற்சாக எரிமலை' என இராசாசியால் பாராட்டப் பெற்றார். இராசாசியின் பரிந்துரையால், சிபாரிசால் 'அரிசன்' இதழைத் தமிழில் வெளியிட காந்தியடிகள் இவருக்கு அனுமதி வழங்கினார்.

1945இல் 'தமிழ்ப் பண்ணை' என்ற புத்தக வெளியீட்டு நிலையத்தைத் தொடங்கித் தரமாய் நூல்களை வெளியிட்டார். மலிவுப் பதிப்பாய் நூல்களை வெளியிட்டார்.

பல பதிப்பகங்கள் தோன்ற இவர் காரணமாய் இருந்தார்.

நாமக்கல் கவிஞருக்கு ரூ.20,000/- பண முடிப்பு வழங்கினார்.

தேவகோட்டையில் தமிழ் இசை இயக்கத்தை நடத்தினார்.

1955இல் தமிழரசுக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற வடக்கு எல்லைப் போராட்டத்தில் கலந்து கொண்டார்.

1956-57இல் தமிழை ஆட்சி மொழியாக்கப் போராடினார்.

எழுத்தாளர், பேச்சாளர், புத்தக வெளியீட்டாளர், தமிழ்ப் பற்றாளர், திரைப்படத் தயாரிப்பாளர், தேசீயவாதி எனப் பன்முகம் கொண்ட இவர் 18-6-1980இல் அமரரானார்.

மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார்:

சுப்பையா செட்டியார் - தெய்வானை ஆச்சியின் மகனாக மேலைச் சிவல்புரியில் 17-4-1917இல் பிறந்தார். இவர் வைரவன் கோவிலைச் சார்ந்தவர்.

இளமையில் பெற்றோரை இழந்த இவர், பாட்டனாரால் வளர்க்கப் பட்டார். பர்மா சென்று பணிபுரிந்தார். முதலாளி வற்புறுத்திய பொய்யைச் சொல்ல மறுத்ததால், பணியை இழந்து தாயகம் திரும்பினார்.

பண்டிதமணியின் உதவியால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் பயின்றார்.

7 ஆண்டுகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றினார்.

1948 முதல் 1963 வரை காரைக்குடி அழகப்பா கல்லூரியில் பணியாற்றினார்.

1963இல் மீண்டும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று பணியாற்றினார்.

Koviloor Digital Library

பின்னர் காரைக்குடி அழகப்பா கல்லூரி முதல்வராகவும் பணியாற்றினார்.

1979 முதல் 1982 வரை மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணை வேந்தராய்ப் பணியாற்றினார். அங்கு புதிய துறைகளைத் தொடங்கினார். பேராசிரியர்கள் சொந்த வீடு கட்டிக் கொள்ளத் திட்டம் வகுத்தார்.

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டைச் சிறப்புற நடத்தினார்.

தமிழகப் புலவர் குழுவின் தலைவராக இருந்தார்.

நகரத்தாரில் முதன்முதலாகக் கல்லூரி முதல்வர், பல்கலைக் கழகத் துணை வேந்தர் ஆனவர். டி.லிட்., பி.எச்டி., பட்டங்களைப் பெற்றவர் இவரே.

சிதம்பரத்தில் நாள்தோறும் அம்பலத்தில் மூன்று முறை திருமுறைப் பாடல்களைப் பாடச் செய்யப் போராடினார். அதில் வெற்றி பெற்றார். இப்போது பாடல்கள் பாடப் பெறுகின்றன.

"மழலைப் பருவத்தில் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை, மூதுரை ஆகிய இளந்தமிழ் நூல்களை மனப்பாடம் செய்தால், பின் வாழ்வுக்கு நல்ல அடிப்படையாய் அமையும். நம் இனத்து முன்னோர்கள் இவற்றைப் படித்து, மனதில் ஆழப் பதித்துக் கொண்டதால்தான் வாழ்க்கையைச் சிறப்புற நடத்தினர்" என்றார்.

இவர் விருப்பத்தின் பேரில் காரைக்குடியில் இராமசாமி தமிழ்க் கல்லூரி தொடங்கப் பெற்றது.

தமிழக முதல்வர் கலைஞர் 'திருவள்ளுவர் விருதை' அளித்து இவரைப் பெருமைப் படுத்தினார்.

கலைஞரின் 'குறளோவிய'த்திற்கு இவர் முன்னுரை எழுதினார்.

500க்கும் மேற்பட்ட பல புதிய தமிழ் சொல்லாக்கங்களை இவர் உருவாக்கினார்.

காரைக்குடி செக்காலையிலிருந்து தொடங்கும் சாலை மாணிக்கனார் சாலை என அழைக்கப்படுகிறது. சுப்பிரமணியபுரம்

Koviloor Digital Library

(காரைக்குடி) 7வது வீதியில் உள்ள அரசு பயணியர் விடுதி மாணிக்கனார் விடுதி என அழைக்கப் படுகிறது.

குன்றக்குடி ஆதினம் 'முது பெரும் புலவர்' என்னும் பட்டத்தை வழங்கியது. மேலைச் சிவல்புரி சன்மார்க்கசபை 'செம்மல்' என்னும் பட்டத்தை வழங்கியது.

இவர் எழுதிய நூல்கள்: மாணிக்கக் குறள், மாமலர், கொடை விளக்கு, தொல்காப்பியப் புதுமை, வள்ளுவம், மனைவியின் உரிமை, தமிழ்க் காதல், கம்பர் முதலியன.

கவிஞர் முடியரசனை பண்டிதமணி பற்றி 'ஊன்று கோல்' எனக் காவியம் பாடச் சொன்னார். கவிஞர் சொ.சொ.மீ. சுந்தரத்தைப் 'பண்டிதமணி பிள்ளைத்தமிழ்' பாடச் சொன்னார்.

இவர் எதிலும் நேர்மையாக இருப்பார். பிறர் பொருளுக்கு ஆசைப்பட மாட்டார்.

இவர் எழுதிய வைத்த விருப்பமுறி (உயில்) யின் விவரம் வருமாறு:

1. கடன்களைக் கொடுத்தல். வர வேண்டிய நிலுவைகளை வசூலித்தல். சொத்துக்கு வரி கட்டுதல்.
2. இறுதிக் காரியச் செலவை (Funeral Expenses) என் சொத்தில் இருந்தே செய்தல்.
3. எஞ்சிய உடைமைகளில் (Net Assets) 1/6 பங்கை அற நிலையத்தின் வைப்பு நிதியாக (Trust capital fund) வைத்து, அவ் வருமானத்தை நான் பிறந்த ஊரான மேலைச் சிவபுரியில் கல்வி, மருத்துவம், நலவாழ்வு, குழந்தைகள் நலம், அஃறிணை உயிர்களின் நலம் ஆகியவற்றுக்கு சாதி, சமய வேறுபாடின்றி இலவசமாகச் செலவு செய்தல்.
4. என் நூலகத்தில் உள்ள நூல்கள் எல்லாவற்றையும் அழகப்பர் பல்கலைக் கழகத்திற்கு வழங்குதல்.

என் குறிக்கோள் :

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற (குறள் – 300)

என்ற குறள்நெறிப்படி, பொய் சொல்லாது வாழ்தல்.

Koviloor Digital Library

என் தாய்வழி அய்யாவுக்கும், ஆயாளுக்கும், என் ஆசான் இருமொழிப் புலமை சான்ற பண்டிதமணிக்கும், நானும் என் வழியினரும் நன்றியுடையோம்.

அவர் விருப்பமுறி (உயில்) படி, 23-7-1990இல் நூலக நூல்கள் அனைத்தும் அழகப்பர் பல்கலைக் கழகத்திற்குக் கொடுக்கப்பட்டன.

1/6 பங்கு ரூ.60,000/- க் கொண்டு 20-4-1992இல் அறக்கொடை நிறுவப்பட்டது.

தமிழ்ப் பணிக்காகவே வாழ்ந்த மூதறிஞர் 24-4-1989இல் அமரரானார்.

குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா

அழகப்ப செட்டியார் - உமையாள் ஆச்சியின் மகனாக இராயவரத்தில் இவர் பிறந்தார். இவர் மாத்தூர் கோவில் கண்ணூர்ப் பிரிவைச் சார்ந்தவர்.

இராயவரம் மற்றும் இராமசந்திரபுரத்தில் கல்வி கற்றார். பேராசிரியர் மதுரை முதலியார், இளவழகனார், டாக்டர் மா.இராச மாணிக்கனார் முதலியவர்களிடம் தமிழ் கற்றார்.

13வது வயதில் கவிதை எழுதத் தொடங்கினார்.

1940இல் வை.கோவிந்தனுடைய 'சக்தி' அலுவலகத்தில் பணியில் சேர்ந்தார்.

1941 இல் இந்தியன் வங்கியில் சேர்ந்து 1982 வரை பணியாற்றினார்.

4-2-1944இல் திருமணம் நடைபெற்றது.

தனக்கெனத் தனித் துறையாகக் குழந்தை இலக்கியத்தை எடுத்துக் கொண்ட இவர், குழந்தைகளுக்காக எழுதினார்.

23 குழந்தைப் பாடல்கள் அடங்கிய 'மலரும் உள்ளம்' என்ற நூலை வெளியிட்டார். இதுவே இவர் எழுதிய முதல் நூலாகும்.

பாலர் மலர், டமாரம், சங்கு, பூஞ்சோலை, கோகுலம் ஆகிய இதழ்களின் கௌரவ ஆசிரியராகப் பணியாற்றினார்.

குழந்தைகளுக்காக 55 நூல்கள் எழுதியுள்ளார். அவற்றுள் சில: பர்மா ரமணி, அம்மாவும் அத்தையும் - கதை நூல்கள். பெரியோர்

Koviloor Digital Library

வாழ்வினிலே, கதை சொன்னவர் கதை, வாழ்க்கை வரலாற்று நூல், பாட்டிலே காந்தி கதை, ஈசாப் கதைப் பாடல்கள், மலரும் உள்ளம் - கவிதை நூல்கள்.

1950இல் குழந்தை எழுத்தாளர் சங்கத்தைத் தோற்றுவித்து, குழந்தை இலக்கியத்தை வளர்த்தார்.

'பிள்ளைக் கவி அரசு', 'மழலைக் கவிச் செம்மல்,' 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' பட்டங்கள் இவருக்கு வழங்கப்பெற்றன.

தமிழ்வாணன் இவருக்கு 'குழந்தைக் கவிஞர்' எனப் பெயர் சூட்டினார்.

'மலரும் உள்ளம்' - முதல் தொகுதி, 'பாட்டிலே காந்தி கதை' ஆகிய நூல்கள் மத்திய அரசின் பரிசைப் பெற்றன.

பாப்பாவுக்குப் பாட்டு, நல்ல நண்பர்கள், பெரியோர் வாழ்விலே, சின்னஞ்சிறு வயதில், பிள்ளைப் பருவத்திலே ஆகிய நூல்கள் தமிழக அரசின் பரிசைப் பெற்றன.

தென்னாட்டு நதிகள் பற்றி 'நம் நதிகள்' என்னும் பெயரில் இவர் படைத்த நூலைத் தென்மொழிகள் புத்தக டிரஸ்ட் 14 இந்திய மொழிகளில் வெளியிட்டுள்ளது.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை இவர் குழந்தைகளுக்காக எழுதியுள்ளார்.

தமிழ்நாட்டுப் பாட நூல், கேரளப் பாடநூல், கர்நாடகப் பாட நூல், இலங்கை, தென்னாப்பிரிக்கா, மலேசியா, சிங்கப்பூர், மொரீசியஸ் போன்ற பாட நூல்களில் இவர் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

இவருடைய பாடல்களை ஆய்வு செய்து மூவர் M.Phil பட்டமும், ஒருவர் P.hd பட்டமும் பெற்றுள்ளனர்.

பாலும் பழமும் ஏனம்மா
பசியே இல்லை எனக்கூறிச்
சீலச் சிறுவர் சிறுமியர்கள்
சிறந்த மலரும் உள்ளம் இதைக்

Koviloor Digital Library

காலை மாலை என்றென்றும்
    கற்று மகிழச் செய்யும் இந்திர
ஜாலக் கவிஞன் வள்ளியப்பன்
    தழைத்து வாழ்க வாழ்கவே

-கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

பாரதி பரம்பரை' பாரதிதாசன் பரம்பரை என்பதைப் போலக் குழந்தைக் கவிஞர் பரம்பரை என்ற ஒன்றை வள்ளியப்பா உருவாக்கினார்.

தமிழ் இலக்கியத்தில் குழந்தை இலக்கியம்தான் மிகவும் பலவீனமான பகுதி. அக்குறையை நீக்குவது எனக் குழந்தைக் கவிஞர் கடைசிவரை உழைத்தார். தமிழில் குழந்தை இலக்கியத்திற்கு ஒரு வள்ளியப்பா கிடைத்திருக்காவிட்டால், அது எவ்வளவு பெரிய சூனியமாகியிருக்கும் என்பதை இலக்கியவாதிகள் நன்கு உணர்வார்கள்.

-லேனா தமிழ்வாணன்

குழந்தைக் கவிஞர் என அனைவராலும் அன்போடு அழைக்கப் பட்ட இவர் 16-3-1989இல் அமரரானார்.

சக்தி வை.கோவிந்தன்:

இராமநாதன் செட்டியாரின் மகனாக இராயவரத்தில் 26-6-1912ல் பிறந்தார். இவர் வைரவன் கோவிலைச் சார்ந்தவர்.

தநதையாரின் இலக்கிய ஆர்வம், உ.வே.சா.போன்ற தமிழ் அறிஞர்கள் அவர் இல்லத்திற்கு வருகை தந்தது, வீட்டில் இருந்த பெரிய நூலகம் இவை அனைத்தும் இவருக்குத் தமிழ் படிக்க வாய்ப்பையும், தமிழுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தையும் ஏற்படுத்தியது.

இவர் ஒரு செல்வக் குடும்பத்திற்குப் பிள்ளை வளரச் சென்றார். அதனால் அழகிய தமிழ் நூல்களை வெளியிட வாய்ப்பு ஏற்பட்டது.

"ஏழைபடும்பாடு" என்ற புதினத்தை முதலில் வெளியிட்டார். கவியோகி சுத்தானந்த பாரதியின் நூல்களை வெளியிடுவதற்கென்றே 'அன்பு நிலையத்தை' நிறுவினார்.

Koviloor Digital Library

1934இல் நண்பர்களுடன் சேர்ந்து 'பாரதி சங்க'த்தை ஏற்படுத்தினார்.

1939இல் 'சக்தி' என்ற பத்திரிகையைத் தொடங்கினார். அதனைத் தொடர்ந்து, மங்கை, அணில், குழந்தைகள் செய்தி, கதைக்கடல், காந்தி வழி முதலிய பத்திரிகைகளை வெளியிட்டார்.

தமிழ் நூல்களை மலிவுப் பதிப்பாக (பாரதியார் கவிதைகள், திருக்குறள் பரிமேலழகர் உரை) வெளியிட்டார். எனவே, இவரே மலிவுப் பதிப்பின் முன்னோடி.

வீரசவர்க்காரின் 'எரிமலை', மு.அருணாசலம் எழுதிய 'உலோகங்கள், காய்கறிகள்' போன்ற நூல்களை வெளியிட்டார்.

பல நல்ல எழுத்தாளர்களை உருவாக்கினார்.

டாக்டர் இராசா சர் மு.அ.முத்தையா செட்டியார்:

செட்டிநாட்டரசர் அண்ணாமலை செட்டியார் - சீதை ஆச்சியின் தலைமகனாக கானாடுகாத்தானில் 5-8-1905 இல் பிறந்தார். இவர் இளையாற்றகுடிக் கோவில் பட்டினசாமி பிரிவைச் சார்ந்தவர்.

சென்னையில் கல்வி கற்றார்.

1929 - 1935இல் சென்னை மாநகராட்சி உறுப்பினராய் இருந்த இவர், 1932இல் சென்னை நகரின் முதல் மேயரானார். மீண்டும் 1934-35 இல் மேயரானார்.

1936-37இல் பொப்பிலி அரசரின் அமைச்சரவையில் சென்னை மாநிலக் கல்வி, உள்ளாட்சி, சுகாதார அமைச்சராகப் பதவி வகித்தார்.

1937இல் கே.வி.ரெட்டியின் அமைச்சரவையில் அறநிலையப் பாதுகாப்புத் துறை அமைச்சராகப் பதவி வகித்தார்.

1937 - 39இல் எதிர்க்கட்சித் தலைவராகச் சிறப்பாகச் செயல்பட்டார்.

1930-1961 வரை 31 ஆண்டுகள் சென்னை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றினார்.

Koviloor Digital Library

1948 - 1984 வரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தராக இருந்தபோது, பல புதிய துறைகளை உருவாக்கினார்.

தமிழையும், தமிழிசையையும் வளர்த்தார். தமிழறிஞர்கள் பலரைப் போற்றினார். உலகப் புகழ்பெற்ற மேதைகளை அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர்களாக்கிப் பல்கலைக் கழகம் வளர அரும்பாடு பட்டார்.

சென்னையில் 8 பள்ளிகள், சிதம்பரம் அண்ணாமலை நகரில் 5 பள்ளிகள், கரூரில் 3 பள்ளிகள், செட்டிநாட்டில் 1 பாலிடெக்னிக் நிறுவிக் கல்விப் பணி செய்தார்.

உலகத்தின் பல்வேறு தலைவர்களை அழைத்து விருந்தளித்து மகிழ்ந்தார்.

மதுரை மில்லின் தலைவர். செட்டிநாடு சிமிண்டு ஆலை, அகில இந்திய வர்த்தக சங்கத் தலைவர், சௌத் இந்தியா கார்ப்பரேசன் தலைவர், 1968 வரை இந்தியன் வங்கித் தலைவர் ஆகிய பதவிகளை வகித்து, அதன் வளர்ச்சிக்குப் பாடுபட்டார்.

இவரது துணைவியார் இராணி மெய்யம்மை ஆச்சி 1970இல் மறைந்தார். அதே ஆண்டில் மூத்த மகன் குமாரராசா முத்தையாவும் மறைந்தார்.

35 ஆண்டுகளுக்கு மன் சென்னை பெத்துநாயக்கன் பேட்டையில் இருந்து ஐலண்டு கிரவுண்டு வரை 3 மைல் தூரம் இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதனுடன் கால் நடையாகவே நடந்து வந்தார். காங்கிரசில் இருந்தும் கட்டாய இந்தியை எதிர்த்தார்.

"ராசா சர் முத்தையா செட்டியார் அவர்களுக்கு இருக்கின்ற வசதிகளுக்கு அவர் பொது மக்களை நினைக்க வேண்டிய கட்டாயம் இல்லை. ராசா சர் அடிக்கடி நினைத்து நல்லவைகளையே செய்வதைப் பார்க்கும்போது, அவரை 'மகாராசா' என்றே அழைக்கத் தோன்றுகிறது"

-பெரியார் ஈ.வெ.ரா.

Koviloor Digital Library

"தம்மைவிட இளையவர்களை "நீங்கள்" என்றழைக்கின்ற மரியாதை ராசா அவர்களுக்குரிய பல நல்ல குணங்களுள் முதன்மையானதாகும்"

-பேரறிஞர் அண்ணா

"தமிழிசை இயக்கத்தின் வாழ்வும், உயிரும் இவர்களே தான். தமிழிசை உலகில், நடைபெற்றுள்ள மிகப்பெரிய ஆராய்ச்சிகளுக்கு எல்லாம் இவர்களே சிறப்பான காரணம் எனலாம்."

-பெருந்தலைவர் காமராசர்

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதினம் சார்பில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் 28-1-51இல் பண்டிதமணிக்கு 'சைவ சித்தாந்த வித்தகர்' என்ற பட்டம் அளித்து சிறப்பித்தார். அப்போது ராசா பொன்னாடை போர்த்தினார். அதனால் மகிழ்ந்த பண்டிதமணி மேடையிலேயே பாராட்டிப் பாடினார். அப்பாடல் வருமாறு :

கற்றோர்க்கு உயிர் அனையன்
காருணிகன் டாக்டர் கொடை
வெற்றிமிகு ராசாசர் விறுற்றோன் – மற்றிவனே
ஆண்ட செட்டி நாடாளும்
அண்ணல்தமிழ்ப் பாவலரால்
காண்தகு முத்தையவள்ளல் காண்.

பொன்னாடை போர்த்தும்கை
பொற்பொதுவைக் கூப்பும் கை
எந்நாளும் கல்விதனக்கு
ஈயும்கை – முன்னாக
நாவலருக்கும் பாவலருக்கும்
நாடி வழங்கும்கை
காவலனாம் முத்தையன் கை

இந்திய அரசு 'பத்மபூசன்' விருது வழங்கிச் சிறப்பித்தது. பல்கலைக்கழகம் 'டாக்டர்' பட்டம், 'தமிழ்க்காவலர்' பட்டங்களை வழங்கிப் பெருமைப் படுத்தியது.

Koviloor Digital Library

"தெருவெல்லாம் தேவாரமும், திருவாசகமும் முழங்கச் செய்வீர். மெல்லிசை வல்லிசையாக இல்லாமல் நல்லிசையாக இருக்க வேண்டும். இன்று அரசர்கள் இல்லாததால் தமிழ் மொழியை மக்கள்தான் காப்பாற்றி வளர்க்க வேண்டும்'' என வாழ்ந்த இவர் 12-5-84இல் அமரரானார்.

கம்பன் அடிப்பொடி சா. கணேசன்:

முரு.வீர. சாமிநாதன் செட்டியார் - நாச்சம்மை ஆச்சியின் மகனாகக் காரைக்குடியில் 6-6-1908இல் பிறந்தார். இவரின் பிள்ளைப் பெயர் வீரப்பனாகும். இவர் பிள்ளையார்பட்டிக் கோவிலைச் சார்ந்தவர்.

தொடக்கத்தில் பர்மாவில் தோங்குவா என்ற இடத்தில் வசித்தார். பின்னர் தாய்நாடு திரும்பி இங்கேயே தங்கிவிட்டார்.

இவர் தந்தை பிள்ளையார்பட்டிக் கோவிலுக்கு இராசகோபுரம் எழுப்பினார்.

சிதம்பர அய்யரிடம் தமிழ் கற்றார்.

5-4-20இல் (12 வயதில்) திருமணம் செய்து கொண்டார்.

1927இல் காந்தியடிகள் காரைக்குடி கற்பக நிலையத்திற்கு வருகை தந்தபோது தொண்டர்படைத் தலைவராய்ப் பணியாற்றினார். காங்கிரசில் சேர்ந்தார். 1936க்குப் பிறகு தேசீயத்தில் தீவிர ஈடுபாடு கொண்டார். தமிழ்நாடு மாநில காங்கிரசுக் குழு மாநாட்டின் வரவேற்புச் செயலராய்ப் பணியாற்றினார்.

ஆங்கில அரசு வழங்கும் பட்டங்களை ஏற்றவர்களுக்குக் காங்கிரசில் பதவி கொடுக்கக் கூடாதெனத் தீர்மானம் இயற்ற, இராசாசி அதனை ஏற்க மறுக்க, அவரின் எதிர்ப்பையும் மீறித் தீர்மானம் நிறைவேறியது.

காரைக்குடி மகர் நோன்புத் திடலில் தனிநபர் சத்தியாக்கிரகம் செய்து, சென்னைக்கு நடந்து செல்லும்போது கைதாகி, உ.பி.யில் உள்ள அலிபுரம் சிறையில் அடைபட்டு 4 மாதம் சிறைத் தண்டனை அடைந்தார்.

Koviloor Digital Library

ஆங்கில அரசுக்கு எதிராக இவர் கலவரம் செய்ததால், இவரைச் சுட்டுத்தள்ளச் சொல்லி அரசு உத்தரவிட்டது. அதனால் இவர் தலை மறைவானார். அதனால் இவர் சொத்துக்கள் பறிமுதல் செய்யப் பெற்றன. ரூபாய் மூன்று இலட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

5000 புத்தகங்கள் அடங்கிய நூல் நிலையம் மட்டும் நண்பர்களால் காப்பாற்றப் பட்டது.

1942 ஆகஸ்டுப் போராட்ட இயக்கத்தில் கலந்துகொண்டதால் மீண்டும் சிறைத் தண்டனை அடைந்தார். சென்னைக் காவல் துறை ஆணையரிடம் சரணடைந்து 18 மாதம் சிறையில் இருந்தார்.

தமிழ்நாடு காங்கிரசு தலைவர் பதவிக்குப் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். அதனால் 1957இல் நடைபெற்ற சென்னை சட்டமன்றத் தேர்தலில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆதரவுடன் சுயேச்சையாய்ப் போட்டியிட்டுத் தோற்றார்.

1960இல் இராசாசியின் சுதந்திராக் கட்சியில் சேர்ந்தார். அக் கட்சியின் சார்பில் சென்னை சட்டமன்ற உறுப்பினராக 1962 - 67 இல் பணியாற்றினார். 1968 - 74 வரை மேலவை உறுப்பினராக இருந்தார்.

காரைக்குடியில் சொ. முருகப்பா, இராய. சொக்கலிங்கத்துடன் இணைந்து பொதுப்பணிகள் செய்தார்.

1939இல் கம்பன் கழகத்தைத் தோற்றுவித்து அதன் செயலாளராகத் தம் இறுதிக் காலம்வரை பணியாற்றினார்.

ரூ 101/- நன்கொடையுடன் தொடங்கப்பெற்ற கம்பன் கழக விழாக்கள் நகரச் சிவன்கோவில் அருகில் உள்ள மீனாட்சி பெண்கள் பள்ளியில் 3 நாட்கள் நடைபெற்றன. 1972முதல் கம்பன் மணி மண்டபத்தில் நடைபெற்று வருகிறது. அங்கு தமிழ்த் தாய்க்குக் கோவில் கட்டினார்.

இவர் நேரம் தவறாதவர். விழாவைக் குறித்த நேரத்தில் ஆரம்பித்துக் குறித்த நேரத்தில் முடிக்கத் தவறாதவர். இருமொழிப் புலமையுடையவர்.

Koviloor Digital Library

1941இல் காரைக்குடியில் தமிழ் இசைச் சங்கத்தைத் தொடங்கினார். 'நவயுகப் பிரசுராலய'த்தைத் தொடங்கினார்.

விழாவில் பட்டிமண்டபம், மேல் முறையீட்டுப் பட்டி மண்டபம் எனப் பல புதிய இலக்கிய நிகழ்ச்சிகளைத் தமிழகத்தில் அறிமுகப் படுத்தியவர் இவரே.

பிள்ளையார்பட்டித் தலவரலாறு, இராசராசன் கல்வெட்டு ஆராய்ச்சி, தமிழ்த் திருமணம், சிற்பச் செந்நூல், கல்சொல்லும் கதை முதலிய நூல்களை எழுதியுள்ளார்.

1970இல் நீதிபதி மகாராசன் 'கம்பன் அடிப்பொடி' என்ற பட்டத்தை வழங்கினார். அன்று முதல் இவர் 'கம்பன் அடிப்பொடி' என அனைவராலும் அழைக்கப்பெற்றார்.

காந்தியடிகளைப் பின்பற்றி சட்டை அணியாமல் வாழ்ந்தார்.

அரசியல் வித்தகர், ஆராய்ச்சியாளர், சிற்பக்கலை வல்லுநர், தேசபக்தர் எனப் பன்முகத் தன்மை கொண்ட இவர் 28-7-82இல் அமரரானார்.

அ.கருப்பஞ்செட்டியார்:

அ. கருப்பஞ்செட்டியார் கோட்டையூரில் 3-11-1911இல் பிறந்தார். இவர் ஏ.கே. செட்டியார் என அழைக்கப்பட்டார்.

தொடக்கக் கல்வியைத் திருவண்ணாமலையில் கற்றார்.

தம் 20வது வயதில் கோட்டையூரில் 'தன வணிகன்' என்ற மாத இதழைத் தொடங்கினார். ஆசிரியர் குழுவில் ஒருவராக வள்ளல் அழகப்பர் இருந்தார்.

சில காலத்திற்குப் பின், நகரத்தார்கள் சார்பாகப் பர்மாவிலிருந்து பல ஆண்டுகள் 'தன வணிகன்' வெளிவந்தது. ஆண்டுமலர்களை இலக்கியச் சோலையாக வெளியிட்டார்.

தனவணிகனில் தேவகோட்டை வன்தொண்டர் செட்டியாரைப் பற்றி உ.வே.சா. கட்டுரை எழுதினார். அக் கட்டுரை நகரத்தாரைப் பற்றிய அரிய செய்திக் கட்டுரையாக அமைந்தது.

உலகம் சுற்றிய தமிழராகிய இவர் காந்தியவாதியாவார். அதனால் 1938இல் 'மகாத்மா காந்தி' என்ற அரிய முழுநீளச் செய்திப் படத்தை

Koviloor Digital Library

வெளியிட்டார். இதன் தமிழ்ப் பதிப்புக்குச் சா. கணேசன் பின்னணிக் குரல் கொடுத்தார். பண்டித நேருவிடம் இப் படத்தைக் கொடுத்து நாட்டுடைமை ஆக்கினார்.

செருமணியில் ஒளிப்படக்கலையைக் கற்று அரிய புகைப் படங்களை எடுத்தார்.

1943இல் சென்னையில் "குமரிமலரை"த் தொடங்கி 40 ஆண்டுகள் நடத்தினார்.

இதுவரை அச்சில் வராத பாரதியாரின் கதை, கட்டுரை, கவிதைகளை வெளியிட்டார்.

'உலகம் சுற்றும் தமிழன்' என்று தான் எழுதிய முதல் பயண நூலை 1930இல் சக்தி வை.கோவிந்தன் மூலம் வெளியிட்டார். இதுவே தமிழில் வெளியான முதல் பயண நூல்.

பின்னாளில் சோம லெ. பயணக் கட்டுரைகள் எழுத இவரே உந்து சக்தியாக விளங்கினார்.

சென்ற நூற்றாண்டில் வெளிவந்த தமிழ்ப் பயணக் கட்டுரைகளைத் தொகுத்து 'தமிழ்நாடு' என்ற பெயரில் வெளியிட்டார்.

இவர் எழுதிய 10 கட்டுரைகள் அடங்கிய 'அண்ணல் காந்தி அடிச்சுவட்டில்' என்ற கட்டுரைத் தொகுதி இன்னும் நூலாக வெளிவர வில்லை.

3 தொகுதிகள் அடங்கிய 'புண்ணியவான் காந்தி' என்ற தொகுப்பில், முதல் தொகுதி மட்டுமே வெளிவந்துள்ளது.

'குடகு' என்ற நூல் மலைவாழ் மக்களின் வாழ்க்கையைக் கூறுகிறது.

உலகச் சான்றோர்களின் கருத்துக்களைத் தமிழில் சில வரிகளில் எழுதி, 'கொய்த மலர்கள்' என்ற தலைப்பில் தொகுத்தார். அதனை மதுரை டி.வி.எஸ். (T.V.S.) நிறுவனத்தினர் வெளியிட்டனர்.

ஆஸ்டிரியாவில் இவர் நேதாஜியுடன் இருந்தார்.

'அமெரிக்க நாட்டில்', 'கரிபியன் கடலும் கயானாவும்,' 'சப்பான்' ஆகிய நூல்களையும் எழுதினார்.

இவர் மனைவி பெயர் உண்ணாமலை ஆச்சி.

Koviloor Digital Library

இவர், தம்மிடமிருந்த நூல்களை மறைமலையடிகள் நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கினார்.

உலகம் சுற்றிய தமிழரான இவர் 10-9-83இல் அமரரானார்.

முதுபெரும் புலவர் பண்டிதமணி
மு. கதிரேசன் செட்டியார்:

முத்துக்கருப்பஞ் செட்டியார் - சிகப்பி ஆச்சியின் மகனாக மகிபாலன்பட்டியில் 6-10-1881இல் கதிரேசன் பிறந்தார். இவர் வைரவன் கோவிலைச் சார்ந்தவர்.

3 வயதில் இளம்பிள்ளைவாத நோயால் தாக்குண்டு இடது கையும், இடது காலும் செயலிழக்க துன்பப் பட்டார்.

இலங்கை சென்ற இவர், தந்தையின் இறப்பால் ஊர் திரும்பினார். 14 வயதில் குடும்பப் பொறுப்பை ஏற்றார்.

சோழவந்தான் அரசன் சண்முகனாரிடம் தமிழ் கற்றார். வட மொழி வித்துவான் தருவை நாராயண சாத்திரியாரிடம் வடமொழி கற்றார். காரைக்குடி சொக்கலிங்க அய்யாவிடம் சைவசித்தாந்த சாத்திரப் பாடம் கேட்டார்.

மேலைச்சிவல்புரி வ.பழ.சா. பழநியப்ப செட்டியாரின் நட்பால் 13-5-1909இல் சன்மார்க்க சபையைத் தோற்றுவித்தார். அதில் சேர்ந்து படித்துப் புலமை பெற்றார்.

வடமொழிப் புலமையும், தமிழ்மொழிப் புலமையும் கைவரப் பெற்றார்.

வடமொழியில் உள்ள சுலோசனை, மிருச்சகடிகம் (மண்ணியல் சிறுதேர்), சுக்கிரநீதி, சாணக்கியரின் கௌடில்யம் ஆகியவற்றைத் தமிழில் மொழிபெயர்த்தார். இவற்றை சன்மார்க்க சபை வெளியிட்டது.

பட்டப்படிப்பு ஏதுமில்லாமல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக 1934 முதல் 1946 வரை பணியாற்றினார்.

தனித்தமிழ் வித்துவான் படிப்பு, பி.ஏ, (ஆனர்ஸ்) இல் தமிழ் படிப்பு வேண்டுமென 1929இல் கிளர்ச்சி செய்தார். அதில் வெற்றி பெற்று, அப் படிப்புக்கள் அமையக் காரணமானார். இதற்காக

Koviloor Digital Library

சன்மார்க்க சபையின் சார்பில் கணேசர் செந்தமிழ்க் கல்லூரி தொடங்கப் பெற்றது.

திருவாசகம் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவைப் பகுதிகட்கு இவர் எழுதிய 'கதிர்மணி விளக்கம்' என்ற உரை, சங்க நூலுக்கு உரைஎழுதிய நச்சினார்க்கினியர் உரைபோல சாலச் சிறந்தது.

'உரைநடைக் கோவை' (இரு தொகுதிகள்) 'இலக்கிய நயம்' முதலியன இவர் எழுதிய கட்டுரை நூல்களாகும்.

1905இல் மேலைச்சிவபுரியில் உள்ள சாமிநாத விநாயகர் பேரில் 'சிவபுரி பதிற்றுப்பத்தந்தாதி' பாடினார். இதுவே இவரது முதல் படைப்பு ஆகும்.

நகரத்தார் இனத்தின்பால் கொண்ட பற்றின் காரணமாக நாட்டுக் கோட்டை நகரத்தார் சீர்த்திருத்தம்,' 'நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு' ஆகிய நூல்களை எழுதினார்.

1938இல் அண்ணாமலை, சென்னை, திருவனந்தபுரம், ஆகிய பல்கலைக்கழகங்களில், தமிழ் பாடத் திட்டக்குழுத் தலைவராகப் பணியாற்றினார்.

27-8-1925இல் சன்மார்க்க சபையினர் இவருக்குப் 'பண்டிதமணி' என்ற பட்டத்தை வழங்கினர்.

1941இல் இவர் தன் மணிவிழாவைக் கொண்டாடினார்.

11-6-1942இல் ஆங்கில அரசு இவருக்கு 'மகாமகோபாத்தியாய' என்ற பட்டத்தை வழங்கியது.

7-7-1946இல் சன்மார்க்க சபையில் இவரது திருவுருவப் படம் திறந்து வைக்கப்பெற்றது. 3-4-1974இல் இவரது திருவுருவச் சிலை மகிபாலன்பட்டியில் தமிழக அரசு சார்பில் நிறுவப்பெற்றது.

'முதுபெரும் புலவர்', 'சைவசித்தாந்த வித்தகர்' என்ற பட்டங்களும் இவருக்கு வழங்கப்பெற்றன.

பண்டிதமணியின் வரலாறு கவிஞர் முடியரசனால் 'ஊன்றுகோல்' எனப் பாடப் பெற்றுள்ளது. கவிஞர் சொ.சொ.மீ. சுந்தரம் 'பண்டிதமணி பிள்ளைத் தமிழ்' பாடியுள்ளார்.

Koviloor Digital Library

"கணியன் பூங்குன்றனார் வழித்தோன்றலாகக் கிடைத்த மணி பண்டிதமணி. வடநூல் புலமையும், தமிழ்நூல் புலமையும் திருவள்ளுவர் நுழைபுலம் என்று காட்டிய இலக்கணத்திற்கு இலக்கிய மாய்த் திகழ்ந்தார் என்பதைத் திருவாசகம் திருச்சதகம் கதிர்மணி விளக்கம் படித்தால் உய்த்துணரலாம்."

-தவத்திரு குன்றக்குடி அடிகளார்

இவர் பலவான்குடியில் மணிவாசக சங்கத்தைத் தோற்றுவித்தார்.

தம் பெயரைக் கதிரேசச் செட்டியார் என்றே எழுதும் வழக்கமுடைய இவர் 24-10-1953இல் அமரரானார்.

சோம. லெ:

சோமசுந்தரம் செட்டியார் மகனாக 11-2-1921இல் நெற்குப்பையில் பிறந்தார். இவர் இளையாத்தங்குடி கோவில் கழனிவாசல்குடிப் பிரிவைச் சார்ந்தவர்.

சென்னை மாநிலக் கல்லூரியில் பி.ஏ. பட்டமும், பத்திரிகைத் துறையில் டிப்ளமோவும் பெற்றார்.

1948 - 49இல் பல நாடுகளில் வணிகத் தொடர்பாகப் பயணம் செய்து நல்ல அனுபவம் பெற்றார்.

1955 - 58இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மக்கள் தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றினார்.

1958 - 60இல் அண்ணாமலைப் பல்தொழில் நுட்பக் கல்லூரியில் நிர்வாகியாகப் பணியாற்றினார்.

1955-61இல் சென்னைப் பல்கலைக் கழக செனட் உறுப்பினராகவும், 1965 - 71 இல் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் செனட் உறுப்பினராகவும் இருந்தார்.

1965இல் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவரானார்.

நெய்வேலி நிலக்கரி (பழுப்பு)த் திட்டம் பற்றி முதன்முதலில் நூல் எழுதி வெளியிட்டார்.

மொழியியலை அறிமுகப்படுத்தினார்.

Koviloor Digital Library

சோம. இலக்குமணன் என்ற பெயரை சோம.லெ. என எழுதிப் புகழ் பெற்றதால், அதனையே தம் பெயராகக் கொண்டு பல நூல்களை எழுதினார். இவர் மனைவி பெயர் நாச்சம்மை ஆச்சி. இவர்களுக்கு 4 புதல்விகள், 1 புதல்வர் பிறந்தனர்.

தன் மகன் சோமசுந்தரத்துக்கு இவர் எழுதிய கடிதம், நேரு பெருமகனார் தன் மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதம் போன்றது.

அக் கடிதங்களில் பொது வாழ்வு, உலக நடப்புகள், தமிழகத்தின் நிலை, உலக அரங்கில் இந்தியாவின் நிலை எனப் பல செய்திகள் இருக்கும்.

உதாரணத்திற்கு ஒன்று.

"உனக்கென்று ஒரு நற்பெயரை மற்றவர்களிடம் உருவாக்கிக் கொள்வது கடினம். உருவாக்கிய பிறகு அதைப் பாதுகாப்பது இன்னும் கடினம். கடின உழைப்பு, நேர்மை, அறிவுடைமை மூலம் வாழ்வில் உயர்வதுதான் முக்கியம்."

இவருக்குச் சொந்தமான மதுரை மாவட்டம் கீழவளவு அருகே கொடுக்கம்பட்டி கிராமத்தில் சோமசுந்தர விநாயகர் கோவிலைக் கட்டினார்.

'அமெரிக்காவைப் பார்' என்பது இவர் எழுதிய முதல் பயண நூலாகும். அதனைத் தொடர்ந்து 'நான் கண்ட வெளிநாட்டுக் காட்சிகள்', 'ஆஸ்திரேலியாவில் ஒரு மாதம்', 'என் பிரயாண நினைவுகள்', 'இமயம் முதல் குமரிவரை', 'நமது தலைநகரம்', 'மாவட்ட நூல் வரிசை' - (10 மாவட்டங்கள்), 'பண்டித மணி கதிரேசன் செட்டியார் வாழ்க்கை வரலாறு', 'ஓ.பி.இராமசாமி ரெட்டியார் வாழ்க்கை வரலாறு,' 'தமிழ் இதழ்கள்' எனப் பல நூல்களை எழுதியுள்ளார்.

இவரது நூல்களைச் சாகித்திய அகாதமி, தேசியப் புத்தக நிறுவனம், வரலாற்று ஆய்வு இந்தியக் கழகம் ஆகியவை வெளியிட்டன. பிறமொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

நாட்டுக்கோட்டை நகரத்தார் தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள பல்வேறு வகையான தொண்டுகளைப் பாங்குற எடுத்துரைக்கும் ஆய்வு நூல் 'வளரும்தமிழ்', 'செட்டிநாடும் செந்தமிழும்' ஆகும்.

Koviloor Digital Library

12 ஆலயங்களின் குடமுழுக்கு விழா மலர்கள், பிறந்தநாள் விழாமலர், நினைவுநாள் மலர் எனப் பல நூல்களைச் சிறப்பாகப் பதிப்பித்து 'மலர் மன்னர்' எனப் பாராட்டுப் பெற்றார்.

"நகரத்தார் புகழ் பரப்பிய நல்முத்து. நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய திருஞானசம்பந்தரைப் போல, நாளும் தம் எழுத்துப் பணியால் நாட்டில் தமிழ் பரப்பியவர். சமய, சமூகப் பண்பாட்டு வரலாற்று நூல்களையும், பயண இலக்கியங்களையும், கோவில் குட நீராட்டு மலர்களையும், பாங்குறப் படைத்தவர். இந்தியாவிற்கப்பாலும் இந்து திருக்கோயில்களில் நகரத்தார்களின் ஆலயப் பணிகளை 'அலை கடலுக்கப்பாலும் நகரத்தார்களின் ஆலயப் பணிகள்' என்ற நூல், 'வட மாநிலங்களில் தமிழர்', 'அமெரிக்காவைப் பார்' எனத் தமிழ்ச் சமுதாயத்திற்குப் பயன்படக் கூடிய நூல்களை எழுதியவர்"

-சென்னைக் கம்பன் கழகத் தலைவர் இராம. வீரப்பன்.

"நகரத்தார் சமூகத்தில் தோன்றி அறச்செயல் செய்தவர்களையும், அரசியல், கலை, இலக்கியம், சமூகப் பணி புரிந்தவர்களையும், வெளி நாட்டில் செல்வாக்குடன் இருந்தவர்களையும், செட்டி நாட்டவருக்கும், பிற சமூகத்தவருக்கும் தம் எழுத்தின் மூலம் தெரியச் செய்தவர்"

-முல்லை முத்தையா

"கருத்துக்களைத் தொகுப்பதில், செய்திகளைச் சேகரிப்பதில் செந்தமிழ்த் தும்பி. பேசிக்கொண்டிருக்கும் போதே சிறு குறிப்புக் கிடைத்தாலும் குறித்துக் கொள்வார். புதிய நண்பர்களைக் கண்டால், அவர்களது ஊர்ப்புறத்துச் செய்திகளைக் கேட்டறிவார். செல்வம் சேர்ப்பதுபோல் செய்திகளைச் சேர்ப்பார். தமிழ்ப்பணி, அயராத உழைப்பு, அரியது, பெரியது, போற்றுதலுக்குரியது."

-அவ்வை நடராசன்

"சோம.லெ.யின் பயண நூல்களைப் படித்த பின்னர்தான் எனக்கு அமெரிக்கா போக வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது."

-டாக்டர் எம்.எஸ்.உதயமூர்த்தி

ஆங்கிலத்தில் 20 நூல்களையும், தமிழில் 60 நூல்களையும் எழுதிய இவர் 3-11-1986இல் அமரரானார்.

Koviloor Digital Library

சொ. முருகப்பா:

சி.சொக்கலிங்கம் செட்டியார் - விசாலாட்சி ஆச்சியின் மகனாகக் காரைக்குடியில் 21-8-1893இல் பிறந்தார். இவர் பிள்ளையார்பட்டிக் கோவிலைச் சார்ந்தவர்.

முதலில் திண்ணைப் பள்ளியில் படித்த இவர், சிதம்பர அய்யரிடம் தமிழ் கற்றார். 19 வயதில் அம்மான் மகள் பொற்கொடியாளை மணந்து கொண்டார்.

19 வயதில் பாதரக்குடி சுவாமிகளிடம் திருவைந்தெழுத்து அறிவுரை பெற்றார்.

அ.மு.க.மு.க. கருப்பஞ்செட்டியார், தமிழ்க் கடல் இராய.சொ. கி. நாராயணன் செட்டியார் ஆகியோருடன் இணைந்து 'இந்து மதாபிமான சங்க'த்தைக் காரைக்குடியில் 1917இல் தோற்றுவித்தார்.

இச் சங்கத்திற்குப் பாரதியார் வருகை தந்தார்.

9-11-1919இல் வருகை தந்த மகாகவி பாரதி இச் சங்கத்தைப் போற்றிப் பாடினார்.

இத்தகைய துயர் நீக்கிக் கிருதயுகந்
　　தனை உலகில் இசைக்க வல்ல
புத்தமுதாம் இந்து மதப் பெருமைதனைப்
　　பாரறிய புகட்டும் வண்ணம்
தத்துபுகழ் வளப்பாண்டி நாட்டினில்
　　காரைக்குடியூர் தனிலே சால
உத்தமராந் தனவணிகர் குலத்துதித்த
　　இளைஞர் பலர், ஊக்கம் மிக்கார்
உண்மையே தாரகமென்றுணர்ந்திட்டார்
　　அன்பொன்றே உறுதி என்பார்
வண்மையே குலதர்மம் எனக் கொண்டார்
　　தொண்டொன்றே வழியாக் கண்டார்
ஒண்மையுயர் கடவுளிடத் தன்புடையார்
　　அவ் வன்பின் ஊற்றத்தாலே
திண்மையுறும் இந்துமத அபிமான
　　சங்கமொன்று சேர்த்திட்டாரே

Koviloor Digital Library

தனியொரு சங்கத்தைப் போற்றிப் பாரதி பாடியது இச் சங்கத்தை மட்டுமே. 'உத்தமராம் தனவணிகர்" என நகரத்தாரைப் பாராட்டிப் பாடியது நகரத்தாரின் பெருமையைத் தெளிவாய்க் காட்டுகிறது. சங்கத்தைப் புகழ்ந்து ஏழு பாடல்கள் பாடி, சங்கத்தினருடன் பாரதி எடுத்துக் கொண்ட புகைப்படம் உலகப் புகழ் பெற்ற படமாகும்.

பாரதி எல்லோரையும் 'பாண்டியா' என்று அழைத்ததின் தாக்கத்தால் 1938இல் பிறந்த தன் மகனுக்கு வீரபாண்டியன் எனப் பெயர் வைத்தார்.

தன வைசியர் வாலிபர் சங்கம், காரைச் சிவனடியார் திருக்கூட்டம் முதலிய சங்கங்களைத் தோற்றுவித்தார்.

உயிர்க் கொலையைத் தடுத்தல், மாதர் மறுமண சகாயச் சங்கம், பெண்ணுரிமையைப் போற்றுதல் முதலியவற்றில் இவர் தீவிரமாய் பங்கேற்றார்.

1920இல் 'தன வைசிய ஊழியன்' கிழமை இதழைத் தொடங்கினார். 1923இல் 'குமரன்' செய்தி இதழைத் தொடங்கி 25 ஆண்டுகள் நடத்தினார். அதில் பி.ஸ்ரீ.உதவி ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

கவிமணி பாடலை முதலில் வெளியிட்டார். விபுலானந்த அடிகள், பேரா. ரா.பி.சேதுப்பிள்ளை போன்றோரைத் தமிழுலகிற்கு அறிமுகம் செய்தார்.

சமூகச் சீர்திருத்தத்திற்காகச் 'சண்ட மாருதம்' நாளிதழை நடத்தினார். பெண்கள் மறுமணத்திற்கு ஆதரவு அளித்தார். சொன்னதைச் செய்தும் காட்டினார். ஆம், திருப்பரங்குன்றத்தில் பெரியார் தலைமையில் 1929இல் மரகதவல்லி அம்மையை மறுமணம் செய்து கொண்டார். இது மறுமணம் மட்டுமல்ல, கலப்பு மணமுமாகும். செயல் வீரராய் இவர் இருந்ததால் இவரைச் 'சீர்திருத்தத் தந்தை' எனப் போற்றினர்.

காந்தியடிகளையும், கதரையும் போற்றினார்.

தமிழிசை இயக்கத்தைப் பரப்பக் காரைக்குடியில் முத்துத் தாண்டவர் இசை விழாவை ஆண்டுதோறும் நடத்தினார்.

Koviloor Digital Library

முருகப்பாவுடைய ஆணித்தரமான தலையங்கம், நகைச்சுவை மிக்க துணுக்குகள், இலக்கியக் கட்டுரைகள், சமூகச் சீர்த்திருத்தம், கலப்பு மணம், மாதர் மறுமணம் பற்றிய தெளிவான கருத்துக்கள் குமரனில் வெளிவந்ததால் அப் பத்திரிகை 25 ஆண்டுகள் வெளி வந்தது.

வயதுக்கு வருமுன்பே திருமணமாகி விதவையுமாகிவிட்ட மரகத வல்லியை மூவலூர் இராமாமிர்த்தம்மையார் மூலம் முருகப்பா மணந்து கொண்டார். இதுவே கொள்கைக்கென ஊரறிய நடந்த முதல் கலப்புத் திருமணமாகும்.

அமராவதிபுதூரில் இவர் தொடங்கிய 'மகளிர் இல்ல'த்தை அன்றைய கல்வி அமைச்சர் டாக்டர் சுப்பராயன் 10-4-1938இல் திறந்து வைத்தார்.

மகளிர் இல்லத்தில் தொடங்கப் பெற்ற 'மாண்டிசோரிப் பள்ளி'யை 30-8-1939இல் சுவாமி விபுலாநந்தா திறந்து வைத்தார். சென்னை தியாசாபிகல் சொசைட்டியைத் தவிர இங்கு மட்டுமே மாண்டிசோரி பள்ளி இருந்தது.

76 ஏக்கர் நிலத்தில் தொடங்கப்பெற்ற மகளிர் இல்லத்தை 1986ல் பள்ளத்தூர் ஸ்ரீ சாரதா சேவாஸ்ரமம் ஒப்புக்கொண்டு ஸ்ரீஜெயராம் பாடி எனப் பெயர் மாற்றி மகளிர் கல்லூரியை நடத்தி வருகின்றனர்.

கம்பனில் ஈடுபாடு கொண்டு கம்பராமாயணத்தில் கதைத் தொடர்புடைய 3251 பாடல்களை 'இராமகாதை' என்ற பெயரில் 1957இல் வெளியிட்டார். இதற்காகக் கம்பர் பதிப்பகத்தைத் தொடங்கினார்.

"சமுதாயச் சீர்த்திருத்தத்திலும், தமிழ் வளர்ச்சியிலும், முருகப்பா அவர்கள் பெரும்பணி செய்திருக்கிறார்கள். என்னுடைய பாராட்டை வெகு நாட்களுக்கு முன்னமேயே பெற்றவர்"

-மூதறிஞர் இராசாசி

"அன்பர் முருகப்பா நேர்மையான உள்ளமும், தெளிவான பேச்சும் உடையவர். தோன்றுவதைத் தோன்றும்படியே சொல்வதில்

Koviloor Digital Library

நயமிருக்கும். ஒன்றை அளவு கடந்து புகழ்வதும், இகழ்வதும் அவரிடம் காண இயலாதவை".

-வாகீச கலாநிதி கி.வா.ஜ.

"முதிர்ந்த அறிவும், துடிப்புள்ள எழுத்தும் உடையவர் முருகப்பா"

-ஜெமினி எஸ்.எஸ். வாசன்

"முருகப்பா மிகச் சிறந்த பண்பாளர். காந்திய நன்னெறியில் கருத்துடையவர். நாகரிகம் தவறாத நட்பாளர். இனிய முகமும், இன்சொல்லும், எளிமையும், அவருடைய சிறப்புக்களில் சிறந்தன. பாரதியாரைப் பாராட்டி ஆதரிக்கும் பாக்கியம் பெற்றவர்."

-நாமக்கல் கவிஞர்

"இரும்பு நெஞ்சம் படைத்தவர். சமூக விஷயத்தில் வந்த எதிர்ப்புகளைக் கண்டு மனம் இடிந்து போய்விடாமல் வெற்றி கண்டவர்"

-நீலாவதி அம்மையார்

"ஆராய்ந்து பாருங்கள். அறியாமை எல்லோருக்கும் பொது. அறிவும், ஆராய்ச்சியும் எல்லோருக்கும் பொது. என்னுடைய இந்த முயற்சியும் பொதுவேயாகும் என்பது கம்பர் காவிய முகவுரை. புரட்சி வாய்ந்த முருகப்பாவின் நெஞ்சம் எத்துணை பணிவுடையது, நேர்மையுடையது, இனிமை செறிந்தது என்பதனை இம் முகவுரை காட்டும்"

-மூதறிஞர் வ.சுப. மாணிக்கம்.

"தென்னாட்டு இராசாராம் மோகன்ராய், முருகப்பா. பழமையை வெறுத்து, பயனற்றவற்றை ஒதுக்குவதிலும், புதுமையைக் கற்றுப் பொன்னானவைகளை கைக்கொள்வதிலும் முருகப்பாவுக்கு இணை முருகப்பாதான். அவரது வாழ்க்கை வரலாறு இந்நாட்டு சீர்திருத்த வரலாறாகும்."

-தமிழறிஞர் டாக்டர் தமிழண்ணல்

"செட்டிமார் நாட்டில் இன்று கல்வி ஆர்வமும், சேவை உணர்ச்சியும், சீர்திருத்த மனப்பான்மையும், பல நல்ல பேச்சாளர்களும் உள்ளனர் என்றால் அனைத்திற்கும் மூலகாரணம் அன்பர் முருகப்பரே"

-கம்பன் அடிப்பொடி சா. கணேசன்

Koviloor Digital Library

இவருடைய பெரு முயற்சியினால்தான் 15-7-1921இல் 96 ஊர் நகரக் கூட்டம் நடைபெற்றது.

'அஞ்சா நெஞ்சன்' எனப் புனைபெயர் வைத்துக் கொண்ட இவர், நகரத்தார்கள் கிராப்பு வைத்துக்கொள்வது தவறு என்ற நிலை செட்டிநாட்டில் ஏற்பட்டபோது, அதனை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றார்.

சீர்திருத்தத்தை மேடைதோறும் முழுங்கிய இவர், தம் வாழ்விலேயே அதனைக் கடைப்பிடித்துப் பிறருக்கு முன் உதாரணமாய் விளங்கினார் இவர், சென்னையில் 20-6-1956இல் அமரரானார்.

வை.சு. சண்முகம் செட்டியார்:

வை.சுப்பிரமணியன் செட்டியார் - அழகம்மை ஆச்சியின் மகனாகக் கானாடுகாத்தானில் 19-9-1884இல் பிறந்தார். இவர் வைரவன் கோவிலைச் சார்ந்தவர்.

3வது வகுப்புவரையே படித்தார். சுய முயற்சியால் தமிழ், ஆங்கிலம் கற்றுத் தேர்ச்சி பெற்றதோடு பேச்சாற்றலும் கைவரப் பெற்றார். தமிழ்க் கவிஞர்கள், அறிஞர்களின் துன்பத்தை இயன்றவரை போக்கியவர்.

காரைக்குடி மகர்நோன்புப் பொட்டலில் அன்னியத் துணி எரிப்புப் போராட்டம் நடத்தினார். சுக, துக்க நிகழ்ச்சிகளில் சமபந்தி உணவு பரிமாறி நடத்திக் காட்டினார். இந்து மதாபிமான சங்கம், தன வைசியர் ஊழியர் சங்கம், தமிழ் நாட்டுப் பெண்கள் முன்னேற்ற சபை, தமிழிசை வளர்ச்சிக்காகத் தமிழ்நாடு வானொலி கேட்போர் கழகம், தமிழ்ப் பாடல்களை ஒலி பரப்பப் போராட்டம் முதலியவற்றில் கலந்து கொண்டார்.

மகாகவி பாரதியாரைக் கடையத்தில் சந்தித்துக் கானாடு காத்தானுக்கு வருமாறு அழைத்தார். பாரதியார் 1918இல் புதுச்சேரியில் இருந்தபோது கடிதத் தொடர்பு கொண்டு அழைத்தார்.

Koviloor Digital Library

இவரின் அழைப்பை ஏற்று 28.10.1919இல் பாரதியார் கானாடு காத்தான் வந்தார். பாரதியாரைத் தன்னுடனேயே தங்கி இருக்குமாறு வேண்டினார். பாரதியின் மனைவி அதற்கு இசையாததால், பாரதியார் மீண்டும் கடையத்திற்குச் சென்றார்.

ஆனால், பாரதியார் மீண்டும் 10-11-1919, 6-1-1920, 10-1-1920 ஆகிய நாட்களில் கானாடுகாத்தானுக்கு வருகை தந்தார். அவருடனேயே தங்கி இருந்தார்.

மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையைப் பாரதியாருக்கு அனுப்பி அவரை இரண்டரை ஆண்டுகள் ஆதரித்தார். 'பாஞ்சாலி சபதம்,' 'கண்ணன் பாட்டு' முதலிய பாரதியின் பாடல்கள் வெளிவர உதவினார்.

பாரதியின் பாடல்களைப் பொதுமக்களுக்குப் பயன்படும்படி அவற்றைப் பொதுச் சொத்தாக்க வேண்டுமென ஏ.வி. மெய்யப்ப செட்டியாரிடம் வேண்ட, அவர் அவ்வாறே பொதுச் சொத்தாக்கினார்.

பாரதியார் கானாடுகாத்தான் இன்ப மாளிகையில் தங்கியிருந்த போது செட்டியாரைப் பாராட்டிப் பாடி, பின் தம் கையாலேயே அதனை எழுதிக் கையெப்பமிட்டு, நாளும் குறித்துக் கொடுத்த பாடல் முடியரசனும், தமிழண்ணலும் நடத்திய 'எழில்' என்னும் திங்கள் இதழில் 1958இல் வெளியானது.

பல்லாண்டு வாழ்ந்தொளிர்க! கானாடு
காத்த நகர்ப் பரிதி போன்றாய்.
சொல்லாண்ட புலவோர்த முயிர்த்துணையே,
தமிழ்காக்குந் துரையே! வெற்றி
வில்லாண்ட இராமனைப்போல் நிதியாளும்
இராமனென விளங்குவாய் நீ!
மல்லாண்ட திண்டோளாய், சண்முகநா
மம் படைத்த வள்ளற் கோவே!
செட்டி மக்கள் குலத்தினுக்குச் சுடர்விளக்கே!

இவ்வாறு ஏழு பாடல்கள் பாடினார். அதனை இவர் வெளிக் காட்ட விரும்பவில்லை. இவருக்குத் தெரியாமல் இவரது இல்லத்தி லிருந்து எடுத்துச் சென்று இப்பாடல்களை வெளியிட்டனர்.

Koviloor Digital Library

கானாடுகாத்தானுக்கு வரும் வழியில் பாரதியாரைக் காரைக்குடி இந்து மதாபிமான சங்கத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு மகாகவியும், நகரத்தார்களும் இருந்து புகைப்படம் எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்தார். பாரதியாரால் பாராட்டப்பட்ட அமைப்பு என்ற பெருமை இச் சங்கத்திற்குக் கிடைத்தது. அதுபோல 'செட்டி மக்கள் குலத்தினுக்கே சுடர்விளக்கே!' என்ற பாராட்டு இவருக்குக் கிடைத்தது.

தேவாரம், திருவாசகம், திருக்குறள், திருமந்திரம், திருவருட்பா, தாயுமானவர் பாடல்கள், சித்தர் பாடல்கள், பாரதியார், பாரதிதாசன் பாடல்கள் போன்றவற்றை ஆர்வத்துடன் படித்தார்.

இவரும், இவர் மனைவி இலக்குமி ஆச்சி, மகன் சோலை, மகள் பார்வதி ஆகிய நால்வரும் தினந்தோறும் 6.00 மணிக்குக் கூட்டுப் பிரார்த்தனை செய்வார்கள். அதில் கீழ்க்கண்டவற்றைச் சொல்வார்கள்.

"என் வாழ்வுக்கும், தாழ்வுக்கும் காரணமாக இருப்பது என் மனம் தான்.

இன்பத்துக்கும், துன்பத்துக்கும் அடிமையாகிவிட மாட்டேன், எனக்கு வேண்டுவது எல்லாம் திடமான, மாறாத ஊக்கமே.

சோம்பல் அழிக. கவலை ஒழிக. அச்சம் அடியோடு மாய்க."

விடுதலை நாள் விழா இன்ப மாளிகையில் தோட்டத்தில் கொடி ஏற்றிப் பாரதியாரின் பாடல்களைப் பாடி நடந்தது.

தெய்வபக்தி குறைந்தாலும், மறைந்தாலும் நாடு சிறக்காது. எத்தனை வளம் பெருகினாலும் அது நிலைக்காது என்பது இவருடைய திடமான கருத்து.

நகரத்தார் இன வழக்கப்படி வைதீக நெறியில் திருமணம் நடத்த விரும்பாத இவர், தம் புதல்வி பார்வதி திருமணத்தைச் சீர்திருத்த முறையில், புரோகிதர் இல்லாமல், மணவறை இல்லாமல் 7-7-1935இல் அன்றைய கல்வி அமைச்சர் பி.டி.இராசன் தலைமையில், பெரியார் முன்னிலையில் நடத்தினார். மாப்பிள்ளை நடராசன் திருப்பூட்டினார். 6 நாள் திருமணம் 3 நாளானது. பெரியவர் ஒருவர் பெண்ணுக்குத் திருப்பூட்டும் வழக்கத்தை மாற்றினார். மாப்பிள்ளை வீட்டார் நேராகப் பெண் வீட்டில் வந்து இறங்கினார்கள் (முன்பு மாப்பிள்ளை வீடு எனத் தனிவீடு பிடிப்பார்கள்)

Koviloor Digital Library

சிவானந்த சரசுவது எழுதிய 'ஞான சூரியன்' என்ற நூலை வ.உ.சி.யின் அணிந்துரையுடன் வெளியிட்டார்.

'லேவாதேவித் தொழில் எப்படி இருந்தது, எப்படி இருக்கிறது, எப்படி இருக்க வேண்டும்' என்பது பற்றிய ஒரு சிறு நூலை எழுதி வெளியிட்டார்.

பெரியாருக்கு ஸ்டுடிபேக்கர் காரைப் பரிசளித்தார்.

வ.வே.சு அய்யர் சேரமாதேவியில் குருகுலம் தொடங்க ரூ.60,000/- நன்கொடை வழங்கி மலேயாவிலும் பொருள் சேர்த்துக் கொடுத்தார்.

பாவேந்தரின் மூத்த மகள் சரசுவதி திருமணத்தை 1944இல் நடத்த உதவினார்.

சாதிப் பெயரை விரும்பாததால் பெயரை மட்டுமே எழுதிக் கையொப்பமிட்டார்.

இவருடைய வாழ்க்கை வரலாறு நூலாகத் தொகுக்கப் பட்டுள்ளது.

ஒருமுறை பெருந்தலைவர் காமராசரைச் சந்திக்கத் தலைமைச் செயலகத்திற்குச் சென்றார், சண்முகம் செட்டியார். அதனைஅறிந்த காமராசர் தாமே எழுந்து போய், "பாரதியாரை அவர் காலத்திலேயே ஆதரித்த வள்ளலே வருக" என்று மிகுந்த மரியாதையுடன் அழைத்துக் கூட்டிச் சென்றார்.

அறிஞர்களின் புகழுரைகள்:

"தூக்க நிலையில் இருந்த செட்டிநாட்டையும், நகரத்தார் சமூகத்தையும் முதன்முதலில் தட்டி எழுப்பி விழிக்கச் செய்தார். இருபது வயதில் இருந்தே நாட்குறிப்பு எழுதும் பழக்கமுடையவர். காந்தியடிகள் தமிழகம் வந்தபோது 1927இல் இன்ப மாளிகையில் தங்கினார். மூதறிஞர் இராசாசி, புலாபாய் தேசாய், அன்னை கஸ்தூரிபாய், தேவதாஸ் காந்தி, மற்றும் பலர் அவருடன் வந்து தங்கினார்கள்."

-மகள் பார்வதி நடராசன்.

"நாள்தோறும் கணக்கெழுதி வைப்பதில் குறியாக இருப்பார். எப்போதாவது இருப்புத் தொகையில் ஒரே ஒரு ஐந்து ரூபாய்

Koviloor Digital Library

குறையுமாகினும் என்ன செலவு செய்தோம் எனச் சிந்தித்துக் கொண்டே இருப்பார். இரவு நேரமாகினும் அதைக் கண்டு பிடிக்காமல் விட மாட்டார். செலவான தொகையைக் கண்டு பிடித்து எழுதி விட்டுத்தான் உறங்கச் செல்வார். 'செய்வன திருந்தச் செய்' என்பது அவர் கோட்பாடு."

–கவிஞர் முடியரசன்

"இன்பமாளிகையை விட்டு இடிந்த மண்டபம் போன்ற வீட்டுக்குச் சென்றபோது நடை, பேச்சு, எல்லாம் எப்போதும் போலவே இருந்தது. இடம் மனிதனை உருவாக்குவதில்லை. மனிதன்தான் அதனை உருவாக்குகிறான்."

–டாக்டர் திருநெல்லை ராசமாணிக்கம்

"சைவமும், தமிழும் தழைத்தோங்கச் செய்வது மட்டுமல்ல, நாட்டுப்பற்றிலும் நகரத்தார் சமூகத்தினர் சிறந்து விளங்கினர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் இவர். 1927இல் காந்தியடிகள் இராசாசியுடன் இவர் இல்லத்தில் தங்கி இருந்த செய்தி நகரத்தார் வரலாற்றில் இடம்பெற வேண்டிய ஒன்று."

–முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்

இத்தாலி மார்பிள் கற்கள், பளிங்கு பூக்கற்கள், சிற்ப வண்ண வேலைப்பாடுகள் நிறைந்த இன்ப மாளிகை ஏலத்திற்கு வந்து இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. 39 ஆண்டுக்குப் பிறகு அந்த இடம் மீட்கப் பெற்று 31-5-1993 முதல் 'வை.சு.சண்முகம் நினைவு மையம் நூலகம்,' 'இலக்குமி ஆச்சி நினைவுக் கூடம்' அமைக்கப்பட்டது.

இவர் தஞ்சை மராட்டியர் குடும்பத்தைச் சேர்ந்த மஞ்சுளாபாய் அம்மையாரை மறுமணம் செய்துகொண்டார்.

செட்டிமக்கள் குலத்தினுக்குச் சுடர்விளக்காய், பாரதியாருக்கு நண்பராய், சீர்திருத்தச் செம்மலாய் விளங்கிய இவர் 19-6-1962இல் அமரரானார்.

பாடுவார் முத்தப்ப செட்டியார்:

மேலவட்டகை சிறு மதுரை சிவல்பட்டி என்ற கீழச்சிவல் பட்டியில் அழகப்பசெட்டியார் – இலக்குமி ஆச்சியின் மகனாக 1750இல் பிறந்தார். இவர் நேமங்கோவிலைச் சார்ந்தவர்.

Koviloor Digital Library

5வது வயதில் திண்ணைப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். அக் கல்விக்கும் 10வது வயதில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அரிய பாவன்மையும், அறிவும் பெற்ற இவர், பல அறநூல்களையும், காவியங் களையும் தாமே முயன்று படித்துத் தெளிந்தார்.

இவருடைய 11வது வயதில் ஓர் அற்புதம் நிகழ்ந்தது!

அரிமழத்தில் சில சிறுவர்கள் மாந்தோப்பில் மாங்காய் பறித்துத் தின்றனர். தோட்டக் காவல்காரன் வந்தான். அவனைக் கண்ட சிறுவர்கள் மரத்தின் மீது இருந்தபடியே அழுதனர். அதனைப் பார்த்த இவர்,

''மாமரத்தின் கிளையே
மரத்தை விட்டு விலகே'

என்று பாடினார்.

அந்தக் கிளை மட்டும் முறிந்து சுவரின்மேல் விழுந்தது! சிறுவர்கள் மகிழ்ந்து ஓடினார்கள்.

முத்தப்பரின் வாக்கு முதன்முதலில் பலித்த நிகழ்ச்சி இது!

20வது வயதில் கருப்பி ஆச்சியை மணந்து கொண்டார். ஆச்சி பாரதக் கதை முழுவதையும் பாடும் ஆற்றலுடையவர். எனவே, அவர் 'பாரதக் கருப்பி ஆச்சி' என எல்லோராலும் அழைக்கப் பெற்றார்.

கோவிலூர் ஆண்டவர், கல்லாப் பேட்டை குறுநில மன்னர் முத்துபாலுத் தேவர், பாதரக்குடி சேனாபதி அடிகள், மிதிலைப்பட்டி வேலுக் கவிராயர், அழகிய சிற்றம்பலக் கவிராயர், செவ்லூர் அழகுப் புலவர், இராங்கியம் முத்துவீரப்பப் பிள்ளை, சிவகங்கை முத்தழகுப் பிள்ளை முதலிய பெரும்புலவர்கள், இவருக்கு 'பாடுவார்' எனப் பட்டமளித்துப் பாராட்டினர்.

இவர் 'முருகனடிமை'. ஆறுமுகனின் அடியவரான இவருக்கு ஆறு ஆண்மக்கள். அவர்களைப் பற்றி இவர் பாடியது இது:

சர்க்கரை கருப்பஞ்செட்டி
சவ்வாது அழகஞ்செட்டி
சீனி மெய்யஞ் செட்டி
செவத்த இராமஞ் செட்டி

Koviloor Digital Library

துடுக்கான முருகஞ் செட்டி
எங்கும் பராபரம் ஏகப்ப செட்டி

ஒருநாள் இவர் செவ்வூர் சென்று ஒரு வீட்டின் திண்ணையில் அமர்ந்திருந்தார். வீட்டின் உள்ளே இருந்தவர்கள் இவரைக் கண்டுகொள்ளாமல் உணவருந்திக் கொண்டிருந்தனர். பார்த்தார் இவர். பசி வந்தது; பாடல் பிறந்தது.

எவ்வூரில் போனாலும் எவ்வுலகம் சென்றாலும்
செவ்வூரில் போக மனம் செல்லாதே – அவ்வூரார்
பார்த்திருக்கத் தின்பார் பசித்தார் முகம் பாரார்
கோத்திரத்திற் குள்ள குணம்.

பாடலைக் கேட்ட அவ் வீட்டுக்காரர் பதறி வெளியே ஓடி வந்து, இவரிடம் மன்னிப்புக் கேட்டார். சாப்பிட வரும்படி அழைத்தார். இவர் கோபம் தணிந்தார். அவ் வீட்டில் சாப்பிட்டு அப் பாடலை மாற்றிப் பாடினார்.

நாட்டரசன் கோட்டையில் இருந்து வந்த அம்பலகாரன் ஒருவன், தான் பெரும் பணக்காரனாக மாற ஒரு பாட்டு தன் மீது பாட வேண்டினான். இவர் மறுத்தார். மீண்டும் மீண்டும் அவன் தொல்லைப் படுத்தவே, இவர் அறம் பாட, அவன் மாண்டான்.

பாழானவை எவையென இவரிடம் கேட்க, இவரின் பதில் இது :

தும்பி இருந்த தூண் பாழ்
கும்பி இருந்த குளம் பாழ்
வம்பி இருந்த மனை பாழ்
நம்பி இருந்த கடன் பாழ்

குன்றக்குடியில் மழைபெய்யவும், நிற்கவும் பாடினார். நெடுமரம் மலையரசி அம்மன் கோவிலில் மற்றும் கொன்னையூர்க் கோவிலில் மழை பெய்யப் பாடினார்.

கோட்டையூரை வாழ்த்திப் பாடினார்.

நகரத்தார்களின் ஞானாசிரியராகப் பாதரக்குடியில் வாழ்ந்த சேனாபதி அடிகள்மீது பல பாடல்கள் பாடினார்.

Koviloor Digital Library

இவருடைய 40வது வயதில் வந்த மேக நோயைப் போக்க கண்டரமாணிக்கத்தை அடுத்த கொங்கரத்தி நடுவாற்று மருதம் பிள்ளையார் கோவிலில் 10 நாட்கள் நோன்பிருந்து 10 பாடல்கள் பாடி நோய் நீங்கப் பெற்றார்.

பாகநேரி ஊரார்க்கும், சிவகங்கை சமீனுக்கும் இடையே எல்லைத்தகராறு ஏற்பட்டு நீண்ட காலமாய் வழக்கு நடைபெற்றது. பாகநேரி ஊரார் வேண்ட, புல்வநாயகி அம்மன் திருமுன்னர் அமர்ந்து, "தென்பாக நாட்டினிலே ஜெயப்பேர் முழங்கவே" எனத் தொடங்கும் பாடலைப் பாடினார். பாகநேரி ஊரார் வழக்கில் வென்றனர். அதற்கு நன்றிக் கடனாக இவருக்கு ஆண்டுதோறும் பொங்கல் பானை கொடுத்தனர்.

நேமத்து இறைவன் செயங்கொண்ட சோழீசர் மீது செயங் கொண்டார் சதகம் என்ற (100 பாடல்கள்) நூலைப் பாடினார். இந் நூல் 100 வரலாற்றுக் கதைகளையும், அவைகளுக்குரிய பழமொழி களையும் பாங்குடன் விளக்குகிறது.

தனவணிகர் நலம் பெற வேண்டும் என்ற நோக்கில் இந்நூல் பாடப் பெற்றது.

இவருடைய 60வது வயதில் செட்டிநாடு முழுவதும் அம்மை நோய் பரவ, உச்சினி மாகாளி மீது 108 வரிகள் கொண்ட கும்மிப் பாட்டைப் பாடினார். மக்கள் பக்தியுடன் அதனைப் பாடித் துன்பம் நீங்கினர்.

தன் குலதெய்வம் இராங்கியம் கருப்பர் மீது திருத்தாண்டகமும், குதிரை விருத்தமும் பாடினார்.

செயங்கொண்டார் மீது பிள்ளைத் தமிழ், பதிற்றுப் பத்தந்தாதி, கலித்துறை அந்தாதி, ஊஞ்சல், திருநாமம், நேம நகர்க் கலம்பகம், குளுவ நாடகம் பாடினார். ஆனால், இந்நூல்கள் இந் நாள் வரை கிடைக்கவில்லை.

திருப்பதி வெங்கடாசலபதி மீதும், புதுக்கோட்டைப் பிரகதாம்பாள் அம்மன் மீதும் பாடியுள்ளார்.

தேனூர் வரகவி வே.செ. சொக்கலிங்கனார் பாடிய சேய்த் திருமுறையில் முத்தப்பர் முத்தப்ப நாயனாராய்ப் போற்றப்பெறுகிறார்.

Koviloor Digital Library

பெரிய புராண அடியாரில் நகரத்தார்கள் இடம் பெற்றது போல, முருகனடியார் புராணத்தில் முத்தப்பர் நாயனாராய்ப் போற்றப் பெறுதல் நகரத்தார்க்குப் பெருமை தருவதாகும்.

ஆவினிப்பட்டிக்கருகில் உள்ள சேவினிப்பட்டிக் கிராமத்தில் முத்தப்பர் திருக்கோவில் உள்ளது.

கீழச்சிவல்பட்டி அம்மன் சன்னதி தெருவின் நடுவில் முத்தப்பர் திருக்கோவில் உள்ளது. அதில் ஐப்பசி மாதம் சூரசம்காரத்தன்று, இவருடைய பேரன்மார்கள் குருபூசை நடத்துகின்றனர்.

செட்டிநாட்டின் எல்லையைப் பாடி, நகரத்தார் வீடுகளில் இலக்குமியை நிரந்தர வாசம் செய்ய வேண்டி ("காடு வெட்டிப் போட்டு" என்ற பாடல்) பாடிய அருட்கவி முத்தப்பர் தம் 73ஆம் வயதில் 21-10-1823இல் அமரரானார்.

ஆவி. மெய்யப்ப செட்டியார்:

ஆவிச்சி செட்டியார் - இலக்குமி ஆச்சியின் மகனாகக் காரைக்குடியில் 28.7.1907இல் பிறந்தார். இவர் பிள்ளையார்பட்டிக் கோவிலைச் சார்ந்தவர். இவர்கள் வீட்டுக்கு 'வாரிவயலார் வீடு' என்பது பெயர்.

தந்தை ஆவிச்சி செட்டியார் நிறுவிய ஏவி.அன் சன்ஸை 1920-1932 வரை கவனித்து வந்தார். அதில் இசைத்தட்டு விற்பனையைத் தொடங்கினார். பின்னர் தாமே சொந்தமாக சரஸ்வதி ஸ்டோரைச் சென்னையில் நிறுவி இசைத் தட்டுத் தயாரித்து விற்றார்.

பின்னர் திரைப்படம் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டார். நகரத்தாரில் முதன்முதலில் திரை உலகில் அடியெடுத்து வைத்தவர் இவரே.

1934இல் திரைப்படத் தயாரிப்பாளர் ஆன இவர், முதலில் தயாரித்த படம் 'அல்லி அர்ஜுனா'. அடுத்து ரத்னாவளி, நந்தகுமார், ஸ்ரீவள்ளி படங்களைத் தயாரித்தார்.

1946 - 47இல் தேவகோட்டை சாலை (ரஸ்தா) யில் ஏவி.எம். திரைப்படத் தயாரிப்பு நிலையத்தை (ஏவி.எம்.ஸ்டுடியோவை) தொடங்கி, வேதாள உலகம், நாமிருவர் படங்களைத் தயாரித்தார்.

Koviloor Digital Library

தொடக்கத்தில் தோல்வியைச் சந்தித்த இவர், பின்னர் வெற்றிகளைத் தொடர்ந்து பெற்றார்.

1949இல் சென்னைக் கோடம்பாக்கத்திற்குப் படப்பிடிப்பு நிலையம் மாற்றப்பட்டது. முதலில் தயாரிக்கப்பட்ட படம் 'வாழ்க்கை'.

இவரது வாழ்வையே இப் படம் மாற்றியமைத்தது! படங்களில் பாரதி பாடல்களைப் பாடச் செய்து நாட்டுப்பற்றை ஊட்டினார்.

காந்தியடிகள் மீது பற்றுக்கொண்ட இவர், தமிழ் நாட்டில் அடிகள் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, அவர் சுற்றுப் பயணம் செய்ய தாம் புதிதாய் வாங்கிய வண்டியை (காரை)க் கொடுத்தார். கதராடையே அணிந்தார்.

பலமொழிகளில் படம் தயாரித்த இவர், சில படங்களை இயக்கவும் செய்தார்.

தம் தந்தையின் பெயரில் பள்ளிகளை நிறுவிக் கல்விப் பணி செய்தார்.

இவரின் முதல் மனைவி அலமேலு ஆச்சி. இவர்களுக்கு 1 மகனும், 5 பெண்களும். ஆச்சி 1948இல் மரணமடைய, இராசேசுவரியை மணந்தார் இவருடைய பிள்ளைகள் திரைப்படத் தயாரிப்பில் உள்ளனர்.

பாரதியின் பாடல்களை நாட்டுடமை ஆக்க, பணம் எதுவும் பெறாமல் அவ் உரிமையைக் கொடுத்தார்.

ஏவி.எம். அறக்கட்டளை மூலம் பல நற்பணிகளைச் செய்த இவர் 12-8-1979இல் அமரரானார்.

மு.காசி விசுவநாதன் செட்டியார்

வெ.பெரி.பழ. முத்தையாசெட்டியார் - வள்ளியம்மை ஆச்சியின் மகனாகப் பாகநேரியில் 15-9-1898இல் பிறந்தார். இவர் பிள்ளையார் பட்டிக் கோவிலைச் சார்ந்தவர்.

தம் 7வது வயதில் 'புத்தகம் வாங்கித் தந்தால்தான் சாப்பிடுவேன்' என அடம்பிடித்த இவர், அன்றுமுதல் புத்தகப் பிரியராகிச் சேகரிக்கத் தொடங்கினார்.

Koviloor Digital Library

பெண்கள் மத்தியில் இராமாயணக் கதைகளைச் சுவைபடக் கூறியதால், அவர்கள் இவரை 'வித்துவான் காசி' என அழைத்தனர். அப் பெயரே நிலைத்து விட்டது.

இவர் கதராடையையே அணிந்தமையால் 'கதர் காசி' எனவும் அழைக்கப்பட்டார்.

1913இல் புத்தகங்களைப் படிக்கவும், சேகரிக்கவும் தொடங்கிய இவர், நூல்களைத் தம் உயிரினினும் மேலாக மதித்தார்.

1920இல் 'கருணாகடாட்சி வாசகசாலை'யைத் தொடங்கினார். அதில் 1500 நூல்கள் இருந்தன.

1934இல் இது திருவள்ளுவர் நூல் நிலையமாக மாறியது. இதில் 3500 நூல்கள் இருந்தன.

இவரிடமிருந்த நூல்கள் அனைத்தும் தற்போது மாவட்ட நூலகத்திடம் வழங்கப்பெற்று, பாகநேரியில் 'காசி விசுவநாதன் செட்டியார் மாவட்டக் கிளை நூலகம்' என்ற பெயரில் இயங்கி வருகிறது.

தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்துடன் ஏற்பட்ட தொடர்பால் பல சங்க நூல்கள் வெளிவர உதவினார். 1975 வரை அதன் ஆட்சிக் குழுத் தலைவராய்ப் பணியாற்றினார்.

1924இல் காரைக்குடி தன வைசிய ஊழியர் சங்கத்தில் சேர்ந்தார். சொ. முருகப்பா, தமிழ்க் கடல் இராய.சொ. வை.சு.சண்முகம் செட்டியார், பிச்சப்பா சுப்பிரமணியன் தொடர்பால் சமூகத் தொண்டுகள் செய்தார்.

காரைக்குடியில் இந்து மதாபிமான சங்கத்தில் உறுப்பினராகிச் சமயத் தொண்டு செய்தார். சமயக் குரவர்கள் வரலாற்றைச் சிறுசிறு புத்தகங்களாக வெளியிட்டார்.

1934இல் பாகநேரியில் 'தன வைசிய இளைஞர் சங்கம்' ஆரம்பித்தார். அச் சங்கத்திற்குப் பண்டிதமணி, இரசிகமணி, மறை மலையடிகள், கல்கி, ந.மு.வேங்கடசாமி நாட்டார் முதலிய அறிஞர்களை அழைத்து வந்து பேசச் செய்து தமிழ்த் தொண்டாற்றினார்.

1921 இல் காரைக்குடிக்குக் காந்தியடிகள் வந்தபோது அவரைச் சந்தித்தார். அன்று முதல் கதர் அணிந்தார்.

Koviloor Digital Library

1926இல் மீண்டும் காந்தியடிகள் காரைக்குடி வந்தபோது, நண்பர்களின் உதவியுடன் அவரை அழைத்துவந்து பாகநேரியில் பேசச் செய்து, அரிசன நிதி வழங்கினார்.

1937இல் இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டார். மறைமலையடிகள் எழுதிய 'இந்தி பொதுமொழியா?' என்ற நூலை வெளியிட்டு இலவசமாய் வழங்கினார்.

1938இல் பாகநேரி தன வைசிய இளைஞர் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நூல்களை வெளியிட்டு இலவசமாய் வழங்கினார். இராமநாத புரம் மாவட்ட இரண்டாவது தமிழர் மாநாட்டில் வரவேற்புக் குழுத் தலைவராய்ப் பணியாற்றினார்.

'மகாமகோபாத்தியாய' பட்டம் பெற்ற பண்டிதமணிக்குப் பாகநேரியில் 1943இல் பாராட்டு விழா நடத்தினார்.

தாயார் வள்ளியம்மை ஆச்சி நினைவாகச் சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு, கலித்தொகை, நச்சினார்க்கினியம், திருவாசகம், தாயுமானவர் பாடல்கள், பட்டினத்தார் பாடல்கள், நாலடியார், செயங்கொண்டார் சதகம், திருமுக விலாசம் முதலிய நூல்களை வெளியிட்டார்.

11-10-1958 இல் தமிழ்க் கடல் இராய.சொ.தலைமையில் மணிவிழாக் கண்ட இவருக்கு இரு மனைவிகள், இரு பிள்ளைகள்.

நூல் சேகரிப்பாளராக வாழ்வைத் தொடங்கிய இவர் 14-11-1986ல் அமரரானார்.

Koviloor Digital Library

8.
நகரத்தார் இதழ்கள்

வரலாற்றுக் காலத்திற்கு முன்பே பெருமை பெற்றிருந்த நகரத்தார்களின் பெருமையை உலகம் முழுவதும் பரம்ப சில நகரத்தார்கள் முன்வந்து இதழ்களைத் தொடங்கினர்.

சில இதழ்கள் சில ஆண்டுகள் வெளிவந்து நிறுத்தப்பட்டன.

சைவமும், தமிழும் இரு கண்களாக நினைத்து வாழும் நகரத்தார்கள், சமூக வளர்ச்சிக்காகவும் இதழ்களை நடத்தினர். வலிமை வாய்ந்த ஆயுதம் இதழ்கள் என்பதை அவர்கள் உணர்ந்து பணியாற்றினார்கள்

அதன் விபரம் வருமாறு:

நகரத்தார்:

புலவர் நாக.சண்முகத்தை ஆசிரியராகக் கொண்டு 1969ஏப்ரலில் வெளிவந்த இந்த இதழ் 10 ஆண்டுகளுக்கு மேல் வெளிவந்தது.

"நம் மரபினரின் நற்பணிகளையும், பல்வேறு சிறப்புக்களையும், இன்றையத் தலைமுறையினர் தெரிந்து கொள்ளவும், அத்தகைய நற்பணிகளை அவர்கள் தொடர ஊக்கமூட்டவும் துணைபுரிந்தது"

Koviloor Digital Library

நகரமலர்:

நா.இளங்கோவன், ஆண்டியப்பன் ஆகிய இருவரால் தொடங்கப் பெற்று மதுரையிலிருந்து வெளிவந்தது.

சமூகத் தொடர்பான பல கட்டுரைகள் இதில் வெளியிடப் பட்டன.

நகரத்தார் இதழ்:

சுப. செந்தமிழனை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் மாத இதழ். தொடக்கத்தில் சிவகங்கையிலிருந்து வெளிவந்த இவ் இதழ் இப்போது மதுரையிலிருந்து வெளிவருகிறது.

நகரக் கோவில்கள், நகரத்தார்கள் வாழும் ஊர்ச் சிறப்பிதழ்கள், நகரத்தாரின் பேட்டிக் கட்டுரைகளை வெளியிட்டு வருகிறது.

நகரத்தார் குரல்:

நகரத்தார் சமூக, இலக்கிய மாத இதழாய் 1982 - லிருந்து மதுரையிலிருந்து வெளிவருகிறது. ஆசிரியர் வி.என். சிதம்பரம், துணையாசிரியர் மூத்த பத்திரிகையாளர் ஒக்கூர் எல்.சுந்தரம்.

''கன்னியர்கள் வாழ்வு பெற மாலை
காளையர்கள் வாழ்வுயர வேலை''

என்ற குறிக்கோளோடு வெளிவந்தது. நகரத்தார்கள் பலரின் நினைவு இதழ்கள், நகரத்தார் சமூகம் தொடர்பான இன்றியமையாத செய்திகள் என வரலாற்று ஆவணமாய் வெளிவந்தது.

நமது நகரத்தார்:

ஏ.எல்.அழகப்பனை ஆசிரியராகக் கொண்டு அம்பத்தூரிலிருந்து வெளியாகும் மாத இதழ்.

Koviloor Digital Library

"வாய்மையை மதிப்போம்
தூய்மையைத் துதிப்போம்"

என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு வெளிவரும் இதழ் இது.

நகரத்தார் தொடர்பான செய்திகளுக்குச் சிறப்பிடம் கொடுத்து வெளிவரும் இதழ் இது.

நகரத்தார் மலர்:

நகர மலரை நடத்திய நா.இளங்கோவன் 'நகரத்தார் மலர்' எனப் பெயரை மாற்றி மதுரையில் இருந்து நடத்தி வருகிறார்.

கோயில் என ஆண்டினையும், புள்ளி என மாதத்தையும் குறிப்பிட்டு 26 ஆண்டுகளாக இதழை நடத்தி வருகிறார்.

"செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்
வைசியர்க்கழகு வளர்பொருள் ஈட்டல்"

என்ற குறிக்கோளுடன் நகரத்தார் சமூகத் தொடர்பான செய்திகளை வெளியிட்டு வருகிறது.

தனவணிகன்:

'நகரத்தார் குரல்' என்ற பெயர் 'தன வணிகன்' என மாற்றப்பட்டு மதுரையிலிருந்து வெளிவருகிறது. ஆசிரியர் வி.என்.சிதம்பரம்.

நகரத்தார் சமூகம் தொடர்புடைய செய்திகளை வெளியிட்டு வருகிறது.

ஆச்சி வந்தாச்சு:

மதுரையிலிருந்து வெளிவரும் நகரத்தார் சமூக மாத இதழ் ஆசிரியர் நாச்சியாபுரம் நா.பழநியப்பன், துணை ஆசிரியர் மூத்த பத்திரிகையாளர் ஒக்கூர் எல்.சுந்தரம். நகரத்தார் தொடர்புடைய மங்கல நினைவுகளை, நிகழ்ச்சிகளை அழகிய வண்ணப் படமாய் வெளியிட்டு வருகிறது.

Koviloor Digital Library

தெய்வம் பேசுகிறது:

சென்னையில் இருந்து வெளிவரும் மாத இதழ். ஆசிரியர் எஸ்.பி.மெய்யப்பன்.

வள்ளுவம்:

இரு திங்கள் இதழ், பதிப்புச் செம்மல் ச.மெய்யப்பன் இதன் சிறப்பாசிரியராய் இருந்தார்.

நமது நகரமலர்:

சமூக, கலை, இலக்கிய பண்பாட்டுத் திங்கள் இதழ். ஆசிரியர் இராம. ஆண்டியப்பன். இவர் மதுரையில் இருந்து வெளிவந்த நகரமலரில் பங்குதாரராய் இருந்தவர்.

சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல் செல்வந்தான் பெற்றத்தால் பெற்ற பயன் என்ற கொள்கைக் குறிப்புடன் மலேசியா பினாங்கிலிருந்து வெளிவருகிறது.

பூச்சரம்:

சமூக, இலக்கிய மாத இதழ். சென்னையிலிருந்து வெளி வருகிறது.

'நின்மேலு மாணை' என்ற பாடுவார் முத்தப்பரின் பாடல் இடம் பெற்றுள்ளது. சிறப்பாசிரியர்: பேரா.தே. சொக்கலிங்கம்: ஆசிரியர்: பழ.ப.திரு. பழனியப்பன். தொகுப்பாசிரியர்: இராம. கண்ணப்பன்.

நகரத்தார் சமூகத் தொடர்புடைய நிகழ்வுகளையும், நகரத்தார் வரலாற்றையும் வெளியிட்டு வருகிறது.

நகரத்தார் முரசு :

தனிச் சுற்றுக்கு மட்டும் வெளியானது. ஆசிரியர் : கவிஞர் தேவ கோட்டை கல்யாண சுந்தரம். கோயம்புத்தூரிலிருந்து வெளியானது.

Koviloor Digital Library

இலட்சியம்:

நம் இனத்து இளைஞர்க்கு வழி காட்டல் நம் கடமை - நம் ஒற்றுமையால் உயர்வதே நம் எல்லோருக்கும் பெருமை. சமூக வழிகாட்டி மாத இதழாய் வெளியானது.

கற்பகம்:

தனிச் சுற்றுக்கு மட்டும் வெளியான மற்றொரு நவரச மாத இதழ் இது. ஆகஸ்டு 2006இல் முதல் இதழ் வெளியானது. சிறப்பாசிரியர்: மக்கள் கவிஞர் அரு.நாகப்பன், ஆசிரியர்கள்: கவிஞர் மேனா. மெய்யப்பன், அரு.அரு.வள்ளியப்பன். கோவையிலிருந்து வெளிவருகிறது.

செந்தூரம்:

நகரத்தார் நலம் நாடி தனிச் சுற்றுக்கு மட்டும் வெளியாகும் மற்றொரு மாத இதழ் இது.

இவை தவிர, நகரத்தார்கள் ஆசிரியராக, வெளியீட்டாளர்களாக உள்ள பல்வேறு இதழ்கள் வெளிவருகின்றன.

பல எழுத்தாளர்களின் நூல்களைச் சிறப்பாய் வெளியிடும் பதிப்பகங்கள் பல நகரத்தார்களால் நடத்தப்படுகின்றன.

நகரத்தார்கள் இல்லையேல் தமிழ் இல்லை என்னும் அளவிற்கு தமிழுக்குத் தொண்டு செய்து வருகின்றார்கள்.

ஆச்சிமார்களின் எழுதா இலக்கியங்கள்:

அன்றைய ஆச்சிமார்கள் கல்வி அறிவு அற்றவர்களாக, அல்லது, கல்வி அறிவு குறைந்தவர்களாக இருந்தனர். ஆனால், கற்பனை வளம் கைவரப் பெற்றவர்களாய் இருந்தனர். அமிழ்தத் தமிழ் அவர்கள் நாவில் கொஞ்சி விளையாடியது.

Koviloor Digital Library

அத் தமிழ் தாலாட்டாய், ஒப்பாரியாய் உலா வந்தது. அதனைக் கேட்டே கண்ணதாசன் கவியரசானார்.

அத் தாலாட்டில் ஒரு சிறுதுளி..

தாலாட்டு:

ஆராரோ ஆரிரரோ
ஆரிரரோ என்கண்ணே
ஆரடித்தார் ஏனழுதாய்
அடித்தாரைச் சொல்லியழு
ஆக்கினைகள் செய்து வைப்போம்

சீரங்கம் ஆடித்
திருப்பாற் கடலாடி
மாமாங்கம் ஆடி
மதுரைக் கடலாடி
சங்குமுகம் ஆடிச்
சாயாவனம் பார்த்து
முக்குளமும் ஆடி
முக்தி பெற்று வந்த கண்ணே

தெள்ளுதமிழ் வளர்த்த
தென்னவராம் பாண்டியர்க்குப்
பிள்ளைக்கலி தீர்த்த
பெருமானும் நீதானோ.

மலடி மலடி என்று
வையகத்தார் ஏசாமல்
மலடி என்ற சொல்லை
மாற்றப் பிறந்தாயோ.

ஆராரோ ஆரிரரோ
ஆரிரரோ என் கண்ணே.

Koviloor Digital Library

போக்குவரத்து வசதியில்லாத அந்தக் காலத்தில் பொதுமக்கள் பெரும்பாலும் நடைப்பயணமாகவே பல்வேறு ஊர்களுக்கும் சென்று வந்தார்கள். அன்று அரசுத் துறைகள் எட்டிப் பார்க்காத சிற்றூர்ப் புறங்களுக்குத் தங்கள் செலவில் சாலை அமைத்துத் தந்தவர்கள் பெரும்பாலும் நகரத்தார்களே! அந்தச் சாலைகளில் பயணிகள் களைப்பாற நிழல் தரும் மரங்களை வளர்த்தார்கள். வழிப் போக்கர்கள் தாங்கள் சுமந்து செல்லும் சுமைகளை இறக்கி வைத்து இளைப்பாற சுமைதாங்கிக் கற்களை நட்டார்கள். தாகம் தீர்க்க ஆங்காங்கே தண்ணீர்ப் பந்தல்களை அமைத்து அதைக் கவனிக்கப் பொறுப்பாளர் களையும் அமர்த்தினார்கள். அத்துடன், கல்விக் கண் திறந்த கர்ம வீரர் காமராஜ் அவர்களுக்கே முன்னோடிகளாக பாமர மக்களின் குழந்தைகளும் படிக்கும் வண்ணம் பள்ளிக்கூடங்களைத் திறந்தார்கள். அம் மக்களின் உடல் நலத்தைக் காக்க மருத்துவ மனைகளையும் கட்டிக் கொடுத்தார்கள். மொத்தத்தில் ஓர் அரசாங்கம் செய்ய வேண்டிய பொதுப் பணிகளில் பெரும்பாலானவற்றை இலவசமாக நகரத்தார் பெருமக்கள் செய்தார்கள். ஆனால், இன்று தண்ணீரும் கல்வியும் மருத்துவமும் பன்னாட்டு வணிகர்களால் விற்பனைப் பொருள்களாகி இந்த மண்ணின் அடிப்படைப் பண்பாகிய மனிதாபிமானத்தையே சீர்குலைத்து வருகின்றன. இன்றைய நிலையோடு அன்றைய நகரத்தார்களின் செயல்களை ஒப்பிடுவோமானால் அம் மக்கள் மனித உணர்வுகளை மதிக்கும் மாண்புடையவர்களாக விளங்கியமை தெற்றெனப் புலனாகும்.

எல்லாவற்றையும் விட ஆண்டுதோறும் அவ்வப்பகுதிகளில் கொண்டாடப்படும் கோயில் திருவிழாக்களிலும் பிற சிறப்பு நிகழ்ச்சி களிலும் ஏழை எளிய மக்களின் பசிப்பிணிப் போக்க ‘வடித்துப் போடுதல்’ என்னும் பெயரில் சோறு, குழம்பு, கூட்டுக் கறியுடன் அன்னதானம் செய்யும் வழக்கம் நகரத்தார் பெருமக்கள் வாழ்வின் உன்னதப் பழக்கங்களில் ஒன்றாகும். அந்த வகையில் இவர்கள் வள்ளலாருக்கும் வழிகாட்டிகள் எனலாம். இன்னும் செட்டிநாட்டுப்

Koviloor Digital Library

பகுதிகளில் அந்த வழக்கம் ஆங்காங்கே அவ்வப்போது நடைபெற்று வருகிறது. அதனைப் பசித்தோர் மட்டுமல்லாது, அப் பகுதியில் வசிப்போர் அனைவரும் 'பூசைச் சோறு' என்று ஆசையுடன் வாங்கி உண்ணும் பாங்கு பார்த்து மகிழத் தக்கது. இன்றும் பசியோடு வருபவர்களுக்கு, தினசரி மதிய வேளையில் சோறாக்கிப் பந்தி வைத்துப் பரிமாறும் அறச்செயல், புதுக்கோட்டை - காரைக்குடி நெடுஞ் சாலையில் உள்ள திருமயம் என்னும் ஊரில் ஒரு சத்திரத்தில் தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. இதுபோன்ற அன்னதானச் சத்திரங்கள் ஆங்காங்கே இன்னும் பல உள்ளன.

இந்த மன்பதை உள்ளளவும் அதில் வாழும் மனிதனின் வயிற்றில் பசி உள்ளளவும் நகரத்தார் பெருமை நன்றியுடன் நினைவு கூரப்படும்.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 16790

Koviloor Digital Library

Koviloor Digital Library

இந்நூலாசிரியரைப் பற்றி...

வெற்றியூர் கதிர்வேலன் செட்டியார் வீட்டில் அரு. கதி. அருணாசலம் செட்டியார் - சிவகாமி ஆச்சியின் மூத்த மகனாக 9.10.1944இல் இவர் பிறந்தார். மாத்தூர் கோவில் அரும்பாக்கூருடையார் பிரிவைச் சார்ந்தவர் இவர்.

பள்ளியில் படிக்கும் போது கவிதை எழுதத் தொடங்கிய இவர், கல்லூரியில் படிக்கும்போது சிறுகதை, நாடகம், கட்டுரை, மொழிபெயர்ப்பு என, பல தளங்களில் எழுதத் தொடங்கினார்.

தேவகோட்டை தே பிரித்தோ பள்ளியில் உயர்நிலைக் கல்வி கற்ற இவர், காரைக்குடி வள்ளல் அழகப்பர் கல்லூரியில் பி.ஏ., பி.எட்., பட்டம் பெற்று ஆசிரியரானார். எம்.ஏ.,எம்.எட்., எனக் கல்வித் தகுதியை உயர்த்திக் கொண்டார்.

1968இல் பட்டதாரி ஆசிரியராய்ப் பணியைத் தொடங்கிய இவர், 1978இல் மேல்நிலைப் பள்ளித் தமிழாசிரியரானார். 1988இல் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராகி, 2002இல் ஓய்வு பெற்றார்.

பல்வேறு குடமுழுக்கு விழா மலர்களிலும், தமிழகத்தின் பல்வேறு இதழ்களிலும் இவரின் எழுத்தோவியங்கள் இடம் பெற்றுள்ளன.

இவர் எழுதி இதுவரை 10-க்கும் மேற்பட்ட நூல்கள் வெளிவந்துள்ளன.

இன்னும் பல நூல்களை எழுத இவரை நாம் வாழ்த்துவோம்!

– பதிப்பகத்தார்